திருக்குறள் ஆராய்ச்சி: 3

# திருக்குறள் அணிநலம்

ன்னைப் பல்கலைக் கழகம்

1971

O,31,B6T.T:g
(P:75)
L1

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை
திருக்குறள் ஆராய்ச்சிப் பகுதி
வெளியீடு—3.

திருக்குறள் ஆராய்ச்சி : 3

# திருக்குறள் அணிநலம்

பொதுப் பதிப்பாசிரியர் :
பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனார்
தமிழ்த் துறைத் தலைவர்
சென்னைப் பல்கலைக் கழகம்

சென்னைப் பல்கலைக் கழகம்
1971

# A STUDY OF RHETORIC IN TIRUKKURAL

E. SUNDARAMOORTHY
Research Fellow
Tirukkural Endowment Research Centre
University of Madras

UNIVERSITY OF MADRAS
1971

119

திருக்குறள் ஆராய்ச்சி : 3

# திருக்குறள் அணிநலம்

ஆசிரியர் :

**இ. சுந்தரமூர்த்தி**

ஆராய்ச்சி உதவியாளர்

திருக்குறள் ஆராய்ச்சிப் பகுதி

சென்னைப் பல்கலைக் கழகம்

**சென்னைப் பல்கலைக் கழகம்**

**1971**

முதற் பதிப்பு—1971

© சென்னைப் பல்கலைக் கழகம்

விலை ரூ. 9–00

அவ்வை அச்சுக்கூடம், சென்னை-13.

# துணைவேந்தரின் அணிந்துரை

திருக்குறள் தமிழில் மலர்ந்தது; பல மொழிகளில் பெயர்ந்தது; உலகம் முழுவதும் மணம் பரப்பி வருவது. இது தமிழ் மறை; உலகப் பொது மறை.

காலஞ்சென்ற டாக்டர் ஆல்பர்ட் சுவைட்சர் உலகப் பெருந் தொண்டர்களில் ஒருவர்; மாந்தர் தொண்டிற்குத் தம் வாழ்வைப் படைத்த நல்லார்; நுண்மாண் நுழைபுலமிக்க அறிஞர்; சிறந்த சிந்தனையாளர். அப் பெரியார்,

> "ஒழுக்கமே மனிதனுடைய உயர்ந்த குறிக்கோளாக இருக்க வேண்டும் என்பதை மிகுந்த உறுதியோடு வள்ளுவர் கூறியிருக்கிறார். ஒவ்வொருவனும் தனக்குத் தானே செய்ய வேண்டிய கடமை என்ன? மற்றவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமை என்ன? என்பனவற்றையெல்லாம் சிறந்த பண்பாட்டோடும் மதிநுட்பத்தோடும் வள்ளுவர் பேசுகிறார். உலக இலக்கியத்தில், இத்தகைய மாண்புமிக்க மெய்யறிவு வேறு எந்நூலிலும் இத்துணைச் சிறப்பாகப் பொலிவுறவில்லை என்று சொல்லலாம்"

என்று போற்றியுள்ளமை இங்குக் கருதத்தக்கது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த திருக்குறள் தோண்டத் தோண்டத் துலங்கும் மணிச் சுரங்கமாய் விளங்குகிறது. அவ்வக் காலத்திற் கேற்ற அறிவொளியை வழங்கி, எக்காலத்திற்கும் எல்லார்க்கும் உரிய வாழ்க்கை இலக்கியமாய் விளங்குவதே திருக்குறளுக்குரிய சிறப்பாகும். திருக்குறளுக்கு இது வரையில் எத்தனையோ ஆராய்ச்சி நூல்கள் வெளிவந்துள்ளன.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் திருக்குறள் ஆராய்ச்சி வெளியீட்டு வரிசையில் மூன்றாவது நூலாக வெளிவரும் இந்நூலைப் புலவர் இ. சுந்தரமூர்த்தி அவர்கள் அரிதின் ஆராய்ந்து எழுதியுள்ளார். 'திருக்குறள் அணிநலம்' என்னும் இந்நூல், இப் பொருள்பற்றி விரிவான முறையில் முதன்முதல் எழுதப் பெற்ற முழுமையான நூலாகும்.

இந்நூலுள் அணியின் தோற்றமும் வளர்ச்சியும், திருக்குறளில் உவமையணி பெற்றுள்ள உயர்வும், பொருளணியின் பெற்றியும், சொல்லணியின் சிறப்பும் பகுத்தும் தொகுத்தும் விளக்கப் பெற்றுள்ளன. நீதி நூலாகிய திருக்குறளில் சுவையணி பெற்றுள்ள ஏற்றமும் எழிலும் தெளிவுறுத்தப் பெற்றுள்ளன.

இந் நூல் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியராக இருந்த டாக்டர் மு. வரதராசனர் அவர்கள் மேற்பார்வையில் புலவர் இ. சுந்தரமூர்த்தி நடத்திப் பெற்ற ஆராய்ச்சியின் பயனாக வெளிவரும் நூலாகும்.

இத்தகைய விழுமிய ஆராய்ச்சி நூல்கள் திருக்குறளைப்பற்றி இயற்றப் பெறுவதற்குக் காரணமாக இருப்பது, தமிழக அரசு இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் போது, மனமுவந்து நிறுவிய திருக்குறள் ஆராய்ச்சி அறக் கட்டளையே ஆகும். தமிழக அரசின் நல்லுதவி கிடைத்திராவிட்டால் இத்தகைய ஆராய்ச்சியும், இதன் விளைவான அரிய நூல்களும் ஊமையன் கண்ட கனவாகியிருக்கும். தமிழக அரசு காலத்தினாற் செய்த இப் பேருதவி, தமிழை வளர்க்கும் ஈரம். இவ்வறக் கட்டளையை நிறுவிய தமிழக அரசுக்குச் சென்னைப் பல்கலைக் கழகம் பெரிதும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது. தமிழ் தழைக்கத் துணை நிற்பதன்றித் தமிழக அரசுக்கு வேறு என்ன கைம்மாறு செய்ய வல்லோம்?

தமிழ்ப் பொதுமறை மக்கள் நெறியாகுக! அன்பும் அருளும் அறனும் பொதுவாகுக! அவற்றிற்கு இத்தகைய நூல்கள் துணை ஆகுக!

**நெ. து. சுந்தரவடிவேலு**

14—4—71

(தமிழ்ப் புத்தாண்டு நாள்)

# முன்னுரை

தமிழன்னையின் அருங்கலன்களாகத் திகழும் பெரும்புகழ் வாய்ந்த நூல்கள் பல. அவற்றுள் உலகமறிந்த உயரிய நூலாகத் திகழ்வது திருவள்ளுவர் அருளிய திருக்குறள். நாற்பயனாகிய நாற்பொருளும் தரும் முழுநிறைவுடையது இந்நூல். அறமும் நீதியும் நவிலும் நூல்கள் பொதுவாக இலக்கிய இன்பம் தாரா என்பர். ஆயின் திருக்குறளோ இலக்கிய நயமும், இன்பம் தரும் எழிலும் ஏற்றமும் பெற்று விளங்கும் ஓர் இனிய கருத்துக்கருவூலம்.

திருக்குறள் சிறந்த நீதி இலக்கியமாகத் திகழுதற்கு இதனுள் அமைந்து விளங்கும் இலக்கிய இயல்புகளே காரணமாகும். வள்ளுவர் தாம் உணர்ந்த உணர்வுகளையும், ஆய்ந்து கண்ட அரிய உண்மைகளையும் உலகம் இனிதுணர்ந்து மகிழும் வகையில் எடுத்துரைக்கும் கலைத்திறனும் இதற்குக் காரணமாம். பொருள்களின் அறியவியலா நுட்பங்களை எளிய நடையாலும், அரிய தொடராலும் அவர் உரைக்கின்றார். உள்ளத்தை விட்டு அகலாமல் கருத்துகளை நிலைபெறச் செய்வதற்கு உறுதுணைபுரிவது உவமை. கருத்தாழம் நிறைந்த கவிதைக்கு உயிர்ப்பும் உணர்வும் தருவதும் உவமை.

'திருக்குறள் அணிநலம்' என்னும் இந்நூல் குறளில் அமைந்துள்ள பல்வேறு உவமைகளின் அழகையும் தொகுத்துத்தர முயன்றுள்ளது. 'அணி' என்பதற்குரிய பல பொருள்களுள் 'அழகு' என்பதும் ஒன்று. 'உவமை' என்று தொல்காப்பியரால் கூறப்பட்டதே இன்று அணியாக வளர்ந்துள்ளது. செய்யுளுக்கு அது தரும் அழகினாலேயே அவ்வுவமை இன்று அணியெனச் சிறப்பிக்கப் படுகிறது போலும்! வள்ளுவரும் அழகு என்ற பொருளிலேயே 'சான்றோர்க்கணி' (115), 'பிணியின்மை, செல்வம், விளைவின்பம், ஏமம் அணியென்ப' (738), 'மடந்தை அணியில் திகழ்வதொன்றுண்டு' (1273) எனக் குறட்பாக்களில் கூறுவதையும் காணலாம்.

குறட்பாக்களில் அமைந்துள்ள அணிகளை அறிந்து கொள்ளுவதற்கு வாயிலாக முதற்கண் அணியின் தோற்றமும் வளர்ச்சியும் ஆராயப்பட்டுள்ளன. அணியின் பொது இயல்புகளை அறிந்துகொள்ளல் இன்றியமையாததன்றோ? இரண்டாம் இயலில் உவமையணி பற்றிய இயல்புகள் விளக்கப்பட்டுள்ளன. அணியின் வளர்ச்சியைக் காட்டும் 'பொருளணி' 'சொல்லணி' பற்றிய தொகுப்புகள் பிற்சேர்க்கையில் தரப்பட்டுள்ளன.

'திருக்குறளில் உவமை' என்னும் மூன்றாம் இயலில் தொல்காப்பியர் வகுத்துள்ள முறைப்படி வினை, பயன், மெய், உரு என்

னும் அடைவில் குறள்கள் ஆயப்பெற்று விளக்கங்களும் தரப் பட்டுள்ளன. 'எடுத்துக் காட்டுவமை'யும் இயைபு கருதி இவ் வியலிலேயே சேர்க்கப்பட்டுள்ளது. வள்ளுவர் கூறிய பல்வேறு உவமைகளையும் பொருள்களையும் வகைப்படுத்தி அவற்றால் அறியப் படும் செய்திகளைத் தொகுத்து 'உவமையும் பொருளும்' என்னும் நான்காம் இயல் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வியலின் இறுதியில் தரப்பட்டுள்ள 'உவமை அகராதி' உவமைகளை ஒருசேரக் காண் பதற்குப் பயன்படும். இறுதி மூன்று இயல்களில் பொருளணியும், சொல்லணியும், சுவையணியும் முறையே விளக்கப்பட்டுள்ளன.

தொல்காப்பியர் கூறிய உவமை முதல் பிற்காலத்தார் கூறிய அணிகள் வரை பொதுவாக விளக்கினாலும், எல்லா அணிகளும் முற்றமுடிய இச்சிறு நூலுள் விளக்கப்பட்டுள்ளன என்று கூறு வதற்கு இல்லை. 'எண்ணலங்காரம்' என்றவொரு அலங்காரத்தினைச் சிவஞான முனிவர் தம் 'சிவஞான சித்தியார்' சுபக்கத்தின் காப்புச் செய்யுள் உரையில் குறிப்பிடுகின்றார். அது செய்யுள்களில் ஒன்று இரண்டு மூன்று என எண்ணுப் பெயர்களாகவே வரப்பெற்று அழகினைத் தருவதாகும். இது போன்றுள்ள புதுச் செய்திகள் மேலும் தழுவிக்கொள்ளத் தக்கனவாம்.

ஒவ்வோர் இயலிலும் அடிக்குறிப்புகள் தொடர் எண்களால் குறிக்கப்பெற்று அவ்வப் பக்கங்களின் கீழேயே தரப்பட்டுள்ளன. நூலின் இறுதியில் தரப்பட்டுள்ள பிற்சேர்க்கையில் நால்வகை உவம உருபுகள், உவம உருபு அகராதி, திருக்குறளில் உவம உருபுகள் முதலியன பட்டியலாகத் தரப்பட்டுள்ளன. இறுதியில் மேற்கோள் நூல்களும் பொருட் குறிப்பு அகராதியும் இடம் பெற்றுள்ளன.

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் டாக்டர். மு. வரதராசனார் அவர்கள் இவ்வாராய்ச்சிப் பணியினை வகுத்துக் கொடுத்து வழிகாட்டி வந்தனர். இவ்வகைப் பணியில் ஈடுபடுத்திய பேராசிரியர் அவர்களுக்கு என் அன்பு கலந்த நன்றி. தற்பொழுது தமிழ்த் துறைத் தலைவராக விளங்கும் பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள் இப்பணிக்கு எல்லா வகையானும் அன்பொடு உதவி ஊக்கமளித்து வருகிறார்கள். இவர் கட்கும் என் அன்பு கலந்த நன்றி.

திருக்குறள் ஆராய்ச்சித் துறை விரிவுரையாளர் திரு. க. த. திருநாவுக்கரசு அவர்களும், திரு. மு. சண்முகம்பிள்ளை அவர்களும் வேண்டிய கருத்துகளைக் கூறி ஊக்குவித்தும் நெறிப்படுத்திக் கண்காணித்தும் அச்சுப்படிகள் திருத்தியும் உதவினர். இந்நூலின் கையெழுத்துப்படியைத் தக்கவகையில் சிறப்பாக முறைப்

படுத்திச் செப்பம் செய்த திரு. மு. சண்முகம் பிள்ளை அவர்களுடைய உதவி என்றும் மறக்கற்பாலதன்று. இவ்விருவருக்கும் என் உளமார்ந்த வணக்கமும் நன்றியும் உரியனவாகுக.

திருக்குறள் ஆராய்ச்சித்துறையில் பணிபுரியும் வாய்ப்பை எனக்கருளி, எழுதிய ஆராய்ச்சியுரையையும் நூல் வடிவில் வெளியிடுவதற்கு ஆவன புரிந்த சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவினருக்குப் பெரிதும் கடப்பாடுடையேன்.

சிறப்பாக 'வள்ளுவன் இல்ல'த்தில் வாழும் சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் தாமரைத்திரு நெ. து. சுந்தரவடிவேலு அவர்கட்கு என் நன்றி நிறைந்த வணக்கங்கள் உரியன.

இந்நூலினை நல்லமுறையில் அச்சிட்டு உதவிய அவ்வை அச்சுக் கூடத்தாருக்கும் நன்றி.

சென்னை-5
24—4—'71

இ. சுந்தரமூர்த்தி

# உள்ளுறை


எண் பக்கம்

1. **அணியின் தோற்றமும் வளர்ச்சியும்** ... 3—19

மொழியும் மக்களும் 3—மொழியின் வளர்ச்சி 4—இன்பம் பயக்கும் இனிய மரபுகள் 4—கவிதையும் கற்பனையும் 5—படைப்புக் கற்பனை 7—இயைபுக் கற்பனை 8—கருத்து விளக்கக் கற்பனை 9—இலக்கியம் கற்பனைக் கருவூலம் 9—அணியின் தோற்றம் 10—அணி ஓர் அடிப்படைக் கலை 11—தமிழில் அணியி ·க்கணம் 13—தொல்காப்பியமும் முன்னூலும் 13—அணிநலம் கூறும் தனிநூல்கள் 14—ஐவகை இலக்கணம் 16—உவமவியலும் பிறவும் 17

2. **உவமையணி** ... 20—60

உவமையின் பொது இயல்பு 20—உவமை ஒப்புமை அளவை 20—உவமைப்பயன் 22—ஒப்புமை வகை 23—உவமையின் பிறப்பிடம் 24—பொருளினும் உவமை உயர்வு 24—உவமையின் உறுப்புகள் 25—உவம உருபுகள் 27—நால்வகை உவமம் 28—வினை உவமம் 30—வினை உவமத்திற்கு வரும் வேறு உருபுகள் 31—காலப்போக்கில் உருபுகளின் நிலை 31—பயனுவமம் 35—குறளில் பயன் உவம அமைப்பு 37—பயன் உவமப் பொருளில் ஐந்தன் உருபு 38—மெய்யுவமம் 39—குறளில் மெய்யுவம அமைப்பு 40—மெய்யுவமையும் தண்டியாசிரியர் கூறும் பண்புவமையும் 40—உருவுவமம் 44—குறளில் உருவுவம அமைப்பு 45—உவம உருபுகளின் வளர்ச்சி: உருபு ஆட்சிகளில் வேறுபாடு 46—உவம வகை 51—உவம விரியும் தொல்காப்பியமும் 52—உவமைகளின் அமைப்பு 52—உள்ளுறை உவமம் 53—உள்ளுறை உவமம் உவமப் போலியே 54—உள்ளுறையும் இறைச்சியும் 55—உள்ளுறையும் ஒட்டணியும் 57

**திருக்குறளில் உவமை** ... 61—109

வினை உவமம் 62—அன்ன உருபு பெற்ற உவமை: கயவரும் பறையும் 62—மரமும் மனிதரும் 64—

நோக்கும் அணங்கும் 65—ஆங்க உருபு பயின்ற உவமை: வறுமையும் மறதியும் 66—கணையும் யாழும் 67—அற்று உருபு பெற்ற உவமை: வேடமும் வேடனும் 68—கள்ளும் சொல்லும் 69—களவொழுக்கமும் துறக்கவின்பமும் 70—நேர உருபில் வரும் உவமை: கொலையும் களையும் 71—தகைய உருபு அமைந்த உவமை: போருக்குப் பின்வாங்கும் மன்னனும் போர்க் கடாவும் 73—போல உருபுபெற்ற உவமை: அன்பும் அழிவும் 74—அரசனும் அழலும் 75—மனமும் மகிழ்ச்சியும் 76—ஒப்ப உருபு வந்த உவமை 77—கொக்கும் குத்தும் 78—பயன் உவமம் 78—அற்று உருபு அமைந்த உவமை: சேற்று நிலமும் ஊன்று கோலும் 79—பாழ்ங்குளமும் மனம் கலவா வாழ்க்கையும் 80—நங்கையும் செல்வமும் 81—அன்ன உருபில் வரும் உவமை: ஆக்கமும் காக்கையும் 83—ஊடலின்பமும் தேவருலகமும் 84—களர் நிலமும் கல்லாதவரும் 85—ஆங்க உருபு பயின்ற உவமை: ஆக்கமும் மறதியும் 87—இன் உருபு அமைந்த உவமை: நிலமும் மனைவியும் 88—போல உருபில் வரும் உவமை: இன்பமும் நோயும் 89—நூலும் நட்பும் 90—நேர உருபு பொருந்திய உவமை: பயன்நோக்கும் நண்பரும் பண்பில்லாக் கள்வரும் 91—ஒப்ப உருபில் வரும் உவமை: செவியுணவும் அவியுணவும் 93—மெய்யுவமம் 93—அன்ன உருபில் அமைந்த உவமை: மலரன்ன கண்ணாள் 94—ஏர் உருபு வரப்பெறும் உவமை: காம்புஏர் தோட் பேதை 96—உருவுவமம் 97—அனைய உருபு அமைந்த உவமை: புறத் தோற்றமும் அகத் தோற்றமும் 98—முறிமேனி 99—போல உருபுபெற்ற உவமை: பசலையும் இருளும் 100—மதிஒளியும் முகஒளியும் 101— எடுத்துக்காட்டுவமை 102—இறைவனும் எழுத்தும் 103—காகமும் காவலரும் 105—நிழலும்நீரும் உறவும் பகையும் 107

4. **உவமையும் பொருளும்** ... 110—153

உவமை அகராதி 110—மரபுவழி உவமை 111—இடம் பொருள் முதலியவற்றிற்கு ஏற்ற உவமை 113—காலத்திற்கு ஏற்ற உவமை 114—பொருளுக்கு ஏற்ற உவமை 114—பண்பிற்கு ஏற்ற உவமை 115—சாதிக்கு ஏற்ற உவமை 116—மரபிற்கு ஏற்ற

உவமை 117—நீதிக்கு நீதி உவமை 117—கருத்துக்குக் கருத்து உவமை 119—ஒரு பொருளுக்கு இரண்டு உவமை 119—இரு பொருளுக்கு ஓர் உவமை 121—அவரவர் பயன் படுத்தும் பொருளே உவமை 121—ஊர்திகள் 123—உவமை அறிவிக்கும் தொழில் நிலை 123—உவமையால் அறியும் விலங்கு பற்றிய செய்திகள் 125—பறவை பற்றிய செய்திகள் 126—பயிரியல் பற்றிய செய்திகள் 127—வானவியல் 130—கலைகள் 131—பழக்க வழக்கங்கள் 133—உவமைச் செய்திகள் பல 134—உவமைத் தொகுதி 135—இரத்தினச் சுருக்கம் 136—உவமைச் சொல் அகராதி 137—உவமை அகராதி 137

5. பொருளணி ... 154—198

மூவகை அலங்காரம் 154—குணவணி 154—பொருளணி 155—உருவகம் 156—குடி விளக்கும் மடி மாசும் 159—ஏகதேச உருவகம் 161—அமுத கண்ணீரே அழிக்கும் படை 161—அவயவ உருவகம் 162—இரத்தலும் ஒளித்தலும் 162—இயைபு உருவகம் 164—காமமும் புணையும் 164—காட்சியணி 166—கைவாளும் கற்ற நூலும் 167—ஐயவணி 170—அணங்கோ ஆய்மயிலோ 171—ஏதுவணி 172—சொல் வணக்கமும் வில் வணக்கமும் 172—அறிஞரும் மன்னனும் 173—பிறிது மொழிதலணி 174—வலிமையும் அளவும் 176—நரியும் கரியும் 177—முள்ளும் பகையும் 178—வேற்றுமையணி 180—மோப்பக் குழைவதும் நோக்கக் குழைவதும் 180—புண்ணும் வடுவும் 183—தீயும் காமமும் 184—தற்குறிப்பேற்ற அணி 185—குவளைமலரும் கண்களும் 187—திங்களறியா விண்மீன்கள் 188—உயர்வு நவிற்சி அணி 189—வஞ்சப் புகழ்ச்சி அணி 191—பெரிதினிது பேதையார் நட்பு 192—தேவரும் கயவரும் 193—பழிப்புவமை 195—வேற்றுப் பொருள் வைப்பணி 196

6. சொல்லணி ... 199—224

சொல்லணிகளின் தன்மை 199—அணி நூல்களுள் சொல்லணி 199—பொருளணிகளுள் சொல்லணி 201—வீரமா முனிவர் கொள்கை 202—சொல் லணிகள் வழக்கறுநிலை 203—பின்வருநிலை 204—சொற் பின்வருநிலை 205—பொருட்பின்வருநிலை

207—சொற் பொருட் பின்வருநிலை 207—நிரல் நிறை 209—நேர்நிரல் நிறை 210—எதிர்நிரல் நிறை 211—முரண் அணி 213—தீவக அணி 215—தீவகம் 215—இடைநிலைத் தீவகம் 216—கடைநிலைத் முதனிலைத் தீவகம் 217—அந்தாதி 218—விற் பூட்டணி 222—நிரோட்டகம் 223

7. **சுவையணி** ... 225—248

கவிதையும் சுவையும் 225—சுவையுணர்வு 226—கவிச்சுவை 227—சுவை என்னும் பெயர்க்காரணம் 227—மெய்ப்பாடு அல்லது சுவை நலம் 228—எண் வகை மெய்ப்பாடு 228—சுவை வெளிப்பாடு 229—நகை முதலாக வரும் சுவைகளின் அடைவு 230—ஒவ்வொரு சுவைக்கும் நான்கு பொருள் 231—திருக்குறளில் சுவை நலன் 233—நகைச் சுவை 235—அழுகை 237—இளிவரல் 238—மருட்கை 240—அச்சம் 241—பெருமிதம் 241—வெகுளி 242—உவகை 243—சமநிலை 244—செய்யுட்கு இயன்ற அணி 245—தொகுப்புரை 246.

**பிற்சேர்க்கை** ... ... 249—262

1. நால்வகை உவம உருபுகள் ... ... 249
2. உவம உருபு அகராதி ... ... 250
3. திருக்குறளில் உவம உருபுகள் ... ... 251
4. அணிகளின் வளர்ச்சி ... ... 252
5. பரிமேலழகர் கொண்ட அணி நூல் ... ... 261

**மேற்கோள் நூல்கள்** ... ... 263—268

**பொருட் குறிப்பு அகராதி** ... ... 269—278

# திருக்குறள் அணிநலம்

# 1. அணியின் தோற்றமும் வளர்ச்சியும்

## மொழியும் மக்களும்

ஒவ்வொரு மொழியிலும் இலக்கியத்தை அழகுறச் செய்வது அணி என்று கருதப்படுகிறது. 'அணியிலாக் கவிதை பணியிலா வனிதை' என்பது நம் நாட்டில் வழங்கி வரும் பழமொழி யாகும். மொழியின் வளர்ச்சியோடு அணியும் ஒன்றுபட்டுக் காலப்போக்கில் பல்வேறு வடிவங் களும் வண்ணங்களும் குறிப்புணர்வுகளும் கொண்டதாய் வளம் பெற்றுள்ளது. ஆகவே, மொழிவரலாற்றில் அணி கள் பிறந்து வளர்ந்து பல்வேறு கிளைகளாகப் பெருகி வந்துள்ள வரலாறும் ஒரு தனிக் கூறும்.

மொழியானது மக்கள் படைத்துக் காக்கின்ற உயர்ந்த கலையாகும்; தன்னிடத்துத் தோன்றுகின்ற கருத்துகளைப் பிறருக்கு உணர்த்துகின்ற ஒப்பற்ற கலையு மாகும். மக்களையும் மாக்களையும் வேறுபடுத்திக் காட்டு வதும் மொழியே. நாகரிக மற்றவர்களாயும் காட்டு மிராண்டிகளாயும் ஆதிகாலத்து மனிதர் விளங்கினர். ஆனால், அவர்கள் வழிவந்த இன்றைய உலக மக்கள் பேசுகின்ற மொழிகள் ஏறத்தாழ மூவாயிரத்திற்கும் மேற்பட்டனவாகும். ஒரு நாட்டு மக்களின் நாகரிக வளர்ச்சி அவர்கள் பேசும் மொழியின் வளர்ச்சியினைக் கொண்டே துணியப் பெறும். சைகை காட்டித் தன் கருத்தைப் பிறருக்குப் புரிய வைத்தான் ஆதிமனிதன்! இன்று அவன் வழியில் வந்த மனிதன் எத்தனை மொழி களில் எத்துணை வழிகளில் அழகுறத் தம் கருத்தைப் பிறருக்குப் புரிய வைக்கின்றான்! மொழி தான் தோன்றிய பொழுது தன் கருத்தை மட்டும் பிறருக்குத் தெரிவிக்கும்

கருவியாக அமைந்தது; இன்றோ அச்செயலோடு மட்டும் நில்லாமல் உலக உண்மைகளை வெளிப்படுத்துவனவாய் அழகும் இனிமையும் பெற்று அது மிளிர்கிறது.

### மொழியின் வளர்ச்சி

நாகரிகம் முதிர்ச்சி அடைய அடைய மனிதன் எவ்வாறு பிற துறைகளில் வளர்ச்சி பெற்றானோ அவ்வாறே மொழித்துறையிலும் வளர்ந்தோங்கினான். உணவு, உடை, இருப்பிடம், இன்ன பிற வசதிகளில் மாற்றங்களை ஏற்படுத்தியது போலவே மொழியிலும் அவன் சிறந்த மாற்றங்களைச் செய்தான்; தான் பேசுகின்ற எளிய பேச்சு வழக்கிலுங்கூட நயத்தினைப் புகுத்தினான். கற்பனையின் ஆற்றலால் பிறக்கின்ற இலக்கியங்களிலும் அவ்வுயர்ந்த அமைப்புகளை அவன் உண்டாக்கினான்.

### இன்பம் பயக்கும் இனிய மரபுகள்

உலகில் பேசப்படுகின்ற எல்லா மொழிகளிலும் கவிஞர்கள் தாம் கூறப் புகுந்த கருத்தைப் பிறருக்கு இன்பம் பயக்குமாறு அறிவுறுத்த விரும்பிப் பல சிறந்த முறைகளை மேற்கொண்டுள்ளனர். அவற்றைக் கீழ் வருமாறு பாகுபடுத்தலாம்.[1]

1. முன்னர் அறிந்திராத ஒன்றினை அறிய, அதற்கு இணையானதும் அறிந்ததுமான மற்றொன்றைக் காட்டி, அதன் இயல்புகளை விளக்குதல் (By Similarity).

2. பொருளினை நன்றாக அறிந்துகொள்ள அப்பொருளினுக்கு நேரெதிரிடையான ஒன்றினை எடுத்துக் காட்டுதல் (By Contrast).

3. ஒரு பொருளைப் புலப்படுத்தக் கால இட இயற்கைகளினாலோ, காரண காரிய இயைபுகளினாலோ, இன்னும் பிற முறையினாலோ அதனோடு தொடர்புடைய ஒன்றினைக் கூறுதல் (By Contiguity i. e. By Association of Ideas).

1. டேவிட் ஜோசப்: தமிழ் இலக்கணத் தெளிவு, பக். 380, சென்னை, 1893.

இவற்றோடு கவிஞர் உயர்ந்த கற்பனைகளையும், கவின் மிகு நயங்களையும் உடன் இணைத்துக் கொள்கின்றனர்; சிந்தனைக்கும் செவிக்கும் இன்பம் தருகின்றனர்; பயில்வோர்க்கு மனத்தளர்ச்சி வாராத வகையில் மகிழ்வும் இன்பமும் உண்டாகுமாறு இக்கலையினைத் தக்க முறையில் பயன் படுத்துகின்றனர்.

**கவிதையும் கற்பனையும்**

கலைகளில் முதன்மையானது கவிதை. வடிவமும், கலைநயத்தோடு கருத்தை எடுத்துரைக்கும் ஆற்றலும் அதனுடைய இருகண்களாகும். அதைச் செய்யுள் வடிவத்தில் எழுதப் பெற்ற உணர்ச்சி இலக்கியத்தின் வகை எனலாம். கவிதை எளிமையும், இனிமையும், புலன் நுகர் உணர்ச்சியும் உடையது. "கவிதை என்பது உண்மையைப் பேருணர்ச்சியுடன் இதயத்திற்கு உயிர்த்துடிப்புக் குன்றா வகையில் எடுத்துச் செல்லுவது. அது அறிவின் முதலும் முடிவுமாக இருப்பது. கவிதை அறிவு உலகத்தின் மூச்சாகவும் நயமிகு உயிர்த்துடிப்பாகவும் விளங்குவது"[2] என்று கவிஞர் மில்டன் கூறுவர். இதனால், கவிதை உண்மைகளை உணர்த்துவது; அவ்வுண்மைகளை உணர்ச்சியோடு எடுத்தியம்புவது; மனித இனம் கவிதையின் மூலமே பண்டைக்காலத்தில் அறிவைப் போற்றி வளர்த்திருக்கிறது என்னும் உண்மைகள் புலனாகின்றன.

இலக்கியங்கள் பல வகைப்படும். அவை எல்லாவற்றிற்கும் அழகிய வடிவமும் உணர்ச்சியும் இன்றியமையாதவை. அவற்றுள் கவிதையே வடிவ அமைப்பில் சிறந்ததாயும் உணர்ச்சி மிக்கதாயும் திகழ்கிறது. கவிதைக் கலைக்கு உணர்ச்சி, கற்பனை, வடிவம் என்ற மூன்றும் அடிப்படைத் தேவைகளாகும். அவற்றோடு கருத்து என்ற ஒன்றும் சேரும்போது, கலையுலகில் அது தன்னிகரற்ற கலையரசியாக வீறுடன் விளங்குகிறது.

2. Winchester, C. T.: Some Principles of Literary Criticism, p. 228, Macmillan, London, 1960.

கவிதைக்கு உயிர்நாடியாக இருப்பது உணர்ச்சி. உணர்ச்சிகள் ஒரே தன்மையானவையல்ல. அவற்றை அடையும் மனிதர்க்கு ஏற்றவகையில் அவை வேறுபாடு உடையனவாகத் தோன்றலாம். எனினும், அவை அனைத்தையும் காதல், வீரம், இரக்கம் என்னும் அடிப்படை உணர்ச்சிகளுள் அடக்கிவிடலாம். அவை வெவ்வேறு சூழ்நிலைகளில் பிறக்கலாம். ஆயினும் அந்த உணர்ச்சிகள் எல்லாக் காலத்தவர்க்கும் எல்லா மக்களுக்கும் பொதுவாக உள்ளவை யாகும்.

இவ்வுணர்ச்சிகளைக் கவிஞன் தான் உணர்ந்தவாறு எடுத்துரைக்க முயலுகிறான். அவற்றை நயமிக்க முறையிலும் கருத்தைக் கவரும் வகையிலும் வெளிப்படுத்த அவன் முயலும்போது, 'கற்பனை' என்னும் இலக்கியத் திறனைக் கருவியாகக் கொள்கிறான். இதனால்தான் ஷெல்லி என்ற கவிஞர், "கற்பனையின் வெளிப்பாடே கவிதை" என்று மொழிந்துள்ளார்.[3]

உணர்ச்சியின் வடிவமாக உள்ள கவிஞன் தான் உணர்த்த விரும்பும் உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்குச் சாதனமாக உள்ள பொருள்களை மனக்கண்ணால் காணுகிறான்; அவற்றை உவமை, உருவகம் முதலியவற்றால் தொடர்புபடுத்திக்கூற முனைகிறான்; வெவ்வேறாக உள்ள பொருள்களைத் தன் வாழ்க்கை அனுபவம் என்னும் கயிற்றால் பிணைத்து, அவற்றிடையே புதியதோர் உணர்ச்சிப் பொலிவை ஊட்டுகிறான். இவ்வகையில் அமைவதே கற்பனை.

இவ்வாறு கவிதைக்கு மெருகு கொடுக்கும் பணியில் ஈடுபடும் கவிஞன் தன் மனம்போனபோக்கில் தன் உள்ளம் விரும்புமாறு கற்பனையைப் படைக்கின்றான். அப்பொழுது கலைநயம் கருதி உண்மையை உயர்வு நவிற்சியாலோ, குறைத்து மதிப்பிடும் வகையிலோ அவன் வெளிப்படுத்த

3 Shelley, P. B.: The Selected Poetry and Prose of Percy. Bysshe Shelley, Edited by Carlos Baker, p. 494, The Modern Library, Newyork, 1951.

விரும்புகிறன். எனவே, தான் உணர்ந்த உண்மைகளைப் புனைந்துரைக்க அவன் முன்வருகிறன். தான் கண்டன வற்றையும், கருதியவற்றையும் மாற்றியும் திருத்தியும் அவன் புனைந்துரைக்கிறன்.

புனைந்துரைத்தலையே இலக்கிய உலகில் 'கற்பனை' என்று கூறுவர். அது காலத்தையும் இடத்தையும் கடந்தது; மனிதனுடைய அகக்கண்ணிற்கும் அகச் செவிக்கும் விருந்து அளிப்பது. உள்பொருளும் இல் பொருளும், பருப்பொருளும் நுண்பொருளும் கற்பனைக்கு நிலைக்களன்களாக அமைகின்றன. இவ்வாருகக் கற்பனை கவிதைக்கு எழிலையும் ஏற்றத்தையும், பொலிவையும் வலுவையும் அளிக்கிறது. இதைக் கருத்தில் கொண்டே, "உயர்ந்த உணர்ச்சிகள் ஊற்றெடுப்பதற்குரிய சிறந்த நிலைக்களன்களைக் கற்பனைமூலம் அமைத்துத் தருவதே கவிதை" என்று ரஸ்கின் விளக்கம் தந்துள்ளார்.[4]

## படைப்புக் கற்பனை

கவிதைக்குக் கலையழகு அளிக்கும் கற்பனையைப் 'படைப்புக் கற்பனை' (Creative imagination), 'இயைபுக் கற்பனை' (Associative imagination), 'கருத்து விளக்கக் கற்பனை' (Interpretative imagination) என்று மூவகையாகப் பாகுபடுத்திக் கூறுவர். கவிஞன் தான் வாழ்க்கையில் தனித்தனியே கண்ட பல்வேறு பொருள்களில் சிலவற்றை யும், உணர்ந்த உணர்ச்சிகளில் சிலவற்றையும் ஒன்ருக இணைத்துப் புதியதொரு முழுமையான வடிவத்தைப் படைத்துக் காட்டுவதைப் 'படைப்புக் கற்பனை' என்பர்.

> குன்றேறி யானைப்போர் கண்டற்ருல் தன்கைத்தொன்று
> உண்டாகச் செய்வான் வினை.[5]

இக்குறட்பாவினைப் படைப்புக் கற்பனைக்குக் காட் டாகக் கொள்ளலாம். பொருளற்றேர் செயலாற்றத்

4. John Ruskin: Modern Painters, Vol. II, pp. 251-252. George Allen, London, 1903.

5. குறள், 758.

தொடங்கின் பல்வேறு இன்னல்களுக்குள்ளாவர். இது நாள்தோறும் வாழ்க்கையில் காணுகின்ற காட்சியே. அவ்வாறு செயலாற்றும்போது இன்னல்கள் வாராதிருக்க வேண்டுமானுல், கைப்பொருள் நிறைய வேண்டும். கற்பனை யின் வாயிலாக ஒன்றினைப் படைத்து இதனை விளக்கு கின்ருர் வள்ளுவர். ஓர் உயர்ந்த குன்று. அக்குன்றின் அடிவாரத்தில் மதங்கொண்ட இருயானைகள் கடும் போர் புரிகின்றன. யானைப் போரினைக் காண விரும்புகின்றவன் குன்றின் உச்சிமீது நின்று கொண்டு பார்த்தால் அவனுக்கு எத்தகைய இன்னல்களும் ஏற்படா; யானைகள் எப்பக்க மாக ஓடிப்போரிடினும், அவன் தான் இருக்கின்ற இடத்தி லிருந்து கொண்டே அப்போரினைத் தெளிவாகக் காண இயலும். இவ்வாறன்றி மலை அடிவாரத்தில் அமர்ந்து பார்ப்பானுகில், போரிடுகின்ற யானைகளினுல் துன்பமும் ஏற்படும்; போரிடும் காட்சியும் அவனுக்குத் தெளிவாகத் தெரியாது. இப்படைப்புக் கற்பனையின் வாயிலாகத் தாம் தெளிவுறுத்த விரும்பிய கருத்தையும் கூறுகின்ருர் வள்ளு வர். கைப்பொருள் தன்னிடத்து நிறைய இருக்க அதனைக் கொண்டு ஒருவன் செயல்புரிதல் குன்றின்மீது நின்று கொண்டு யானைப்போரினைக் காண்பது போன்றது என்று அவர் விளக்குகிருர்.

## இயைபுக் கற்பனை

இயைபுக் கற்பனை என்பது ஒத்த உருவத்தொகுதி களுடைய (Images) பொருள், கருத்து, உணர்ச்சி ஆகியவை களை இயைபுபடுத்திப் புனைந்துரைப்பது.

> குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
> மழலைச்சொல் கேளா தவர்[6]

இக்குறட்பா இயைபுக் கற்பனைக்குச் சான்று. குழந்தை யின் மழலைச்சொல் தருகின்ற இனிமை, குழலும் யாழும் தருகின்ற ஓசை இனிமை ஆகிய இவற்றை இயைபு படுத்தி ஒப்பிட்டுக் கூறுகிருர் வள்ளுவர். "மழலைச் சொல்லின் இனிமையை நுகராதவரே குழலின் இசை

6. குறள், 66.

இனியது; யாழின் இசை இனியது என்பர்" என்று தாம் கொண்ட கருத்தினையும், உணர்ச்சியினையும் அவர் இவற்றின் வாயிலாகத் தெளிவுபட உணர்த்துகிறார்.

## கருத்து விளக்கக் கற்பனை

பொருள்கள் உணர்ச்சி, கருத்து முதலியவற்றிடையே இழையோடிச் செல்லும் சிறந்த பயன்மதிப்புகளை (Values) உள்ளத்தால் உணர்ந்து அவற்றிற்கு ஒரு கருத்து விளக்கம்தர முயல்வது கருத்து விளக்கக் கற்பனையாகும். இதற்குச் சான்றாகப் பின்வரும் குறட்பாக்களைக் கொள்ளலாம்:

> நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
> பெருமை உடைத்துஇவ் வுலகு.[7]
>
> குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே
> உடம்பொடு உயிரிடை நட்பு.[8]

வள்ளுவர் நிலையாமையினை உள்ளத்தால் உணர்ந்தவர். பிறப்பின் அருமையினையும், உயிரின் பெருமையினையும் அவர் நன்கு உணர்ந்தவராவர். நிலையாமையை உடைய இப்பிறப்பில் செய்யவேண்டிய சிறந்த செயல்களைக் கூறாமல் கூறி விளக்குகிறார் வள்ளுவர்.

## இலக்கியம் கற்பனைக் கருவூலம்

கவிஞன் தான் கண்ட காட்சிகளை வருணிப்பது கற்பனையாகாது. அவன் அவற்றை உணர்ந்த வகையில் எடுத்துரைப்பதிலேயே கற்பனை வெளிப்படுகிறது. அவன் சில அடைமொழிகளையும் உருவத் தொகுதிகளையும் (Images) பயன்படுத்துவதன் மூலம் கற்பனைக்கு வடிவம் கொடுத்து விடுகின்றான். நாம் உணரக்கூடிய எல்லையற்ற பரந்த உணர்ச்சிகளுள், நாம் கண்டறியக்கூடிய சிலவற்றையே கற்பனை விளக்கியுரைக்க முயலுகிறது. இலக்கியம் என்று போற்றத்தக்க சிறப்புடைய படைப்புகளுக்குக் கற்பனை

7. குறள், 336.
8. குறள், 338.

இன்றியமையாததாகும். இலக்கியத்தின் தரம் உயரு வதற்கேற்ப, கற்பனையின் தேவையும் அதிகப்பட்டுக் கொண்டே போகிறது.

### அணியின் தோற்றம்

செய்யுளுக்கு உயிர்நிலையாக விளங்கும் கற்பனையைப் படைப்பதற்கு அணிகள் மிகவும் இன்றியமையாதன வாகும். தொல்காப்பியர் தமது பெருநூலுள் செய்யுளி யலுக்கு முன்னர் மெய்ப்பாடு உவமையியல்களை அமைத் துள்ள முறைமை கொண்டும் செய்யுளுக்கு அணி மிக மிக வேண்டப்படுவதொன்று என்பது நன்கு விளக்கமாகும்.

சிறந்த கவிஞர்கள் தங்கள் உள்ளத்தில் தோன்றும் உயர்ந்த கற்பனையையும் உணர்ச்சியையும் வெளிப் படையாகக் காட்டாது குறிப்பாகத் தம் கலைத்திறனால் வெளிப்படுத்துவர். இங்ஙனம் இலை மறை காய்போல் மறைந்துள்ள கலையழகினை இலக்கியப் புலவர்கள் கண்டு மகிழ்ந்தனர். அவ்வாறு அவர்கள் ஆராயும் போது தாம் கண்ட கலைத்திறன்கள் சிலவற்றிற்கு இலக்கணம் வகுத் தனர். இவ்வாறே இலக்கணம் தோன்றியதென்பர்.[9] இவ்வகை முயற்சியின் பயனாக எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐவகை இலக்கணங்களும் தோன்றின.

'அணி' என்னும் சொல் அழகு, வனப்பு, ஒப்பனை, ஆபரணம், பெருமை, இனிமை, வரிசை முதலான பல பொருள்களை யுடையது.

> படையின துறுப்புமொப் பனையு மழகும்
> பெருமையுங் கலனு மன்பு மணியெனல்[10]

என்று பிங்கல நிகண்டும்,

9. இலக்கியத்தினின்றே இலக்கணம் பெறப்பட்டது என்பதனை,
   'எள்ளினின் றெண்ணெய் எடுப்பது போல
   இலக்கியத்தினின்று எடுபடும் இலக்கணம்'
   என்று அகத்தியம் கூறுகிறது என்பர்.

10. அணி: படை வகுப்பு, அலங்காரம், அழகு, பெருமை, ஆபரணம், அன்பு—பிங்கலநிகண்டு, 3050.

அணிபெருமை யொழுங் கழகா பரணமுனை யெல்லை
யலங்கார மாலையச்சி ணுணிபடை வகுப்பின்[11]

என்று நாநார்த்த தீபிகையும் அணிக்குப் பொருள் கூறுகின்றன. இவை அனைத்தும் காண்போரையும், கேட்போரையும் உவப்புடையராக்கும் தன்மையன.

மேலும், அணி அணியப்படுவ தெனவும், அழகைத் தருவ தெனவும் பொருள் தரும். அழகு நலன்கள் அனைத்தும் இயற்கையிலேயே பெற்ற ஆரணங்கும், தான் அணியப்படுகின்ற ஆபரணங்களினால் மேலும் அழகு பெற்றுத் திகழ்கிருள். அழகுக்கு அழகு கூட்டுவது அணியே ஆகும்.

மாடக்குச் சித்திரமும் மாநகர்க்குக் கோபுரமும்
ஆடமைத்தோ ளல்லார்க் கணியும்போல்[12]

என்று நன்னூலும் அணிநலச் சிறப்பைக் கூறுகின்றது. அழகுடைய பொருளையே அனைவரும் விரும்புவர். அது போலவே கவர்ச்சியும், அழகும், இனிமையும் பொருந்திய செய்யுள்களையே கற்ரோரும் மற்ரோரும் விரும்புவர்.

**அணி ஓர் அடிப்படைக் கலை**

அணியமைப்பு இலக்கணத்தின் ஒரு பகுதி. அது மக்கள் வழக்கில் அதிகம் பயிலாது இலக்கிய வழக்கில் மிகுதியாகப் பயன்படுகிறது. கவிஞர்களுக்குத் தங்களுடைய உணர்ச்சிகளையும், கருத்துகளையும் விளக்கமாகக் கூறுவதற்கு உறுதுணையாக உள்ளவை இந்த அணிகளே. தன் உள்ளம் ஒன்றை உணரும்போது அதனை வெளிப்படுத்த அதற்கு இணையான சிறந்த ஒன்றைக் கவிஞன் அதனுடன் ஒப்பிட்டுக் கூற விழைகின்ருன்; உடனே உணர்ச்சி ஊற்றெடுக்கிறது; கவிதையினை வடிக்கின்ருன். அவன் கண்ட ஒப்புப்பொருளை அழகுபடக் கவிதையில் அமைத்துத் தருகின்ற அந்நயத்தினையே நாம்

11. **அணி :** பெருமை, ஒழுங்கு, அழகு, ஆபரணம், முனை, எல்லை, அலங்காரம், மாலை, அச்சின் ஆணி, படை வகுப்பு—**நாநார்த்த தீபிகை, 286.**

12. **நன்னூல், 45.**

அணி யென்கிறோம். பொருளை நேராக உணர்த்துவதற்கு அதோடு தொடர்புடைய சிறப்பான கருத்துகளையும், பொருள்களையும் ஒப்பிட்டுக் காட்டுகின்ற இக்கலையே உலகில் தோன்றிய எல்லாக் கலைகளுக்கும் அடிப்படை என்பர்.

கற்பனைத்திறனும் கருத்துவளமும் கொண்ட புலவர்கள் தாம் கருதிய கருத்துகளுக்கு உணர்ச்சியூட்டி அழகிய உருவம் கொடுத்துக் கவிதையாக்குகின்றனர். அவர்கள் எடுத்தாளுகின்ற பல்வேறு வகையான நயங்களும், அவர்தம் மகிழ்ச்சியும் உள்ள உணர்ச்சியுமே இலக்கியத்தில் உவமமாகவும் உருவகமாகவும் திகழ்கின்றன.

"பாடலில் காணப்படுகின்ற அணியமைதிகள் கவிஞர்களுடைய உணர்வுத் தன்மைகளே" என்பர் ரிச்சர்ட்ஸ் என்ற திறனாய்வாளர். மேலும், அவர் கண்ட இலக்கியத் திறனாய்வுக்குரிய கொள்கை நெறிகளில் உருவத் தொகுதிகளின் உணர்வுத் தன்மைக்கு மிகுந்த சிறப்பு அளிக்கப்படுகிறது.

> "தெளிவான உருவமாக அமைவதால் உருவம் ஆற்றல் பெறுவதில்லை; தெளிவைவிட உணர்வோடு விந்தையாக இணைக்கப்பெற்ற ஓர் உள நிகழ்வாக அமையும் பண்பிலேயே அதன் ஆற்றல் அமைகிறது. உணர்வின் எச்சமாகவும் வெளிக்காட்டாகவும் அமைவதிலேயே அதன் பயன் நிறைவு பெறுகிறது"

என்பது திறனாய்வாளர் ரிச்சர்ட்ஸ் தரும் விளக்கம்.[13]

பாமகர் என்பார்,

> "உலகில் நாம் பேசும் பேச்சு மிகவும் இயல்பான முறையில் இருக்கிறது. காப்பியத்திலோ அதே சொல்லும் பொருளும் தனித்த சிறந்த அழகுடன் காணப்படுகின்றன. ஆகையால் அணியென்பது உலக இயற்கையைத் தாண்டி, கவிகளால் மொழியில் அழகுபட ஏற்றப்படுவது எனலாம்"[14]

என்று அணிகளின் பொது இயல்புகளை விளக்குகிறார்.

13. Richards, I. A.: Principles of Literary Criticism, pp. 118-119, Routledge & Kegan Paul Ltd., London, 1961.
14. கலைக்களஞ்சியம், தொகுதி I, பக். 212.

## தமிழில் அணியிலக்கணம்

அரிய கருத்துகளை மனத்தை விட்டகலாமல் செய்வதற்குப் பயன்படுத்தப்படுகின்ற இவ்வணிகளைத் தமிழ் மொழியிலும் பண்டைத் தமிழ்ச் சான்றோர் அழகுற அமைத்துள்ளனர். சங்க இலக்கியங்களில் உள்ள அணி பொருந்திய பாடல்கள் பயில்தொறும் பயில்தொறும் மனத்தை மகிழ்விப்பன. "உவமை அணியை ஆளும் தன்மையில் சங்க மருவிய நூல்களுக்கும், பிற்காலத்து நூல்களுக்கும் பெரிதும் வேற்றுமை காணப்படுகின்றது. சங்க நூல்களில் காணப்படுகின்ற உவமைகள் பெரும்பாலும் மிகைபடாமல் எடுத்துக்கொண்ட பொருளை இனிது விளக்குகின்றன. ஆனால், பிற்காலத்தில் ஆளப்பட்டுள்ள உவமைகள் வரம்பிகந்து மிகைபட்டு வனப்பின்றி அமைந்திருக்கின்றன" என்பர்.[15]

## தொல்காப்பியமும் முன்னூலும்

தமிழில் இப்பொழுது நமக்குக் கிடைத்துள்ள முழுமையான, பழமையான, இலக்கண நூல் தொல்காப்பியமே. தொல்காப்பியர் தம் நூலை எழுத்து, சொல், பொருள் என மூவகை யாகப் பிரித்து,[16] யாப்பினையும் அணியினையும் பொருளதிகாரத்துள் அடக்கியுள்ளார். அணியிலக்கணம் மெய்ப்பாட்டியல் உவமவியல்களிலும், யாப்பிலக்கணம் செய்யுளியலிலும் கூறப்பட்டுள்ளன. தொல்காப்பியத்திற்கு முன்னரும் இலக்கண நூல்கள் இருந்திருக்க

15. சேதுப்பிள்ளை, இரா. பி.: திருவள்ளுவர் நூல்நயம், பக். 112, கழகப்பதிப்பு, 1965.

16. தொல்காப்பியர் தமிழ் இலக்கணத்தை மூவகையாகப் பிரித்தமையைப் பின்வரும் தொல்காப்பியச் சிறப்புப் பாயிரம் நமக்குக் காட்டும் :

'வடவேங்கடந் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து
வழக்குஞ் செய்யுளும் ஆயிரு முதலின்
எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி...'

—தொல். சிறப்புப் பாயிரம்.

வேண்டும் என்பது பிறர் கூற்றாக அவர் பயன்படுத்தியுள்ள 'என்ப', 'என்மனார் புலவர்', 'மொழிப' என்றாற் போன்ற சொல்லாட்சிகளால் இனிது விளங்கும்.

> விரவியும் வரூஉம் மரபின என்ப.[17]

> சிறப்பே நலனே காதல் வலியொடு
> அந்நாற் பண்பும் நிலைக்களம் என்ப.[18]

> பெருமையும் சிறுமையும் மெய்ப்பாடு எட்டன்
> வழிமருங்கு அறியத் தோன்றும் என்ப.[19]

> உவமப் போலி ஐந்தென மொழிப.[20]

> தவலருஞ் சிறப்பின் அத்தன் மை நாடின்
> வினையினும் பயத்தினும் உறுப்பினும் உருவினும்
> பிறப்பினும் வரூஉம் திறத்த என்ப.[21]

உவமவியலிலும் முந்தையோர் கொள்கைகளை ஆசிரியர் கொண்டுள்ளமைக்கு இந்நூற்பாக்கள் சான்றாம். இதனால் அணி இலக்கண மரபுகள் தொல்காப்பியருக்கு முன்னரும் இருந்திருத்தல் வேண்டும் என்பது தெளிவு.

### அணிநலம் கூறும் தனி நூல்கள்

தொல்காப்பியர் காலத்தில் எழுத்து, சொல், பொருள் என மூன்று வகையாக இருந்த பாகுபாடு பின்னர் நால் வகையாயிற்று என்பதை 'இறையனார் களவியலுரை' கூறும். இவ்வுரை எழுந்த காலம் கி. பி. எட்டாம் நூற்றாண்டு என்று கருதப்படுகிறது.

இவ்விறையனாரகப் பொருளுரையில்,

> அரசன் இனி நாடு நாடாயிற்றாகலின் நூல் வல்லாரைக் கொணர்கவென்று எல்லாப் பக்கமும் ஆட்போக்க, எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும், யாப்பதிகாரமும் வல்லாரைத்

17. தொல். உவம. 2.
18. தொல். உவம. 4.
19. தொல். உவம. 19.
20. தொல். உவம. 24.
21. தொல். உவம. 25.

தலைப்பட்டுக் கொணர்ந்து, 'பொருளதிகாரம் வல்லாரை எங்குந் தலைப்பட்டிலேம்' என வந்தார். வர, அரசனும் புடைபடக் கவன்று, 'என்னை? எழுத்தும் சொல்லும் யாப்பும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே? பொருளதிகாரம் பெறேமேயெனின், இவைபெற்றும் பெற்றிலேம்' எனச் சொல்லா நிற்க"[22]

என்று வருவதால், அக்காலத்தில் எழுத்து சொல் பொருள் யாப்பு என நால்வகை இலக்கணம் வழங்கினவென்பது துணியப்படும். அஃதாவது தொல்காப்பியனார் காலத்தில் பொருளதிகாரத்தினுள் அடங்கிய யாப்பு, கடைச் சங்கத்தார் காலத்தில் அதினின்றும் பிரிந்து ஓரதிகாரமாயிற்று என்பதாம்.[23] இந்த யாப்பதிகாரம் மிக்க சிறப்படைந்து பல்லோரானும் பாராட்டப்பட்டது.

அதன் பின்னர் அணியிலக்கணம் கூறும் நூல்களும் தனியாக எழுந்தன. அணியை மட்டுமே தனிப்படக்கூறும் நூல்கள் தண்டியலங்காரம், மாறனலங்காரம் என்பனவாம். "சேனாவரையர் உரையால் 'அணியியல்' என்ற வேறொரு நூல் இருந்தமை தெரிகிறது. அதனை அடியார்க்கு நல்லாரின் மேற்கோளின்படி தண்டியலங்காரமே அணியியல் என்று வழங்கப்பட்டதோ என்று கருத வேண்டியிருக்கிறது."[24]

வடமொழியிலுள்ள 'சந்திராலோக'த்தின் தமிழ்மொழி பெயர்ப்பு மிகப்பிற்பட்ட காலத்தில் செய்யப்பெற்றது. சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த திருத்தணிகை, விசாகப் பெருமாளையரின் 'அணி இலக்கணம்' எளிய உரைநடையில் அமைந்துள்ளது. 'குவலயாநந்தம்' என்னும் வடமொழி அணிநூலின் தமிழ்மொழி பெயர்ப்பும் சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுந்தது. இவற்றுள் தண்டியலங்காரமே தமிழ் மக்களிடை பயிற்சி மிக்குடையதாய் விளங்குகின்றது.

22. இறையனார் அகப்பொருள்: சூத்திரம். 1—களவியலின் வரலாறு, கழகப்பதிப்பு, 1958.
23. சூரிய நாராயண சாஸ்திரியார், வி. கோ.: தமிழ்மொழியின் வரலாறு, பக். 43, சென்னை, 1903.
24. கலைக்களஞ்சியம், தொகுதி I, பக். 54.

**ஐவகை இலக்கணம்**

இவ்வாறாகத் தொல்காப்பியர் காலத்தில் மூவகை இலக்கணமாய் இருந்த மரபு காலப்போக்கில் ஐவகை இலக்கணமாய்ப் பெருகி வளர்வதாயிற்று. முதன்முதல் ஐந்திலக்கணமும் ஒருசேரக்கூறிய நூல் வீரசோழியம். இம்முறையைப் பின்பற்றிப் பிற்காலத்தில் தோன்றியவை இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்து வீரியம் என்பனவாம்.

பவணந்தி முனிவர் இயற்றியருளிய நன்னூற் சிறப்புப் பாயிரத்தில்,

> அரும் பொருள் ஐந்தையும் யாவரும் உணரத்
> தொகை வகை விரியில் தருக

என்று கூறுவதனால் நன்னூலாரும் ஐவகை இலக்கணங்களை இயற்றி இருக்கலாம் என்று ஊகிக்க இடந் தருகிறது.

'பழையன கழிதலும் புதியன புகுதலும்' என்னும் நூற்பாவில், "இஃது என்னுதலிற்றோவெனின் இந்நூலிற் சொன்ன ஐந்ததிகாரத்திற்கும் சிங்க நோக்காய் நிற்பதொரு புறனடை உணர்த்துதல் நுதலிற்று" என மயிலை நாதர் கூறுகிறார்.[25] இக்கூற்றும் நன்னூல் ஐவகை இலக்கணங்களைக் கூறியிருத்தல் வேண்டும் என்பதை உணர்த்தும். மேலும், பெரிய திருமொழிச் சிறப்புப் பாயிரம் பாடிய கூரத்தாழ்வார் வாக்கும் இதற்குச் சான்று பகர்கிறது :

> நெஞ்சுக் கிருள்கடி தீபம் மடங்கா நெடும்பிறவி
> நஞ்சுக்கு நல்ல வமுதம் தமிழநன் னூல்துறைகள்
> அஞ்சுக் கிலக்கியம் ஆரண சாரம் பரசமயப்
> பஞ்சுக் கனலின் பொறிபர காலன் பனுவல்களே.[26]

இதன் உரையாசிரியரான பிள்ளை லோகாசார்ய ஜீயர்,

> " த்ராவிட சாஸ்திரம் எழுத்து, சொல், பொருள் யாப்பு அலங்காரம் என்கிற விலக்ஷணமான பஞ்சலக்ஷணத்தையும் அறுதியிடுவதான நன்னூல் என்றொரு சாஸ்திரம் உண்டு "

25. நன்னூல் உரிச்சொல்லியல், 21, மயிலை நாதர் உரை.
26. பெரியதிருமொழித் தனியன்.

என்று எழுதியுள்ளார். எனவே ஐவகை இலக்கணங்களும் நன்னூலில் கூறப்பட்டிருந்து பின்னர் சிதைந்திருத்தல் வேண்டும் என்று கொள்ளலாம்.

**உவமவியலும் பிறவும்**

பிற்காலத்தெழுந்த எல்லாவகை அணிகளையும் தொல்காப்பியத்தின் உவமவியலுள் நாம் அடக்கிக் கூறலாம். தொல்காப்பியர் கூறுவது உவமை ஒன்றுதான். அகத்திணையியலில் ஏனையுவமம் (வெளிப்படையுவமம்), உள்ளுறை யுவமம் என்பனவற்றை விளக்குகிறார். இவர் காலத்தில் உவமையொன்றே அணியாகக் கருதப்பட்டது போலும். காலப்போக்கில் உவமையொன்றே மக்களுடைய கலை வளர்ச்சிக்கு ஏற்பப் பல கிளைகளாக விரிந்தது. பேராசிரியரும் உவமம் ஒன்றினையே அணியாகக் கொண்டார். இதனை,

> "இனி இவ்வோத்தினிற் கூறுகின்ற உவமங்களுட் சிலவற்றையும், சொல்லதிகாரத்தினுள்ளும் செய்யுளியலுள்ளுஞ் சொல்லுகின்ற சில பொருள்களையும் வாங்கிக் கொண்டு மற்றவை செய்யுட்கண்ணே அணியாமென இக்காலத்தாசிரியர் நூல் செய்தாருமுளர்"[27]

எனக் கூறும் அவருடைய உரைப்பகுதியால் உணரலாம்.

இங்ஙனம் உவமமே பிற எல்லா அணிகளும் அமையக் காரணமாயிருந்தது என்பதனை வடமொழி அறிஞர்களும் ஒப்புக்கொள்ளுகின்றனர். அப்பைய தீட்சிதர் தாமெழுதிய சித்திர மீமாம்சை என்னும் வடமொழி நூலில்,

> உவமை என்னும் தவலருங் கூத்தி
> பல்வகைக் கோலம் பாங்குறப் புனைந்து
> காப்பிய அரங்கில் கவினுறத் தோன்றி
> யாப்பறி புலவர் இதயம்
> நீப்பறு மகிழ்ச்சி பூப்ப நடிக்கும்மே

என்று உவமையின் சிறப்பினை எடுத்துரைப்பதாக வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார் தாம் எழுதியுள்ள

27. தொல். பொருள். உவம. 37, பேரா. உரை. S. கனகசபாபதிப் பிள்ளை பதிப்பு, 1935.

'தமிழ்மொழியின் வரலாறு' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.[28] இப்பாட்டு உவமையணியே எல்லா அணிகளுக்கும் தாய் என்னும் கருத்தைச் சுவைபட விளக்குதல் காணலாம்.

தொல்காப்பியனார் அணிகளைப் பலவகையாகப் பாகுபாடு செய்யாது அணிகளுக்கு அடிப்படையாக உள்ள உவமை ஒன்றினைமட்டுமே விளக்கினார். கி. பி. பத்தாம் நூற்றாண்டைச் சார்ந்த திவாகரம் இருபத்தெட்டு அலங்காரங்களையும், பன்னிரண்டாம் நூற்றாண்டில் தோன்றிய தண்டியலங்காரம் முப்பத்தைந்து அணிகளையும் கூறுகின்றன. பதினாறும் நூற்றாண்டில் இயற்றப் பெற்ற மாறனலங்காரம் அறுபத்துநான்கு அணிகளையும், பிற்காலத்தில் தோன்றிய சந்திராலோகம் நூறு அணிகளையும், விசாகப்பெருமாளையர் இயற்றிய அணியிலக்கணம் நூற்றிரண்டு அணிகளையும், குவலயானந்தம் நூற்றிருபது அணிகளையும் கூறுகின்றன.[29]

"எல்லாவித அலங்காரங்களும் உவமையணியின் விஸ்தாரங்களைத் தவிர வேறொன்றுமில்லை; 'உபமாலங்காரமே அலங்கார சாஸ்திரத்தின் பிராணன்' என்று பழைய இலக்கணகாரர் சொல்லுகிறார்கள்"

என்று சுப்பிரமணிய பாரதியார் எழுதியுள்ள இக்கருத்தும் இங்கு நினைவுகூர்தற்குரியதாகும்.[30]

28. தமிழ்மொழியின் வரலாறு, பக். 45.

29. திவாகரம்: 10 ஆம் நூற்றாண்டு.
தண்டியலங்காரம்: 12 ஆம் நூற்றாண்டு.
மாறனலங்காரம்: 16 ஆம் நூற்றாண்டு.
குவலயானந்தம்: 19 ஆம் நூற்றாண்டு.
கந்தையாபிள்ளை, ந. சி.: தமிழ் இலக்கிய அகராதி, பக். 94, 67, 131, 36. ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1952.

30. பாரதியார் கட்டுரைகள்: 'கலைகள்' பக். 91, கன்னித்தமிழ்ப் பதிப்பகம், மதுரை, 1956.

ஆங்கிலக் கவிதையில் 'ஸிமிலி' (Simile), 'மெட்டபர்' (Metaphor) என்று இரண்டுவகை அணிகளே இருக்கின்றன. இவை இரண்டும் தொல்காப்பியர் உவமவியலில் விளக்கும் உவமை மரபுகளுக்கு ஒப்பாகச் சொல்லத்தக்கனவாம். தொல்காப்பியர் வகுத்துரைக்கும் உவமை முதலிய இலக்கணக் கூறுபாடுகள் வரலாற்று முறையில் எவ்வளவு சிறப்புடையனவாயுள்ளன என்பது இதனாலும் நன்கு தெரியவரும்.

# 2. உவமையணி

## உவமையின் பொது இயல்பு

காணுகின்ற எல்லாப் பொருள்களையும் ஒப்பிட்டுப் பார்க்கின்ற இயல்பு எல்லா மக்களிடையேயும் இயற்கையாகவே அமைந்துள்ளது. மனிதன் எண்ணத்தொடங்கிய அன்றே ஒப்பிட்டுப்பார்க்கும் இயல்பும் தோன்றியிருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, என்று உவமை தோன்றிற்று என்பதை ஆராய்வது என்று மனிதன் எண்ணத் தொடங்கினன் என்பதை ஆராய்வதேயாம். பொதுப் படையாகப் பார்க்கும்போது வெவ்வேருகத் தோன்றும் பொருள்கள், நன்கு கூர்ந்து ஆராயும்போது அவை எவ்வகையிலேனும் தம்முள் நெருங்கிய தொடர்பு பெற்று விளங்குதலைக் காணலாம். பொருள்களுக்கு இடையே காணப்படும் தொடர்பினை ஆய்ந்து காணக் காண அறிவு பெருகும்; தொட்டனைத்தூறும் மணற்கேணி போல வளரும். இங்ஙனம் ஒப்பிட்டுப்பார்க்கும் இவ்வியல்பு எல்லா மக்களிடத்தும் இயல்பாகவே அமைந்துள்ள தெனினும் சிறப்பாகவும், குறிப்பாகவும் கவிஞர்களிடையே சிறந்து காணப்படும்.

## உவமை ஒப்புமை அளவை

கவிஞன் தன் உள்ளத்து எழுந்த இதய உணர்வின் ஊற்றுகளை—எழுச்சிகள் நிறைந்த இன்ப துன்ப உந்துதல்களைச்—சிதைவின்றித் தன் உள்ளத்து எழுந்தவாறே உலகிற்கு உணர்த்த உதவுவன உவமைகளே. இவை கருத்தை விளக்கப் பயன்படுவதோடு, அறிந்த பொருளைக் கொண்டு அறியாத பொருளைப் பிறர்க்கு அறிவுறுத்த

ஊன்றுகோல் போல உதவுகின்றன. ஒரு பொருளோடு மற்றொரு பொருளை இயைபுபடுத்திப் பார்ப்பது ஓர் இயற்கைத் தூண்டுதல் மட்டுமன்று; அறிவு வளர்ச்சிக்கு அடிப்படையுமாகும்.

அங்கிங்கெனாதபடி எங்கும் பரந்துள்ள இறைவனின் இயல்பினைக் கண்ணுற்ற கவிஞர் பெருமக்கள் அவனுடைய தன்மையினைச் சுட்டிக்காட்டுதற்கு ஒப்புடைய பொருளைக் காண முயன்றனர். வள்ளுவரும் காண முயன்றார். இறைவனுக்கு நிகராக ஒப்புமை காணவும் கூறவும் முடியுமோ? ஆய்ந்துணர்ந்த அறிவுச் சான்றோராகிய வள்ளுவர் இறைவனைக் கூறும்போது,

> தனக்குவமை இல்லாதான்[1]

என்றே கூறுகின்றார். தேவாரமும் இறைவனை,

> ஒப்புடையன் அல்லன்
> ஓர் உவமனில்லி[2]

என்று கூறும். எனவே, ஒப்புமைப் படுத்திக் கூற முயல்வது எல்லாருக்கும் உரிய பொது இயல்பேயாகும் என்பது தெளிவாம்.

உவமமானது ஓர் ஒப்புமை அளவையாகும்.

> உவம மாவது ஒப்புமை அளவை
> கவய மாவாப் போலுமெனக் கருதல்[3]

என்று மணிமேகலை கூறுவதும்,

> எவ்வகைச் செய்தியும் உவமம் காட்டி
> நுண்ணிதின் உணர்ந்த நுழைந்த நோக்கிற்
> கண்ணுள் வினைஞர்[4]

என மதுரைக் காஞ்சி கூறுவதும் உவமை என்பது ஒப்புக் காட்டி விளக்குவது என்பதைத் தெளிவுறுத்துவன வாகும்.

1. குறள், 7.
2. தேவாரம், 6, 97, 10.
3. மணிமேகலை, 27 : 41-42.
4. மதுரைக்காஞ்சி, 516-518.

**உவமைப் பயன்**

பொருளின் உண்மைத் தன்மையினை அறிந்து தெளிவதற்கு உவமை பெரிதும் உதவுகின்றது. பொருளாவது அல்லது கருத்தாவது எவ்வளவு சிறிதாயினும் உவமை அதனைப் பெரிதாக மிகைபடுத்தி நன்கு விளக்கம் தரும்.

காண்டல் கருதல் உவமம் ஆகமம்
ஆண்டைய அருத்தா பத்தியோ டியல்பு
ஐதிகம் அபாவம் மீட்சி ஒழிவறிவு
எய்தியுண் டாம்நெறி யென்றிவை தம்மால்
பொருளின் உண்மை புலங்கொள வேண்டும்[5]

என்று வரும் மணிமேகலை அடிகளும் பொருளின் உண்மைத் தன்மையை அறிதற்கு உவமையும் ஓர் அளவை எனக் கூறும். இதனைப் பரிமேலழகரும்,

“அளவைகளாவன பொறிகளாற் காணும் காட்சியும், குறிகளான் உய்த்துணரும் அநுமானமும், கருத்தா மொழியாகிய ஆகமும் என மூன்று. ஒப்புப்பற்றி உணரும் உவமையும், இங்ஙனம் அன்றாயின் இது கூடாது என உணரும் அருத்தா பத்தியும், உண்மைக்கு மாறாய இன்மையும் கூட்டி ஆறு என்பாரும் உளர். இவையும் ஒருவாற்றான் அவற்றுள்ளே அடங்குதலின் மூன்றென்றலே கருத்து”[6]

என்று ஒப்புப்பற்றி உணரும் உவமையையும் அளவையினுள்ளே அடக்குவர். சிவஞான சித்தியாரும்,

அளவை காண்டல் கருதல் உரை
அபாவம் பொருள் ஒப்பு ஆறென்பர்[7]

என்று ஒப்பினை அளவைப் பொருள்களுள் ஒன்றாக உரைக்கின்றது.

மெய்ப்பிரத்தியம் அனுமானம் சாத்தம்
உவமானம் அருத்தாபத்தி அபாவம்
இவையே இப்போது இயன்றுள அளவைகள்[8]

என்று மணிமேகலையுள்ளும் கூறப்பட்டிருத்தல் ஈண்டு ஒப்புக் காண்டற்குரிய செய்தியாகும்.

5. மணிமேகலை, 27 : 9-13.
6. குறள், 242, பரி. உரை.
7. சிவஞான சித்தியார்: சுபக்கம், அளவையிலக்கணம், 1.
8. மணிமேகலை, 27 : 83–85.

"இதனாற் பயன் என்னை மதிப்பதோவெனின் புலன் அல்லாதன புலனாதலும் அலங்காரமாகிக் கேட்டார்க்கு இன்பம் பயத்தலும். 'ஆப்போலும் ஆமா' என உணர்த்தியவழி, அதனைக் காட்டகத்துக் கண்டான் முன் கேட்ட ஒப்புமைபற்றி இஃது ஆமாவென்று அறியும். 'தாமரை போல் வாள் முகத்துத் தையலீர்' என்றவழி அலங்காரமாகிக் கேட்டார்க்கு இன்பம் பயக்கும்"[9]

என்று இவ்வுவமையின் பயன் குறித்து இளம்பூரணர் கூறுவர்.

### ஒப்புமை வகை

இவ்வொப்புமை முழுது மொத்தல், ஒரு புடையொத்தல் என இருதிறத்ததாம். முழுதும் ஒத்தற்கு உவமம் வேண்டா; உவமம் எல்லாம் ஒரு புடை யொத்தே இருக்கும். இவ்வுவமை பற்றித் தொல்காப்பியர் 'உவமவியல்' என்னும் பகுதியில் தெளிவுறக் கூறுகின்றார். "ஒரு புடை யொப்புமை பற்றி உவமை உணர்த்தினமையாற் பெற்ற பெயர்" என்பர் இளம்பூரணர்.

ஒரு பொருளுக்கு ஒரு பொருளை உவமையாகச் சொல்லும்போது அவ்விரண்டு பொருள்களுக்கும் பொதுவாகிய ஒருவினை (தொழில்) காரணமாகவும், அவ்வினையால் பெறும் பயன் காரணமாகவும், அப்பொருள்களின் மெய்யாகிய வடிவு காரணமாகவும், மெய்யின்கண் நிலை பெற்றுத் தோன்றும் உருவாகிய வண்ணம் காரணமாகவும் ஒப்புமை கூறப்படுமாதலின் உவமத்தால் பொருள் தோன்றும் தோற்றம் வினை, பயன், மெய், உரு என நால் வகைப்படும் என்பர்.

வினைபயன் மெய்உரு என்ற நான்கே
வகைபெற வந்த உவமத் தோற்றம்[10]

என்பது தொல்காப்பிய நூற்பாவாகும்.

9. தொல். உவம. இளம்பூரணர் உரை-தோற்றுவாய்.
10. தொல். உவம. 1.

## உவமையின் பிறப்பிடம்

இந்நான்கு உவமங்களும் சிறப்பு, நலன், காதல், வலி என்னும் நான்கனையும் நிலைக்களனாகக் கொண்டு பிறக்கும்.[11] "சிறப்பு என்பது உலகத்துள் இயல்பு வகையாலன்றிச் செயற்கை வகையால் பெறுவது. நலன் என்பது ஒரு பொருளின்கண் இயல்பாய்த் தோன்றும் நன்மையாகும். காதல் என்பது நலனும் வலியும் இல்லாத நிலையிலும் காதல் மிகுதியால் அவை யுள்ளனவாகக் கொண்டு கூறுவது. வலி என்பது ஒரு பொருளுக்குத் தன் தன்மையின் உளதாகிய ஆற்றல்" என்பர் அறிஞர். இந்நான்கே யன்றித் தாழ்ந்த பொருளோடும் உவமை பொருந்துமிடத்து உவமிக்கப்படும் என்றும் தொல்காப்பியர் கூறுவர்.[12]

## பொருளினும் உவமை உயர்வு

இவ்வாறு வருகின்ற உவமைகள் பொருளை விடவும் உயர்ந்ததாய் இருத்தல் வேண்டும் என்பர்.

> உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை[13]

என்கிறார் தொல்காப்பியர். உவமையும் பொருளும் பெரிதும் ஒத்திருத்தல் வேண்டும் என்றும் கூறுவர். "மயில் தோகை போலும் கூந்தல்" என்று கூறுவதன்றிக் "காக்கைச் சிறகன்ன கருமயிர்" என்று சொல்லுதல் கூடாது. ஜான்சன் என்ற அறிஞர், "சிறந்த உவமையானது பொருளின் தன்மையை விளக்குவதன்றி அதனைச் சிறப்பிக்கவும் வேண்டும்" என்று கூறுகின்ற கருத்தும் ஈண்டு ஒப்புநோக்குதற்கு உரியதாகும்.[14]

11. சிறப்பே நலனே காதல் வலியோடு
    அந்நாற் பண்பும் நிலைக்களம் என்ப. —தொல். உவம. 4.
12. 'கிழக்கிடு பொருளோடு ஐந்தும் ஆகும்'.
    —தொல். உவம. 5.
13. தொல். உவம. 3.
14. Samuel Johnson, Dr.: The Lives of the English Poets, Vol. xi, p. 176, Griffin and Co, London, 1820.

**உவமையின் உறுப்புகள்**

உவமையில் அடங்கியுள்ள உறுப்புகள் நான்கு என்பர். அவை உவமேயம், உவமானம், பொதுப்பண்பு, உவம உருபு என்பன. சொல்ல எடுத்துக்கொண்ட பொருளைப் பொருள் என்றும், அதனுடைய இயல்பினையும் தன்மையினையும் விளக்கவேண்டி ஒப்புமையாக எடுத்துக்காட்டப்படும் பிறபொருளை உவமை என்றுங் கூறுவர் தொல்காப்பியர். இவ்விரண்டினையும் முறையே 'உவமேயம்' என்றும் 'உவமானம்' என்றும் கூறுவர் வட நூலார். உவமையும் பொருளும் ஆகிய இவ்விரு பொருளின்கண்ணும் ஒத்தமைந்த வண்ணம், வடிவு, தொழில் பயன் என்பன பற்றி அமைந்த ஒப்புத்தன்மையையே 'பொதுப்பண்பு' என்பர். அத்தன்மையினை விளக்குதற் பொருட்டு உவமையினையும், பொருளினையும் பொருத்துவதற்கு இடையில் பயன்படும் சொற்களே 'உருபு'களாம்.

இங்ஙனம் உவமையும் பொருளும் அவற்றிடையே அமைந்த பொதுத்தன்மையும் உவம உருபும் ஆகிய இவை இன்னவென வெளிப்படையாக உணர்தற் கேற்ற சொல் நடையினை உடையதே 'வெளிப்படை உவமம்' எனப்படும். இதற்கு நேர்மாருகக் கருத்து வகையால் உட்பொருள் கற்பிப்பதை 'உள்ளுறை உவமம்' என்பர். இதனினும் வேறுபட்டுத் தெளிவுற உவமையும் பொருளும் தோன்ற வருவதால் உள்ளுறையினின்று வேறுபடுத்தியுரைக்க இதனை 'ஏனையுவமம்' என்று குறிப்பிடுகிருர் தொல்காப்பியர்.

உணர்வு நிலையில் தம்மை மறந்து பாடும் கவிஞர்களின் படைப்பில் மலரும் உவமைகளில் இந்நான்கு கூறுபாடுகளுள் ஒன்றேனும், பலவேனும் வெளிப்படையாகவோ அன்றி மறைந்தோ வரலாம்.

> சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபாற்
> கோடாமை சான்றோர்க் கணி.[15]

இக்குறட்பாவினுள் நான்கு கூறுபாடுகளையும் காணலாம். முன்னே தான் சமமாக இருந்து பின்னர் பொருளைச்

15. குறள், 118.

சீர்தூக்கும் துலாக்கோல் எப்பக்கமும் சாயாது நேராக நிற்பது போல நடுவுநிலைமை போற்றுவதே சான்றோர்க்கு அழகாம். "பருப்பொருளின் கனத்தை நிறுக்கும் தராசு போல, நுண்பொருளாம் குணத்தை நிறுக்கும் தராசாகிய மனம் நடுநிற்க வேண்டும்" என்ற உண்மையை உவமையால் விளக்குகிறார் வள்ளுவர்.

பொருள் : சான்றோர்
உவமை : துலாக்கோல்
உருபு : போல் (போல)
பொதுத்தன்மை : ஒருபால் கோடாமை
(நடுவுநிலைமை தவறாமை)

இவ்வாறு உவமையின் உறுப்புகள் நான்கும் இப்பாடலில் தெளிவுறத் தெரிய வருகின்றன. இங்ஙனம் வருவதை 'விரி உவமை' என்றும் கூறுவர்.

கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று.[16]

கூத்தாடும் அவைக்கு மக்கள் கூட்டம் சிறுகச் சிறுக வந்து சேரும்; முடிவில் ஒரு சேர நீங்கும். அது போன்றது பெருஞ் செல்வம் என்று உவமை மூலம் அறிவுறுத்துகிறார் வள்ளுவர். இக்குறட்பாவில் நிலையாமை என்னும் பொதுத் தன்மை உள்ளீடாக மறைந்து வருவதைக் காணலாம். இவ்வாறு மறைந்து வருவதனைத் 'தொக்கி நிற்றல்' என்பர்.

சிதைவிடத் தொல்கார் உரவோர் புதையம்பின்
பட்டுப்பா டூன்றுங் களிறு.[17]

வீரரொடு வீரரும் யானையொடு யானையும் பொருகின்ற கொடிய போர்க்களம்; வீரர்கள் எய்யும் அம்புகள் களிற்றின்மேல் தைத்த வண்ணம் உள்ளன. உடல் மறையுமளவும் மேனி முழுதும் அம்புகள் பட்ட யானை; ஆயினும் அது தளராது மேல் நோக்கிச் சென்று தன் பெருமையை நிலைநிறுத்தும். அதுபோல ஊக்கம் உடையவர்களும்

16. குறள், 332.

17. குறள், 597.

அழிவுவந்த காலத்தும் தளராது முன்னேறுவர்; தாம் மேற்கொண்ட செயலில் வெற்றி பெறுவர். இக்கருத்தமைந்த இக்குறட்பாவில் உவமை உருபு தொக்கி நிற்பதைக் காண்கிறோம்.

எனவே, இவ்வாறு வருவன 'தொகை உவமை' என்று சொல்லப்படும். இதனை 'எடுத்துக்காட்டு உவமை' என்றும் கூறுவதுண்டு. உவமிக்கப்படும் பொருளை எதிர் நிறுத்திக் காட்டி, உருபின்றிக் கூறுவதைத் தொல்காப்பியரும்,

> சுட்டிக் கூறா உவம மாயின்
> பொருளெதிர் புணர்த்துப் புணர்ந்தன கொளலே[18]

என்று கூறுவர். இதனால் தொல்காப்பியர் உருபு தொக வரும் உவமைக்குச் 'சுட்டிக் கூறா உவமம்' எனப் பெயர் வழங்குதல் பெறப்படும். உவமையின் உறுப்புகள் நான்கனுள் உவமையும் பொருளும் தவிர ஏனைய இரண்டும் வெளிப்படப் பாடலில் இடம் பெறாமலும் இருக்கும் என்பது மேலே காட்டிய எடுத்துக்காட்டுகள் கொண்டு உணரலாகும்.

### உவம உருபுகள்

உவமை உறுப்புகள் நான்கனுள்ளும் ஒப்புமையை வெளிப்பட அறிய உதவுவது உவம உருபேயாகும். தொல்காப்பியர் சில வரையறைகளையும், விதிமுறைகளையும் உவம உருபுகள் குறித்துக் கூறுகிறார். வினை முதலிய நான்கு உவமங்களுக்கும் உரிய உருபுகள் இவை இவை எனத் தொல்காப்பியம் தொகுத்தும் வகுத்தும் கூறும்.

> அவைதாம்,
> அன்ன, ஏய்ப்ப, உறழ, ஒப்ப,
> என்ன, மான, என்றவை எனாஅ—
> ஒன்ற, ஒடுங்க, ஒட்ட, ஆங்க,
> என்ற, வியப்ப, என்றவை எனாஅ—
> எள்ள, விழைய, விறப்ப, நிகர்ப்ப,
> கள்ள, கடுப்ப, ஆங்கவை எனாஅ—
> காய்ப்ப, மதிப்ப, தகைய, மருள,

18. தொல். உவம. 7.

மாற்ற, மறுப்ப, ஆங்கவை எனாஅ—
புல்ல, பொருவ, பொற்ப, போல,
வெல்ல, வீழ, ஆங்கவை எனாஅ—
நாட, நளிய, நடுங்க, நந்த,
ஓட, புரைய, என்றவை எனாஅ—
ஆறா றவையும் அன்ன பிறவும்
கூறுங் காலைப் பல்குறிப் பினவே.[19]

என்று தொல்காப்பியர் முப்பத்தாறு உருபுகளைக் கூறுவர். இவையே யன்றிப் பிற உருபுகளும் இவ்வுவமங்களில் வரப் பெறும் என்பதனைப் 'பிறவும்' என்னும் குறிப்பு நமக்கு உணர்த்தும்.

"பிறவும் என்பதனான், எடுத்தோதினவேயன்றி, நேர, நோக்க, துணைப்ப, மலைய, ஆர, அமர, அனைய, ஏர, ஏர்ப்ப, செத்து, அற்று, கெழுவ என்றற்றொடக்கத்தன பலவும், ஐந்தாம் வேற்றுமைப் பொருள் பற்றி வருவனவும், எனவென்னெச் சங்கள் பற்றி வருவனவும் பிறவுமெல்லாங் கொள்க"[20]

என்று பேராசிரியர் தருகின்ற விளக்கவுரையால் தொல் காப்பியர் காலத்திற்குப்பின் பெருக வழங்கிய உருபுகள் சில தெரிய வருகின்றன.

**நால்வகை உவமம்**

வினை, பயன், மெய், உரு எனப் பொதுத்தன்மையால் உவமையையும் நான்கு வகையாகப் பகுத்துப் பார்க் கின்ற மரபு தோன்றுவதாயிற்று. தொல்காப்பியர் இந் நால்வகை உவமங்களுக்கும் தனித்தனியே உரிமையாய் வரும் உருபுகளை ஒவ்வொரு சூத்திரத்தால் வகுத்துள்ளார். அதனால், ஒவ்வோர் உவமத்திற்கும் உரிய உருபுகள் இவை இவை என்பதும், அவை பிற உவமத்தில் வாரா என்பதும் நன்கு தெளியப்படும். ஆயினும், பின்னாளில் இவ்வுருபுகள் அங்ஙனம் தொல்காப்பியர் கூறிய வண்ணம் அந்தந்த உவமத்திற்கே வந்தன எனக் கூற வியலாது. மொழிவளர்ச்சியால் இவை மாறுபடவும் வந்தன. வள்ளு வர் அருளிய குறட்பாவிலும் இவ்வளர்ச்சியைக் காண

19. தொல். உவம. 11.
20. தொல். உவம. 11, பேரா. உரை.

லாம். நால்வகை உவமங்களுக்கும் உரிய உருபுகளை முதலிற் கண்டு, பின்னர் அவ்வேறுபாட்டைக் காண்போம்.

நால்வகை உவமங்களைக் கூறப்புகுந்த தொல்காப்பியனார்,

> வினைபயன் மெய்உரு என்ற நான்கே
> வகைபெற வந்த உவமத் தோற்றம்[21]

என்று வினைக்கு முதற் சிறப்பினை அளிக்கின்றார். இவ்வாறு வினையினை முதலில் அமைத்ததற்கான காரணம் வினையுவமம் உருபு தொக்கு நில்லாது விரிந்தே நிற்றலாம். மேலும், பேராசிரியர் இவ்வாறு வினை, பயன், மெய், உரு என்ற முறை வைப்பிற்கான காரணத்தை விளக்கிப் பின்வருமாறு கூறுவர் :

> "வினையாற் பயப்பது பயனாதலின் பயத்திற்கு முன் வினை கூறப்பட்டது. அதுபோலப் பிழம்பினால் தோன்றும் நிறத்தினை அதற்குப் பின் வைத்தான்; பயனும் பொருளாக நோக்கி மெய்யினையும் அதனுடன் வைத்தானென்பது. மற்று மெய்யெனப்படுவது பொருளாதலின் அதன் புடைபெயர்ச்சியாகிய வினை பிற் கூறுகவெனின், வினையுவமந் தன்னுருபு தொக்கு நில்லாது விரிந்தே நிற்றற் சிறப்புடையனவும் உளவாக நோக்கி அது முற்கூறினானென்பது. அது 'புலிமறவன்' எனத் தொகாது 'புலியன்ன மறவன்' என விரிந்தே நிற்றலும், புலிப் பாய்த்துள் எனத்தொக்கு வருதலும் உடைத்தென்பது".[22]

இவ்வாறே சேனாவரையரும்,

> உவமத் தொகையே உவம இயல[23]

என்னும் நூற்பாவிற்கு உதாரணம் காட்டும் போதும் வினை, பயன், மெய், உரு என்னும் அடைவில் எடுத்துக் காட்டுகளை அமைக்கின்றார். பின்னாளில் வந்த மயிலை

21. தொல். உவம. 1.
22. தொல். உவம. 1, பேரா. உரை.
23. தொல். எச்ச. 18.

நாதர், சங்கரநமச்சிவாயர் முதலிய நன்னூலின் உரையாசிரியர்களும் இம் முறையையே பின்பற்றியுள்ளனர் என்பதும் ஈண்டு கருதத்தக்கது.

**வினை உவமம்**

'புலியன்ன வீரன்' என்பது வினையுவமம். வீரன் புலியைப்போல் பாய்வான் எனத் தொழில் பற்றி வந்தமையினால் வினையுவமமாயிற்று. இனி இவ் வினையுவமத்திற்குத் தொல்காப்பியர் விதிக்கும் உருபுகளை நோக்குவோம்.

> அன்ன, ஆங்க, மான, விறப்ப,
> என்ன, உறழ, தகைய, நோக்கொடு,
> கண்ணிய எட்டும் வினைப்பால் உவமம்[24]

என எட்டு உருபுகளைத் தொல்காப்பியம் கூறும். இவ்வெட்டும் வினையுவமத்தின்கண் சிறந்து வருவனவாம். இவற்றுள்ளும் 'அன்ன' என்னும் உருபு நான்கு உவமங்களிலும் வரப்பெறும் என்பதனைத் தொல்காப்பியர்,

> அன்னவென் கிளவி பிறவொடுஞ் சிவணும்[25]

என்று விதிப்பதால் அறியலாம்.

> மாரியன்ன வண்கை[26]
>
> இலங்கு பிறையன்ன விலங்குவால் வையெயிற்று[27]
>
> செவ்வானன்ன மேனி[28]

என இவ்வுருபு ஏனைய பயன், மெய், உரு ஆகிய உவமங்களில் வரப் பெறுதலுக்குப் பேராசிரியர் சான்று காட்டுவர்.

24. தொல். உவம. 12.
25. தொல். உவம. 13.
26. புறம். 133.
27. அகம். கடவுள் வாழ்த்து.
28. அகம். கடவுள் வாழ்த்து.

### வினை உவமத்திற்கு வரும் வேறு உருபுகள்

இவ்வெட்டு உருபுகள் மட்டுமன்றிப் பேராசிரியர் 'சிறுவரவின' என்று குறிப்பிட்டு மேலும் பல உருபுகளை வினை உவமத்திற்குக் காட்டுவர்.

கார்மழை முழக்கிசை கடுக்கும்[29]
யாழ்கெழு மணிமிடற் றந்தணன்[30]
ஒளித்தியங்கு மரபின் வயப்புலி போல[31]
ஒழுகை நோன்பக டொப்பக் குழீஇ[32]
குறுந்தொடி யேய்க்கு மெலிந்து வீங்கு திவவின்[33]

என இவ்வுருபுகளும் வினையுவமத்தில் வரும் என்பர் பேராசிரியர். இதனல் கடுப்ப, கெழுவ, போல, ஒப்ப, ஏய்ப்ப என்னும் ஐந்தும், சிறுபான்மை வழக்காக அந்நாளில் வழங்கிய உருபுகள் என்பது தெளிவுறும். இவற்றுள் போல, ஒப்ப என்பன மெய்யுவமத்தில் வரப் பெறும் என்கிறுர் தொல்காப்பியர். ஆயின், பின்னர் இவை வேறு உவமத்தில் வந்ததைப் பேராசிரியர் எடுத்துக் காட்டுகின்ருர். எனவே, காலப்போக்கில் இவ்வுருபுகள் பொருள் வளர்ச்சி பெற்று வரையறையைக் கடந்து விரவி வந்தன என்பது நன்கு தெளிவாகும்.

### காலப்போக்கில் உருபுகளின் நிலை

தொல்காப்பியர் காலத்து வழங்கிய உருபுகளுள்ளும் பல சங்க காலத்தும் பிற்காலத்தும் தற்காலத்தும் அருகிய வழக்காய் உள்ளன. எல்லா உருபுகளும் நன்கு பயின்று வருதல் இல்லை. இவ்வினையுருபுகளுள்ளும் அன்ன, ஆங்க என்பன போன்றவையே அக்காலத்தும் இக்காலத்தும் மிகுதியான ஆட்சியில் உள்ளனவாய் விளங்குகின்றன.

29. அகம். 14.
30. அகம். கடவுள் வாழ்த்து.
31. அகம். 22.
32. அகம். 30.
33. பெரும்பாண். 13.

இவ்வெட்டனுள் குறட்பாவில் அன்ன, ஆங்க, தகைய, ஒப்ப (ஒக்க) என்னும் உருபுகள் வினை உவமத்திற்கு வந்துள்ளன.

கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன்று உள்ளக் கெடும்.[34]

நிணந்தீயில் இட்டன்ன நெஞ்சினார்க்கு உண்டோ
புணர்ந்தூடி நிற்பேம் எனல்[35]

என்பன போன்ற குறட்பாக்களில் அன்ன உருபு வினையுவமமாகப் பயில்வதைக் காணலாம்.

இணரூழ்த்தும் நாறா மலரனையர் கற்றது
உணர விரித்துரையா தார்.[36]

தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து.[37]

இப்பாடல்களில் வரும் அனைய, அனைத்து என்னும் உவம உருபுகள் தொல்காப்பியர் கூறிய நூற்பாவில் வரவில்லையேனும் உவம உருபின் பாகுபாடுகள் பற்றிக் கூறுகின்ற அந்நூற்பாவின் இறுதியில்,

ஆறுறவையும் அன்ன பிறவும்
கூறுங்காலைப் பல்குறிப் பினவே[38]

என்று வருகின்ற குறிப்பால் இவை அனைத்தும் உவம உருபாகக் கொள்ளுகின்றோம். மேலும், அன்ன என்பது அன்னன், அன்னள், அன்னர், அன்னது, அன்னவை என வருதல் போல அனைய, அனைத்து என்பனவும் அன்ன என்னும் வடிவத்தின் பெருக்கமே. இதுவும் அனையன் அனையர் முதலியனவாக வரும் இயல்பினது.

34. குறள், 109.
35. குறள், 1260.
36. குறள், 650.
37. குறள், 828.
38. தொல். உவம. 11.

பொச்சாப்புக் கொல்லும் புகழை அறிவினை
நிச்ச நிரப்புக்கொன் றாங்கு.[39]

ஊக்க முடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து.[40]

இவற்றுள் முதல் பாடலில் 'ஆங்க' என்னும் உருபின் வடிவத்தையும், இரண்டாம் பாடலில் 'தகைய' என்பதின் ஒருமை வடிவமான 'தகைத்து' என்பதனையும் காணலாம்.

கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து[41]

என்னும் குறட்பாவிலும் 'ஒக்க' உருபு வினையுவமமாக வந்துள்ளது. இவையேயன்றி வள்ளுவர் அருளிய குறட்பாக்களில் இவ்வுவமப் பொருளில் 'அற்று', 'போல', 'நேர' என்னும் உருபுகளும் வரப்பெறுகின்றன.

குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே
உடம்போடு உயிரிடை நட்பு.[42]

நெய்யால் எரிநுதுப்பேம் என்றற்றால் கௌவையால்
காமம் நுதுப்பேம் எனல்.[43]

இக்குறட்பாக்களில் 'அற்று' என்னும் உருபு வந்துள்ளது. வள்ளுவர் எடுத்தாண்ட சில உவம உருபுகள் கால வளர்ச்சிக்கேற்றவாறு வழக்குப் பயிற்சி பெற்றுள்ளன. 'அற்று' என்னும் உருபு பண்டைத் தமிழ் இலக்கண நூலை யாத்த தொல்காப்பியர் உவம இலக்கணத்திற்குரிய நூற்பாவில் சுட்டவில்லையேனும் உடம்படுபுணர்த்தலாகக்[44]

39. குறள், 532.
40. குறள், 486.
41. குறள், 490.
42. குறள், 338.
43. குறள், 1148.
44. எகர ஒகரத் தியற்கையும் அற்றே —தொல். நூன். 16.
குற்றிய லுகாரமும் அற்றென மொழிப
—தொல். புணரியல். 3.
வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே
—தொல். உயிர்மயங். 23.
நகர இறுதியும் அதனோ ரற்றே —தொல். புள்ளி. 3.

கொண்டுள்ளமையால் இஃது அவர் வாழ்ந்த காலத்தில் சிறுபான்மை வழக்காயிருந்தது போலும். வள்ளுவர் அருளிய குறட்பாவிலே பல்வேறிடங்களில் 'அற்று' உருபு பயின்று வருகிறது. உவம உருபுகளில் வரையறுத்துக் கூறப் படாத இவ் 'அற்று' உருபினைப் பேராசிரியர் 'பிறவும்' என்னும் வகையானும் பொது வகையானும் கொள்கின்றார்.

வள்ளுவர் இவ்வுருபினை மிகுதியாகப் பயன்படுத்தும் காரணத்தினால், 'அன்ன' என்ற உருபுக்குரிய இடத்தினை 'அற்று' உருபு ஏற்றுக் கொண்டு பிற்காலத்தில் மிகுதியாக வழக்கிற்கு வந்திருக்கலாம். 'ஆங்கு', 'ஆங்க' என்று குறிக்கப்படுகிறது. இதுபோலவே 'அன்' என்பது 'அன்ன' எனக் குறிக்கப்படல் வேண்டும். 'அன்ன' (அத்தன்மைய) என்பதன் ஒருமை வடிவம் 'அற்று' (அத்தன்மையது) என்று கருதலாம். குறட்பாக்களில் 'அற்று' உருபு, போலும், போன்ற, அத்தன்மைய என்னும் பொருள்களில் எடுத்தாளப்படுகிறது.

> புகழ்புரிந்த இல்லிலோர்க்கு இல்லை இகழ்வார்முன்
> ஏறுபோல் பீடு நடை.[45]
>
> காதலர் இல்வழி மாலை கொலைக்களத்து
> ஏதிலர் போல வரும்.[46]

இங்குப் 'போல' என்னும் உருபு வினையுவமத்தில் வருகிறது. 'போல' உருபு உருவினுவமத்திற்கு உரியது.[47] இதனடியாகப் பிறந்த போல்க, போல்வர், போலும் முதலானவற்றையும் இவ்வுவமத்தில் பயன்படுத்துகிறார் பேராசிரியர். அகநானூற்றுப் பாடலில் வரும்,

அடையொடு தோன்றினும் அதனோ ரற்றே
—தொல். புள்ளி. 23.

பண்புகொள் பெயரும் அதனோ ரற்றே —தொல். விளி. 17.

இன்னும் இவை போல்வன.

45. குறள், 59.

46. குறள், 1224.

47. போல மறுப்ப ஒப்பக் காய்த்த
நேர வியப்ப நளிய நந்தஎன்று
ஒத்துவரு கிளவி உருவின் உவமம் —தொல். உவம. 16.

ஒளித்தியங்கு மரபின் வயப்புலி போல[48]

என்னும் தொடரினையும் இதற்குச் சான்றாக அவர் காட்டுவர்.

கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்[49]

என்னும் இக் குறட்பா வினையுவமமாகும். இங்கு வருகின்ற 'நேர்' உருபும் 'பிறவகையான் வருவன' என்ற பேராசிரியர் குறிப்பின் கீழ்க் கொள்ளலாம்.

பிற்காலத்துத் தோன்றிய இலக்கண நூலாகிய நன்னூலில் 'நேர்' என்னும் வினையடிப்பிறந்த 'நேர' என்பதும், இதனை மிக ஒத்த 'நிகர' என்பதும் உவம உருபாகக் காட்டப்பட்டிருக்கின்றன.

போல, புரைய, ஒப்ப, உறழ,
மான, கடுப்ப, இயைய, ஏய்ப்ப,
நேர, நிகர, அன்ன, இன்ன,
என்பவும் பிறவும் உவமத் துருபே.[50]

இது பவணந்தி முனிவரின் உவமவுருபுபற்றிய சூத்திரம். இவர் தொல்காப்பியர் சுட்டியதுபோல பல உவமவுருபு வடிவங்களைக் காட்டாது பன்னிரண்டு உவம உருபுகளைக் காட்டியுள்ளமையால் இவ்வுருபுகளே இவர் காலத்துப் பெரு வழக்காயிருந்தன என்று கொள்ளலாம்.

### பயனுவமம்

வினையுவமத்திற்கு அடுத்ததாகத் தொல்காப்பியர் பயனுவமத்தைக் கூறுகின்றார். வினையின் விளைவால் கிடைப்பது பயனாதலின் இது வினையின் பின்னர் வைக்கப் பட்டது. 'மாரியன்ன வண்கை' என்பது பயனுவமம். மாரியால் விளைக்கப்படும் பொருளும் வண்கையாற் பெறும் பொருளும் ஒக்கும் என்பதுபட வந்தமையான் பயனுவம மாயிற்று.

48. அகம். 22.
49. குறள், 550.
50. நன்னூல், பொது. 16.

எள்ள, விழைய, புல்ல, பொருவ, கள்ள, மதிப்ப, வெல்ல, வீழ என்ற எட்டு உருபுகளும் பயன் உவமத்திற்கு உரியன என்பதைக் கீழ்வரும் நூற்பாவால் தொல் காப்பியர் கூறுவர் :

எள்ள, விழைய, புல்ல, பொருவ,
கள்ள, மதிப்ப, வெல்ல, வீழ,
என்றாங்கு எட்டே பயனிலை உவமம்.[51]

இவை எட்டும் 'பெரு வரவின' என்பர் பேராசிரியர். இவையே அன்றிச் சிறுவரவினவாகப் பின்வரும் உருபு களையும் சான்றோடு இவ்வுரைகாரர் விளக்குகிறார்.

அழல்**போல்** வெங்கதிர் பைதறத் தெறுதலின்[52]

மகன்று யாதல் **புரைவதா** லெனவே[53]

ஊறுநீ ரமிழ் **தேய்க்கு** மெயிற்றாய்[54]

பல்லோர் **நிகர்ப்ப** வந்த வுவகை
யெல்லா மென்னுட் பெய்தந் **தற்றே**

யாழ் **கொண்ட** விமிழிசை யியன்மாலை யலைத்தரூஉம்[55]

உருமெனச் சிலைக்கு மூக்கமொடு[56]

யாழ்**செத்** திருங்கல் விடரளை யசுணமோர்க்கும்[57]

செறுநர்த் **தேய்த்த** செல்லுறழ் தடக்கை[58]

விண்ணதி ரிமிழிசை **கடுப்பப்** பண்ணமைத்து[59]

'போல' முதல் 'கடுப்ப' ஈறாக இப்பத்து உருபுகளையும் பேராசிரியர் பயனுவமமாகக் கொள்கின்றார்.

51. தொல். உவம. 14.
52. அகம். 1.
53. அகம். 16.
54. கலி. 20.
55. கலி. 29.
56. அகம். 61.
57. அகம். 88.
58. முருகு. 5.
59. மலைபடு. 2.

### குறளில் பயன் உவம அமைப்பு

இவ்வுருபுகளுள் 'பெருவரவின' எனப் பேராசிரியர் கொள்வதும், தொல்காப்பியர் கூறுவதுமான எட்டு உருபுகளுள் ஒன்றேனும் குறளில் பயனுவமத்திற்கு வரப்பெற வில்லை. ஆயினும், 'சிறு வரவின' என்று கூறும் உருபுகளுள் 'அற்று', 'போல' என்னும் உருபுகளும், நால்வகை உவமத்திற்கும் பொதுவான, 'அன்ன' உருபும், 'ஆங்கு', 'இன்', 'ஒப்ப', 'நேர்' என்னும் உருபுகளும் குறட்பாவில் பயன் உவமத்திற்குப் பயன்பட்டு வருகின்றன.

மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்.[60]

களித்தொறும் கள்ளுண்டல் வேட்டற்றால் காமம்
வெளிப்படுந் தோறும் இனிது.[61]

இவை போன்ற குறட்பாக்களில் 'அற்று' உருபு பயன் உவமமாகவும்,

தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும்.[62]

முகைமொக்குள் உள்ளது நாற்றம்போல் பேதை
நகைமொக்குள் உள்ளதொன் று உண்டு[63]

என்னும் குறட்பாக்களில் 'போல' உருபு பயன் உவமமாகவும் வருவதைக் காணலாம்.

காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள.[64]

புலத்தலின் புத்தேள்நாடு உண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்னா ரகத்து.[65]

இக்குறட் பாக்களில் 'அன்ன', அதன் வேற்று வடிவமான 'அன்னார்' உருபுகளும் வருகின்றன.

60. குறள், 217.
61. குறள், 1145.
62. குறள், 614.
63. குறள், 1274.
64. குறள், 527.
65. குறள், 1323.

அச்ச முடையார்க்கு அரணில்லை ஆங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு.[66]

பொருளாட்சி போற்றாதார்க்கு இல்லை அருளாட்சி
ஆங்கில்லை ஊன்தின் பவர்க்கு.[67]

இவற்றில் 'ஆங்கு' உருபு இடம் பெற்றுள்ளதைக் காணலாம்.

செவியுணவிற் கேள்வி யுடையார் அவியுணவின்
ஆன்றாரோ டொப்பர் நிலத்து.[68]

உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது
கொள்வாரும் கள்வரும் நேர்.[69]

இவற்றுள் 'ஒப்பர்', 'நேர்' என்பன பயனுவமப் பொருளை விளக்கியுரைக்கக் காண்கிறோம்.

## பயன் உவமப் பொருளில் ஐந்தன் உருபு

செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும்[70]

என்னும் குறட்பாவில் 'இன்' உருபு வந்துள்ளது. 'இன்' உருபு தொல்காப்பியர் விதித்த உருபுகளுள் வரப்பெற வில்லை. பேராசிரியர் தம் விளக்கவுரையில், 'பிறவும்' என்பதனால் எடுத்தோதினவேயன்றி வேறுசில உருபு களையும் குறிப்பிட்டுள்ளார். அவற்றுள், "ஐந்தாம் வேற்றுமைப் பொருள்பற்றி வருவனவும், எனவென்னெச் சங்கள் பற்றி வருவனவும், பிறவுமெல்லாங் கொள்க"[71] என்று குறித்துள்ளார். இங்கே ஐந்தாம் வேற்றுமைப் பொருள்பற்றி வருவதால் இவ் 'இன்' உருபையும் உவம உருபாகக் கொள்கின்றோம். பேராசிரியரும் 'இன்' உருபு பெற்று வந்ததற்குச் சான்றாகப் பின்வரும் தொடரைக் காட்டுவர்.

66. குறள், 534.
67. குறள், 252.
68. குறள், 413.
69. குறள், 813.
70. குறள், 1039.
71. தொல். உவம. 1. பேரா. உரை.

குளித்துப் பொருகயலிற் கண்பனிமல்க[72]

இதனுள் 'இன்' உருபு தனக்குரிய ஒப்புப்பொருளில் சிறப்பித்ததாகக் கூறுவர்.

### மெய்யுவமம்

தொல்காப்பியர் கூறுகின்ற உவமங்களுள் இது மூன்றுவதாகும். இதனை 'வடிவுவமம்' என்றும் கூறுவர். 'துடியிடை' என்பது மெய்யுவமமாகும். மேலும் கீழும் அகன்ற பரப்புடையதாய் அமைந்து நடுவே சுருங்கி வடிவு ஒத்திருப்பதால் இது மெய்யுவமமாயிற்று.

கடுப்ப, ஏய்ப்ப, மருள, புரைய, ஒட்ட, ஒடுங்க, ஓட, நிகர்ப்ப என்ற எட்டுருபுகளும் மெய்யுவமத்திற்குரியன. இதனைப் பின்வரும் தொல்காப்பிய நூற்பா காட்டும்:

கடுப்ப, ஏய்ப்ப, மருள, புரைய,
ஒட்ட, ஒடுங்க, ஓட, நிகர்ப்ப, என்று
அப்பால் எட்டே மெய்ப்பால் உவமம்.[73]

இஃதன்றிச் சிறுவரவினவாகப் பேராசிரியர் மேல்வரும் உருபுகளையும் காட்டுவர்:

கடல்போ ரோன்றல காடிறந் தோரே[74]

அஞ்சுடர் நெடுங்கொடி பொற்பத் தோன்றி[75]

புலி செத்து வெரீஇய புகர்முக வேழம்[76]

சேயிதழ் அனைய வாக[77]

மாணெழில் வேய் வென்ற தோளாய் நீ வரிற்றுங்கும்[78]

72. அகம். 313.
73. தொல். உவம. 15.
74. அகம். 1.
75. அகம். 11.
76. அகம். 12.
77. அகம். 19.
78. கலி. 20.

கண்போன் மலர்ந்த சுனையும்

நறுமுல்லை நேர் முகை யொப்ப நிரைத்த

முழவுறழ் தடக்கையி னியல வேந்தி[79]

இவ்வுருபுகளில் 'அன்ன' உருபின் வடிவம் தவிரப் பிற உருபுகள் திருக்குறளில் மெய்யுவமமாக வரப்பெறவில்லை.

## குறளில் மெய்யுவம அமைப்பு

நான்கு உவமங்களுக்கும் பொதுவாகிய 'அன்ன' உருபு மெய்யுவமத்தில் குறட்பாக்களிலே இடம்பெறுகிறது.

மலரன்ன கண்ணாள் அருமை அறியாது
அலரெமக்கு ஈந்ததிவ் வூர்.[80]

மலரன்ன கண்ணாள் முகமொத்தி யாயின்
பலர்காணத் தோன்றல் மதி.[81]

இக் குறட்பாக்களில் கண்ணிற்கு மலரினை உவமை கூறியிருப்பதைக் காணலாம். கண்ணிற்கு மலர் வடிவான் உவமையாதலின், இதுவடிவ உவமையாயிற்று.

## மெய்யுவமையும் தண்டியாசிரியர் கூறும் பண்புவமையும்

தண்டியலங்கார ஆசிரியர் மெய்யுவமை எனத் தனியாக ஒன்றினைச் சுட்டாது மெய், உரு இரண்டையும் சேர்த்துப் பண்புவமையில் அடக்கி, உவமையினை மூன்றாகப் பகுத்துக் கூறுவர்.[82] ஆயின், மாறனலங்காரம் முதலான நூல்கள் தொல்காப்பியர் பிரித்தவாறே நால்வகையாகப் பிரித்து மெய் உவமத்தையும் உரு உவமத்தையும் தனித்தனியே

79. முருகு. 215.

80. குறள், 1142.

81. குறள், 1119.

82. பண்பும் தொழிலும் பயனு மென்(று) இவற்றின்
ஒன்றும் பலவும் பொருளொடு பொருள் புணர்ந்து
ஒப்புமை தோன்றச் செப்புவது உவமை. —தண்டி. 30.

கூறுகின்றன.[83] மாறனலங்காரம் இதனை 'உறுப்புவமை' என்றும்,[84] வீரசோழியம் இதனை 'வடிவுவமை' என்றும் கூறும்.[85]

தண்டியாசிரியர் கூறியவாறு வடிவும் வண்ணமும் பண்பில் அடங்குமாயினும், இவை இரண்டும் தம்முள் கட்புலனும் பண்பினும் உற்றுணரும் பண்பினும்

83. மாறனலங்காரம் தொல்காப்பியம் கூறியவாறே வினை, பயன், உறுப்பு (மெய்), உரு என நால்வகையாக வகுத்துக் கூறுகிறது. அங்ஙனம் பிரித்தமைக்கான காரணம்பற்றி அந்நூலின் உரையாசிரியரான காரிரத்ந கவிராயர் கூறுவது பின்வருமாறு :

"இதன் முதனூல் செய்த தெண்டியாசிரியர் (தண்டியாசிரியர்) பண்பு முதலாகக் காரண மூன்றென்ப துணர்ந்தும் இந்நூலுடையார் உறுப்பினைக் கூட்டி காரணம் நாலென்ப தூஉம் நிலைக்களன் ஐந்தென் பதூஉம் மிகைபடக் கூறலென் னுங் குற்றமாமாலோவெனின்", ஆகாது; என்னை ? தெண்டியாசிரியர் 'வடிவி னளவின் வண்ணத்தின் வரூஉ' மென்னுஞ் சூத்திர நோக்கி வடிவம் பண்புளடங்குமென் றுட் கொண்டாரேனும் இந்நூலுடையார், உற்றுணரும் பண்பும் கட்புலனும் பண்பும் எனப் பண்பினை வேறுபடக் கொண்டார். அங்ஙனங் கோடல் வடிவுபற்றிய பண்பு இருளின் கண்ணும் உற்றுணரப்படும்; வண்ணமாகிய கட்புலனும் பண்பு அவ்வாறுணரப் படாதாதலால் வடிவினைக் கூட்டி நாலென்றார். அன்றியும், "வினை பயன் மெய்யுரு என்ற நான்கே வகைபெற வந்த உவமைத் தோற்றம்" எனவும் இக் கருத்தே பற்றி முதனூல் செய்த ஒல்காப் பெருமைத் தொல்காப்பியனாரும் கூறினர்; இதற்கு அதுவும் முந்து நூலாகலின் அவர் கருத்தே இந்நூலுடையாரும் கொண்டார் என உணர்க."

—மாறனலங்காரம், நூற்பா 92ன் உரை.

84. உவமையின் வகையே யுணருங் காலை
வினைபய னுறுப்புரு வென்ற நான்கினும் —மாறன். 92.

85. பட்டாங் குரைத்தல் புகழ்தல் பழித்தலிற் பண்புபயன்
சிட்டார் தொழில்வடி வாதி யுவமை செறிந்துறுப்புத்
தட்டா தியலும் பொருளு முவமையுஞ் சார்பொதுவாய்
முட்டா மலேநிகழ் காரண மும்பெறு மொய்குழலே.
—வீரசோ. 156.

வேறுதல் உடையன. மெய்யாகிய வடிவினை இருட் பொழுதிலும் கையினால் தொட்டறிந்து கொள்ள முடியும்; வண்ணமாயின் அவ்வாறு தொட்டறிந்து கொள்ளுதல் இயலாது. இது குறித்தே முன்னோர் வடிவும் வண்ணமும் எனத் தனித்தனியே பிரித்தனர் எனலாம்.

தண்டியாசிரியர் கூறிய பண்புவமையில் நிறம் அடங்கலாம். ஆனால், வடிவும், அளவும் எங்ஙனம் அடங்கும்? இது குறித்துத் தண்டி உரையாசிரியர் தரும் விளக்கத்தையும் ஈண்டுக் கருதுதல் தகும்.[86] அதன் கருத்து வருமாறு: தொல்காப்பியர் பண்பில் நிறமேயன்றி வடிவு, அளவு, சுவை ஆகிய மூன்றும் அடங்கும் என்பதனை,

> வண்ணத்தின் வடிவின் அளவிற் சுவையினென்
> றன்ன பிறவும் அதன்குணம் நுதலி
> இன்ன திதுவென வரூஉம் இயற்கை
> என்ன கிளவியும் பண்பின் தொகையே[87]

என்னும் நூற்பாவில் கூறுகின்றார். எனவே, நிறமேயன்றி வடிவு, அளவு, சுவை என்னும் இம் மூன்றும் பண்பில் அடங்கலாம் என்பதே தண்டியார் கொண்ட கருத்தாகும். இதற்குச் சான்றாக,

> வேய் புரை பணைத்தோள்

என்பதனை வடிவுவமம் பற்றிய பண்புவமையாகவும்,

> தெம்முனை யிடத்திற் சேயகொல்
> அம்மா வரிவை யவர்சென்ற நாடே

என்பதனை எல்லை பற்றிய (அளவு) பண்புவமையாகவும் காட்டுவர் தண்டி உரையாசிரியர்.

நன்னூலார் இந்நான்கு மட்டுமே யல்லாமல் வேறு சிலவும் பண்பில் அடங்கும் என்பர்.

குணத்தால் வரும் பெயர்களாக, 'அளவு, அறிவு, ஒப்பு, வடிவு, நிறம், கதி, சாதி, குடி, சிறப்பு' முதலியவற்றையும் அவர் கொள்வர். இதனை,

86. தண்டி. நூற்பா. 30. உரை.
87. தொல். எச்ச. 20.

அளவறி வொப்பு வடிவு நிறங்கதி
சாதி குடிசிறப் பாதி பல்குணம்[88]

என்னும் நன்னூல் நூற்பா நமக்குக் காட்டும்.

மாறனலங்கார ஆசிரியரும் தம் நூலில் உவம இலக்கணங்களையெல்லாம் அழகு பெறத் தொகுத்துக் கூறுமிடத்து மெய்யுவமத்தை உறுப்புவமம் என்றே கூறுகின்ருர்.

உவமையின் வகையே உணருங் காலை
வினைபயன் உறுப்புரு என்ற நான்கினும்
தமிதமி நிகழ்ந்தும் தம்மின் விரவியும்
காதல் சிறப்பே நலன்வலி யுடனிழிபு
ஓதிய ஐந்தும் உறுநிலைக் களனய்
இருதிணை ஐம்பால் இவற்ருெடு மயங்கியும்
முதலொடு சினைகளைன் முறைமையிற் பிறழ்ந்தும்
முதல்சினை வினைகுணம் இன்றியும் உயர்ந்தும்
பெருமையும் சிறுமையும் பெற்றியின் சிறந்தும்
எண்மெய்ப் பாட்டின் எழில்பெற மரீஇ
அகத்தினும் புறத்தினும் அமர்தருநெறித்தாய்
உரனுடை உரவோர் உளங்கொள முதனூல்
வரன்முறை புணர்க்கும் மாண்பிற் ருகும்[89]

என்பது உவமை இலக்கணம் உரைக்கும் அவர்தம் நூற்பாவாகும். மெய்யுவமம் பெரும்பான்மையும் உறுப்புப் பற்றியே வருகின்ற காரணத்தால் அதற்கு அவர் 'உறுப்புவமம்' என்றே பெயரிட்டார்போலும்.

கண்நிறைந்த காரிகைக் காம்பேர் தோள் பேதை[90]

என வள்ளுவரும் தலைவியின் உறுப்பாகிய தோளினை மூங்கிலுக்கு ஒப்பிட்டுக் கூறுவதைக் காணலாம். இங்கு 'ஏர்' உருபு மெய்யுவமத்தில் வருவதும் நோக்குவதற்குரியதாம்.

88. நன்னூல், 276.
89. மாறன். 92.
90. குறள், 1272.

**உருவுவமம்**

தொல்காப்பியர் கூறும் நான்காவது உவமம் உருவுவமமாகும். மெய்யின்கண் புலப்பட்டுத் தோன்றுவது நிறமாதலின் மெய்யின் பின்னர் உரு என்பது வைக்கப்பட்டது. 'பொன் மேனி' என்பது உருவுவமமாகும். பொன்னின் கண்ணும் மேனியின்கண்ணும் கிடந்த நிறம் ஒத்து ஒப்புமை பெறப்படுவதால் இது உருவுவமமாயிற்று. 'தளிர் சிவந்தாங்குச் சிவந்த மேனி' என்பதும் உருவுவமமாகும்.

இவ்வுவமத்திற்குரியனவாகத் தொல்காப்பியர் எட்டு உருபுகளைக் கூறுவர்.

> போல, மறுப்ப, ஒப்ப, காய்த்த,
> நேர, வியப்ப, நளிய, நந்த, என்று
> ஒத்துவரு கிளவி உருவி னுவமம்[91]

என்னும் உவமவியல் நூற்பா இதனைத் தெளிவுறுத்தும். இவற்றுள் 'நந்த', 'நளிய' என்பன உரையாசிரியர் காலத்திலேயே அருகிய வழக்காய் இருந்தன. எல்லா உவம உருபுகளுக்கும் எடுத்துக்காட்டுகள் கூறி விளக்கிய பேராசிரியர், "நளிய, நந்த என்பன இக்காலத்து அரிய போலும்; அவை வந்தவழிக் கண்டுகொள்க"[92] என்று கூறுவதாலும் இது நன்கு விளங்கும்.

இவையேயன்றிப் பேராசிரியர், 'சிறு வரவின'வாகப் பின்வரும் உருபுகளையும் உருவுவமத்திற்கு உரியதாகக் கொள்வர்.

> துளிதலைத் தலைஇய மழையே ரைம்பால்[93]
>
> நெருப்பெனச் சிவந்த வுருப்பவிர் மண்டிலம்[94]
>
> செயலையந் தளிரேய்க்கு மெழினல மங்கலம்[95]

91. தொல். உவம. 16.
92. தொல். உவம. 16, பேரா. உரை.
93. அகம். 8.
94. அகம். 31.
95. கலி. 15.

மாயிதழ் புரையு மலிர்கொ ளீரிமை[96]
பான் மருண் மருப்பி னுரல் புரைபாவடி[97]
எரியுரு வுறழ லிலவ மலர[98]
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு[99]
பொன்னுரை கடுக்குந் திதலையர்[100]
தீயி னன்ன வொண்செங் காந்தட்
டுவலிற் கலித்த புதுமுகை யூன்செத்து[101]

## குறளில் உருவுவம அமைப்பு

ஏர், என, ஏய்க்கும், புரைய, மருள, உறழ, ஆங்கு, கடுக்கும், அன்ன, செத்து என்று குறிப்பிடப்பெறும் இவ்வுருபுகளுள் 'அன்ன' உருபின் வேற்று வடிவமான 'அனைய' என்னும் உருபு திருக்குறளில் உருவுவமத்தில் வந்துள்ளது.

புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி
மூக்கிற் கரியார் உடைத்து[102]

என வரும் இக்குறட்பாவை உருவுவமையாகக் கொள்ளலாம். நிறம்பற்றி ஒப்பிட்டுப் பேசப்படுகின்றதாதலால் இதனை உருவுவமையினுள் அடக்கலாம். பரிமேலழகர் இதனைப் பண்புவமை என்பர். பண்புவமையாவது பிரித்துத் தனிப்படக் காட்ட இயலாத பண்பை உவமானமாகக் கூறுவது.

உப்பமைந் தற்றால் புலவி அதுசிறிது
மிக்கற்றால் நீள விடல்.[103]

96. அகம். 19.
97. கலி. 21.
98. கலி. 38.
99. முருகு. 2.
100. முருகு. 145.
101. மலைபடு. 145-6.
102. குறள், 277.
103. குறள், 1302.

அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண்பு இல்லா தவர்.[104]

இவ்விரு பாக்களையும் பரிமேலழகர் பண்புவமை எனக் குறிக்கின்றார். "உப்பு மிக்கவழித் துய்ப்பது சுவை யின்றானாற் போலப் புலவி மிக்கவழிக் கலவி இன்பம் இன்றாம் என்றமையின் பண்புவமை" என்றார் பரிமேலழகர். "அறிவின்மையாகிய பண்புபற்றி வந்தமையால்," 'அரம்போலும் கூர்மையரேனும்' என்னும் குறட்பாவும் பண்புவமை யாயிற்று.

குறளில் உருவுவமத்தில் 'போல' என்னும் உருபும் வந்துள்ளது. சான்றாக மேலே வரும் இரு குறட்பாக் களைக் குறிக்கலாம் :

விளக்கற்றம் பார்க்கும் இருளேபோல் கொண்கன்
முயக்கற்றம் பார்க்கும் பசப்பு.[105]

மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி.[106]

**உவம உருபுகளின் வளர்ச்சி : உருபு ஆட்சிகளில் வேறுபாடு**

தொல்காப்பியனார் உவமவியலில் உவம உருபுகள் எல்லாவற்றையும் முதலில் ஒரு நூற்பாவால் தொகுத்துக் கூறிப் பின்னர் இன்னின்ன உவமங்கட்கு இவை இவை என வகுத்துப் போந்தார். தொல்காப்பியர் காலத்தில் ஒவ்வோர் உவமத்திற்கும் உரிய உருபுகள் பிற உவமங் களில் வாரா என்பதையும் முன்னரே கண்டோம். இந்நியதி குறித்து அறிஞர் வே. வேங்கடராஜுலு ரெட்டி யார் அவர்கள் நுணுகி ஆய்ந்து எழுதியுள்ள விளக்க வுரைகள் இங்கு நோக்கத்தக்கன. அவை வருமாறு :

"இவ்வாறன்றி எல்லா உருபுகளும் எல்லா வுவமங் களுக்கும் வருமாயின் ஆசிரியர் தொல்காப்பியனார் அவ்

104. குறள், 997.
105. குறள், 1186.
106. குறள், 1118.

வுருபுகளை வகுத்துத் தனித்தனிச் சூத்திரங்களாகச் செய்து வீணாகப் பெருக்க மாட்டாரன்றே? 'அற்றன்று : பண்டைக் காலத்தில் நியமமாக வரையறை செய்யப் பட்ட உருபுகள், தொல்காப்பியனார் காலத்திற்கு முன்னரே அவ்விதியைக் கடந்து வந்தன; ஆயினும் அவர், பழைய இலக்கணங்களிற் கூறியிருந்தவாறே கூறியிருக்கலாம்' என்பாருளராயின், அவர் (தொல்காப்பியனார்) காலத்திலேயே அவை நியதியின்றி வழங்கப்பட்டிருக்குமேல், அவர்,

> அன்ன ஆங்க மான விறப்ப
> என்ன உறழத் தகைய நோக்கொடு
> கண்ணிய எட்டும் வினைப்பா லுவமம்[107]

என்று வினையுவம உருபுகளைக் கூறி, அவற்றுள் 'அன்ன' என்னும் உருபு பிறவுமங்களிலும் வருதல் கண்டு, அதனை,

> அன்னவென் கிளவி பிறவொடும் சிவணும்[108]

என ஏனையுவமங்களிலும் வரும் என்று விதித்தது போல, இன்ன இன்ன உருபுகள் இன்ன இன்ன உவமத்திற்கு உரியன என்று முதலிற் கூறி, பின்னர், இன்ன உருபு இன்ன உவமத்தும் வரும் என்று கூறியிருப்பர். அவர் (தொல்காப்பியனார்) அவ்வாறு விதி கூறாமையின், அவர் காலத்து வழங்கிய இலக்கியங்களில், அவர் கூறியுள்ள முறைக்கு மாறாக உவமவுருபுகள் வழங்கப்பட்டில எனக் கோடல் சால்புடைத்து."[109]

அறிஞர் வேங்கடராஜுலு ரெட்டியார் அவர்களின் விளக்கம் ஆசிரியர் தொல்காப்பியர் இலக்கணம் வரையறுத்துக் கூறிய பாங்கினை நன்கு தெளிவுபடுத்துகின்றது.

தொல்காப்பியர், வழக்கானும் செய்யுளானும் எழுத்து சொல் பொருள்களை ஆராய்ந்து, தமக்கு முன்னர்த்

107. தொல். உவம. 12.

108. தொல். உவம. 13.

109. வேங்கடராஜுலு ரெட்டியார், வே.: பரணர், பக். 171, சென்னைப் பல்கலைக் கழகம், 1933.

தோன்றிய இலக்கியங்கள் பலவற்றையும் கண்டு இலக்கணம் செய்தவர். எனவே, அவர் அக்காலத்திய இலக்கியங்களில் வழங்கியவாறே உவம உருபுகளை வகுத்தார் எனலாம். இவர்காலத்து முறை நாளடைவில் வளர்ச்சி பெற்றும் இருக்கலாம். உருபுகள் எல்லா உவமங்களிலும் விரவி வரத் தொடங்கியிருக்கலாம். பெரும் புலவர்கள் தம் காலத்திற்கேற்பத் தம் கருத்தின்படி செய்யுள் செய்வதும், பின்னர் அதற்கேற்பப் பின்னுள்ளோர் இலக்கணம் அமைத்துக் கொள்ளுதலும் இயல்பேயாம். எனவே தான் நன்னூலார் போன்ற பிற்காலத்து இலக்கண நூலாசிரியர்கள் உவம உருபுகளைத் தொல்காப்பியனார் போலப் பிரித்து வகுத்துக் கூறுமல், இவையிவை உவம உருபுகள் எனப் பொதுப்படக் கூறினர்கள் போலும்.

வள்ளுவர் பயன்படுத்திய உவம உருபுகள் பலவும் தொல்காப்பியரின் வரையறையினின்றும் மாறிவந்துள்ளமையைக் காணலாம். ஓர் உவமத்தில் எடுத்தாளவேண்டிய உருபு பிறிதோர் உவமத்தில் வரப்பெறுவதையும் காணலாம்.

'போல' என்னும் உருபு உருவுவமத்திற்கு உரியது என்பது தொல்காப்பியர் வகுத்த நூற்பாவால்[110] இனிது விளங்கும். ஆயினும் இவ்வுருபு வள்ளுவருடைய குறட்பாக்களில் வினையுவமத்திலும், பயன் உவமத்திலும் வந்துள்ளது. இவ்விரண்டினுள்ளும் வினையுவமத்திலேயே இவ்வுருபு அதிகம் வந்துள்ளது. சான்றாக,

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.[111]

ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு[112]

110. தொல். 1237.

111. குறள், 788.

112. குறள், 974.

என்னும் குறட்பாக்களில் இதனைக் காணலாம். இவ்வுருபு இன்னும் பல்வேறு குறட்பாக்களில் வினையுவமமாக வரப் பெறுகிறது.[113]

சுடச்சுடரும் பொன்**போல்** ஒளிவிடும் துன்பஞ்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.[114]

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்.[115]

இக்குறட்பாக்களில் 'போல' உருபு பயனுவமத்தில் வருகிறது.[116]

இவ்வாறே 'அற்று' என்னும் உருபும் தொல்காப்பியரால் கூறப்படாத ஒன்றும். இவ்வுருபு பயனுவமத்தில் மட்டும் வரப்பெறும் எனப் பேராசிரியர் 'சிறுவரவின' என்ற இனத்தில் கொள்ளுகின்றூர். ஆயின், இவ் 'அற்று' உருபு வினையுவமத்தில் மிகுதியாக வருகிறது.

தவமறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து
வேட்டுவன் புள்சிமிழ்த் **தற்று**.[117]

அரங்கின்றி வட்டாடி **யற்றே** நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல்.[118]

கல்லாதான் சொற்கா முறுதல் முலையிரண்டும்
இல்லாதாள் பெண்காமுற் **றற்று**.[119]

இவை போன்ற குறட்பாக்களில் 'அற்று' உருபு வினையுவமத்தில் பயின்று வருவதனைக் காணலாம். இன்னும் வேறு

113. குறள், 59, 77, 118, 126, 151, 253, 288, 334, 339, 552, 674, 691, 706, 788, 822, 887, 888, 940, 957, 974, 997, 1027, 1048, 1071, 1099, 1105, 1161, 1180, 1186, 1224, 1228, 1253, 1287.

114. குறள், 267.

115. குறள், 435.

116. குறள், 135, 247, 267, 435, 614, 783, 882, 946, 1078, 1196, 1273, 1274, 1285.

117. குறள், 274.

118. குறள், 401.

119. குறள், 402.

பல குறட்பாக்களிலும் இவ்வுருபு இவ்வுவமத்தில் வரப் பெறுகிறது.[120]

வினையுவமத்திற்குரிய 'ஆங்க' உருபு கீழ்வரும் குறட்பாக்களில் பயன் உவமத்தில் வரப் பெறுவதையும் உவம உருபு ஆட்சியின் வளர்ச்சிக்குச் சான்றாகக் கொள்ளலாம்.

அச்ச முடையார்க்கு அரணில்லை **ஆங்கில்லை**
பொச்சாப் புடையார்க்கு நன்கு.[121]

பொருளாட்சி போற்றாதார்க்கு இல்லை அருளாட்சி
**ஆங்கில்லை** ஊன்தின் பவர்க்கு.[122]

'நேர' உருபு உருவுவமத்திற்குரியதாம். ஆயினும் இவ்வுருபு குறட்பாவில் வினையுவமத்திலும் பயனுவமத்திலும் ஆளப்பட்டுள்ளது.

கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு **நேர்**[123]

என்னும் குறட்பாவில் வினையுவமத்திலும்,

உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது
கொள்வாரும் கள்வரும் **நேர்**[124]

என்னும் குறட்பாவில் பயனுவமத்திலும் இவ்வுருபு வருவதைக் காணலாம்.

இவ்வாறே உருவுவமத்திற்கு உரிய 'ஒப்ப' என்னும் உருபு,

செவியுணவிற் கேள்வி யுடையார் அவியுணவின்
ஆன்றாரோ **டொப்பர்** நிலத்து[125]

என்னும் குறட்பாவில் பயனுவமமாக வருகிறது.

120. குறள், 22, 78, 100, 249, 273, 332, 338, 401, 402, 660, 678, 716, 718, 720, 758, 838, 840, 890, 894, 913, 1000, 1020, 1058, 1146, 1148, 1288, 1303, 1304.
121. குறள், 534.
122. குறள், 252.
123. குறள், 550.
124. குறள், 813.
125. குறள், 413.

பேராசிரியரால் 'சிறுவரவினவாக'க் கொள்ளும் 'ஏர்' உருபு உருவுவமத்திற்கு உரியது. இவ்வுருபு,

> கண்நிறைந்த காரிகைக் காம்பேர்தோட் பேதைக்குப்
> பெண்நிறைந்த நீர்மை பெரிது[126]

என்னும் குறட்பாவில் மெய்யுவமமாக வருவதும் நோக்கு தற்கு உரியதாம்.

இவ்வாறாக இவ்வுவம உருபுகள் திருக்குறளிற் போலவே வேறுபல நூல்களிலும் பழைய வழக்கிற்கு மாறுபட்டுப் புதுப்புதுப் பொருளில் ஆளப்பெற்று வந்துள்ளன. இங்ஙனம் கால வழக்காய்ப் பெருகிவந்த உவம வுருபின் வடிவங்களையும் பொருள்களையும் ஒப்பு நோக்கிக் காண்பதால் வரலாற்று முறையில் நமது மொழியின் வளர்ச்சியைத் தெரிந்தவர்களாவோம்.

**உவம வகை**

தொல்காப்பியர் உவமைகளைப் பலபடக் கூறாது, பிற்காலத்துத் தோன்றிய எல்லா அணிகளுக்கும் அடிப் படையாக உள்ள உவமையணி ஒன்றை மட்டுமே நன்கு விளக்கினார் என்பதனை முன்னர்க் கண்டோம். தண்டியலங் காரம் முப்பத்தைந்து அணிகளைக் கூறுகிறது. பண்பு, தொழில், பயன் என்று முதலில் உவமையினைப் பிரித்த தண்டியாசிரியர் பின்னர் உவமையின் வகையாக இரு பத்து நான்கு உவமைகளைக் கூறுவர்.

> அதுவே,
> விரியே, தொகையே, இதர விதரம்,
> உரைபெறு சமுச்சயம், உண்மை, மறுபொருள்,
> புகழ்தல், நிந்தை, நியமம், அநியமம்,
> ஐயம், தெரிதரு தேற்றம், இன்சொல்,
> எய்திய விபரீதம், இயம்புதல் வேட்கை,
> பலபொருள், விகாரம், மோகம், அபூதம்,
> பலவயிற் போலி, ஒருவயிற் போலி,
> கூடா வுவமை, பொதுநீங் குவமை,
> மாலை, என்னும் பால தாகும்[127]

என்னும் நூற்பா அவ்விருபத்து நான்கு வகை உவமை களையும் தெளிவுறக் கூறும்.

126. குறள், 1272.
127. தண்டி. 31.

**உவமவிரியும் தொல்காப்பியமும்**

தண்டியாசிரியர் கூறும் பல்வேறு உவமைகளுள் தொகை உவமையினைத் தொல்காப்பியர் கூறும் 'சுட்டிக் கூறா உவம'மாகவும், இதர விதர உவமத்தைத் (பொருள் ஒருகால் உவமையாயும், உவமை ஒரு கால் பொருளாயும் ஒரு தொடர்ச்சிக்கண்ணே வருவது) 'தடுமாறுவம'மாகவும் கொள்ளலாம். விபரீத உவமையினைத் தொல்காப்பியர் கூறும்,

> பொருளே உவமம் செய்தனர் மொழியினும்
> மருளறு சிறப்பின் அஃது உவம மாகும்[128]

என்னும் நூற்பாவினுள் அடக்கலாம். விபரீத உவமம் என்பது உவமையாய் வருவதனைப் பொருளாக்கிப் பொருளாய் வருவதனை உவமையாக்கி உரைப்பதாம். அவ்வாறே மாலையுவமையினைத் தொல்காப்பியர் கூறுகின்ற,

> அடுக்கிய தோற்றம் விடுத்தல் பண்பே[129]

என்னும் வகையினுள் அடக்கலாம்.

**உவமைகளின் அமைப்பு**

தண்டியாசிரியர் உவமையின் வகைகளைக் கூறும்போது அவை ஒன்றற்கொன்று தம்முள் தொடர்புடையனவாக அமைத்துள்ளார். விரி தொகை, உண்மை மறுபொருள், புகழ்தல் நிந்தை, நியமம் அநியமம், பல வயிற்போலி ஒரு வயிற் போலி என்றிவ்வாறு தம்முள் முரண்படுவனவற்றை ஒருசேர உடன் வைத்துக் கூறியுள்ளார். இவ்விருபத்து நான்கு உவமை அணிகளே யன்றி வேறு பல அணிகளோடும் அவ்வுவமை கூடிவரும் என்றும் கூறுவர்.

> அற்புதம் சிலேடை அதிசயம் விரோதம்
> ஒப்புமைக் கூட்டம் தற்குறிப் பேற்றம்
> விலக்கே ஏதுவென வேண்டவும் படுமே[130]

என்னும் நூற்பா இதனை உணர்த்தும்.

128. தொல்: உவம. 9.
129. தொல். உவம. 36.
130. தண்டி. 32.

மாறனலங்காரம் அறுபத்து நான்கு அணிகளைக் கூறும். தொல்காப்பியர் கூறும் வினை, பயன், மெய், உரு என்ற நான்கையும் இவரும் கூறுவர். தண்டியாசிரியர் கூறும் இதரவிதரத்தை இவர் 'தடுமாறுவமம்' என்றே குறிப்பர்; அபூத உவமையினை 'இல் பொருளுவமை' என்றும், கூடாவுவமையினை 'மருட்கை உவமை' என்றும் கூறுவர். ஏனைய எல்லா உவமைகளும் தண்டியலங்காரம் கூறுவதேயாம். ஆனாலும், ஐயமும் தெரிதருதேற்றமும் இவரால் சுட்டப்படவில்லை. அவயவம், அவயவி, முற்றுவமை, ஏகவுவமை, அந்தாதி உவமை என்பன போன்ற வேறு சில உவமைகளையும் மாறனலங்காரம் ஆக்கிய திருக்குருகைப் பெருமாள் கவிராயர் கூறுவர்.

வைத்தியநாத தேசிகர் இயற்றிய இலக்கண விளக்கம் தண்டியலங்காரம் கூறும் உவமை விரி முழுவதையும் அப்படியே அமைத்துத் தந்துள்ளது.

**உள்ளுறை உவமம்**

உவம வகைகளுள் இதுவும் ஒன்றாதலின் இவ்வுள்ளுறை யுவமம் பற்றிய இயல்புகளையும் அறிந்து கொள்ளுதல் இன்றியமையாததாம். தொல்காப்பியர் வகுத்த ஏனையுவமம், உள்ளுறையுவமம் இவற்றுள் ஏனையுவமம்பற்றிய வகைகளை முன்னர்க் கண்டோம். வண்ணம், வடிவு, தொழில், பயன் என்னும் இவற்றால் உவமிக்கப்படும் பொருளோடு எடுத்துக் கூறப்பட்டு வெளிப்படையாகப் பொருளை விளக்குவது ஏனையுவமம் ஆம். உள்ளுறை ஒழிந்த பிற உவமம் என்னும் அவருடைய சொற்பொருட் குறிப்பினால் வெளிப்படை உவமமே இவ்வாறு அவரால் குறிப்பிடப் பெற்றது என்பது தெளிவாம்.

இந்த வெளிப்படை உவமம் உள்ளத்தால் உணர வேண்டாது சொல்லிய சொற்பொருளே பற்றுக்கோடாகத் தானே உணரப்படுவதாம். உள்ளுறை யுவமமோ அவ்வாறின்றி வெளிப்படையாகக் கூறாது மறைத்துக் கூறுதலாம். வெளிப்படையாகக் கூறுதற்கியலாத எண்ணங்களை நாகரிகமாக எடுத்துரைப்பதற்குப் பயன்படுகின்ற

ஒரு நயமிக்க முறை இது எனலாம். அகத்திணைப்பாடல்களில் மட்டுமே இவ்வுள்ளுறை உவமம் வரும்; ஏனைய புறப்பொருளில் வாரா என்பதை,

> "மற்றிவை யெல்லாம் அகப்பொருட்கே உரியவாக விதந்தோதிய தென்னை, புறப்பொருட்கு வாராதன போல எனின், ஆண்டு வருதல் அரிதாதலின் இவ்வாறு அகத்திற்கே கூறினான்,"[131]

என்று வரும் பேராசிரியரின் உரையாலும் நன்கு தெளியலாம். இது காரணம் பற்றியே தொல்காப்பியனாரும் இவ்வுள்ளுறை யுவமத்தை,

> உள்ளுறுத்து இதனோடு ஒத்துப்பொருள் முடிகென
> உள்ளுறுத்து இறுவதை உள்ளுறை உவமம்[132]

என்று அகத்திணையியலுள் கூறினர் போலும்.

## உள்ளுறை உவமம் உவமப் போலியே

தெய்வமல்லாத ஏனைய கருப்பொருள்களின் நிகழ்ச்சியினை உவமையாகக் கொண்டு தலைவன் தலைவியினுடைய அகத்திணை ஒழுகலாறுகளை உய்த்துணர்ந்து கொள்ளுமாறு செய்தலே இவ்வுள்ளுறையின் நோக்கமாகும். உவமையும் உவமிக்கப்படும் பொருளுமாக ஒருங்கு வைத்துக் கூறப்படாத நிலையிலும் உள்ளுறையாகிய இது உவமம் போன்று பொருள் கொள்ளப்படுதலின் இதனை 'உவமப்போலி' என்று கூறுவர் தொல்காப்பியர். இவ்வுவமும் வினை, பயன், உறுப்பு (மெய்), உரு, பிறப்பு என்பவை பற்றி அமையும் என்பர்.

நல்லுணர்வு உடையோர்க்கன்றி ஏனையோர்க்குப் புலனாகாத இவ்வுவமம் தெய்வம் ஒழிந்த கருப்பொருள்களை நிலைக்களனாகக் கொண்டு தோன்றும் என்பதனால் உணவு, புள், விலங்கு முதலிய கருப்பொருள்களைப் பற்றிய செய்திகள் பிறிதொன்றற்கு உவமையாகத் தரப்பெறும் என்பது வெளிப்படும்.

131. தொல். உவம. 31. பேரா. உரை.
132. தொல். அகத். 48.

உள்ளுறை யுவமம் உய்த்துணர் வகைத்தாய்ப்
புள்ளொடும் விலங்கொடும் பிறவொடும் புலப்படும்[133]

என்னும் நம்பியகப் பொருள் நூற்பாவாலும் இதனை அறியலாம்.

கரும்புநடு பாத்தி கலித்த தாமரை
சுரும்பு பசிகளையும் பெரும்புன லூர
புதல்வன் ஈன்றவெம் முயங்கல்
அதுவே தெய்யநின் மார்புசிதைப் பதுவே[134]

என்னும் பாடலை இவ்வுள்ளுறையுவமத்திற்குச் சான்றாகக் கொள்வர் நச்சினார்க்கினியர்.

"கரும்பு நடுவதற்கு என அமைக்கப்பட்ட பாத்தியுள் தானாக வளர்ந்தது தாமரை; அத்தாமரை தன்னிடம் உள்ள மதுவால் சுரும்பின் பசியைப் போக்கும். இத்தகைய நில வளம் பொருந்திய ஊரனே" என்பது இதனுடைய பொருள். ஆனால், கவிஞன் தெரிவிக்க விரும்பியபொருள் இதுவன்று. "பரத்தையர்க்கு என்று அமைக்கப்பட்ட இல்லத்துள் இடையே தலைவி வந்து இல்லறம் நடத்துகின்றாள்" என்பது கூற விரும்பிய பொருளாகும். "தனக்குரிமை இல்லையென்றும், அங்கு பரத்தையர்க்கே உரிமை மிகுதி"யாம் என்பதனையும் சுட்டிக் காட்ட விரும்பிய தலைவி, அவ்வாறு நேரிடையாகக் கூறாது, அங்குள்ள கருப்பொருள்களோடு சார்த்திக் கருத்தினால் கொள்ள வைத்தாள். இவ்வாறு அமைப்பதே 'உள்ளுறை உவமம்' என்பர்.

### உள்ளுறையும் இறைச்சியும்

இவ்வாறே 'இறைச்சி' என்பதும் உள்ளுறை யுவமம் போன்று கருப்பொருள் ஒன்றனுள்ளே பிறிதோர் பொருள் கொள்வதாகும். இதனை 'உடனுறை' எனவும் கூறுவர். தெய்வம் முதலாகிய கருப்பொருள்களைத் தனக்கு நிலைக் களனாகக் கொண்டு இது புலப்படும். இறைச்சிப் பொருள்

133. நம்பி, 238.
134. ஐங். 65.

மரபுகளைக் குறித்துத் தொல்காப்பியர் பொருளியலில் மூன்று நூற்பாக்களிலே[135] தெளிவுற விளக்கியுள்ளார்.

இலங்கும் அருவித் திலங்கும் அருவித்தே
வானின் இலங்கும் அருவித்தே தானுற்ற
சூள்பேணான் பொய்த்தான் மலை[136]

என்னும் கலித்தொகைப் பாடற்பகுதியை இறைச்சிப் பொருளுக்கு எடுத்துக்காட்டாகத் தருகிறார் நச்சினார்க்கினியர். இங்கே தலைவன் சூளைப் பொய்த்தான் (உறுதி மொழி மறந்தான்) என்பதுதான் வெளிப்படுத்த வேண்டிய பொருள். அதன் புறமாக, "இவ்வாறு சூளைப்பொய்த்தான் மலையில் நீர் திகழ்வானேன்" என்று பேசுவது இறைச்சிப் பொருளாகும் என்று எடுத்துரைக்கிறார் இவ்வுரைகாரர். சொல்லக்கருதிய பொருளை ஒட்டிப் புறத்ததாக வெளிப்படும் கருத்து இறைச்சிப் பொருள் எனக் கொள்ளப்பட வேண்டும் என்பதும் இதனால் ஏற்படும்.

இங்ஙனமாகவே இஃது ஒருவகையில் உள்ளுறை உவமத்தோடு மிகமிக நெருங்கிய தொடர்புடையதாய் விடுகின்றது. என்றாலும், இவ்விறைச்சிக்கும் உள்ளுறையுவமத்திற்கும் நுட்பமான வேறுபாடு உண்டு. இது குறித்துத் திரு. ந. சுப்பைய பிள்ளை அவர்கள் தமது தஞ்சைவாணன் கோவை உரைப்பதிப்பில் மிகநுட்பமாக ஆராய்ந்து விளக்கம் தந்துள்ளார்கள். இவ்விளக்கம் ஓர் அடிக்குறிப்பாக அமைத்துத் தரப்பட்டிருக்கிறது. அது வருமாறு:

135. இறைச்சி தானே பொருட்புறத் ததுவே.

இறைச்சியிற் பிறக்கும் பொருளுமார் உளவே
திறத்தியல் மருங்கில் தெரியு மோர்க்கே.

அன்புறு தகுந இறைச்சியுட் சுட்டலும்
வன்புறை யாகும் வருந்திய பொழுதே.

—தொல். பொருள். பொருளி. 35-37.

136. கலி. 41.

"ஓர் அகப்பொருட் செய்யுளிற் சில அடிகளில் வரும் கருப் பொருள்களாற் பெறப்படும் உள்ளுறைப் பொருள் அச் செய்யுளின் மற்றைய அடிகளாற் பெறப்படும் பொருளுக் குதவியாகி அதனோடியைந்து ஒரு பொருள் பயந்தால் அஃது உள்ளுறையுவமமாகும். ஈண்டுக் கருப்பொருளாற் பெறப்படும் உள்ளுறைப் பொருள் இல்லையாயின் அச்செய்யுளின் கருத்து முற்றுப் பெறுமலும் நன்கு விளங்காமலும் நிற்கும். அங்ஙன மன்றி அக்கருப் பொருளாற் பெறப்படும் உள்ளுறைப் பொருள் மற்றைய அடிகளாற் பெறப்படும் பொருளை நன்கு விளங்குதற்கு உதவியாகாமல் அதனோடு ஒருங்கொத்தியை யாது வேறொரு பொருள் தோற்றுவித்து நின்றால் அஃது இறைச்சியாகும். ஈண்டுக் கருப்பொருளாற் பெறப்படும் உள்ளுறைப் பொருள் இராவிடினும் செய்யுளின் கருத்து முற்றுப் பெற்றும் நன்கு விளங்கியும் நிற்கும். நுண்ணறி வுடையோர்க்கே இவற்றின் வேறுபாடுணரவும், செய்யுட் களில் அமைந்தவாறு காணவும் இயலும்."[137]

## உள்ளுறையும் ஒட்டணியும்

இவ்வுள்ளுறையுவமத்தினைச் சிலர் 'ஒட்டு' என்னும் அலங்காரத்தினுள் அடக்கலாம் என்பர். இவர் கூறும், 'ஒட்டணி' என்பது வேறு. ஒட்டணி கருப்பொருள் களனுகப் பிறக்கவேண்டும் என்ற நியதியில்லை. புறத் தினும் புறப்புறத்தினும் செய்யுள் செய்யும் புலவர் முதலானோர் கூற்றாயும் வரலாம். உள்ளுறை உவமம் தலைவன், தலைவி, செவிலி, தோழி, பாங்கன், பாணன் என அறுவர் கூற்றிலேயே வழங்கப்படும். இதனால் இவ் விரண்டிற்கு முள்ள வேற்றுமையினை நன்குணரலாம். 'உள்ளுறை உவமம்' என்பதற்கும் 'ஒட்டணி' என்பதற்கும் இடையில் உள்ள வேறுபாட்டை மாறனலங்காரவுரை யில் தெளிவாகக் காணலாம்.[138] ஒப்புமையும், நுண்ணிய வேறுபாட்டையும் கருதியே மாறனலங்கார ஆசிரியர்

137. ந. சுப்பைய பிள்ளை: தஞ்சைவாணன் கோவை மூலமும் குன்றத்தூர் அஷ்டாவதானி சொக்கப்ப நாவலர் உரையும், பக். 285—யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை வெளி யீடு—புதுக்கிய இரண்டாம் பதிப்பு—1956.

138. 'முன்னர்க் கூறிய உள்ளுறை யுவமத்தினோடும் ஒட்டென் னும் இதனிடை வேற்றுமை யாதோவெனின், அஃதே! நன்று சொன்னாய்! உள்ளுறையுவமம் என்பது அகத்

உள்ளுறை யலங்காரம், ஒட்டலங்காரம் எனத்தொடர்ந்து முறைப்படத் தனித்தனியே தம் நூலுள் அமைத்தார் போலும். அகப்பொருட் செய்யுளில்வரும் உள்ளுறை உவமமும், இறைச்சியும், பிற்கால அணி இலக்கணத்தில் வரும் 'கருத்துடையணி', 'கருத்துடையடைகொளியணி'

---

திணைக் கைக்கோளிரண்டிற்குமே யுரித்தாய் அகத்திணை யைந்தினும் அவ்வவ் நிலங்களில் தெய்வத மொழிந்த கருப் பொருள் களுகைப் பிறக்குமெனவும், அவ்வுள்ளுறையுவமங் கூறுவார், தலைவன், தலைவி, செவிலி, தோழி, பாங்கன், பாணன் ஆக அறுவரெனவும், உள்ளுறையுவமங் கூறு தற்குரிய ரல்லாதார், நற்றாய், தந்தை, தன்னையத்தார், ஐயன்மாராக நால்வரெனவும், அங்ஙனங் கூறுதற்குரி யோர் கூறுமிடத்து மருதம் நெய்தலென்னுமீரிடத்தும் மிகுந்தும், குறிஞ்சிக்கண் அவ்வளவின்றியும் ஒழிந்த நில மிரண்டினும் அதனிற் குறைந்தும் வருமெனவும், அங்ஙனம் கூறுமிடத்தும் வெளிப்படக் கூறுமுவமையிடத் துவமேயங் கேட்போர் மனத்தின்கண்ணும் புலவன் குறித்தவாறே நிகழ்த்துதலின் உள்ளுறையுவமமெனவும், மேற்கூறப் படுங் கருப்பொருள் களுகைப் பிறக்கும் இறைச்சிப் பொரு ளோடுங் கூடாதனவாயும் வருமென உணர்க. இஃதன்ன தன்றாய்க் கருப்பொருளிற் பிறக்க வேண்டும் என்னும் யாப்புறவின்றிப் புறத்தினும் புறப்புறத்தினுஞ் சென்று செய்யுட் செய்யும் புலவன் முதலாயினோர் கூறுங் கூற்றாய்ச் சுட்டென்னும் உள்ளுறையவாய் நடத்தல் வேற்றுமை யென்றுணர்க. அங்ஙனமாதல்,

'பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின்.

நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந் தூக்கின்
உயிர்க்கிறுதி யாகி விடும்

எனவும்,

நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற.

கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும்
நாவாயும் ஓடா நிலத்து.

காலாழ் களரில் நரியடும் கண்ணஞ்சா
வேலாள் முகத்த களிறு

என்பனவும், வடமொழியில் 'த்வன்யா லோகம்' முதலிய நூல்களில் விவரித்துக் கூறப்படும் தொனியும் ஓரினப்படு வனவென்றும் கருதுவர்.[139]

அகத்திணைப் பாடல்களுக்குரியதான இவ்வுள்ளுறை யுவமம் திருக்குறள் இன்பத்துப்பாலில் காணப்படவில்லை. திருக்குறளில் அமைந்துள்ள அடியமைப்பே இதற்குக் காரணம் எனலாம். குறுகி அமைந்துள்ள ஏழுசீர்களில் கருப்பொருள்களைக் களனாகக் கொண்டு உள்ளுறை யுவமம் பாடுதல் என்பது எளிய செயலன்று. நிலவளத்தை யும் நீர்வளத்தையும் சுட்டி அதனுள் உள்ளுறையுவமம் அமையும்படி பாடுதற்கும், கருத்தினைக் கூறுதற்கும் இவ் வகை அடியமைப்பு இடந்தராது என்பது நன்கு தெளி வாகும். ஆயினும், வலியறிதல், இடனறிதல், அதிகாரங் களில் புறப்பொருள் பற்றிய கருத்துகளை இவ்வாறு உட்பொருளாக அமைத்துப் பாடியிருப்பதைக் கண்டு மகிழலாம். இவ்வாறு அமைந்த பாடல்களை 'ஒட்டணி' அல்லது 'பிறிது மொழிதல்' அணி என்பர்.

பாடலில் மேற்போக்காகக் காணும் பொருளைக் கொண்டு கவி வேறு உட்பொருளைக் குறிக்கொண்டு கூறு

---

எனவும் திருவள்ளுவர் கூறிய வலியறிதல் இடனறிதல் என்னும் இரண்டினுள்ளும் பிறநூல்களினுங் கண்டுகொள்க. தண்டி யாசிரியர் ஒட்டென்னும் அலங்காரத்தினுள் அடையும் பொருளும் அயல்படமொழிவதாக 'வெறிகொளினச் சுரும்பு மேய்ந்ததோர் காவி' என்றதில் உள்ளுறையுவமமும், அடை விபரீதப்பட பொருள் வேறுபடக் 'கடைகொலுலகியற்கை', என்பதிற் கருப்பொருள் களனாகாது ஒட்டுங் கூறினரெனினும், இந்நூலுடையார், 'உடனுறையுவமஞ் சுட்டு நகை சிறப்பெனக் கெடலரு மரபின் உள்ளுறை யைந்தே' என உள்ளுறையை ஐந்தாய்ப் பிரித்தமையான் உள்ளுறையுவமம், ஒட்டு, இறைச்சி என மூன்றாக்கினர். இங்ஙனம் ஆராய்ந்து பிரித்த இவர் நோக்கமும் தெள்ளிதின் ஆராய்ந்து கொள்க.

—மாறன். 125. உரை.

139. ஜகந்நாதன், கி. வா.: தமிழ்க் காப்பியங்கள், பக். 60— சென்னைப் பல்கலைக் கழகம், 1940.

வதனை 'சுவாபதேசம்' என்றும் சொல்வதுண்டு. சுருங்கக் கூறின் இதனைப் பாடலின் உள்ளுறை பொருள் என்று கொள்ளலாம். வைணவசமய பக்தி இலக்கியமாகிய திருப்பாவை, திருவிருத்தம், திருவாய் மொழிப் பாசுரங்கள் முதலியவற்றில் நாயக-நாயகி பாவமாகப் பக்திக் காதலை வெளியிடும் பாசுரங்களுக்குத் தத்துவார்த்தமாக வியாக்கியானகாரர்கள் சுவாபதேசப் பொருள் விளக்கம் தருகின்றனர். இஃது ஒருவகையில் மேலே விவரிக்கப்பெற்ற உள்ளுறை இறைச்சி போலவும், ஒட்டணி போலவும் வரும் நிலையாகும். எனவே, வியாக்கியானகாரர் கூறும் சுவாபதேசமும் இயைபு நோக்கி இங்கு நினைவுகூர்வது பொருத்தமாகும்.

# 3. திருக்குறளில் உவமை

அணியிலக்கணங்கள் அமையப்பெற்ற உயர்ந்த நூல்களுள் வள்ளுவர் அருளிய திருக்குறளும் ஒன்றாகும்.

எழுத்தசை சீரடி சொற்பொருள் யாப்பு
வழுக்கில் வனப்பணி வண்ணம் இழுக்கின்றி
என்றெவர் செய்தன எல்லாம் இயம்பின
இன்றிவர் இன்குறள்வெண் பா[1]

என்னும் நச்சுமனார் பாடல் எல்லா இலக்கணங்களும் பொருந்திய இனிய நூல் திருக்குறள் என்று கூறுவதே இதற்குத் தக்க சான்றாகும்.

இந்நூலின்கண் அமையப்பெற்ற உவமைகள் ஆழமும் அழகும் நிரம்பப் பெற்றவை; பொருட்செறிவு மிக்கவை. வள்ளுவருடைய அறிவின் அகலத்தையும் ஆழத்தையும் வெள்ளிடை மலைபோல் விளக்குபவை. இனி, அவர் அருளிப் போந்த திருக்குறள் நூலுள் எவ்வெவ்வகையான உவமைகள் உள்ளன என்பதைக் காண்போம்.

உவமையணியின் தோற்றமும் வளர்ச்சியும் பிறவும் நோக்கும்போது, கால அடைவில் அது புதுப்புது வடிவங்களையும் வேறுவேறு உருவங்களையும் கொண்டு வளம்பெற வளர்ந்த ஓர் ஆலமரமாகக் காட்சி தருகிறது. என்றாலும், பழமையானவை வினை, பயன், மெய், உரு என்னும் நான்குமே என்பது சென்ற அத்தியாயத்தில் விவரிக்கப்

1. தி. வ. மாலை, 45.

பெற்றது. குறளும் சாலப்பழமையுடைய நூலாதலால் தொல்காப்பிய நெறியை ஒட்டி முதலிற்பார்த்துப் பின்னர் பிற வளர்ச்சிகளை நோக்குவதே பொருத்தமாகும்.

## வினை உவமம்

தொல்காப்பியனார் வகுத்த நால்வகை உவமங்களுள் ஒன்றான வினை-உவமம் குறட்பாக்கள் பலவற்றிலும் பயின்று வருகிறது. மொழியின் இயக்கமே வினைவடிவங் களில் தானே அமைந்திருக்கிறது? மேலும் எவ்வகைப் பொருளும் இருப்பு நிலையிலும் இயங்கு நிலையிற் காணும் அழகு காண்பாரின் கண்ணையும் கருத்தையும் கவரு மன்றோ? வினை உவமத்திற்குரிய உருபுகள், இலக்கண நெறி முதலியனபற்றி முன்னரே பார்த்தோம்.

இங்கு வள்ளுவர் வினையுவமத்தில் எடுத்தாண்ட உருபுகளையும் (அன்ன - ஆங்க - அற்று - நேர - தகைய - ஒப்ப - போல) உவமச் செய்திகளையும் பிறவற்றையும் காண்போம்.

## 'அன்ன உருபு' பெற்ற உவமை

### கயவரும் பறையும்

கயவர்கள் பிறர் அறியாத மறைபொருளைத் தாமே வலியச் சென்று பரப்புவதில் வல்லவர்கள்; கேட்போர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் தாமறிந்த மறை பொருளைப் பிறருக்கு வலிந்து உணர்த்துவதில் பெரு விருப் பம் உடையவர்கள்; எப்பொழுது புதுச்செய்தி கிடைக்கும், அதனை அப்பொழுதே பரப்புவோம், என்று எதிர்பார்த்த வண்ணம் இருப்பவர்கள்; இவர்களுடைய உருவத்தையும் உள்ளத்தையும் தெள்ளத் தெளிவாகக் காட்டுவது வள்ளு வருடைய உவமை. உவமையின் வாயிலாக அவர்களையே நமக்குப் படம் பிடித்துக் காட்டுகின்றார் வள்ளுவர்.

செய்தியினைப் பரப்புவோன் முழக்கும் பறையானது யாவரும் அறியாத புதுச்செய்தியைப் பொதுச் செய்தி யாகப் பரப்புகின்றது. எவ்வித உணர்ச்சியுமின்றி ஓசை யினை எழுப்பிச் செய்தியைப் பரப்புவது பறை; பிற பணி

களில் ஈடுபட்டோரையும் வலியக் கவர்ந்து செய்தியை அவர்கட்கு அறிவிப்பர் கயவர். இக்கயவர்களும், தாம் கூறுகின்ற செய்தியினுல் பிறர் வருந்துவரோ என்ற எண்ணம் கொள்ளார். பறையறையும் குறுந்தடி போல இவர்களுடைய நாவும் ஓயாது வாயாகிய பறையை அறைந்து ஆரவாரம் செய்து கொண்டிருக்கும். எவ்வித உணர்ச்சியுமின்றி எவ்வகைச் செய்தியினையும் இவர் பரப்புவர்.

எனவே, மறைபொருளைப் பரப்பும் பறைக்குக் கயவர்களை இக்குறளில் வள்ளுவர் உவமிக்கின்றூர்; சமுதாயத்தில் காணுகின்ற கயவர்களை இவ்வுவமையின் வாயிலாக உலகிற்குக் காட்டுகின்றூர். கிராமப்புறத்தில் காணப்படுகின்ற எளிய பொருள்களை வள்ளுவர் உவமைப் பொருளாகக் கொண்டு அவற்றின் மூலம் அரிய பொருள்களைப் பயில்வாருக்கு உணர்த்துந் திறனும் அழகும் போற்றுதற்கு உரியவாம். கவிஞனுடைய கூர்மையான அறிவுக்கண் எளிய பொருளைக் கொண்டும் சிறந்த கருத்தைப் பிறருக்குப் புலப்படுத்திக் காட்டும் என்பதற்கு இக்குறளே தக்க சான்றூகும்.

கயவர் பேச்சையும் பறையறிந்து செய்திகூறும் தொழிலினையும் ஒப்புமைப்படுத்திக் கூறுவதால் இஃது தொழிலுவமையாயிற்று. பறையினைக் கையால் சுமந்து கொண்டு பல இடங்களில் சென்று அறைந்து பிறரைத் திரட்டிச் சொல்ல வேண்டிய செய்திகளைப் பலருக்கும் உணர்த்துவது போன்று, கயவர்களும் தாம் கேட்ட மறை பொருளை வாய்ப்பறை அறைந்து பிறருக்குச் சொல்லுவதனுல் இது தொழிலுவமமாயிற்று. உரையாசிரியர் பரிமேலழகரும் இக்குறட்பாவினைத் 'தொழிலுவமம்' என்றே குறிப்பிடுகிறூர்.

அறைபறை அன்னர் கயவர்தாம் கேட்ட
மறைபிறர்க்கு உய்த்துரைக்க லான்[2]

என்னும் இக்குறட்பாவில் 'அன்ன' உருபின் வேற்று வடிவமான 'அன்னர்' உவம உருபாக வருவதையும் காணலாம்.

2. குறள், 1076.

**மரமும் மனிதரும்**

கண்ணிற்கு வேண்டுவது கண்ணோட்டமே; அன்புப் பார்வையே அதற்குரிய அணிகலன்; பிறர் துன்பத்தைக் கண்டு உளம் வருந்துகின்ற நிலைமையே இரக்கம்; இதனையே வள்ளுவர் 'கண்ணோட்டம்' என்னும் அழகிய சொல்லால் குறிப்பிடுகின்றார். உலகத்துப் பிறந்த மனிதர்களெல்லாரும் மனிதர்களாகி விடுவரா? மன்பதை இயங்கக் காரணமாகிய அன்பு நோக்கம் கொண்டோரே மனிதர்; மற்றையோர் எல்லாம் 'மரம்' என்கிறார் வள்ளுவர்.

மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோ
டியைந்துகண் ணோடா தவர்[3]

என்பது வள்ளுவர் வாக்கு.

கண்ணோட்டத்திற்குரிய கண்ணொடு வாழ்கின்றனர் மக்கள்! ஆயினும், அதற்கு இயல்பாக இருக்கவேண்டிய பரிவு உணர்ச்சியும் அருள் உணர்ச்சியும் அன்பு உணர்ச்சியும் அவர்களிடத்து இல்லை. எனவே, அவர்கள் மரம் போன்றவர்களே என்கிறார் வள்ளுவர். 'தம் முன்னர் எவ்வளவு துன்பச் செயல்கள் நடைபெற்றாலும் அதனை உணராது நிற்கும் மரத்திற்கும் இவர்களுக்கும் என்ன வேறுபாடு உளது? இத்தகையோரையே வள்ளுவர் 'மரத்தனையர்' என்கிறார். கண்ணோட்டம் இல்லாத மக்களுடைய செயலற்ற தன்மை வள்ளுவருடைய உள்ளத்திற்கு மரத்தினுடைய தன்மையினை நினைவூட்டியது போலும்! "உலகில் வெவ்வேறு தோற்றமும் வடிவமுங் கொண்ட இரு பொருள்களை நுணுகி ஆயும் திறனால் அப்பொருள்களின் தன்மையாலும் இயல்பாலும் சரியாக ஒப்பு நோக்கிக் காணுகின்ற தன்மை கவிஞர்கட்கே உண்டு" என்பர் லியான் (P. H. B. Lyon) என்ற திறனாய்வாளர்.[4] வள்ளுவர் கூறும் உவமைகள் இவர்தம் கூற்றிற்குப் பொருத்தமாயிருப்பதை எங்கும் காணலாம்.

3. குறள், 576.

4. Lyon P. H. B.: The Discovery of Poetry, p. 167, Edward Arnold & Co, London, 1932.

மரமும் கண்ணோடு (கணுவோடு) பொருந்தி இருந்து கண்ணோடாதிருத்தல் போல இரக்கமில்லாதவரும் கண்ணோடு பொருந்தியிருந்து கண்ணோடாதிருக்கின்றமையால் இது வினையுவமம் ஆயிற்று. இங்குக் கண்ணோடாமை தொழில். "மரமும் கண்ணோடு இயைந்து கண் ஓடாமையின் இது தொழிலுவமம்" என்பர் பரிமேலழகர்.

**நோக்கும் அணங்கும்**

மணம் கமழும் பூஞ்சோலையில் அழகமைந்த நல்லாள் ஒருத்தி நறுமலர் கொய்துகொண்டிருந்தாள். பூவார் சோலை மயிலாடப் புரிந்து குயில்கள் இசைபாட இன்புற்று மகிழ்ந்திருந்த அந்தத் தலைமகளை இளமை நலம் நிரம்பப் பெற்ற கட்டிளங் காளை ஒருவன் கண்டான். மயில் ஆடக் குயில் கூவ மகிழ்ந்த அம்மங்கையின் கண்கள் மானினை நினைவூட்டின; அவளுடைய சாயலோ மயிலை நினைவூட்டியது. சந்தனமும் சண்பகமும் தேமாவும் நிறைந்த அப்பூம் பொழிலின் இயற்கை அழகோடு போட்டியிட்டது அவளுடைய எழில்நலம்! அவளைக் கண்டதும் தலைவனுக்கு ஐயம் எழுந்தது. பூவில் உறைகின்ற பூமகளோ? பொழிலிடை உறையும் தெய்வமோ? அன்றி விண்ணகத்து வாழும் தெய்வ மகளோ? எனத் தனக்குள் ஐயுற்றான். மானொத்த விழிகளும், மயிலொத்த சாயலும் அவனை மருட்டின. இறுதியில் விழிகளின் இமைப்பைக் கண்டான்; இவள் விண்ணக மடந்தையல்லள், மண்ணக மடந்தையே எனத் துணிந்தான். அன்புப் பார்வையோடு அவனும் நோக்க அவளும் நோக்கினாள்; அவ்வாறு நோக்கிய விழிகள் அவனுக்குத் தந்ததோ அளவிடற்கரிய துன்பங்கள்! அவனுடைய நோக்குக்கு எதிர்நோக்கிய அவள் நோக்கு, இயற்கையாகத் தாக்கி வருத்துகின்ற தெய்வ அணங்கு ஒருபடையும் கொண்டுவந்து தாக்கியதைப் போல இருந்ததாம். இங்கு வள்ளுவருடைய உவமையானது காதலால் துன்பப்படும் தலைவனுடைய உள்ளத்தைத் தெளிவாக நமக்குக் காட்டுகிறது. தலைமகன் அடைந்த வேதனையை,

> **நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு**
> **தானைக்கொண் டன்னது உடைத்து**[5]

5. குறள், 1082.

என்னும் குறட்பாவால் கூறுகின்றார். இங்கே மகளிருடைய நோக்குதலானது அணங்கு படையுடன் வந்து தாக்குதலைப் போன்றது என்றமையான், இது வினையுவமம் ஆயிற்று. இங்ஙனமே அன்ன, அனைய முதலிய வடிவங்களில் உவம உருபுகள் திருக்குறள் பாக்களில் பல்வேறிடங்களில் வினையுவமமாகப் பயின்று வருகின்றன.[6]

## 'ஆங்க' உருபு பயின்ற உவமை

### வறுமையும் மறதியும்

வாழ்க்கையில் அனுபவிக்கும் துன்பங்களுள் தலையாய துன்பம் வறுமையே எனலாம்; முற்றுங் கற்றுத் துறை போகிய மூதறிஞர்களாயிருப்பினும் வறுமைப்பிணி அவர்களுக்கு வந்துற்றால் அவர்களுடைய அறிவினை அது கொன்றுவிடும். வறுமைப்பிணியின் கொடுமையினை மணிமேகலை மிக உருக்கமாகக் கூறும்.

வறுமை அறிஞர்களின் அறிவையும், புகழையும் அழிப்பது போலவே மறதியும் ஒருவனுடைய புகழைக் கெடுத்துவிடும். அவனுடைய பெருமை மறதியின் காரணமாகக் குறையும். எனவே, மறதியும் வறுமையும் ஒன்றெனலாம். வறுமை பொருளின்மையாலும், மறதி அறிவின்மையாலும் வருவது.

"உலகத்தில் பெரிய பெரிய கலைஞர்களும் கவிஞர்களும் வாழ்க்கையில் தோல்வியுற்றிருக்கின்றார்கள். அவர்களுக்குக் கலையறிவும் மற்றப் புலமையும் நன்கு அமைந்திருந்தும் அல்லற்பட்டுக் கவலையுற்றிருக்கின்றனர். காரணம் மறதியே. எந்தத் துறையில் சிறந்து உயர்ந்து விளங்கினாலும் மறதி அவர்களுடைய புகழை அழித்து விடும்" என்பன போன்ற கருத்துகளையெல்லாம் இவ்வுவமை தன்னுள் கொண்டுவிளங்கும் பான்மையை அடுத்துவரும் குறட்பா நமக்கு உணர்த்தும்:

6. குறள், 109, 308, 624, 650, 828, 969, 1010, 1073, 1122, 1124, 1260.

பொச்சாப்புக் கொல்லும் புகழை அறிவினை
நிச்ச நிரப்புக்கொன் றாங்கு.[7]

இக்குறளகத்து 'ஆங்கு' உருபு வினையுவமமாக வந்துள்ளது. வறுமை அறிவை அழிப்பதுபோலப் புகழை மறதி அழிக்கும் என்றமையினால் இது வினையுவமம் ஆயிற்று.

**கணையும் யாழும்**

எவர் நல்லவர் எவர் தீயவர் என்று அறிய முடியாத வண்ணம் இன்று உலகில் மக்கள் தோற்றமளிக்கின்றனர். தோற்றத்தால் நல்லவர்கள் செயலால் தீயவராய்க் காட்சியளிக்கின்றனர். இவர்கள் தம் செயலை—குற்றத்தை—மறைத்து வாழ்வோராவர். 'மைபொதி விளக்கே அன்ன மனத்தினுள் கறுப்பு வைத்து' வாழும் கொடியவர்கள். அகத்தே கறுத்துப் புறத்தே வெளுத்தவர்கள். ஆகவே, உண்மையானவர்களைக் கண்டறிய வேண்டுமென்றால், வெறுந் தோற்றத்தை வைத்து அவர்களின் இயல்பினைக் காணமுடியாது. வேறு எவ்வாறு இவர்களைக் கண்டறிவது?

கணையும் யாழும் மக்கள் பயன்படுத்தும் கருவிகள். இப்பொருள்களைக் கொண்டு நமக்கு அரிய விளக்கம் தருகின்றார் வள்ளுவர். இக்கருவிகளைக் கூர்ந்து நோக்கிய வள்ளுவர் அவற்றின் தன்மைகளையும் இயல்புகளையும் ஆழமாகச் சிந்தித்துச் சிந்தித்துத் தாம் கூறவந்த கருத்துக்கு உறுதியையும் உயிர்ப்பையும் தருகின்றார்.

அம்பு நேரான வடிவம் உடையதுதான்; நெய் பூசப் பெற்று அழகிய தோற்றத்துடன் விளங்குவதுதான். ஆனால், அது புரியும் தொழிலோ அச்சுறுத்தத் தக்க ஒன்றாகும். கொலைக்குப் பயன்படுத்தும்—துன்புறுத்தும் கருவியன்றோ அது? நேரான வடிவம் உடையது; ஆனால் கொடுமையைத் தருவது.

யாழோ வளைந்த வடிவம் உடையது; பல நரம்புகளால் ஆகியது; இசையெழுப்பி இன்பமூட்டுவது. வளைந்த

7. குறள், 532.

வடிவம் உடைய யாழ்—சிறந்த இன்பத்தை நல்கும் யாழ்—தோற்றத்தில் அம்பைப்போன்று நேரானதல்ல. அதனைப் போன்று துன்பமூட்டுவதும் அன்று; ஆனல் அதுபுரியும் தொழிலால் உலகிற்கு நல்ல பயனைத் தருகின்றதன்றே?

இவ்விரு பொருள்களின் மூலம் வள்ளுவர், மக்களையும் தோற்றத்தால் அறியாமல் அவரவர் புரியும் செயல்களின் நன்மை தீமைகளால் ஆய்ந்து காணவேண்டும் என்கிறார். இதனை,

> கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங் கன்ன
> வினைபடு பாலால் கொளல்[8]

என்னும் குறட்பாவால் அறிவுறுத்துகின்றார்.

உலக இயல்பைத் தெள்ளத்தெளிய அறிந்த வள்ளுவர் மக்களும் இதனை நன்குணரவேண்டும் என்னும் கருத்தால் அனைவருக்கும் பழக்கப்பட்ட இவ்விருபொருள்கள் மூலம் இவ்வரிய கருத்தினை உணர்த்தினர் போலும். எனவே, வேடத்தால் நல்லவர்கள் செயலால் தீயவர்களாக இருக்கலாம், கணையைப்போல; தோற்றத்தால் இழிந்தவர்கள் தொழிலால் சிறந்தவர்களாகலாம், யாழைப் போல. இங்கே தொழில்பற்றி ஒப்புமை பேசப்பட்டதால் 'தொழிலுவமம்' ஆயிற்று.

தாம் கூறவந்த கருத்தினை எத்துணை எளிமையாகவும், இயல்பாகவும் புரியவைக்கின்றார் வள்ளுவர். இதற்கு மிக மிக உதவியாய் அமைவன அவர் எடுத்தாளும் உவமப் பொருள்கள்தாம்!

## 'அற்று' உருபு பெற்ற உவமை

### வேடமும் வேடனும்

மனத்தே மாசுகொண்டு தவவேடத்தால் மாண்பு பெற்றோர் போல் மறைந்தொழுகுவோர் பலர். தவக் கோலத்தில் மறைந்து கொண்டு அவச் செயல்களைப் புரிந்துவரும்

8. குறள், 279.

தீயோரை அழகான உவமையுடன் ஒப்பிட்டுக்காட்டி அவர்தம் செயலையும் கடிந்துரைக்கின்றார் வள்ளுவர். வானத்தே மகிழ்வோடு பறக்கும் புள்ளினங்களைப் பிடிக்கச் சென்ற வேடன் அப்புள்ளினங்கள் அறியாமல் இருக்கும் பொருட்டு, புதாருகே மறைந்து கொள்ளுகின்றான். புதரிலே மறைந்துகொண்டு வலையினை வீசிப் பறவைகளைப் பிடிக்கின்றான். இவ்வாறு புதரிலே மறைந்துகொண்டு வலைவீசிப் பறவைகளைப் பிடிப்பது போலவே சிலர் துறவுக் கோலத்தில் மறைந்துகொண்டு தூய ஒழுக்கம் பேண வேண்டியவர்கள் தீயொழுக்கம் புரிகின்றனர். வள்ளுவர் துறவியின் நடத்தையையும் வேடனின் சூழ்ச்சியையும் ஒப்பிட்டுக் கூடா ஒழுக்கத்தினைக் கடிந் துரைக்கின்றார்.

> தவமறைந் தல்லவை செய்தல் புதன்மறைந்து
> வேட்டுவன் புள்சிமிழ்த் **தற்று**.[9]

புள் சிமிழ்த்தல் என்னுந் தொழில் உபமானமும், அல்லவை செய்தல் உவமேயமுமாம். 'அற்று' என்னும் உவம உருபு இப்பாடலில் போலும் என்கிற பொருளில் வந்துளது. தொழில் பற்றி ஒப்புமை பிறந்ததினால் இது 'வினையுவமம்' ஆயிற்று.

**கள்ளும் சொல்லும்**

குடித்து மயங்கிக்கிடக்கின்ற ஒருவனை எவ்வாறு திருத்துவது? அறிவுரைச் சொற்கள் அந்நிலையில் அவனுக்கு ஏற்குமா? நிலையிழந்து அறிவு தடுமாறியுள்ள வனுக்கு எத்தகைய அறிவுரைகளும் செவியில் ஏறா. அந் நிலையில் அவனுக்கு அறிவுரை கூறுவோரையும் பிறர் எள்ளுவர்.

நீருள் மூழ்கி மறைந்தான் ஒருவன். அவனைத் தேடிச் செல்ல விழைந்த மற்றொருவன் கைவிளக்கு எடுத்துச் செல்கின்றானும்! நீரின்மேல் கைவிளக்குப் பட்டதும் அது எரியுமா? அணைந்து விடுமே! அதனையுணராது சென்ற

9. குறள், 274.

வனின் அறியாமையினைக் கண்டு பிறர் நகைப்பர் அன்றோ? அது போன்றதுதான் கள்ளுண்டானுக்கு நற்சொற்கள் கூறித் திருத்துதல்! இதனை வான்புகழ் வள்ளுவர்,

> களித்தானைக் காரணங் காட்டுதல் கீழ்நீர்க்
> குளித்தானைத் தீத்துரீஇ யற்று[10]

என்னும் குறட்பாவின் மூலம் கூறுகிறார். கள்ளுண்டு மயங்கிய ஒருவனுக்கு அறிவுரை கூறுவதும், ஆழமான நீருக்குள் மறைந்தானைக் கைவிளக்குக்கொண்டு தேட முயல்வதும் ஒன்றேயாம்! எவ்வளவு அழகான, கருத்து வளமுள்ள, பொருத்த மிக்க தொழில் உவமை!

**களவொழுக்கமும் துறக்க வின்பமும்**

காதலர் இருவர் கருத்தொருமித்துக் களவொழுக்கம் நிகழ்த்தி வருகின்றனர். தோழி ஒருநாள் தலைவனைக் கண்டு, "களவொழுக்கத்தினைத் தவிர்த்து விரைவில் மணம் புரிந்து இல்லறம் நடத்துக" என அறிவுறுத்தினாள். "இவளைத் தழுவுதல் தம்முடைய வீட்டிலிருந்து தாம் ஈட்டிய பொருளைப் பகுத்துக் கொடுத்து உண்டாற்போன்ற இன்பத்தை நல்குகின்றது. இல்லறத்தால் பெறும் துறக்க வின்பம் எனக்கு இவளுடன் கூடி இருத்தலே" எனத் தன்னுடைய உடன்பாட்டினை வெளியிடுகின்றான் தலைவன்.

விருந்தோம்பும் பண்பு பெற்ற தமிழர்களுடைய இயல்பினை இவ்வுவமை வாயிலாக வள்ளுவர் கூறுந்திறனும் தமிழர்தம் காதற்பண்பும் இனிதாகப் புலனாகின்றன. இல்லறத்தோடு பொருந்தி இருந்து, தாம் ஈட்டிய பொருளை அறஞ்செய்து, பிறருக்குப் பகுத்துக் கொடுத்து, எஞ்சியதை உண்டு மகிழ்ந்து அடைகின்ற பேரின்பமும் அழகிய மங்கையைத் தழுவுவதால் பெறும் இன்பமும் ஒன்றே" என உவமை வாயிலாகத் தெளிவுறுத்துகின்றார்.

> தம்மி லிருந்து தமதுபாத் துண்டற்றால்
> அம்மா வரிவை முயக்கு.[11]

10. குறள், 929.
11. குறள், 1107.

வள்ளுவர் உவமையின் மூலமாகவும் பழந்தமிழருடைய பண்புகளையும் இயல்புகளையும் விளக்கிச் செல்கின்றார் என்பதற்கு இப்பாடல் ஒரு சிறந்த சான்றாகும். தம்முடைய இல்லத்திலிருந்து பகுத்து உண்ணுகின்ற தொழிலை அரிவையின் தழுவுதலுக்கு உவமையாகக் கூறியதனால் இது 'வினையுவமம்' ஆயிற்று. உரையாசிரியர் பரிமேலழகரும் தம் உரையில் இதனைத் தொழிலுவமத்திற்குச் சான்றாகக் காட்டுகின்றார். இதனையே பயனுவமமாகவும் கொள்ளலாம். தம் இல்லத்தின்கண் இருந்து பகுத்து உண்ணுதலாற் பெறுகின்ற சுவர்க்க இன்பமும் இவ்வழகிய மங்கையின் முயக்கத்திலேயே உள்ளது என்று கருதுமிடத்து இதனைப் பயன் உவமமாகக் கூறலாம். 'அற்று' என்னும் இவ்வுவம உருபு மேலும் பல்வேறு குறட்பாக்களில் வினையுவம உருபாகத் தோன்றும் இயல்பு நோக்கத்தக்கது.[12]

### 'நேர' உருபில் வரும் உவமை

#### கொலையும் களையும்

செங்கோன்மை தவறாது அறவழியே ஆட்சி நடத்துகின்றான் மன்னன். அவன் திருநாட்டில், கல்வியிற் சிறந்தோர் உண்டு; கயமைக் குணம் கொண்டோரும் உண்டு; நல்லன செய்வோரும் உண்டு; அல்லன போற்றுவோரும் உண்டு; அறமுறையில் பொருளீட்டிய செல்வரும் உண்டு; மறவழியிலே பொருள் ஈட்டும் ஆறலைப்பாரும் உண்டு. அறவழியில் ஆட்சி செலுத்துகின்றவன் ஆதலாலே கொடுஞ்செயல் செய்வோரைத் தண்டிக்காமல் இருந்துவிட முடியுமா? அறத்தின் பேரால் அவர்களை ஒறுக்காது இருப்பதும் அறமல்லவே? கொடியவர்களை வேந்தன் கொலைத் தண்டத்தால் ஒறுத்தே ஆகவேண்டும். கொலையின் ஒறுத்தல்-அதாவது கொலைத் தண்டனை அளித்தல் ஈண்டுக்

12. குறள், 22, 78, 100, 249, 273, 232, 338, 401, 402, 660, 678, 716, 718, 720, 758, 838, 840, 890, 894, 913, 1000, 1020, 1058, 1146, 1148, 1288, 1303, 1304.

குற்றமாகாது என்பதனை அழகிய உவமை மூலம் உணர்த்தி அறத்தின் சிறப்பையும் அரசியல் நேர்மையையும் எடுத்துக் காட்டுகின்றார் வள்ளுவர்.

உலக உயிர்களுக்கு உணவூட்டி வாழ்கின்றவர் உழவர் பெருமக்கள். சுழன்றும் ஏர்ப்பின்னே கிடக்கின்ற உலகத்தை வாழ்விப்பவர்களும் அவர்களே. உழவருடைய பெருமுயற்சியால் காடு கழனியாகிறது; செம்மண் செந்நெல்லின் மேடாக மாறுகிறது. அந்நிலையினை உண்டாக்க அவர்கள் உழைத்த உழைப்பு சொல்லுந் தரமன்று; காடு கழனியாக மாறி, செந்நெற் கதிர்கள் பூத்துக் குலுங்குவதற்குள் அவர்கள் பட்ட துன்பங்கள் ஏராளம்! செந்நெல் வளர்வதற்குள் தான் எத்தனை எத்தனை இன்னல்கள்! இடையூறுகள்! செந்நெல்லோடு போட்டிபோட்டுக்கொண்டு வளரும் களைகள், உதவாத செடிகள். இவற்றை அப்படியே விட்டுவைத்தால் நெல்லும் பாழாகும்; பயனும் குன்றும். நெற்பயிர் செழித்து வளரவேண்டுமானால், உழவர்கள் சிறிதும் இரக்க மின்றிக் களைச்செடிகளையும் புற்களையும் பறித்து அழித்து விடுதல் வேண்டும். மீண்டும் மீண்டும் தோன்றுகின்ற களையினையும் அவ்வாறே அழித்தல் வேண்டும். அப்பொழுதுதான் செந்நெல்லும் செழித்து வளரும்.

நாடும் சமுதாயமும் நலமே விளங்க வேண்டுமெனின், களைச் செடிகளைப் போலவே, புற்களைப் போலவே, இவர்களையும் அழித்தல் வேண்டும். தீயோரை, கொடியோரைக் கொலைத் தண்டனை தந்து வேந்தன் ஒறுப்பதும் உழவர்கள் செந்நெல் செழித்து வளர இடையூறாக இருக்கும் புற்களையும் களைகளையும் அகற்றுவதும் ஒன்றே. அறம் வளர்ந்து அரசியல் நன்கு நடைபெற வேண்டுமெனில் மறம் புரிவோரை ஒறுத்தாகவேண்டும். உவமையினால், ஆட்சி புரிவோருக்கும் அழகான சிறந்த அரசியற் கருத்தை அளிக்கின்றார் வள்ளுவர்.

> கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
> களைகட் டதனொடு நேர்.[13]

13. குறள், 551.

இக்குறட்பாவில் 'நேர' என்னும் உவம உருபின் வேற்று வடிவமாகிய 'நேர்' என்பதை வினையுவமத்தில் எடுத்தாள்கின்றார் ஆசிரியர். 'நேர' என்னும் உவம உருபு, 'பிறவும்' என்ற வகையான் பேராசிரியரால் கொள்ளப் பெறுகிறது.

## 'தகைய' உருபு அமைந்த உவமை

### போருக்குப் பின்வாங்கும் மன்னனும் போர்க்கடாவும்

ஊக்கமிகுந்த ஒருவன் தனக்கு ஏற்ற காலத்தை எதிர் நோக்கிக் காத்திருக்கின்றான்; காலமறிந்தே எச்செயலை யும் செய்தல் வேண்டும். இதனை விளக்க வள்ளுவர் எளிய உவமை ஒன்றினை எடுத்துக்காட்டுகின்றார். பாமர மக்களும் புரிந்து கொள்ளும் வண்ணம் அவர் காட்டும் உவமைகள் எளியனவாய் உள்ளன. தகர்ப்போர், கோழிப் போர் முதலியன கிராமங்களிலும் அன்றாடம் காணுகின்ற காட்சிகள்; நிகழ்கின்ற செயல்கள்: இவற்றுள் ஆட்டுக் கடாக்கள் மோதும் தகர்ப்போரே இங்கு அவர் காட்டும் உவமை.

ஆட்டுக்கடா தன் பகையைத் தாக்குவதற்காகப் பின்னேக்கிச் செல்லுதலைப் போல அரசனும் காலமறிந்து போர்ச் செயல்களில் ஈடுபடல் வேண்டும். தக்க காலத்தை நோக்கி ஒடுங்கியிருத்தல் அவனுக்கு இழுக்காகாது. வெற்றி வாய்ப்பிற்கு ஏற்ற காலம் வரும் போதுதான் அவனுக்கு வெற்றிகிட்டும். எனவே, ஓரரசன் போர்வினை தவிர்ந்திருத்தல் என்பது பின் நிகழும் போருக்கு ஆயத்தம் செய்வதற்காகத்தான் இருக்கும் என்பது கருத்து.

> ஊக்க முடையான் ஒடுக்கம் பொருதகர்
> தாக்கற்குப் பேரும் தகைத்து[14]

என்னும் குறட்பாவின்மூலம் அரசனுக்கும் மக்களுக்கும் அறிவுரை கூறுகிறார். இங்கே அரசனுடைய ஒடுக்கமும் போர்க்கடா பின்வாங்கிச் செல்லுதலும் ஒப்புக் கூறப் பெற்றுள்ளன. எனவேதான் இதனை 'வினையுவமம்' என்று போற்றுகிறோம்.

14. குறள், 486.

## 'போல' உருபு பெற்ற உவமை

### அன்பும் அழிவும்

அன்புதான் இம் மன்பதையை இயக்குகின்றது. அன்பில்லையேல் ஆக்கம் உண்டோ? அன்புணர்வே உலகனைத்தையும் இணைக்கும் பாலம். அன்பு இல்லாதார் இவ்வுலகத்தில் எத்துணைத் துன்பம் அடைவர்? அந்தத் துன்பத்தினை எவ்வாறு விளக்குவது? அன்பில்லார் அடையும் அழிவை வள்ளுவர் தமக்கே கைவரப்பெற்ற அழகிய உவமையின் வாயிலாக விளக்குகின்றார். உவமையால் விளக்கப்படும் பொருள் நம் உள்ளத்தைத் தொடுகிறது. துன்பம் எப்படி இருக்கும் என்பதைக் கேட்டறிவதைவிட அவ்வுவமை நம்மைத் துன்ப உணர்ச்சியில் மூழ்கித் துடிதுடிக்கச் செய்கிறது. இப்பாடலில் உள்ள சொற்கள் அறிஞர் ஆபர்கிராம்பி சொல்வதுபோல், "பொருளை மட்டும் விளக்கவில்லை; அந்தப் பொருளை அப்படியே நம்முடைய மனத்தில் படைத்து விடுகின்றன."[15] பாடலில் அமைகின்ற சொற்களும் அவ்வாறே இருத்தல் காணலாம்.

> என்பி லதனை வெயில்**போலக்** காயுமே
> அன்பி லதனை யறம்[16]

என்பது வள்ளுவர் வாக்கு.

எலும்பில்லாத உயிர்கள் வெயிலின்கண் படும் துன்பத்தினை நாம் கண்டுள்ளோம். அவை சாகவும் முடியாமல், வாழவும் முடியாமல் பெருந்துன்பம் அடையும். அவை அடைகின்ற பெருந்துன்ப உணர்ச்சியினைப் பாடலிலுள்ள சொற்கள் நமக்குத் தெளிவாகக் காட்டுகின்றன. அன்பில்லாதவனும் அத்தகைய துன்பத்தினை அடைவான் என்பதனையே எலும்பில்லாத உயிர்கள் வேனிற் கொடுமையில் படும் துன்பத்தின் வாயிலாகக் காட்டுகின்றார்.

15. Abercrombie, L.: The Idea of Great Poetry, p. 20. London, 1926.

16. குறள், 77.

அதோடு அறநெறியையும் அவர் அழகாகப் புகுத்தியுள்ள திறம் போற்றுதற்குரியது.

**அரசனும் அழலும்**

குளிர்மிகுந்தகாலத்தில் குளிரைப் போக்கிக் கொள்ளத் தீமூட்டி ஆங்காங்கே சிறுவர்களும் பெரியவர்களும் அதனைச் சுற்றி அமர்ந்திருப்பதைப் பார்க்கலாம். நெருப்புக்கு அருகில் இருந்தால் சுட்டுவிடுமே என்று வெகுதூரம் விலகிச் சென்றாலும் குளிர் காய்வார்க்கு அந்நெருப்பினால் பயன் கிடைக்காது. நெருப்புக்கு மிக அண்மையில் சென்றாலோ நெருங்கியவர்களைச் சுட்டுவிடும். ஆகவே அளவோடு இருந்து குளிர்காய்தல் வேண்டும். அவ்வாறு அரசனிடத்தும் நெருங்காது நீங்காது இருக்கப் பழகுதல் வேண்டும். மிக அண்மையில் நெருங்கிப் பழகினாலும் அன்றிப் பழகாது விலகிச் சென்றாலும் கருதிய பயன் கிட்டாது. தீக்காய்வார் போலப் பழகுதல் வேண்டும் என்ற சிறந்த அறிவுரையை வள்ளுவர் உவமையின் வாயிலாக உணர்த்துகின்றார்.

> அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
> இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்.[17]

இங்கே வள்ளுவர் சொன்ன பழகும் முறை அரசரை ஒழிந்த மற்றைய தலைவர்களிடத்தும், அதிகாரிகளிடத்தும் ஆசிரியர் முதலியோர் பக்கலிலும் பழகவேண்டும் நிலைக்கும் பொருந்தும். பவணந்தி முனிவர் மாணவன் ஆசிரியரை யடுத்து வழிபட்டுக் கற்கும் நிலைக்கு, 'அழலின் நீங்கான் அணுகான் அஞ்சி'[18] என இவ்வுவமையையே எடுத்துரைக்கின்றார்.

தன்னுடைய தலைவரிடம் எங்ஙனம் நன்முறையில் ஒழுகிச் செயலாற்ற வேண்டும் என்றும் கூறுகிறது. அவர்தம் மனமறிந்து பணியினைச் செய்யும் அளவிற்குப் பழகுக; அவ்வுரிமையினால் மிக அண்மையிற் சென்று

17. குறள், 691.
18. நன்னூல், 46

அல்லற்பட வேண்டா. அவ்வாறே விலகிச் சென்ருலும் அவர் மனமறிந்து ஒழுக இயலாது; அப்பொழுதும் அல்லல் ஏற்படும். எனவே, தீக்காய்வார் போல அள வோடு நெருங்கியும் நெருங்காமலும் இருந்து பழகுதல் வேண்டும். சமுதாயத்தில் காணப்படுகின்ற குறைகளையும் நிறைகளையும் கண்டுணர்ந்து, அவ்வழியே ஒழுகுதற்காக அவர் அத்தகைய சூழல்களையும் உவமையின் வாயிலாகப் புகுத்தியமைக்கு இக்குறளே தக்க சான்ருகும். பரி மேலழகர்,

> "மிக அகலின் பயன் கொடாது மிக அணுகின் அவமதிபற்றித் தெறும் வேந்தர்க்கு, மிக அகலின் குளிர் நீக்காது மிக அணுகின் சுடுவதாய தீயோடு உளதாய தொழிலுவமம் பெறப் பட்டது"

என்று தம் உரையில் கூறுவர்.

**மனமும் மகிழ்ச்சியும்**

தானும் தலைவியும் ஒன்றிய உளத்தொடு அன்பு பூண்ட நெஞ்சமொடு இன்பங்கண்டு மகிழ்ந்த நிலையினை எண்ணியெண்ணி மகிழ்கின்ருன் தலைவன். தலைவியின் அழகுத்தோள்கள் அவன் கண் முன்னர் வடிவம் பெறு கின்றன. தோளின்கண் தாழ்ந்த கூந்தலையுடையவளான தன் தலைவியை நினைந்து அன்பு பாராட்ட முயல்கின்ருன். பாராட்டுச்சொற்கள் வாராது வியக்கின்ருன். அவளுடைய தோளுக்கு எதை உவமை கூறுவது எனத் தயங்குகின்ருன்.

"இவ்வுலகில் எல்லாப் பொருள்களாலும் கிடைக்கும் எல்லா இன்பமும் இவளுடைய தோள் ஒன்றே எனக்குத் தந்து விடுகிறதே! தலைவியைத் தவிர வேறு எந்த விருப்பப் பொருளும் எனக்கு இவ்வுலகில் இல்லை. உலகம் ஐந்து பூதங்களால் ஆகியது. இவ்வைந்து பூதங்களும் ஐந்து புலனின்பங்களுக்கு உரியன. இவ்வைம்புல இன்பத்தையும் தருகின்ற இவள் உலகப்பொருள்கள் தரும் அனைத்து இன்பத்தையும் தருகின்றவள். எந்த எந்தப் பொருளை விரும்புகின்றேனே அந்த அந்தப் பொருளாக இருந்து இன்பந் தருகின்றவள் என் அன்புத் தலைவி" என்று மகிழ்கின்ருன் தலைவன்.

தலைவனுடைய அளவிறந்த மகிழ்ச்சியினைக் குறட்பாவில் உவமையுடன் செறித்துத் தருகின்றார் வள்ளுவர் :

வேட்ட பொழுதின் அவையவை போலுமே
தோட்டார் கதுப்பினாள் தோள்[19]

என்பதே அவர் தரும் அழகிய குறட்பா. தலைவனின் மகிழ்ச்சியினையும் அவனது அன்பு கனிந்த உள்ளத்தினையும் காட்டுவது இப்பாடலில் உள்ள உவமையே. கண்ணுக்குக் காட்சி தருகின்ற அத்துணைவடிவங்களின் அன்புருவே தலைவி என்பதை 'அவையவைபோலுமே' என்ற உவமைத் தொடர் நமக்கு நன்கு காட்டும்.

விரும்பிய பொழுதில் விரும்புகின்றவை வந்து இன்பஞ் செய்தல் போலப் பூவினை அணிந்த தழைந்த கூந்தலினையுடையாளுடைய தோள்களும் இன்பஞ் செய்தலால் இது தொழிலுவமமாயிற்று. பரிமேலழகரும் இக் குறட்பாவினைத் தொழிலுவமத்திற்குச் சான்றாகக் காட்டியுள்ளார்.

வேட்டார்க்கு வேட்டனவே போன்றினிய
வேய்மென் தோள்[20]

என்று சீவக சிந்தாமணியிலும் இவ்வுவமை வருதல் கண்டு இன்புறுதற்குரியதாம்.

இவ்வாறே வள்ளுவர் 'போலும்', 'போல' என்னும் உவம உருபுகள் அமைந்த வினையுவமத்தைப் பல்வேறு குறட்பாக்களில் எடுத்தாண்டுள்ளமையைக் காணலாம்.[21]

## 'ஒப்ப' உருபு வந்த உவமை

'ஒப்ப' உருபின் பொருளில் வரும் 'ஒக்க' என்னும் சொல்லும் வினையுவமமாய் வந்துள்ளது. போலும் என்னும் பொருளில் இச்சொல் வந்துள்ளமை காணலாம்.

19. குறள், 1105.
20. சீவக. 1042.
21. குறள், 59, 118, 126, 151, 253, 288, 334, 339, 552, 674, 706, 788, 822, 887, 888, 940, 957, 974, 997, 1027, 1048, 1071, 1099, 1161, 1180, 1186, 1224, 1228, 1253, 1287.

**கொக்கும் குத்தும்**

காலமும் இடமும் அறிந்து, செய்வன திருந்தச் செய்தல் வேண்டும். எண்ணிய செயல் முடிதற்குப் பொறுமையும், வெற்றிபெறுதற்குக் காலம் வாய்த்தவழி உடன் முடிக்கும் ஆற்றலும் அமைந்திருந்தாலன்றி ஒருவன் எளிதாகச் செயலாற்ற முடியாது. வள்ளுவர் இதனை விளக்க ஒரு பறவையினுடைய இயல்பினை உவமையாகக் காட்டி விளக்குகிறார்.

'ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருக்கும் கொக்கு' இரையினைக் கண்டதும், தப்பாது வினையினை முடிக்கும் ஆற்றலைப் பெற்று விளங்குகிறது. அரசனும் இவ்வாறே வினைசெய்யும் காலம் அறிந்து வினையினைச் செய்தல் வேண்டும்.

> கொக்**கொக்க** கூம்பும் பருவத்து மற்றதன்
> குத்**தொக்க** சீர்த்த இடத்து[22]

என்னும் குறளின் வழியே இதனை வள்ளுவர் உணர்த்து கிறார்.

> "மீன் கோடற்கு இருக்கும்வழி அது வந்து எய்தும் துணையும் முன் அறிந்து தப்பாமற் பொருட்டு உயிர் இல்லது போன்று இருக்கும் ஆகலானும், எய்தியவழிப் பின் தப்புவதற்கு முன்பே விரைந்து குத்தும் ஆகலானும் இருப்பிற்கும் செயலுக்கும் கொக்கு உவமையாயிற்று. 'கொக்கொக்க' என்றாராயினும், அது கூம்புமாறு போலக் கூம்புக என்றும், 'குத்தொக்க' என்றாராயினும் அது குத்துமாறு போலக் குத்துக என்றும் உரைக்கப் படும், இது தொழிலுவமமாகலின்"

என்று பரிமேலழகரும் இதனைத் தம் உரையில் வினை யுவமத்திற்குச் சான்றாகக் கொள்வர்.

## பயன் உவமம்

பயன் உவமத்திற்கு உரிய உருபுகளையும் அதன் அமைப்பு முறையையும் சென்ற அத்தியாயத்தில்

22. குறள், 490.

கண்டோம். அவற்றுள் திருக்குறளில் அற்று, அன்ன (அதன் பிற வடிவங்கள்), ஆங்கு, இன், நேர் முதலான உவம உருபுகள் இவ்வுவமத்தில் எடுத்தாளப்படுவதையும் அவ்வுவமைகள் விளக்குஞ் செய்திகளேயும் இங்கே காண்போம் :

## 'அற்று' உருபு அமைந்த உவமை

### சேற்றுநிலமும் ஊன்றுகோலும்

சேறு நிறைந்த நிலம்; மிகுந்த வலிமை உடையோருங் கூட இயல்பாகவும் எளிதாகவும் நடக்கமுடியாத இடம்; நடந்து செல்லுகின்றபொழுதும் அடிக்கடி வழுக்கிக் கீழே விழ நேரும். அவ்வாறு கீழே விழாது நிலேத்து நிற்க ஊன்றுகோல் ஒன்று தேவை. ஊன்று கோலின் உதவியால் சேறு நிறைந்த நிலத்தை எளிதே கடந்துவிட இயலும். சேற்று நிலத்தைக் கடக்க உறுதுணேயாய் இருப்பது ஊன்று கோலே.

வாழ்க்கைப் பாதையிலும் இதுபோன்ற எத்தனேயோ சேற்று நிலங்கள்; வஞ்சனே, வறுமை, அழுக்காறு, அறியாமை என்பன போன்ற சகதி நிறைந்த பாதைகள். இவ் வாழ்வுப் பாதையினேக் கடப்பதற்குள் நம்மனோர்க்கு எத்தனே தடுமாற்றங்கள், இடர்ப்பாடுகள்! விழுந்து எழுவோர் சிலர்; எழுந்து தடுமாறுவோர் பலர்; இச் சகதியினின்றும் மீள்வோர் ஒரு சிலரே. அறிவுடையோருடைய—ஆன்றவிந்த சான்ருேருடைய அறிவுரைகளே ஊன்று கோலாகக் கொண்டவர்களே மீட்சிப் பயனேப் பெறுகின்றனர்.

சேற்று நிலத்தை எளிதே கடப்பதற்கு ஊன்றுகோல் தேவைப்படுவதைப் போலத் துன்பக் காலங்களில் கைகொடுத்து உதவுவது ஒழுக்கமுடையவருடைய வாய்ச் சொல். வள்ளுவர் கேள்விச் செல்வத்தைக் கூறும்போது மேற்கண்ட கருத்தை அழகிய உவமையின் மூலம் விளக்கிச் சான்ருேருடைய அறிவுரைகளே மக்கள் போற்றியொழுகி வாழ்தல் வேண்டும் என அறிவுறுத்துகிருர் :

இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல்.[23]

இக்குறளில் எடுத்தாளப்படுகின்ற உவமையிலிருந்து ஆசிரியருடைய பரந்த உலக அனுபவத்தைக் காணுகின்றோம். சான்றோருடைய அறவுரைகளை ஒதுக்கி வாழ்ந்தமையால் நாம் உற்ற கேடுகளையும் துன்பங்களையும் இக்குறள் நமக்கு நினைவூட்டும் என்பதில் ஐயமும் உண்டோ? வையத்துள் வாழ்வாங்கு வாழ வள்ளுவர் இலக்கிய நயத்தோடு அறிவுரை கூறிச் செல்வதை எண்ணிப் பார்த்தல் வேண்டும். "சான்றோர்களுடைய அறிவுரைகளைக் கேள். அதன்படி நட" என்று சுவையற்ற வகையில் கூறாமல், இயல்பான தம் கவித் திறத்தால், அதனோடு இயைபான பொருளைக் கொண்டு அவர் தம் கவிதையை இயற்றியுள்ளமை நவில்தொறும் நயம் பயப்பதாகும். கண்ணால் காணுகின்ற காட்சி ஒன்றனையே, அவர் நம் உள்ளத்தில் உவமையின் வாயிலாக எழுப்புகின்றார். சேறு படிந்த நிலம், கடக்க இயலாது வருந்துகின்ற துன்பம், தடுமாற்றம், விழுதல், எழுந்து நிற்றல், ஊன்றுவதற்கு உதவும் ஊன்றுகோல் இவையனைத்தையும் நம் மனத்திரையிலே எழுப்பி, நம்மைச் சிந்திக்க வைத்து, பின்னர் அறிவுரையினைக் கூறும் பாங்கு போற்றுதற்குரியது. 'அற்று' என்னும் உருபு இக்குறட்பாவில் உவம உருபாக வந்துள்ளது. ஒழுக்கமுடையாரின் வாய்ச் சொற்களால் வாய்க்கும் பயனைப் போற்றி உரைப்பதனால் இது பயன் உவமமாகிறது.

**பாழ்ங் குளமும் மனம் கலவா வாழ்க்கையும்**

வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையையும் கூர்ந்து கவனித்தவர் வள்ளுவர். செல்வர்கள் வறியவர்களாவதும், வறியவர்கள் செல்வர்களாவதும் உலக இயற்கை. செல்வம் பெற்ற பொழுது அச்செல்வம் பிறருக்குப் பயன்படுமாறு வாழ்தலே நல்ல வாழ்வு. சுற்றம் தழுவி அவர் தம்மைச் சூழ வாழ்தலே சீரிய வாழ்வு. சுற்றத்தோடு மனமொத்து வாழ்கின்ற வாழ்வே உயரிய வாழ்வு.

23. குறள், 415.

சுற்றமே செல்வத்திற்குச் சிறந்த காப்பு. சுற்றத்தினரோடு மனங்கலந்து, உளமொன்றி வாழாதார் வாழ்க்கை கரையில்லாக் குளத்தில் நீர் நிறைந்ததைப் போன்றதாம்.

கரையில்லாக் குளத்தில் நீர் நிறையுமா? நீர் தேங்கி நிற்குமா? அதில் உள்ள நீரினுல் பயன் ஏற்படுமா? கரையில்லாக் குளத்தில் நீரும் நிறையாது; பயனும் கிடையாது. நாளடைவில் தூர்ந்து மாய்ந்துவிடும். சுற்றம் சூழாது வாழ்கின்ருரின் வாழ்வும் இங்ஙனமே முடியும்; இவர்கள் பெற்ற செல்வமும் பாதுகாவலின்றி அழிந்துவிடும்; கரையில்லாத குளத்தில் நிறைந்த நீர், தடையில்லாது வெளிச் சென்றுவிடும். அது போலச் சுற்றமொடு மனங்கலந்து பழகாதவனிடம் அமைந்த செல்வமும் பாதுகாப்பாரின்றி விரைவில் அழிந்துவிடும்.

அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று[24]

என்னும் குறட்பாவின் மூலம் இவ்வழகிய உவமையினைச் சான்ருகக் காட்டிச் 'சுற்றந் தழுவி வாழுங்கள்' என்று கூருமல் கூறிச் செல்லும் வள்ளுவர்தம் தனித்தன்மை என்றும் போற்றுதற்குரியது.

கரையில்லாத குளத்தில் நிறைந்த நீர் தடையில்லாது வெளிச் சென்று விடுதல் போலச் சுற்றத்தோடு நெஞ்சு கலத்தலில்லாதவனிடத்தில் வாய்த்த செல்வம் பாதுகாப்பவரில்லாமையால் வெளியேறிவிடுமாதலால், இது பயன் பற்றி வந்த உவமை அணி என்பது நன்கு விளங்கும்.

## நங்கையும் செல்வமும்

இளமை நலம் பொருந்திய அழகு மங்கை ஒருத்தி! அழகெல்லாம் ஒருங்கே திரண்ட மகளிர் குலச் செல்வி; வையத்து வாழ்ந்து, அழகும் அறிவும் நிரம்பப் பெற்ற குலக் கொழுந்துகளை நாட்டுக்குத் தந்து பயன் பெறச் செய்யவேண்டிய தாய்க் குலதெய்வம். நாட்டினுடைய

24. குறள், 523.

எதிர்காலவளர்ச்சிக்குப் பெரும் பொறுப்பு வகிக்கும் தலையாய கடமைகளில் தாய்க்குலத்தின் பொறுப்பு சாலச் சிறந்த ஒன்று. அத்தகைய தாய்க் குலத்தில் தோன்றிய நங்கை ஒருத்தியின் அழகு நலம் வீணே கழிதல் கூடாது. வள்ளுவர் உயர்ந்த செல்வத்திற்கு இணையாக வைத்து மகளிரின் மிகுநலத்தைப் போற்றுகின்றார். பண்பும் அழகும் அறிவும் திறனும் மிக்க அத்திருமகள் இல்லற வாழ்க்கையில் ஈடுபடாது தனியளானாள்; முதுமையும் வந்துற்றது; மனைவிளக்காய், மங்கலச் செல்வியாய்த் திகழும் மாண்பினை இழந்தாள்; மன்பதையும் இவளுடைய பயனை இழந்தது; பெண்மக்களுடைய அழகு நலம் வீணே கழிந்தது; பயனின்றி வாழ்ந்தமையால் பழி வந்துற்றது.

எளியவர்க்கும், பொருள் இல்லாத வறியவர்க்கும் வழங்காதவனுடைய செல்வமும் இத்தகையதே. மிக்க அழகு பெற்றவள் தனியளாக வாழ்ந்து முதுமையுற்றாற் போன்றது அச்செல்வம். செல்வத்தால் ஊரும் உலகமும் பயனடைதல் வேண்டும்.

அற்றார்க்கொன் றாற்றாதான் செல்வம் மிகநலம்
பெற்றாள் தமியள்மூத் தற்று[25]

என்னும் இக்குறளின் மூலம் இவ்வரிய உண்மையினை உணர்த்துகின்றார் வள்ளுவர். தாம் எடுத்தாளுகின்ற உவமையினால் உலகம் பயன்படுமாறு வாழ்தலே சிறந்த வாழ்க்கை என்று கூறுகின்றார். சமுதாயத்திற்கு நாம் எல்லா வகையானும் பயன்பட வாழ்தல் வேண்டும் என்பதே இவர்தம் உள்ளக் கிடக்கை என்பதனை இக் குறளும் இதில் வரும் உவமையும் நமக்கு உணர்த்தி நிற்கின்றன. இங்ஙனமே திருக்குறளில் பல்வேறு பாக்களில் ‘அற்று’ உருபு பயன் உவமமாகப் பயின்று வருகிறது.[26]

25. குறள், 1007.

26. குறள், 22, 208, 215, 216, 217, 307, 407, 527, 931, 1008, 1110, 1121, 1145, 1192, 1306.

## 'அன்ன' உருபில் வரும் உவமை

### ஆக்கமும் காக்கையும்

பகுத்தறிவு படைத்த மனிதனுக்குப் பகுத்து உண்ணத் தெரிய வேண்டாமா? ஆறறிவு படைத்த மனிதனுக்கு ஆக்கமும் உயர்வும் வேண்டாமா? ஆறறிவுக்கும் குறைந்த அறிவு பெற்ற உயிர்கள் புரியும் அறத்தையும் உற்று நோக்குகிறார் வள்ளுவர். இவ்வுலகில் வாழும் மாந்தரின் இயல்புகளையே அன்றிப் பிற உயிர்களின் இயல்புகளையும் நுட்பமாக அவர் அறிந்தவர். நாட்டில் வாழும் மக்களுடைய இயல்புகளேயன்றிக் காட்டில் வாழும் சிங்கம் புலி முதலியவற்றின் இயல்புகளும் அவர்க்கு நன்கு விளங்கும் என்பது அவர் காட்டுகின்ற உவமைகளின் வாயிலாகத் தெரிய வரும்.[27]

தாம் பெற்ற செல்வத்தைச் சுற்றத்தாருக்கு அளித்து மகிழ்வதோடமையாது அனைவருக்கும் அளித்து வாழ்தல் வேண்டும். கிடைத்ததைப் பிறருடன் பகுத்து உண்ணுகின்ற வாழ்க்கையே உயர்ந்த வாழ்க்கை. எல்லா நாட்டுச் சான்றோரும், அரசும், மக்களும் செய்ய முற்படுவது இதனையே. "யாம் பெற்ற இன்பம் இவ்வையகமும் பெறுதல் வேண்டும்" என்னும் விழுமிய நோக்கு அனைவரிடத்தும் இருத்தல் வேண்டும். இத்தகையோரிடத்தேதான் செல்வமும் உயர்வும் வந்து சேரும். வெற்றித் திருமகளும் புகழ்க் கன்னியும் வந்தடைவர்.

நாம் நாள்தோறும் காணுகின்ற பறவை காகம்; நமக்கு அது ஒரு சாதாரணப் பறவையாகவே தோற்றம் அளிக்கிறது. ஆனால் வள்ளுவருக்கோ அது உலகத்திற்கு அறம்

27. புகழ்புரிந்த இல்லிலோர்க்கு இல்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை. (குறள். 59)

பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின். (குறள். 599)

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின். (குறள். 969)

இவை போல்வன.

போதிக்கும் ஆசான். அதனை அழகாக மக்களுக்கு எடுத்துக் கூறுகிறார். 'ஆக்கம் வேண்டுமா? காக்கை போல வாழப் பழகுங்கள்' என்கிறார். காகம் தனக்கு எது கிடைத்தாலும் தன்னந் தனியே உண்ணாது; கரையும்; கரைந்து தன் இனத்தாரையெல்லாம் கூவி அழைத்து அவற்றோடு ஒன்றுசேர்ந்து உண்ணும். இப்படிப்பட்ட உயர்ந்த எண்ணம், சிறந்த அறிவு படைத்த மக்களுக்கு வேண்டாமா? வள்ளுவர் கூறுகிறார்:

காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்ன நீரார்க்கே உள.[28]

காக்கையைப் போல் தாம் பெற்ற பொருளை மறையாது பிறர்க்குப் பகுத்தளித்து வாழ்வோருக்கே ஆக்கம் சேரும். "தாம் நுகர்வன எல்லாம் அவரும் நுகருமாறு வைத்தல்" என்கிறார் பரிமேலழகர். அறமும் இன்பமுமே யன்றிப் பொருளும் கிட்டும் என்கிறார். இங்கும் பயன் பற்றிய ஒப்புமை கூறப்பட்டது.

## ஊடலின்பமும் தேவருலகமும்

தலைவனிடத்துத் தலைவி ஊடிநிற்கின்றாள். நெடுநேரம் தன் ஊடலால் துன்புறுத்திய தலைவியைத் தலைவன் அன்பு மொழிகள் கூறி மகிழ்விக்கின்றான். ஊடலும் தணிகின்றது; தான் கொண்ட ஊடலினால் பெற்ற இன்பத்தை எண்ணி எண்ணி மகிழ்கிறாள் தலைவி.

"காதலரோ என்னிடத்து மிக்க அன்பு கொண்டவர்; ஆண்மை மிக்கவர்; அழகு நிரம்பியவர். ஆயினும் என்னோடு இருந்து மகிழ்ந்தபொழுது அவரும் என்னியல்பு பெற்று விடுகின்றனரே! நீர் நிலத்தில் விழுந்தவுடன் இரண்டும் ஒரே தன்மையாகி விடுவதுபோல, தலைவனும் என்னோடு மகிழுங்காலை என் இயல்பு பெற்று விடுகின்றார். எனவே, ஊடுதலைவிட நமக்கு இன்பந்தருகின்ற தேவருலகமும் உண்டோ?" என்று மகிழ்கின்றாள். செம்புலப் பெயல் நீர்போல அன்புடை நெஞ்சங்கலந்து தன்னியல்பாக மாறி

28. குறள், 527.

விட்ட தலைவனின் அன்புள்ளம் கண்டு மகிழ்ந்த தலைவியின் உள்ளம் குறித்து வள்ளுவர் பின்வருமாறு கூறுகிறார் :

புலத்தலின் புத்தேள்நா டுண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்னா ரகத்து.[29]

நீரும் நிலமும் ஒன்றாயபோது இரண்டும் வேறுபடாது இருக்கின்ற நிலையினை வள்ளுவர் இவ்வுவமையால் விளக்குகின்றார். இயற்கையறிவும் நிரம்பப் பெற்றவர் என்பதற்கு இவ்வுவமையே சான்றாம். நிலத்தொடு சேர்ந்த நீரும் நிலத்தின் தன்மை பெற்று விளங்கும் ; அதுபோல மகளிரொடு கூடிய தலைவரும் அம்மகளிரின் இயல்பு பெற்று விளங்குவர். இவ்வுவமை பயன் பற்றி எழுந்ததாதலால் இது பயன் உவமம். உளவியலை ஆசிரியர் நுணுகி அறிந்த தன்மையும் இவ்வுவமையால் எளிதே புலனாகும். இக்குறளில் 'அன்ன' என்பதன் அடியாகப் பிறந்த 'அன்னார்' என்னும் பலர்பாற் சொல் உவமப் பொருளைத் தருகின்றது.

**களர் நிலமும் கல்லாதவரும்**

நல்ல விளைநிலமே எல்லோராலும் போற்றப்படுவது ; உழவராலும் பிறராலும் மதித்துப் பேணப்படுவதும் அதுவே ; உலகத்தைப் புரப்பதுவும் அதுவே ; உற்றோர்க்கும் மற்றோர்க்கும் உதவுவதும் அதுவே. அத்தகைய நிலமே 'நிலம்' என்று கூறப்படும். உலகத்தாரை உழுவோரின் பின்னே நிற்கவைக்க வல்லதும் இந்நிலமே.

அவ்வாறன்றிப் பிறர்க்கும் பயன் படாது தனக்கும் பெருமையின்றி விளங்கும் நிலங்களும் உண்டு. அவையே களர் நிலம் எனப்படுவது ; எத்தகைய பயனையும் எவர்க்கும் அளிக்காது இருந்தும் இல்லாத நிலையில் விளங்குவது ; இத்தகைய நிலங்களினால் உலகத்தார்க்கு யாது பயன் ?

29. குறள், 1323.

விளை நிலத்தைப் போன்றவர் கற்றவர்; களர் நிலத்தைப் போன்றவர் கல்லாதவர். கற்றோர் தாம் பெற்ற கல்வியறிவால், தாம் பயன் பெறுவது மட்டுமேயன்றி மற்றையோருக்கும் பயன்படுவர். அனைத்துலக மக்களாலும் போற்றப்படுவர். கல்லாத மக்கள் உருவத்தில் மக்கள் வடிவத்தோர், களர் நிலம் தோற்றத்தில் நிலமாகத் தோன்றுவதைப்போல! அவர்களால் ஒருவருக்கும் பயனில்லை. உயிரோடு இருக்கின்றவர்கள் என்றே சொல்லப்படும் அளவினர். எனவே, கல்லார் களர் நிலத்திற்கு ஒப்பாவார்.

> உளரென்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்
> களரனையர் கல்லா தவர்.[30]

வள்ளுவர் இயற்கை நலம் பொருந்திய ஊர்ப்புறத்தில் வாழ்ந்தவர் என்று கருதுவதற்கு இவ்வுவமை இடந் தருகின்றதன்றோ? களர் நிலத்தை ஒருவன் கண்டால் அவனுக்கு எவ்வித உணர்ச்சியும் தோன்றுவதில்லை. விளையாத நிலம் எனப் பொதுவாகக் கருதிச் சென்று விடுகின்றான். கற்ற புலவர்கள் அதனைக் காணும்போது அதன் மூலம் உயரிய கருத்தினைக் காணுகின்றார்கள். இதுவே கற்றோரும், மற்றோரும் ஒரு பொருளைக் காண்பதற்குள்ள வேறுபாடாகும்.

இக்குறளின் உவமையால் கல்வியின் சிறப்பினையும் வள்ளுவர் மக்களுக்கு உணர்த்துகின்றார். கல்லாதவர்களையும் நாகரிகமாகக் கடிந்து உரைக்குந்திறனையும் இவ்வுவமை நமக்குக் காட்டுகின்றது. வள்ளுவர் கூறும் கருத்திற்கு உவமைகள் இவ்வாறு பெரிதும் துணை நிற்கின்றன.

> தலையி னிழிந்த மயிரனையர் மாந்தர்
> நிலையி னிழிந்தக் கடை[31]

30. குறள், 406.

31. குறள், 964.

என்னும் குறட்பாவிலும் 'அனைய' உருபு பயன் உவமாக வருவதைக் காணலாம். இவ்வுருபு இன்னும் பல குறட்பாக்களில் பயனுவமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.[32]

## 'ஆங்க' உருபு பயின்ற உவமை

### ஆக்கமும் மறதியும்

எண்ணி எண்ணித் துணியும் வாழ்வும், துணிந்தபின் எண்ணி அஞ்சுவதும் வீரர்களுக்கு அழகல்ல; அச்சமின்மையே அனைவரும் வேண்டுவது; விரும்புவதும் அதுவே. கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர் நோக்குகின்ற அச்சமின்மை வேண்டும். அரசனுக்கு மட்டுமன்றி அனைவர்க்கும் இப்பண்பு இருத்தல் நலம். உள்ளத்திலோ துணிவின்மை; புறத்திலோ அவர்களுக்குச் சிறந்த பாதுகாப்பு. எல்லா வகையான அரண்களும் இவர்களுக்கு உண்டு. இருந்தும் என்ன பயன்? உள்ளத்திண்மை இல்லாத ஒருவனைப் பகைவரும் பிறரும் எளிதில் வெற்றி கொள்வர். இவ்வரண்களால் யாதொரு பயனும் இல்லை.

அதுபோலவே மறதி உடையவர்களுக்கும் வாழ்வில் ஒருபயனும் இல்லை. மிக உயர்ந்தநிலை; எல்லாவகைச் செல்வங்களும் அவர்களுக்கு உண்டு. கூடவே மறதியும் உண்டு. உள்ளத்தில் அச்சமுடைய ஒருவனுக்குக் காப்பாக அமைந்த அரண்கள் எவ்வாறு பயன்படுவதில்லையோ அவ்வாறே மறதியும் சோர்வும் உடைய இவர்களுக்குப் பெற்ற செல்வங்களாலும் பயன் கிடைப்பதில்லை.

> அச்சம் உடையார்க்கு அரணில்லை ஆங்கில்லை
> பொச்சாப் புடையார்க்கு நன்கு.[33]

வாழ்வில் ஏற்படுகின்ற மறதி, சோர்வு முதலானவற்றைக் களைதல்வேண்டும் என்பதை இக்குறட்பாவிலுள்ள உவமம் நமக்கு நன்கு விளக்குகிறது.

32. 410, 565, 667, 814, 889.
33. குறள், 534.

பொருளாட்சி போற்றாதார்க் கில்லை யருளாட்சி
ஆங்கில்லை ஊன்தின் பவர்க்கு.[34]

அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு.[35]

இவ்விரண்டு குறட்பாக்களிலும் இவ்வுருபு பயனுவமத்தில் வரப்பெறுவதைக் காணலாம்.

## 'இன்' உருபு அமைந்த உவமை

### நிலமும் மனைவியும்

உழுவார் உலகத்தார்க்கு உயிர் போன்றவர்; உழுகின்ற நிலம் உழவர்களுக்கு மனைவியைப் போன்றதாம். நாட்டினுடைய வளமும் வாழ்வும் நிலத்திலேதான் இருக்கின்றன. வீட்டினுடைய அமைதியும் இன்பமும் இல்லத்துத் தலைவியிடம்தான் உள்ளன. உழவன் தான்பெற்ற நிலத்தைக் கண்ணை இமை பாதுகாப்பதுபோல் பாதுகாத்து, விளைபொருளை விளையச்செய்து நற்பயன் பெறுதல் வேண்டும்.

இல்லத்து ஒளியாகத் திகழும் மங்கை நல்லாளைப் பெற்ற கணவன் அறநெறி தவறாது அன்பு வாழ்க்கை வாழ்தல் வேண்டும்; கடமையினை ஒழுங்காகச் செய்வானால் அறமும் பொருளும் இன்பமும் பெற்று வீடுபேறு அடைவான். மனைவியை நன்கு பேணாது இருப்பானேயானால் அன்பு மனைவியும் அவனை வெறுத்து அவனோடு ஊடிவிடுவாள். அதன் காரணமாக அன்பு வாழ்க்கை அகலும்; துன்பமும் வெறுப்பும் துணையாகும்; அமைதியற்ற சூழல் அவனைப் பெரிதும் வருத்தும்; துன்பத்தாலும் துயரத்தாலும் பெரிதும் வருந்தி உழல்வான்.

அவ்வாறே நாள்தோறும் முறையாகச் சென்று நிலத்திற்கு ஆவன செய்யாதவன் அந்நிலத்தினால் யாதொரு பயனும் பெறான். விளைபொருள் குன்றும்; விளைவும்

34. குறள், 252.

35. குறள், 247.

சிதைந்து அழிந்துவிடும்; இறுதியில் மனைவியைப் போலவே அவனையும் அந்நிலமென்னும் நல்லாள் மிக வெறுத் தொதுக்குவள்.

நிலத்திற்கு உரியவன் நிலத்தைச் சென்று பார்க்காமல் வாளா இருந்தால் அந்நிலம் அவனுடைய மனைவியைப் போல் வெறுத்து அவனோடு பிணங்கிவிடும் என்பதை வள்ளுவர் உவமை வாயிலாக விளக்குகின்றார்.

> செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
> இல்லாளின் ஊடி விடும்.[36]

இங்கு ஆசிரியர் தரும் உவமையால், தலைவன் நிலத்தின் பயனையும் இல்லக்கிழத்தியின் பயனையும் இழப்பான் என்பது பெறப்பட்டது. எனவே, இது பயனுவமம் ஆயிற்று. பரிமேலழகர் தம் உரையில், "தன்கண் சென்று வேண்டுவன செய்யாது வேறிடத்து இருந்தவழி மனையாள் ஊடுமாறு போல என்றது அவன் போகமிழத்தல் நோக்கி" என்று கூறுவதும் இங்கு எண்ணுதற்குரியதாம்.

## 'போல' உருபில் வரும் உவமை

### இன்பமும் நோயும்

வள்ளுவருடைய உவமைகள் மக்கள் நோயின்றி வாழ்வதற்குரிய கருத்துகளையும் தன்னுள் கொண்டு விளங்குகின்றன. உடல்நலம் நன்கு அமைந்தால்தான் மனநலமும் நன்கு அமையும். நன்கு அமைந்த மனநலத்தால்தான் நாட்டுநலனும் வளரும். வள்ளுவருடைய குறட்பாக்கள் தரும் உவமைக் கருத்துகள் நுனித்துக் காணும் அவருடைய அறிவுத் திறனையும் நமக்குத் தெளிவாக விளக்கும்.

இன்பம் ஒருவனுக்கு எப்பொழுது நிலைத்து நிற்கும்? பெறுகின்ற இன்பம் உண்ணுகின்ற உணவினைப் பொறுத்ததாம். குறைந்த அளவு அறிந்து உண்பவனிடம் இன்பம் நிலைத்து நிற்கும். அதுபோலவே மிகுதியாக உண்பவனிடம் நோய் நிலைத்து நிற்கும் என்கிறார். மனித உடலின் இயல்பை நன்கு அறிந்திருந்த அவர் மக்கள் வாழ்வதற்கு

36. குறள், 1039.

வேண்டிய உளநலமும் உடல்நலமும் பெறுவதற்கு இத்தகைய கருத்துகளை ஒப்பிட்டுக் கூறி அரிய கருத்துகளை உணர்த்துகிறார்.

இழிவறிந் துண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபே ரிரையான்கண் நோய்.[37]

இவர்தம் உடலியல் அறிவிற்குத் தக்கதொரு சான்றாய் உவமையழகு பொருந்தி விளங்குவது இப்பாடலேயாம்.

**நூலும் நட்பும்**

எல்லாவகைச் சிறப்புகளும் அமைந்த நூலைக் கற்கக் கற்க அறிவு வளரும்; பயிலுந்தோறும் பயிலுந்தோறும் இன்பச் சுவையினையே நல்கும். ஒவ்வொரு முறையும் புதிய புதிய இன்சுவைகளைத் தந்துகொண்டேயிருக்கும்; புதிய கோணங்கள், புதிய துறைகள், புதிய இயல்புகள், புத்துணர்ச்சி, புதுமைப் பொலிவு முதலிய அத்துணை வளங்களையும் தன்னுள் அடக்கிக்கொண்டு விளங்கும் சிறந்த இலக்கியங்கள் எப்பொழுதும் நமக்கு இன்பம் தரும் இனிய நூல்கள். இத்தகைய நூல்களின் நற்பொருள்கள் பேரின்பத்தையும் நல்கும் என்று கூறவும் வேண்டுமோ ?

இவ்வகை நூலினைப் போன்றவர்கள் அறிவும் பண்பும் ஒருங்கே பெற்ற அறிஞர் பெருமக்கள்; இவர்களுடைய நட்பு நல்ல நூலினைப் போலப் பழகப்பழக இன்பம் பயக்கும்; பயன் விளைக்கும்; இவ்வாறே அறிஞர்களுடைய தொடர்பும் இன்பம் ஒன்றினையே விளைக்கும். நல்ல நூல்கள் உயர்ந்த அறிவுரைகளை நல்கும்; சான்றோர்களிடத்துப் பழகுவதால் பெறுகின்ற பயனும் அதுவே. நூலின் நற்பொருள்கள் கற்கக் கற்க மேன்மேலும் இன்பந் தருவதைப்போல நற்பண்பு உடைய சான்றோரின் நட்பும் பழகப்பழக இன்பந்தரும் என்னும் இக்கருத்தினை அடுத்துக்காணும் குறட்பாவில் அணிநலன் விளங்க வள்ளுவர் அளிக்கின்றார்.

37. குறள், 946.

நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு.[38]

இக்குறளில் காணப்படும் உவமைக் கருத்துகள் நட்பின் சிறப்பையும் தகுதியையும் கூறுவதோடு நல்ல அறிவுரையையும் நல்குகின்றன. நவில்தொறும் நூல் நயத்திற்குச் சான்ருகத் திகழ்வதும் இக்குறள் நூலே. பயில்தொறும் இந்நூல் தரும் இன்பத்தைக் கூறி முடியுமோ? குறள் தந்த உவமைக்குக் குறள் நூலே சான்று!

கல்வி கற்கக் கற்க இன்பம் தருவதுபோல் சான்ருேர் தம் நட்பும் பழகப்பழக இன்பந்தரும் என்று பயன் பற்றி வந்தமையால் இதனைப் 'பயனுவமம்' என்பர்.

இங்ஙனமே போலும், போல என்னும் உருபுகள் பல குறட்பாக்களில்[39] பயனுவமமாக வருவதை நோக்கினுல் பயனுவமையின் பண்புகள் செவ்விதின் புலனுகும்.

## 'நேர' உருபு பொருந்திய உவமை

### பயன் நோக்கும் நண்பரும் பண்பில்லாக் கள்வரும்

உள நூல் கருத்துகளையும் வள்ளுவரின் உவமைகள் உணர்த்துகின்றன. அவற்றுள் ஒன்று பயனை அளந்து பார்த்து நட்புச் செய்கின்ருேரின் செயல். அன்பிற்கு எவரேனும் விலை கூறமுடியுமோ? பயனை அளவிட்டு, நண்பர்களாதலும் இயலுமோ? அங்ஙனம் செய்வோரைக் கள்வருக்கும் விலைமகளிர்க்கும் ஒப்பிடுகின்ருர் வள்ளுவர். இத்தகையோர் நீர் நிறைந்த காலத்துக் குளத்திற்கு வந்து பயனடைந்து, பின்னர்க் குளம் வற்றிய காலத்து அதனை விட்டுச் செல்லும் பறவைகளைப் போன்றவர்களே யாவர். சமுதாயத்தில் இத்தகையோரிடத்து மக்கள் விழிப்புடன்

38. குறள், 783.

39. குறள், 135, 267, 435, 614, 882, 1078, 1196, 1273, 1274, 1285.

இருத்தல் வேண்டும் என்பதுபற்றியே இக்குறட்பாவில் வள்ளுவர் உணர்வைத் தூண்டும் உவமையினைக் கூறி யுள்ளார் போலும் !

ஒத்த உள்ளத்தோடும் அன்போடும் உறவாடுகின்ற இயல்பு விலைமகளிருக்கு இல்லை. தம்மை அடைய வருபவர்களிடம் அன்பு கொள்ளாது தாம் பெறுகின்ற பொருளையே குறிக்கோளாகக் கொண்டவர்கள் விலை மகளிர்; பெறுகின்ற பொருளினைப் பொறுத்தே அவர் களுடைய போலி அன்பும் அமையும். கள்வரும் இத்தகையோரே; இவர்களுக்கு வேண்டியதும் பொருளே. அன்புபற்றி எள்ளளவேனும் கவலைப்படார். இத்தகைய கள்வரும் விலைமகளிரும் போன்றவர்கள் பயனை அளந்து நட்புக்கொள்ளும் நண்பர்கள். இவர்களிடத்து நட்புக் கொள்ளாதீர் என உவமை முகத்தால் அறிவுரை கூறும் வள்ளுவர் பான்மை சிந்தித்தற்குரியதாம்.

> உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது
> கொள்வாரும் கள்வரும் நேர்[40]

என்னும் இக்குறட்பா, நல்ல அறிவுரையினை நல்குவதாம். வாழ்வு செம்மையாக அமையவேண்டுமானல், நமது நட்பும் செம்மையாக அமைதல்வேண்டும். செம்மையான நட்பு, சிறந்த சான்றோர்களைப் பின்பற்றுவதாலேயே ஏற்படும். இடுக்கண் வந்த காலத்தும் இன்முகத்தோடு பழகும் பண்பு உள்ளோரையே நண்பராகக் கொள்ளுதல் தகும்.

நட்பாராய்ந்து, அவர் தம் உளநிலை அறிந்து பின்னரே நட்புக்கொள்ளுதல் முறையாம். அவர்களின் நல்லியல் பினைக் காண்பது எப்படி? மிக எளிமையான உவமை யின் வாயிலாகச் சமுதாயத்தில் அவர்கள் யாருக்குச் சமமானவர்கள் என்பதையும் வள்ளுவர் கூறுகின்றார். விலைமகளிரையும் கள்வரையும் போன்ற அத்தகைய

40. குறள், 813.

நண்பர்கள் நமக்குத் தேவையா? இது சிந்திக்கவைத்து நற்பயனை அளிக்கும் சிறந்த குறள் அன்றோ?

## 'ஒப்ப' உருபில் வரும் உவமை

### செவியுணவும் அவியுணவும்

நல்லறிவு பெற்ற மக்களாகத் திகழக் கேள்விச் செல்வம் நிறையப் பெறுதல்வேண்டும். செல்வங்களுள் தலையாய செல்வம் செவிச் செல்வமே; சான்றோர் தம் அறிவுரைகள் எக்காலத்தும் எங்கும் உதவும். செவியினால் பெறுகின்ற கேள்வியறிவைச் 'செவியுணவு' என்கிறார் வள்ளுவர். செவியுணவு உண்ணுகின்றோர்க்கு எளிதில் துன்பம் வாரா; கேள்வியறிவினால், வருகின்ற துன்பங்களை முன்னரே அறிந்து அதனை எளிதாக நீக்கிவிடுவர். அவியுணவு உண்ணுகின்ற தேவர்கள் எவ்வாறு துன்பப் படுவதில்லையோ அவ்வாறே செவியுணவு கொண்டவர்களும் துன்பப்படுவதில்லை. கேள்வியறிவின் பயனை வள்ளுவர் அழகிய உவமை வாயிலாக அறிவுறுத்துகின்றார்.

> செவியுணவிற் கேள்வி யுடையார் அவியுணவின்
> ஆன்றாரோ டொப்பர் நிலத்து.[41]

செவியினால் பெறுகின்ற பயனை இக்குறளில் காட்டப்படும் உவமை உணர்த்துவதால் இது பயனுவமம் ஆயிற்று.

## மெய்யுவமம்

திருக்குறளின் அணிநலன்களை ஆய்ந்து வினை, பயன் என்பன பற்றிய குறிப்புகளைப் பல்வேறு குறட்பாக்களின் விளக்கவுரையில் தந்த பரிமேலழகர் மெய்யுவமம் பற்றி எங்கும் குறித்திலர். ஏனைய வினையுவமமும் பயனுவமமும் போல இவ்வுவமம் திருக்குறட் பாக்களில் மிகுதியாகப் பயின்றுவாராமையும் இதற்குக் காரணமாகலாம். குறளில் 'அன்ன' உருபும் 'ஏர்' உருபும், மெய்யுவமையில் பயின்று வந்துள்ளன. இன்பத்துப்பாலில் காதலன் தன் தலைவியின்

41. குறள், 413.

எழில் நலன்களை இன்புற்று உரைத்த இனிய சில பாடல்களிலேயே இம்மெய்யுவமை வரப் பெறுகிறது.

### 'அன்ன' உருபில் அமைந்த உவமை

*மலரன்ன கண்ணாள்*

அன்புடை நெஞ்சங்களால் பிணிக்கப்பட்ட தலைவனும் தலைவியும் காதல் வயப்பட்டுக் களி கூர்ந்தனர். இவர்களுடைய காதல் மலர் அரும்பி, மணம்வீசி, அலராகி உற்றார்க்கும் மற்றையார்க்கும் ஊரார்க்கும் தெரிந்தது. எனவே, ஊரார் இவர்தம் காதலை அலர் தூற்றினர். இதனை அறிந்த தலைவன் வருந்தினான். அவனுடைய உயிரினும் இனியள் அவன் அன்பினைப் பெற்ற தலைவி. அன்பெனும் பண்பு கொண்ட தன் ஆருயிர்த் தலைவியின் அருமையினை அறிந்தவனும் அவன் அன்றோ? பழி தூற்றிய மக்களை நோக்கி அவன் வருந்திப் புலம்பி உரைக்கின்றான்:

"என்னே இம்மக்களுடைய அறியாமை! பொருளினுடைய இயல்பான தன்மையினை அறியாதவர்கள் போலும் இவர்கள்! என் தலைவியினுடைய அருமை இவர்களுக்குத் தெரியுமா? இவளுடைய அன்பு கிடைத்தற்கு எளியதா? பெறுதற்கு அத்துணை அரிதானவள் என் தலைவி! அதனை உணராது—அவளுடைய அருமையையும், அன்பையும், அழகையும், பெருமையையும் உணராது—எம் காதல் பற்றி அலர் தூற்றுகின்றனரே! கிடைத்தற்கரிய பொருளின் உண்மைத் தன்மையை—அதன் விலை மதிப்பிட முடியாத உயர்வை—அதன் பெருமதிப்பை உணராத இவர்கள் வேறு என்னதான் செய்யமுடியும்? மலரன்ன கண்ணாளின் பெருமையினை அறியாதவர்கள் இவர்கள்" என்று மனம் நொந்தான் தலைவன். ஆயினும், அலர் அக்காதலர்களுக்கு நன்மையையே விளைவித்து இருவரையும் ஒன்றுபடச் செய்தது.

> மலரன்ன கண்ணாள் அருமை அறியாது
> அலரெமக்கு ஈந்ததிவ் வூர்[42]

42. குறள், 1142.

என்னும் இக்குறட்பாவில் தலைவன் தலைவியின் கண்ணிணை மலருக்கு ஒப்புக் கூறுகின்றான். வடிவம்பற்றிப் பூவை ஒப்புக்கூறியமையால் இது மெய்யுவமம் ஆயிற்று. வடிவமே அன்றித் தலைவியினுடைய மென்மைத் தன்மையும் இதன் வழிப் புலனாகும். "அலர்தூற்றி என் அன்பு மலரை—என் இனிய தலைவியை—வாடுமாறு செய்து விடாதீர்கள். அவளின் அருமை உங்களுக்குத் தெரியாது" என்ற தலைவனின் உள்ள உணர்ச்சியையும் இவ்வுவமை உணர்த்தும்.

இவ்வரிய குறட்பாவினை வீரசோழியத்தில் வடிவுவமைக்குச் சான்றாக உரையாசிரியர் கொண்டுள்ளமையும் ஈண்டுக் குறிப்பிடத் தக்கதாகும்.[43]

தன்னுடைய அருமையான தலைமகளின் தனிப் பெருமையைக் காணக் காணத் தலைவனுக்குக் கழிபேருவகை பிறக்கிறது. அப்பேருவகையினால் வானத்தில் உலா வரும் திங்களைப் பார்த்துத் தன் தலைவியின் அழகு நலங்களைக் கூறுகின்றான். தலைவியின் எழில் நலத்தோடு திங்களின் பொலிவையும் ஒப்பிட்டுப்பார்த்தான். தண்ணமுத மதியின் குளிர்ந்த அத்தண்ணிலவு அவனுடைய அன்புடைத் தலைவியின் அழகுக்கு முன் குறைந்தே காணப் படுகிறது. மலரன்ன கண்ணாளின் மனங்கவரும் முகத்திற்கு முன்னர் அத்திங்களின் தோற்றம் எழிலும் ஏற்றமும் இழந்து காணப்படுகிறது. "இம்மங்கையின் முகத்திலுள்ள பல உறுப்புகள் பல உவமானப் பொருள்களுக்கு உவமேயப் பொருளாக இருக்கின்றன. சந்திரனோ ஒரு உவமானப் பொருள்தான். அதுவும் குறையும் குற்றமும் நிறைந்த களங்க முடையவன். எனவே, என்னுடைய அன்புத்தலைவி—அழகுத்தலைவியின் முகத்திற்கு நீயும் ஒப்பாவாயாயின் பலர் காணும் படியாகத் தோன்றாதொழிக" என்று பேசினான் தலைவன்.

43. வீரசோழியம், 156; பவானந்தர் கழகப்பதிப்பு, சென்னை, 1942.

வள்ளுவர் இதனை,

மலரன்ன கண்ணாள் முகம்ஒத்தி யாயின்
பலர்காணத் தோன்றல் மதி[44]

என்னும் பாடலால் அறிவிக்கிறார். ஈண்டுத் தலைவன் தலைவியினுடைய கண்ணை மலரின் வடிவத்திற்கு ஒப்புமை கூறியதால் இதுவும் மெய்யுவமம் என்பது தெரியவரும்.

நலத்தகை நல்லவர்க்கு ஏஎர் புலத்தகை
பூவன்ன கண்ணார் அகத்து[45]

என்னும் இக்குறட்பாவும் மெய்யுவமத்திற்குச் சான்றாகும்.

## 'ஏர்' உருபு வரப் பெறும் உவமை

### காம்பு ஏர் தோட்பேதை

பிறர் மனத்தில் உண்டாகும் எண்ணத்தை அவர்தம் சொல்லால் அறியாது குறிப்பினால் அறியும் இயல்பு படைத்தோர் தலைவனும் தலைவியுமாவர். பிரிந்து சென்ற தலைமகன் மீண்டும் திரும்பிவந்து தன் அன்பினிய தலைவியைக் காணுகின்றான். தலைவியின் எண்ணத்தை அவளுடைய வாய்மொழி வாயிலாக அறிய விரும்பிய அவனுக்கு ஏமாற்றமே ஏற்படுகிறது. ஆயினும், கண்ணுக்கு இன்பந் தரும் அழகுடைய அக்காரிகையின் குறிப்பால் அவளுடைய எண்ணத்தை அறிந்துகொண்டான் தலைவன்.

"இயற்கையாகவே நாணமும், அடக்கமும் நிரம்பிய இயல்பினர் மெல்லியலார். தம் எண்ணத்தை வெளியே கூறவும் தயங்குவர். என் தலைவியோ இக்குணங்களை மேன்மேலும் பெற்றுத் திகழ்பவள். இந்நிலையில் இவளிடம் பெண்மைத் தன்மை நிறைந்து காணப் படுகிறதே" என்னும் கருத்துப்பட,

கண்நிறைந்த காரிகைக் காம்பேர்தோள் பேதைக்குப்
பெண்நிறைந்த நீர்மை பெரிது[46]

என்னும் குறட்பாவினைக் கூறுகிறார் வள்ளுவர்.

44. குறள், 1119.
45. குறள், 1305.
46. குறள், 1272.

இக்குறட்பாவிலே தலைவன் தன் தலைவியின் தோளினை "வேயை ஒத்த தோள்" என்று வருணிக்கின்றான். தோளினை மூங்கிலுக்கு உவமித்தமையால் இது வடிவுவமை யாயிற்று. காம்பு ஏர் தோள்-'ஏர்' என்னும் உவம உருபு இத்தொடரில் மெய்யுவமமாகப் பயின்று வருதலைக் காண லாம். 'ஏர்' உருபு பேராசிரியரால் 'சிறுவரவின' என்ற வகையால் உருவுவமத்திற்குக் கொள்ளப்படுகின்ற ஓர் உருபு ஆகும். இங்கு இவ்வுருபு மெய்யுவமத்தில் வந் துள்ளது.

முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு[47]

என்னும் இப்பாடலிலும் தலைவியின் உறுப்புகளைப் புகழ்ந்து தலைவன் தோளிற்கு மூங்கிலையே உவமையாகக் கூறுகின்றான். "வேய்போலும் தோளினை உடையவட்கு" என்று பரிமேலழகர் உரை கூறுவர். இப்பாடலில் உவம உருபு தொக்குவந்து அப் பொருளைத் தந்தது எனலாம்.

தலைவியின் உறுப்புகளை உவமித்தலால் இது மெய்யுவமம் ஆயிற்று.

"உறுப்பென்றது, மெய்யினை; உடம்பினை உறுப்பென்ப வாக லானும் மெய்யுவமம் எல்லாம் உறுப்பினையே பற்றி வருதல் பெரும்பான்மைய என்றற்கும் அவ்வாறு கூறினான்"[48]

என்று பேராசிரியர் கூறுவர்.

## உருவுவமம்

இவ்வுவமமும் மெய்யுவமத்தைப் போலவே திருக் குறளில் அருகி வந்துள்ளது. பரிமேலழகருடைய உரை யிலும் இவ்வுவமைபற்றி யாதும் சுட்டப்படவில்லை. நிறத் தின் ஒப்புமைபற்றிவரும் இவ்வுவமத்திற்குரிய உருபுகளை

47. குறள், 1113.

48. தொல். உவம. 25. பேரா. உரை.

முன்னர்ப் பார்த்தோம். திருக்குறளில் இவ்வுவமம் 'அனைய', 'போல' என்னும் உருபுகளில் வரப்பெறுகிறது. இனி இவ்வுவமை அமைந்த பாக்களையும் அவை உணர்த்தும் செய்திகளையும் காண்போம்.

## 'அனைய' உருபு அமைந்த உவமை

### புறத்தோற்றமும் அகத்தோற்றமும்

புறத்தோற்றத்தில் சிலர் உயர்ந்த நிலையில் காணப்படுவர்; செம்மையானவராய்க் காட்சியளிப்பர்; எல்லாக் குணநலன்களும் உடையவராய், உயர்ந்த பண்பாடுகள் பொருந்தியவராய் இவ்வுலகிற்குத் தோற்றமளிப்பர். ஆனால், அகத் தோற்றத்தே வஞ்சிக்கும் வாழ்வினராய், பிறர் வாழ்வைக் கெடுக்கும் வேடதாரிகளாய்த் திகழ்வர். மனத்தது மாசாக மாட்சிமைப்பட்ட வேடத்தைப்பூண்டு முறையற்ற வகைகளில் ஒழுகுகின்ற மாந்தர்கள் இவர்கள் தாம்! இவர்கள் அகத்தில் களவொழுக்கம் உடையவர்கள்; புறத்தில் துறவொழுக்கம் பூண்டவர்கள்; நெஞ்சில் துறவாராய்த் துறந்தாரைப்போல் வஞ்சித்து வாழும் கொடியவர்கள். நெல்லினின்றும் பதரை வேருகப் பிரிப்பதுபோல், இத்தகைய போலியரை நாம் நம் அறிவுத்திறத்தால், நுணுகி ஆராய்ந்து பகுத்துணர்ந்து அறிதல் வேண்டும் என்கிறார் வள்ளுவப் பெருமகனார். இவர்கள் புறத்தில் குன்றிமணிபோல் செம்மையானவராய்க் காணப்படுவர் என்றும் அகத்தில் குன்றி மணியின் மூக்குப் போல் கறுத்திருப்பர் என்றும் உவமையின் வாயிலாக அவர் குறிப்பிடுகின்றார்.

> புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி
> மூக்கிற் கரியார் உடைத்து[49]

என்னும் குறட்பா இக்கருத்தினைக் கூறும்.

குன்றிமணியின் மூக்குக் கறுத்திருப்பதையும் வஞ்சமனத்தாருடைய அகம் கறுத்திருப்பதையும் ஒப்பிட்டுக்

49. குறள், 277.

காட்டுகின்ருர். இது நிறம் பற்றிய ஒப்புமையாதலால் உருவுவமை ஆயிற்று எனலாம். போலிவாழ்க்கை நடாத்துவோர் அக்காலத்தும் வாழ்ந்த நிலையினை இவ்வுவமை சுட்டும்.

இக்குறட்பாவினைப் பரிமேலழகர் பண்புவமைக்குச் சான்ருகக் காட்டுவர். குன்றிமணியிலுள்ள செம்மை நிறமும் கருமைநிறமும் வேடப்பொலிவினுடைய செப்பத்தையும் அறியாமையையும் குறிப்பதென்பர். செப்பம், அறியாமை என்பன குன்றிமணியின் சிவப்பு கறுப்பு என்னும் குணத்திஞல் ஒத்திருத்தலால் இதனைப் பண்புவமையாகக் கொள்வர். இங்குக் குன்றிமணியின் செம்மை கருமை நிறங்கள் உவமானம்; கூடா ஒழுக்கத்தாருடைய வேடப்பொலிவும் மனக்களங்கமும் உவமேயம் எனலாம். பொருள்பெறும் முறையினைப் பொறுத்து இதனை உருவுவமமாகவும், பண்புவமையாகவும் கொள்வர்.

பாடலில் வரும் 'கரியார்' என்னும் சொல் கருநிறம் படைத்தவர் என்னும் பொருளையும், அறியாமையுடையவர் என்னும் பொருளையும் தருகின்றது. உவமானத்திற்குக் கருநிறம் படைத்தவர் என்னும் பொருளையும், உவமேயத்திற்கு அறியாமை கொண்டவர் என்னும் பொருளையும் தருவதால் இதனைச் 'சிலேடைபற்றி வந்த உவமையணி' என்றும் கூறலாம்.

### முறிமேனி

தலைமகன் தலைமகளின் நலத்தைப்புனைந்து உரைக்கும்பொழுது நங்கையினுடைய அழகமைந்த உறுப்புகள் ஒவ்வொன்றினையும் ஒப்புமை கூறி உவமித்தான். உறுப்புகளின் அழகு அவனை ஒவ்வொரு பொருளாகத் தேடித்தேடி உவமிக்குமாறு செய்தது. முதற்கண் தலைவியின் மேனி அவனை ஈர்த்தது. தலைவியின் மேனிக்குத் தளிரின் நிறத்தைக் கூறினுன். "வேய் போலும் தோளினை உடையவளுக்கு நிறம் தளிர் நிறமாய் இருக்கும்; பல்லு முத்தமாயிருக்கும்; இயல்பாய நாற்றம் நறுநாற்றமாய் இருக்கும்;

உண்கண் வேலாய் இருக்கும்'' என்று உருவக வகையால் புனைந்துரை கூறினும் தொல்காப்பியர்க்கு உருவகமும் உவமை அன்றோ?[50]

> முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
> வேல்உண்கண் வேய்த்தோ ளவட்கு[51]

என்னும் குறட்பாவில் தலைவியின் மேனியினுடைய நிறத்திற்கும் தளிரினுடைய நிறத்திற்கும் ஒப்புமை கூறப்பட்டிருக்கிறது. நிறம் பற்றிய ஒப்புமையாதலால் இது உருவுவமை எனப்பட்டது.

> துளிதலைத் தலைஇய தளிரன் னோளே[52]

என முடியும் குறுந்தொகைப் பாட்டிலும் மகளிருடைய மேனிக்குத் தளிரின் நிறத்தை ஒப்புமை காட்டிக் கூறப்பட்டிருத்தல் இங்கு ஒப்புநோக்குதற்குரியதாம்.

## 'போல' உருபு பெற்ற உவமை

### பசலையும் இருளும்

இணைபிரியாது வாழவே இல்லறத்துத் தலைமகனும் தலைவியும் விரும்புவர். ஏதோ ஒரு காரணம் பற்றி இருவரும் பிரிகிறார்கள். தனிமை இருவருக்கும் இன்பம்

50. "வேய்த்தோளாட்கு முறிபோலும் மேனி; முத்தம் போலும் முறுவல்; தெய்வ மணம்போலும் இயற்கை நாற்றம்; வேல் போலும் கண்" என விரித்தால் உணராதானை, "இதன் பொருள் வேய்த்தோளாட்குத் தளிரினது நிறத்தை ஒக்கும் நிறம்; முத்தினது நிறத்தை ஒக்கும் பல்லு; தெய்வ மணத்தை ஒக்கும் இயல்பான நாற்றம்; வேலினது கொலைத் தொழிலை ஒக்கும் கண் என்றவாறு காண்" என ஒப்பு என்னும் வழக்கு வாசகத்தால், செய்யும் என்னும் குறிப்பு முற்று வாசகம் தோன்ற உணர்த்துக. இனி முறிமேனி முதலியன உருவகமாம் எனின், ஆசிரியர்க்கு உருவகமும் உவமையாமாறு ஆண்டு உணர்க.
—தொல். எச்ச. 18. நச்சி. உரை.

51. குறள், 1113.

52. குறுந். 222.

பயப்பதில்லை ; தலைவனைப் பிரிந்த தலைவி வருந்துகிறாள் ; வாடுகிறாள் ; பிரிவினால் மேனி நிறம் மாறுகிறது. சுணங்கு பூத்த அணங்காகிறாள் அவள். தலைமகள் அவனைப் புல்லிக்கிடந்து புடைபெயர்ந்த அளவில் மேனி பசலை நிறம் பெறுகிறதாம். தலைவியின் ஆற்றாமையினைத்தான் வள்ளுவர் எத்துணைச்சுவைபட மொழிகிறார்.

விளக்கினது மெலிவை எதிர்நோக்கிக் காத்திருக்கிறது இருள். காற்றாலோ அல்லது வேறு பிறகாரணத்தாலோ விளக்கு அணையுமானால், இருள் உடன்தானே அதனைச் சூழ்ந்துகொள்ளப் பெரிதும் முன் நிற்குமாம். குல விளக்காகிய தலைவியினுடைய மேனியில் படரப் பசலையாகிய நிறமும் அவ்வாறே காத்துக்கிடக்கிறதாம், தலைவனுடைய பிரிவுக்காலத்தை எதிர் நோக்கி! தலைவன் பிரிந்ததும் இருளாகிய நிறம் அணைந்த விளக்கினைத் தழுவிக் கொள்வது போல தலைவியின் மேனியினைப் பசலை நிறமும் பற்றிக் கொள்ளுமாம்.

> விளக்கற்றம் பார்க்கும் இருளேபோல் கொண்கன்
> முயக்கற்றம் பார்க்கும் பசப்பு[53]

என்னும் குறட்பா இக்கருத்து அமைந்ததாகும். இருளாகிய நிறம் பற்றியும் பசலையினுடைய நிறம் பற்றியும் ஒப்புமை கூறப்படுவதால் இதனை உருவுவமை என்கிறோம். அன்றியும், இதனை வினையுவமமெனக் கொள்ளவும் இடமுண்டு. 'போல' என்னும் உவம உருபு இக்குறட்பாவில் அமைந்து உருவுவமமாயிற்று.

### மதிஒளியும் முகஒளியும்

விண்ணகத்தில் ஒளிவீசித் திகழ்வது தண்மதி. இம் மண்ணகத்தில் ஒளிவீசித் திகழ்வது பெண்மதி. மதியினுடைய ஒளியும் மடந்தையினுடைய முகஒளியும் ஒத்திருத்தலால் விண்மீன்கள் தம் நிலையினின்றும் கலங்கித் திரிகின்றனவாம்.

53. குறள், 1186.

மதியும் மடந்தை முகனும் அறியா
பதியிற் கலங்கிய மீன்[54]

என்னும் குறட்பாவில் ஒளிபற்றிய ஒப்புமை கூறப் படுவதால் இதனையும் உருவுவமையாகவே கொள்ளலாம். உவம உருபு தொக்கிவந்து பொருளைத் தருகின்றது.

மாதர்முகம் போல் ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி.[55]

அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல
மறுவுண்டோ மாதர் முகத்து.[56]

இப்பாடல்களிலும் மதியினுடைய-மடந்தையினுடைய ஒளியின் ஒப்புமை பற்றிப் பேசப்படுதலால், இவற்றையும் உருவுவமமாகக் கொள்ளுதல் பொருத்தமாம். இவ்விரு பாடல்களிலும் 'போல' உருபு வந்துள்ளது.

## எடுத்துக்காட்டுவமை

ஒருபொருள் அல்லது கருத்தை முன்னர்க்கூறி, அதன் சிறப்பு நன்கு விளங்குதற்பொருட்டு, அதனையொப்ப தொரு பொருளையோ, கருத்தையோ காட்டி விளக்குதல் எடுத்துக்காட்டுவமையாகும். தொல்காப்பியர் கூறும் 'வேறுபட வந்த உவமத் தோற்றத்துள்' இதனை அடக்க லாம். இதனைத் தண்டியாசிரியர் 'மறுபொருள் உவமை' என்பர். "மறுபொருள் உவமை யெனினும் எடுத்துக்காட் டுவமை யெனினும் ஒக்கும்" என்பர் இலக்கண விளக்க நூலாசிரியர்.[57]

உவமானத்தையும் உவமேயத்தையும் தனித்தனி வாக்கியங்களாகக் கூறி, இன்னது உவமானம் இன்னது உவமேயம் என்பதுதோன்ற, இடையில் உவமஉருபு கொடாமற் கூறுவது இவ்வணியாகும்.

54. குறள், 1116.
55. குறள், 1118.
56. குறள், 1117.
57. வைத்தியநாத தேசிகர்: இலக்கண விளக்கம், நூற்பா, 640, உரை.

இவ்வணி திருக்குறளில் பல்வேறிடங்களில் பயின்று வருகின்றது. பரிமேலழகரால் உரையில் எடுத்துக் காட்டப்படும் அணிகளுள்ளும் இது ஒன்றும். வள்ளுவர் அருளிய முதற்குறளிலேயே இவ்வணி அமையப் பெற்றுச் சிறந்து விளங்குவதையும் காணலாம்.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

என்று தொடங்கும் முதற்செய்யுளைப் பரிமேலழகர் 'தலைமை பற்றி வந்த எடுத்துக் காட்டுவமை'க்குச் சான்றாகக் கொள்கின்றார். இவ்வாறு உவமையோடு தொடங்குவது நூலுக்கு ஒரு தனிச் சிறப்பாக அமைகிறது அன்றோ?

## இறைவனும் எழுத்தும்

எழுத்துகள் அகரத்தை முதலாக உடையன. அது போல் உலகம் இறைவனை முதலாக உடையது என்ற உயரிய கருத்தை இக்குறளில் உவமை வாயிலாகச் சுட்டுகிறார் வள்ளுவர். இறைவனுடைய முதன்மைத் தன்மையினையும், எழுத்துகளுடைய தலைமைத் தன்மையினையும் உவமம் வாயிலாக வள்ளுவர் கூறும் திறன் வியத்தற்கு உரியதாம்.

அகரமாகிய முதலெழுத்திலிருந்தே உயிர் எழுத்துகள், மெய் எழுத்துகள் தோன்றின; சொற்கள் தொடர்கள் தோன்றின; இவற்றாலான பற்பல நூல்கள் தோன்றின. எழுத்துகளின் முதலாகிய 'அகரமே' இவையனைத்திற்கும் அடிப்படை என்பதனைக் கூறவும் வேண்டுமோ? "உலகிலுள்ள மொழிகளின் எழுத்துகளெல்லாம் அகர ஒலியையே முதலாகக்கொண்டு இயங்குகின்றன. பல்வேறு நாடு-பல்வேறு வகுப்பு - பல்வேறு நாகரிக முடைய மக்கள் பேசும் பல்வேறு மொழிகள் அகர ஒலியையே முதலாகக்கொண்டிருத்தல் பெரு வியப்பே. இஃது உயிர்கட்கெல்லாம் பிறப்பிடம் ஒன்றே என்னும் உண்மையைக் குறிப்பாக உணர்த்துவதாகும். இதினின்றும் அறியக்கிடப்பது உலக சகோதர நேயம்

(Universal Brotherhood)" என்று திரு. வி. க அவர்கள்[58] குறிப்பிட்டுள்ளார்கள்.

'அகரத்தைப் போலவே இறைவனுகிய முதன்மைப் பொருளிலிருந்தே உலகில் இயங்குவன, இயங்காதன, வான், வளி, தீ, நீர், நிலம் என்பன எழுந்தன என்பர். இவை அனைத்துமே நாம் காணுகின்ற உலகமாம்; இவை அனைத்திற்கும் அடிப்படையானவன் இறைவன் ஒருவனன்றோ? இங்ஙனம் உலக சகோதர நேயத்தையும் இறைத்தன்மையினையும் தம் முதற்குறளிலேயே ஆழ்ந்த புலமைத்திறத்துடனும் உவமை நலத்துடனும் அமைத்தார் வள்ளுவர்.

எழுத்துகள் அகரத்தை முதலாக உடையன என்பது உவமானம். அது போல உலகம் இறைவனை முதலாக உடையது என்பது உவமேயம். 'அது போல' என்ற சொல்லுக்குரிய 'உவம உருபு' இச்செய்யுளில் இல்லை. இவ்வாறு உவம உருபின்றி உவமான உவமேயங்களை அமைத்துப் பாடும் முறையினையே 'எடுத்துக்காட்டு உவமையணி' என்பர்.

பேராசிரியர் இக்குறட்பாவினை வேறுபடவந்த உவமத் தோற்றத்திற்கு[59] எடுத்துக்காட்டாகக்கொண்டு உரையில் பின்வருமாறு விளக்குகின்றார்:

> "அகர முதல வெழுத்தெல்லா மாதி பகவன் முதற்றே யுலகு என்ற வழி, இரண்டு பொருள் வேறு வேறு கூறியதன்றி அகர முதல எழுத்தெல்லாம் அது போல என்றானும், ஆதி பகவன் முதற்று அதுபோல என்றானும் ஒன்றாகத் துணியு மாற்றான் உவமையும் பொருளுங் கூறாமையின் அதுவும் வேறுபட வந்த உவமமாயிற்று."

58. கலியாண சுந்தரனார், திரு. வி.: திருக்குறள் விரிவுரை, பக். 27, சாது அச்சுக்கூடம், சென்னை, 1956.

59. தொல். உவம. 32, பேரா. உரை.

பல்வேறு உவமைக் கருத்துகளையும் ஆழ்ந்த பொருளினையும் உள்ளடக்கிய இக்குறளைப் 'பண்புவமை' யாகவும், 'பயனுவமை'யாகவும், 'மெய்யுவமை' யாகவும் 'உருவுவமை' யாகவும், 'வினையுவமை'யாகவும் 'அருவத்தில் ஒப்புமை' யாகவும், 'காலத்தில் ஒப்புமை'யாகவும் கண்டு மகிழ்கிறார் இக்கால அறிஞர் ஒருவர்.[60] இப்பாடலின் உவமை நலங் கருதி அவரால் 'முதற்குறள் உவமை' என ஓர் ஆராய்ச்சி நூலே வெளியிடப் பெற்றதெனின், இப்பாடலின்கண் அமைந்துள்ள உவமைப் பொருளின் ஆட்சியினையும் மாட்சியினையும் அளவிட்டுக் கூறவும் முடியுமோ?

"உவமைத் திறனே நுண்ணறிவுக்கோர் சிறந்த சான்று" என்று வழங்கப்படுகின்ற கூற்றும் வள்ளுவருக்கு மிகப் பொருந்தும் அன்றோ?

**காகமும் காவலரும்**

நாடாளும் அரசன் தான் சிறந்த முறையில் ஆட்சி புரியப் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் பல; அவற்றுள் ஒன்று காலமறிதல். அவன் ஆற்றல் மிக்கவனாக மட்டும் இருந்தால் போதாது. அவ்வாற்றலைப் பயன்படுத்துவதற்குரிய காலமும் இடமும் அவன் அறிந்திருத்தல் வேண்டும். "வாழ்வில் முயன்று முயன்று வெற்றி தேட முனைந்தவர்கள், வெற்றியினை இழந்து இழந்து செல்கின்றனரே, ஏன்? அவர்கள் முயற்சி குறைவு பட்டதா? அன்றி அணுகிய முறை குறையுடையதா? அதற்கான தகுதிகள் அவரிடத்து இல்லையா? என்ன காரணம்? தொடர்ந்து அவர்கள் தோல்வியைத் தழுவுகின்றனரே ஏன்?" என்ற முறையில் நம்மைச் சிந்திக்கத் தூண்டுகிறார் வள்ளுவர்.

காலமறிந்து செயல்பட வேண்டியது அரசனுக்குரிய கடமையானாலும், வாழ்க்கையில் வெற்றி பெற விரும்பு

60. கோதண்டபாணிப்பிள்ளை, கு.: 'முதற்குறள் உவமை'— பாரிநிலையம், 1956.

இன்ற மக்கள் அனைவருக்குமே இது பொருந்தும். வலியவர்கள் எளியவர்களிடத்துத் தோற்றுவிடுகின்றனரே ஏன்? இதற்குக் காரணம் காலம் கருதிச் செயல்படுகின்ற தன்மையின்மையன்றோ? எளியவர்களும் வலியவர்களை வெல்லலாம்; எப்பொழுது? எவ்வாறு?

பகைவரை வெல்ல விரும்பும் வேந்தர் தக்க காலத்தை எதிர்பார்த்துக் காத்திருப்பதோடு ஏற்ற இடத்தையும் அறிந்து செயலாற்ற வேண்டும். இடம், பொருள், ஏவல் அறிந்து நடந்து கொள்ள வேண்டும் என்பது உலக வழக்கு. இதனை வள்ளுவர் "வலிய கோட்டானைப் பகற் காலத்தில் சிறிய காக்கை மிக எளிதில் வென்றுவிடும்" என்னும் உவமையின் வாயிலாக விளக்குகிறார். உவமை தரும் பொருள் தெளிவாக நெஞ்சில் பதிகின்றது: நினைவில் நீங்காமல் நிற்கின்றது. "காலம் வாய்த்தபோது கடமையைச் செய்" என்பது இவ்வுவமை கூறும் அழகிய கருத்தாம்.

காக்கையை விட வலிமை வாய்ந்தது கோட்டான்; பல வகையினும் திறன்மிக்கது; ஆயினும் அக்கோட்டானைக் காக்கை வென்று விடுகிறது. வலிமை வாய்ந்த கூகையைப் (கோட்டானை) பகலிலே வெல்லும் திறன் கொண்டது காக்கை; இரவிலே தன் வலிமையால் காக்கையைத் துன்புறுத்தும் கூகை பகலிலே அக்காக்கையிடம் தோற்று விடும். காரணம், அதற்குப் பகல் வேளையில் கண் தெரியாததேயாம். தன்னினும் வலிய கோட்டானை வெல்லக் காக்கைக்குப் பகற்காலமே ஏற்றது. அதுபோலவே பகைவனை வெல்லக் கருதும் வேந்தனும் தக்க காலம் அறிந்து எதிரி வலிமையற்றிருக்கும் காலத்துத் தாக்குதல் வேண்டும். அவ்வாறு செய்தால் வெற்றியும் அவனுக்கு எளிதே கிட்டும்.

> பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
> வேந்தர்க்கு வேண்டும் பொழுது[61]

என்ற குறளால் கருத்துச் செறிந்த உவமையினைத் தருகின்றார் வள்ளுவர்.

61. குறள், 481.

இவ்வுவமைப் பொருள் தரும் கருத்தானது அரசர்க்கு மட்டுமன்றி அனைவர்க்கும் பொருந்துவதாக அமைந்துள்ளது. பறவையினத்தின் இயல்புகளையும் செயல்களையும் வள்ளுவர் கூர்ந்து நோக்கியுள்ளார் என்பதற்கும் இக்குறள் தரும் உவமையே தக்க சான்றாக அமைகிறது. முடியாட்சிக்கு மட்டுமின்றிக் குடியாட்சிக்கும் தகுந்த அறிவுரையினை இவ்வுவமை தருகின்றதன்றோ? கிடைப்பதற்கரிய காலம் வாய்க்குமானால் அப்போதே செயல்களைச் செய்து முடித்துக் கொள்ள வேண்டும் என்னும் இக்கருத்து அனைவருக்கும் பயன் அளிப்பதாகும்.

பகல் வெல்லுங் கூகையைக் காக்கை; இகல் வெல்லும் வேந்தர்க்கு வேண்டும் பொழுது—என்று இரண்டு வாக்கியங்கள் வந்து இடையே 'அதுபோல' என்னும் பொருள் தரும் உவம உருபு மறைந்து நிற்கின்றது. எனவே, இது எடுத்துக்காட்டு உவமை ஆயிற்று.

**நிழலும் நீரும் உறவும் பகையும்**

கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளக் கிடைத்த குளிர்ந்த நிழல்; நெடுவழி நடந்து களைப்புற்றோர்க்குப் புத்துணர்ச்சிதரும் மரநிழல்; அருகே குளிர்ந்த நீரோடை; தெள்ளிய நீர் சலசலக்கும் சிற்றோடை; களைப்பும் நீர் வேட்கையும் நினைத்தாலே அகன்றுவிடும் தென்றல் தவழும் குளிர் நீர். நிழலும் இனியது; நீரும் இனியது; ஆயின், அந்த நீரும் நிழலும் உடல் நலம் காக்கவல்லதாக வன்றோ இருத்தல் வேண்டும்? நிழல் தருகின்ற மரம் நச்சு மரமாகவும், நீர் தருகின்ற ஓடை நச்சுக் கலந்ததாகவும் இருப்பின் உடனே அகன்று விடுதலன்றோ சாலச் சிறந்தது? நிழலும் நீரும் அப்போது தருகின்ற இனிமையையும் பொருட்படுத்தாது, பின்னர் வரும் நோயினைக் கருதி அவ்விடத்தை விட்டு உடன் நீங்கி விடுகின்றோமன்றோ?

தூய்மையல்லாத நீரும் நிழலும் முன்னர் இன்பம் தரினும் பின்னர் பெருந்துன்பத்தையே நல்கும். அதுபோல் சுற்றத்தாராக இருந்தாலும் இனியவர்போல் இருந்து தீமை செய்வார்களானால் அவர்களுடைய தொடர்பு

தீயதே ஆகும். நட்பும் உறவும் முன்னர்க்காட்டி அடுத்துக் கெடுக்கும் இத்தகையாரிடத்து விழிப்புணர்ச்சியோடு இருத்தல் வேண்டும். நிழலும் நீரும் முன்னர் இன்பம் தந்து பின்னர் நோயினைத் தருவது போலவே இவர்களுடைய நட்பும் உறவும் புறத்தே இனியது; அகத்தே கொடியது; தீமையினை விளைவிப்பது.

புறத்தே தோன்றும் வெளிப்பகையினை விட உள்ளத்தே பகைகொண்டு வெளியே உறவுபோல் காட்டிப் பழகும் இத்தகையோர் இயல்பினை, வள்ளுவர் நோய் தரும் நிழலுக்கும் நீருக்கும் உவமை காட்டிக் கூறும் திறன் எண்ணி எண்ணி மகிழ்தற்குரியதாம். உவமையழகு மிளிர உலகிற்கு அறிவுரை தரும் வள்ளுவரின் குறட்பாக்கள் இதனாலன்றோ உலக இலக்கியங்களுள் ஒன்றாக உயர்ந்து திகழ்கிறது!

> நிழல்நீரும் இன்னாத இன்னா தமர்நீரும்
> இன்னாவாம் இன்னா செயின்[62]

எனவரும் இக்குறளும் உவம உருபின்றி இரு கருத்தையும் இனிது ஒப்பிட்டு விளக்குவதைக் காணலாம்.

'இன்னா' என முன்னர் வந்த சொல்லும் பொருளும் மீண்டும் மீண்டும் பலவிடத்து வந்ததனால் இக்குறட்பாவினைச் 'சொற்பொருட் பின்வரு நிலையணி' என்றும் கூறலாம்.

நம் கண் முன்னர்க் காணப்படும் நிழலையும் நீரையும் வைத்துக் கொண்டு, வாழ்வதற்குத் தேவையான உயர்ந்த அறிவுரைகளை உவமை வாயிலாகக் கூறும் திறனையும் ஈண்டு எண்ணிப் பார்த்தல் நலம். அகப்பகையும் புறப்பகையும் பற்றி எளிய முறையில் கூறி, மக்களுக்கு விழிப்புணர்ச்சியினை உண்டாக்குகின்றார். உவமையின் வாயிலாக எவ்விதக் கருத்துகளையும் எளிமையாகப் புகுத்தி விடும் திறனை இங்குக் காணலாம். உவமையினை முயன்று சேர்க்காமல் அது தானாகவே செய்யுளில் அமைகின்ற

62. குறள், 881.

இயல்பினையும் நாம் காணுகின்றோம். "முயன்று தேடாமல் தாமாகவே அமையும் அணிகளே சிறந்தவை" என்று மேனாட்டறிஞர் கூறுவதும் ஈண்டுச் சிந்தித்தற்குரியதாகும். "உவமை தானாகவே வந்து பொருந்தி அமைந்தால்தான் வளமுடையதாகவும் சிறந்ததாகவும் இருக்கும். அழகு படுத்துவதற்கு மட்டும் முயன்று அமைக்கும் அணிகள் பயனற்றவையாய்ப் போய்விடும்"[63] என்று மேலும் அவ்வறிஞர் கூறுகிறார். திருக்குறளில் காணப்படும் அணி களும் வளமான முறையில் இவ்வாறு அமைந்திருப்பதை எங்கும் காணலாம்.

உவமை அணிகளுள் சிறப்பிடம் பெறும் இவ் வெடுத்துக்காட்டுவமையானது குறட்பாக்களில் பல் வேறிடங்களில் அமைந்து ஆழ்ந்த பொருளும் இனிய கருத்தழகும் கொண்டு விளங்குகின்றது.[64]

63. Lyon. P. H. B: The Discovery of Poetry, p. 192-193.

64. பார்க்க: குறள். 20, 153, 298. 396, 449, 452, 542, 573, 595, 597, 726, 798, 926, 959, 960, 1013, 1019, 1309, 1326.

# 4. உவமையும் பொருளும்

## உவமை அகராதி

புலவர்களின் கற்பனைப் படைப்பாம் செய்யுள்களில் அழகுசெய்து மிளிரும் அணிகளுக்குத் தாயாக விளங்கும் உவமையணியின் இயல்புகளையும், திருக்குறளில் பயின்று வரும் உவமை வகைகளையும் முன்னர்ப் பார்த்தோம். சென்ற இரு அத்தியாயங்களில் இவற்றின் தொகை வகை விரிவு எல்லாம் கண்டோம். ஆயினும், சென்ற அத்தியாயத்தில், திருக்குறளில் வரும் உவமைகளில் ஒவ்வொரு வகைக்கும் எடுத்துக்காட்டாகச் சிற்சிலவே விளக்கிக் காட்டப் பெற்றன. வள்ளுவர் பொருள்களுக்கு விளக்கமாக எடுத்துக்காட்டிய உவமைகள் மிகப்பல. எல்லாவற்றை யும் தனித்தனி விவரித்துக் கொண்டு சென்றால் நூலின் அளவு பெருகுவதோடு கற்பார் உணர்வுக்குத் தக்கபடி உவமை நயங்களைச் சுவைக்கும் இன்பமும் தடைபடும். எனவே, வள்ளுவர் எந்தெந்தப் பொருள்களை எந்தெந்த உவமைகளால் விளக்கியுள்ளார் என்பதை ஒரு பட்டியலாக அமைத்து நோக்கினல், அவர் தரும் உவமையும் பொருளும் ஒருசேர உணரமுடியும். நூல் முழுமையிலும் பயின்று வந்துள்ள உவமைகளை அகராதி அடைவில் அமைத்து, அவ்வவற்றிற்குரிய பொருள்களையும் பாடல் எண் குறிப் புடன் காண்பது ஒப்பு நோக்கிக் கற்பார்க்கு எளிதில் பயன்படும்.

இந்நோக்கில் இந்த அத்தியாயத்தில் திருவள்ளுவர் தந்துள்ள உவமைகளின் அகராதியும், அவற்றிற்குரிய பொருளும், அவை பயின்றுவரும் குறட்பா எண்ணும்

தொகைவகை செய்யப்பட்டுள்ளன. இதனைச் சுருக்கமாகத் 'திருக்குறள் உவமை அகராதி' என்றுகூடச் சொல்லலாம்.

### மரபு வழி உவமை

உவமை-பொருள் ஆராய்ச்சியில் கவிஞனின் கற்பனை வளமும் கருத்து வளமும் நமக்கு நன்கு புலனாகும்; அவன் காலத்துப் பயின்ற பொருள்களின் தன்மையும் பயனும் இனிது விளங்கும். அக்கால வாழ்வில் காணப்படும் பழக்க வழக்கங்களும் பண்புகளும் வெளிப்படும்; வழிவழி வந்த மரபுகளும் மரபுத்தொடர்களும் அவர்களுடைய உவமைப் படைப்புகளின் வாயிலாகத் தெரியவரும். எடுத்துக் காட்டாக,

முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு[1]

என்னும் குறளை நோக்குவோம். இங்கே ஓர் இளம் பெண்ணினுடைய உடலின் நிறம், பல், மேனியிலிருந்து எழும் மணம், கண், தோள் என்பவை குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்வகை உவமை கூறும் பண்பை நாம் சங்கத்தொகை நூல்களிலும், பத்துப்பாட்டிலும் காணலாகும்.[2] வள்ளுவர் அருளிய குறட்பாவில் கண்ணிற்கு உவமை கூறும் போதும், 'மலரன்ன கண்ணாள்', 'பூ அன்ன கண்ணார்' என்று பூவினை ஒப்புக்கூறி விளக்குவதும் தொன்று தொட்டு வரும் மரபாய் விளங்குகிறது.[3]

1. குறள், 1113.
2. வேய்புரை மென்றோ ளின்றுயி லென்றும் —குறிஞ்சிப்பாட்டு, 242.

   வேயுறழ் மென்றோட் டுயில் பெறும் —கலித். 104 : 24.
3. கண் போனெய்தல் —நற்றிணை, 8 : 8.

   ,, —ஐங். 151 : 3.

   ,, —அக. 170 : 4.

   கண்போற் பூத்தமைகண்டு நுண்பல
   சிறுபா சடைய நெய்தல் குறுமோ —நற். 27 : 9-12.

   நீடிதழ் தலைஇய கவின்பெறு நீலம்
   கண்ணென மலர்ந்த சுனையும் —அக. 38 : 10-11.

ஆகவே, முதன்முதல் இன்னபொருளுக்கு இன்னின்ன பொருள் ஒப்புக் கூறத்தகும் என்பதைக் கண்டறிந்தவர் யார்தாம் என்று காண்பது இயலாததொன்று. புலவர் வாக்குகளில் பெரும்பாலும் ஒத்துக் காணப்படும் உவமைகள் எல்லாம் மரபுவழிப் பண்பாக முன்னேயோரிடம் நெடுங்கால வழக்கின் அடிப்படையில் வந்த கருத்துகளாகக் கொள்ளலாம். எனவே, வள்ளுவர் பயன்படுத்திய பல்வேறு உவமைகளுள் வரப்பெறும் மரபுத் தொடர்கள் அவர் காலத்துக்கு முந்தியனவாகக் காணப்படும் நூல்களுள் விளங்கி இருக்கலாம். அந்நூல்களின் காலம் பரந்துபட்டனவாக இருத்தல் வேண்டும். இறையனார் களவியலுரை முதலியவற்றில் பெயரளவில் சுட்டப்படும் நூல்களே திருக்குறளுக்கு உதவியிருக்கலாம் எனச் சான்றோர்கள் கருதுகின்றனர்.[4]

> பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
> தொகுத்தவற்றுள் எல்லாம் தலை[5]

என்னும் குறட்பாவும் வள்ளுவர் காலத்திற்கு முன்னர் இருந்த நூல்கள் பற்றிக் கூறும். 'நுண்ணிய நூல் பல கற்பினும்' (373), 'இலங்கு நூல்' (410), 'உரை சான்ற நூல்' (581), 'நவில்தொறும் நூல்நயம் போலும்' (783), 'அந்தணர் நூற்கும்' (543), 'அறு தொழிலோர் நூல் மறப்பர்' (560), 'நூலாருள் நூல்வல்லன் ஆகுதல்' (683) என்பன போல வரும் குறட்பாப் பகுதிகளும் பல்வேறு வகையான நூல்களைச் சுட்டி உரைப்பனவாகும். என்றாலும், அவை இன்ன நூல் என்று அறுதியிட்டுத் தெளிவாகத் தெரிவதற்குரிய வாய்ப்பு இன்று இல்லை. பொதுவாக, முற்சங்ககாலத்து வழங்கிய பாடல்களையும், தொல்காப்பியத்தையும், அவற்றிற்கு முற்பட்ட பல நூல்களையும் கருதி வள்ளுவர் கூறினார் என்று கொள்ளலாம்.

4. இராசமாணிக்கனார், டாக்டர். மா., திருவள்ளுவர் காலம், பக். 180, திருக்குறள் ஆராய்ச்சிப்பதிப்பு, ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம், கோவை, 1963.

5. குறள், 322.

## இடம் பொருள் முதலியவற்றிற்கு ஏற்ற உவமை

தண்டியலங்கார உரைகாரராகிய சுப்பிரமணிய தேசிகர் உவமை உருவகங்களுக்கு உரைத்த புறனடைச் சூத்திரத்தில்[6] உவமைகளை இடம் பொருள் முதலியவற்றை ஏதுவாக வைத்தும் இனம் பிரித்துரைக்கிறார். "இடத்திற்கு ஏற்ற உவமையும், காலத்திற்கு ஏற்ற உவமையும், பொருளிற் கேற்ற உவமையும், பண்பிற் கேற்ற உவமையும், சாதிக் கேற்ற உவமையும், மரபிற் கேற்ற உவமையும் பிறவாறும் பொருத்தமுடையன சிறப்புடைய" என்று எடுத்துரைத்து, அவ்வவற்றிற்கு எடுத்துக்காட்டுகளும் இனிய முறையில் அமைத்து, விளக்கம் தந்துள்ளார். இவர் தரும் விளக்கம், எடுத்துக்காட்டு முதலியவற்றை நோக்கினால் இவ்வகை யமைப்பு பல வகை நூல்களுக்கும் பொதுவான பண்பு என்பதும் புலனாகிறது. திருக்குறள் நூலகத்தும் இவர் வகுத்துரைக்கும் வகையில் தொகைப்படுத்திப் பார்க்கத் தகுந்த பாடல்கள் அங்கங்கே உள. எடுத்துக்காட்டாகப் பின்வரும் குறட்பாக்களில் பொதிந்துள்ள உவமைகளின் பொருட் பொருத்தத்தைப் பார்ப்போம்.

> தம்மில் இருந்து தமதுபாத்து உண்டற்றால்
> அம்மா அரிவை முயக்கு.[7]

> உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
> பாம்போடு உடனுறைந் தற்று.[8]

இவை யிரண்டும் ஒத்த மனத்தவராய் இருப்பவருடைய வாழ்க்கைதான் சிறக்கும் என்பதை நன்கு விதி முகத்தாலும் எதிர் மறை முகத்தாலும் விளக்கியுரைக்கின்றன. அன்பும் அறனு முடைய இல்வாழ்க்கையில் தலைவன் தலைவியர் மனமொத்துக் கூடும் கூட்டம், தமது இல்லத்தில் வாழ்ந்து பொருளைப் பகுத்துப் பிறர்க்கு உதவித் தாமும் உண்டு வாழும் இன்பத்தைப் போன்றது

6. தண்டி, 90, உரை: ஆறுமுகம் சேர்வை, வீ. பதிப்பு, மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை, 1920.
7. குறள், 1107.
8. குறள், 890.

என்பதனால், இல்வாழ்க்கை இன்பத்திற்கு இல்வாழ்க்கை முறையே உவமமாக வருகின்றது. அடுத்த பாட்டு ஒருமித்த அன்பும் பண்பும் இல்லாதார் வாழ்க்கை பயனற்றது; பாம்போடு கூடிவாழ்வது போன்றது என்று எடுத்துக் கூறுகிறது. இவ்விரண்டிலும் வாழ்க்கைக்கு ஏற்ற இடப்பொருள் பற்றிய உவமைகளைத் தந்துள்ளமை யால் இவற்றை இடத்திற்கு ஏற்ற உவமைகள் என்று கொள்ளலாம்.

### காலத்திற்கு ஏற்ற உவமை

தலைவனைப் பிரிந்து வருந்தும் மகளிர்க்கு மாலைக்காலம் துன்பம் தருவது என்பதைக் காட்ட மாலைக்காலத்து ஆநிரையுடன் வரும் கோவலரின் குழலோசை அவர்களைக் கொல்லும் படைபோல வருத்துகின்றது என்பது காலத் திற்குப் பொருத்தமான உவமையாகும். நண்பர்க்குற்ற இடுக்கணை விரைந்து மாற்றும் இயல்புடைய நட்பினரை உடுக்கை அவிழ்ந்ததும் அதனைப் பற்றும் கைவினைக்கு ஒப்புக் கூறுதலும் காலத்திற்கு ஏற்ற உவமையே. இவ்வுவ மைகளை,

> அழல்போலும் மாலைக்குத் தூதாகி ஆயன்
> குழல்போலும் கொல்லும் படை.[9]

> உடுக்கை யிழந்தவன் கைபோல ஆங்கே
> இடுக்கண் களைவதாம் நட்பு[10]

என்னும் குறட்பாடல்களிலே கண்டு மகிழலாம்.

### பொருளுக்கு ஏற்ற உவமை

ஆற்றல் படைத்த வீரர்கள் தமக்குப் பெருந்தீங்கு நேர்ந்தபோது உள்ளம் தளராது செயலாற்றுவர்; இத் தன்மைக்கு அம்புபட்டும் வீரம் குன்றாது பகையைத் தாக்கும் யானைக்கு ஒப்பிட்டுப் பேசுகிறார் வள்ளுவர்.

9. குறள், 1228.
10. குறள், 788.

*சிதைவிடத்து ஒல்கார் உரவோர் புதையம்பிற்*
*பட்டுப்பா டூன்றும் களிறு*[11]

என்பது வள்ளுவர் வாக்கு. இது ஆண்மை மிக்க வீரனுக்கு ஆற்றல் படைத்த ஆண்யானையை ஒப்புக் கூறியது உவமிக்கப்படும் பொருளுக்கு ஏற்ற உவமையாகும். ஆண்களின் கம்பீரநடையை 'ஏறு போல் நடை' (59) என்று வள்ளுவர் கூறுவதும் பொருட் பொருத்தமுற அமைந்த ஒன்றாகும்.

*நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்*
*மலையினும் மாணப் பெரிது.*[12]

*உப்பமைந் தற்றாற் புலவி அதுசிறிது*
*மிக்கற்றால் நீள விடல்.*[13]

இப்பாடல்களில் வருவனவும் பொருளுக்குப் பொருத்த முறக் காட்டப்பெற்ற உவமைகளாம்.

### பண்பிற்கு ஏற்ற உவமை

உவமான உபமேயங்களின் ஒத்த பண்புபற்றியும் உவமை தரப்படுவதுண்டு. நல்லார் நட்பு பிறைபோல வளரும் என்பதும், பொல்லார் கூட்டுறவு நிறைமதி தேய்ந் தாற் போலத் தேயும் என்பதும், மேன்மேல் வளர்தல், குறைதல் பண்புபற்றி அமைந்த பொருத்தமான உவமையாகும். இதனை,

*நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்*
*பின்னீர பேதையார் நட்பு.*[14]

எனவரும் குறட்பாவில் கண்டு களிக்கலாம். இங்ஙனமே பின்வரும் பாடல்களையும் பண்பிற்கேற்ற உவமை என்று கொள்ளலாம்:

11. குறள், 597.
12. குறள், 124.
13. குறள், 1302.
14. குறள், 782.

அறைபறை அன்னர் கயவர்தாம் கேட்ட
மறைபிறர்க்கு உய்த்துரைக்க லான்.[15]

இனிய உளவாக இன்னத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.[16]

குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர்.[17]

புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி
மூக்கிற் கரியார் உடைத்து.[18]

### சாதிக்கு ஏற்ற உவமை

மக்களுக்கும் மாக்களுக்கும் உள்ள வேறுபாட்டைத் தொல்காப்பியர்,

மாவும் மாக்களும் ஐயறிவினவே...[19]

மக்கள்தாமே ஆறறி வுயிரே...[20]

என்னும் நூற்பாக்களால் விளக்குகிருர். பகுத்தறிவற்றவர் விலங்கினை ஒப்பர் என்பது அவர் கருத்து. கல்லாதவர் விலங்கிற்கு நிகர், கற்ருர்தாம் மக்கள் என்று மதிக்கற் பாலர் என வள்ளுவர்,

விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்ருரோடு ஏனை யவர்[21]

என்னும் குறளில் தரும் கருத்தும் தொல்காப்பியர் கருத்தை ஒட்டி அமைந்ததாகும். அறிவின் ஏற்றத் தாழ்வு பற்றி உயிர்களை ஓரறிவுயிர், ஈரறிவுயிர் முதலாக வகுப்பது சாதிபற்றிய பகுப்பே. கற்ருர் இனம், கல்லார்

15. குறள், 1076.
16. குறள், 100.
17. குறள், 66.
18. குறள், 277.
19. தொல், பொருள், மரபு, 32.
20. தொல். பொருள். மரபு. 33.
21. குறள், 410.

இனம் இரண்டிற்கும் ஏற்ற உவமை தரும் இப்பாட்டைச் சாதிபற்றிய உவமை எனலாம்.

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்.[22]

மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோ
டியைந்துகண் ணோடா தவர்.[23]

அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்.[24]

இவற்றையும் சாதிபற்றிய உவமைக்கு உதாரணமாகக் கொள்ளல் பொருத்தமாகும்.

### மரபிற்கு ஏற்ற உவமை

மாதர் கொங்கையை யானையின் மத்தகத்திற்கு ஒப்பிட்டுப் பேசுதல் மரபு. எனவே, முலைமேல் விளங்கும் துகிலை யானையின் முகபடாத்திற்கு ஒப்பிடுவது பொருத்தந் தானே!

கடாஅக் களிற்றின்மேல் கட்படாம் மாதர்
படாஅ முலைமேல் துகில்.[25]

இதனை மரபு பற்றிய உவமை எனலாம்.

சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி[26]

என்னும் பாடலும் நடுவுநிலைமைக்குத் துலாக்கோலைக் கூறும் மரபுபற்றி வந்த உவமையாகக் கொள்ளலாம்.

### நீதிக்கு நீதி உவமை

வள்ளுவருடைய பாக்களில் சில ஒரு நீதியைக் கொண்டே பிறிதொரு நீதியைப் புகட்டுவனவாகவும்

22. குறள், 969.
23. குறள், 576.
24. குறள், 691.
25. குறள், 1087.
26. குறள், 118.

அமைந்துள்ளன. அழுக்காறு உடையவனிடம் ஆக்கம் இல்லாதிருப்பது போல ஒழுக்கம் இல்லாதவனிடம் உயர்வு இல்லை என்று இவ்விரு நீதிகளையும் வள்ளுவர் உவமை வாயிலாக விளக்குகிறார்.

> அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை
> ஒழுக்க மிலான்கண் உயர்வு[27]

என்னும் குறட்பா இக்கருத்தினை விளக்கும்.

பொருளாட்சி போற்றாதார்க்கு இல்லை; அருளுடையவராக இருக்கும் சிறப்பு புலால் உண்போர்க்கு இல்லை (குறள் 252). அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை; பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை (குறள் 247). முதல் இல்லாதவர்களுக்கு ஊதியம் இல்லை; தம்மைத் தாங்கிக் காப்பாற்றும் துணை இல்லாதவர்க்கு நிலைபேறு இல்லை (குறள் 449).

வள்ளுவர் வகுத்த உவமைகளுள் பல இவ்வாறு ஒரு நீதியால் மற்றொரு நீதியை விளக்கும் தன்மையினைப் பல்வேறு பாடல்களில் கண்டு மகிழலாம். ஓர் உண்மையினை மற்றோர் உண்மையால் விளக்கும் இயல்பும் இதில் இணைந்தும் இழைந்தும் கிடப்பதைக் காணலாம். இப்பாடல்கள் ஒரே சமயத்தில் இரு நீதிகளைப் புகட்டும் இலக்கிய நயம் பெற்றுத் திகழுமாறு அமைந்திருப்பது பெரிதும் இன்புறுதற்குரியதாம்.

“உலகப்பொருள்களையும் அவற்றின் நிகழ்ச்சிகளையும் பண்புகளையும் எடுத்து உவமங் காட்டுதலேயன்றி, ஒரு கல்லில் இரண்டு மாங்காய் விழ எறிகின்ற வீரம்போல—கண்ணன் கன்றைக்கொண்டு விளவெறிந்து இருபயன் கொண்டது போல—ஒரு நீதிக்கு ஒரு நீதியையே உவமமாகக் காட்டி இருபயனை எல்லாரும் எய்த வைப்பர்” என்பர் அறிஞர் ச. தண்டபாணி தேசிகர் அவர்கள்.[28]

27. குறள், 135.

28. தண்டபாணிதேசிகர், ச.: ‘திருக்குறள் அழகும் அமைப்பும்’ பக். 140, தொல்காப்பியர் நூலகம், சென்னை, 1961.

இவ்வகைப்பாடல்களுள் தரப்படும் இரண்டு நீதிகளுள் ஒரு நீதியைப் போன்றது மற்ருெரு நீதி என்னும்போது உவமையாகத் தரப்படும் நீதி உயர்ந்தது, பொருளாகவரும் நீதி அதனினும் சற்றுத்தாழ்ந்தது என்று கருதுதல் முறையன்று. உவமை உயர்ந்ததன் மேற்ருக அமையும் என்று கூறியபோதிலும், இங்கே உவமையும் பொருளுமாகவரும் இருநீதிகளும் ஒத்த நிலையில் உயர்வாக மதிக்கத் தக்கவை என்று கருதுதல் வேண்டும்.

**கருத்துக்குக் கருத்து உவமை**

கருத்துக்குக் கருத்துவகையாலே உவமை கூறுவதும் வள்ளுவர் பயன்படுத்தும் உவமை வகைகளுள் ஒன்ரும். 'வாய்மை'யினை விளக்க வந்த வள்ளுவர் புறத்தூய்மையினையும் அகத்தூய்மையினையும் ஒப்புக்காட்டி விளக்குகிருர். "புறத்தே தூய்மையாக விளங்குதல் நீரிஞல் ஏற்படும்; அதுபோல் அகத்தே தூய்மையாக விளங்குவது வாய்மையால் காணப்படும்" என்று ஒரு கருத்தினைக் கொண்டு பிறிதோர் கருத்தினை விளக்குகிருர்(298). இவ்வாறே—"வறுமை அறிவைக் கொல்லும்; அது போல மறதி புகழைக் கொல்லும்" (532), "ஊக்கம் குறைவதற்குக் காரணமான செயல்களை எண்ணுதிருக்க வேண்டும்; அது போல் துன்பம் வந்தபோது கைவிடுகின்றவரின் நட்பைக் கொள்ளாதிருக்க வேண்டும்" (798), "நலம் வேண்டின் நாணுடைமை வேண்டும்; அது போல் உயர்வு வேண்டின் பணிவுடைமை வேண்டும்" (960)—என்னும் கருத்துகளையும் தம்முள் கொண்டு விளங்கும் குறட்பாக்களும் இத் தகையனவே.

இருவேறு கருத்துகளை ஒருங்கு இணைத்தும் ஒப்பிட்டும் காட்டித் தாம் கூறவந்த கருத்துக்கு வலிவையும் வனப்பையும் ஏற்படுத்துகின்ருர் வள்ளுவர். இங்ஙனம் ஒப்பிட்டுக் கூறுவதால் ஏற்படும் நன்மை படிப்போர்க்கு அக்கருத்துகள் தெள்ளத் தெளியப் பதிவதேயாம்.

**ஒரு பொருளுக்கு இரண்டு உவமை**

ஒரு பொருளுக்கு ஒரு பொருளை ஒப்புக்காட்டி விளக்குவது இயல்பான ஒன்று. ஆயினும் வள்ளுவர் பல குறட்

பாக்களில் ஒரு பொருளை இரண்டு உவமைகளால் விளக்கும் இயல்பினைக் காணலாம்.

நட்பிற்கு உரியவரல்லாதார் தன்மையினைக் கூறும் போது, வள்ளுவர் அவர்களை இத்தகையார் என நமக்கு அறிமுகப் படுத்த இரண்டு உவமைகளைக் காட்டுகின்றார். கொடுப்பாரைக் கொள்ளாது பெறுகின்ற பொருளைக் குறித்துப் போலி அன்புபாராட்டும் விலை மகளிரும், பிறர் கேடு நோக்காது அவர் சோர்வு நோக்கும் கள்வரும், நட்பு அளவு பாராது அதனால் வரும் பயன் அளவு பார்க்கும் நண்பருக்கு ஒப்பாவராம். இங்கே விலைமகளிரும், கள்வரும் உறுவது சீர்தூக்கும் நட்பினருக்கு நிகர் என்று இரண்டு உவமைகளைக் காட்டி ஆசிரியர் விளக்குகிறார் (813).

இங்ஙனமே அணங்கினையும் ஆய்மயிலையும் மகளிருக்கும் (1081), அனிச்சத்தையும் அன்னத்தின் தூவியையும் மாதர் அடிக்கும் (1120), கூற்றத்தினையும், பிணையினையும் இளம் பெண்ணின் கண்ணிற்கும் (1083, 1085) உவமைகூறுகிறார் வள்ளுவர்.

ஒரே ஒரு பொருளுக்குப் பல உவமைகளைப் பல்வேறு பாக்களில் கூறிச் செல்லும் பாங்கும் எண்ணுதற்கு உரியதாகும். காமத்தினை நெருப்பிற்கும், கள்ளுக்கும், கடலுக்கும், கடும்புனலுக்கும், பயிருக்கும், ஊற்று நீர்க்கும் உவமிக்கிறார். மேலும், இக்காமத்தினைக் (காதலினை) காலையரும்பி, பகலெல்லாம் போதாகி மாலை மலரும் பூவிற்கு ஒப்பிட்டு இன்புறுகிறார் வள்ளுவர்.

கண்ணினை அளக்குங் கோலாகவும் (710), மலராகவும் (1112, 1119, 1142), கூற்றாகவும் பிணையாகவும் (1085), கயலாகவும் (1212), வேலாகவும் (1113) காண்கிறார் வள்ளுவர். மக்கள் அனைவருக்கும் பயன்படும் பேரறிவாளனுடைய பெருஞ்செல்வத்தினை ஊருணியாகவும் (215), பயன் மரமாகவும் (216) மருந்து மரமாகவும் (217) உவமித்து அதன் உண்மைத் தன்மையினையும், பயனையும் தெற்றென வெவ்வேறுபாக்களில் வள்ளுவர் விளக்குகின்றார். இங்ஙனம் ஒரே ஒரு பொருளுக்குப் பல்வேறு

உவமைகளைப் பல்வேறு பாக்களில் படைத்துக் காட்டி விளக்குந்திறன் அவர்தம் ஆழமான புலமையைக் காட்டும்.

## இருபொருளுக்கு ஓர் உவமை

இரு பொருள்களை ஒரே உவமையாலும் வள்ளுவர் விளக்குகிறார். காமம் என்னும் கடும் புனல் நாணம், நல்ல ஆண்மை ஆகிய தோணிகளை அடித்துச் செல்லுவதாகக் கூறுகிறார் (1134). தோணிக்கு நாணம், நல்லாண்மை என்னும் இரண்டையும் ஒப்புக் கூறுந்திறனும் ஈண்டுக் குறிக்கத்தக்கது. இவ்வாறே காலம் நீட்டித்தல், மறதி, சோம்பல், துயில் ஆகிய நான்கையும் மரக்கலம் என் கிறார். (605).

மேற்காட்டியவாறு வள்ளுவர் ஒரு பொருளுக்கு இரண்டு உவமையும் இருபொருளுக்கு ஓர் உவமையும், அதற்கு மேற்பட்டும் தாம் கூற விழைந்த கருத்துகளை உவமையின் வாயிலாகச் சிறப்பாக அறிவுறுத்துகிறார்.

## அவரவர் பயன்படுத்தும் பொருளே உவமை

தலைவனிடத்துக் கோபமும் ஊடலுங்கொண்ட தலைவி அவன் வந்தவுடன் அவன் தவறுகளைச் சுட்டிக்காட்டித் தன் சினத்தைக் காட்ட விழைகிறாள்; 'தலைவன் வரட்டும்' எனக் காத்திருக்கின்றாள். இந்நிலையில் தலைவனும் வரு கின்றான். அன்புடைத்தலைவன் வந்ததும் தன்னை மறந் தாள்; தான் எண்ணியதை மறந்தாள்; தலைவனிடத்துச் சினந்து ஊடல் கொள்ள விரும்பிய இயல்பினையும் துறந் தாள். ஆனால் அவனைக் கண்டதும் அன்பு கொண்டு மகிழ்ந் தாள். பின் அவன் சென்றதும் எண்ணிப்பார்த்தாள். தான் சினந்து கொள்ளாத காரணத்தை எண்ணி வியந்து தன் னுள் கூறுகிறாள். அது வள்ளுவர் படைத்த தலைவியின் கூற்றாகப் பின்வரும் பாடலில் அமைந்துள்ளது.

> எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண்கன்
> பழிகாணேன் கண்ட விடத்து.[29]

29. குறள், 1285.

இப்பாடலில் வள்ளுவர் காட்டிய உவமைப்பொருள் தலைவி பயன்படுத்தும் பொருள்களுள் ஒன்று. "மை தீட்டும் நேரத்தில் தீட்டுகின்ற கோலைக் காணாத கண்களைப் போல், காதலனைக் கண்டபோது அவனுடைய குற்றங்களை நினைக்காமல் மறந்து விடுகின்றேன்" என்பது அவள் கூற்று. மை தீட்டும் கோல் மகளிர் பயன்படுத்தும் பொருள்களுள் ஒன்றாம். தான் பயன்படுத்தும் பொருளையே மகளிர் உவமையாகப் பேசுவதை இப்பாடல் உணர்த்தும்.

புலவி ஒழிந்து வாயில் நேரும் வகையில் தோழி கூறுகின்ற கூற்றும் இவ்வாறு அவளறிந்த கருத்தாகவே அமைந்துள்ளது. வாயில் வேண்டிய தோழிக்குத் தலைவி மறுத்தபோது அவளுக்குக் கூறுவதாக அமைந்துள்ளது பின்வரும் பாடல்:

> உப்பமைந் தற்றால் புலவி அதுசிறிது
> மிக்கற்றால் நீள விடல்.[30]

"உப்பு உணவில் அளவோடு அமைந்திருப்பதைப் போன்றது ஊடல்; ஊடலை அளவு கடந்து நீட்டித்தல், அந்த உப்பு சிறிதளவு மிகுதியாக இருப்பதைப் போன்றது" என்பது அத்தோழி கூறிய செய்தியாகும். உணவுப்பொருள்களைச் சமைத்துப் பக்குவப்படுத்தித்தரும் இயல்பினை அறிந்த மகளிர் பேசுகின்ற பேச்சிலும் அவர்களோடு தொடர்புடைய உவமப்பொருள் அமைந்து கிடப்பது எண்ணி இன்புறற்பாலதாம். இங்ஙனம் வள்ளுவர் படைத்த பாத்திரப்படைப்புகளும், அவரவர் அறிந்து உணர்ந்து தெளிந்த பொருள்களையும், கருத்துகளையுமே உவமையாகப் பயன்படுத்திக் கூறும் நிலையில் உள்ளன.

வள்ளுவர் மகளிரைப் பற்றி உவமிக்கும்போதெல்லாம் அவர்களுடைய மென்மைத் தன்மைக்கு ஏற்ப மென்மைப் பொருள்களையே உவமமாகப் பயன்படுத்தியுள்ளமையும் ஈண்டுக் கருதத்தக்கது. அனிச்சப்பூ, அன்னத்தின் தூவி, முதலியவற்றினும் மென்மையள் தலைவி என்கிறார் (1120); மற்றொரு பாடலில் மென்மை பொருந்திய மயிலை உவமை (1081) யாக்கி மகிழ்கிறார்.

30. குறள், 1302.

*ஊர்திகள்*

வள்ளுவர்தம் உவமைக் குறிப்புகளால், மக்கள் நிலத்தில் தேரிலும், நீரில் தோணி, நாவாய் போன்றவற்றிலும், சென்றமை அறியப்படுகிறது. நெடுந்தேர் கடலில் ஓடாமையையும் நாவாய் நிலத்தில் ஓடாமையையும் ஒப்புக்காட்டி இடனறிந்து செயலாற்ற வேண்டும் என்பர் (496). உருவத்தில் சிறியது அச்சாணி; ஆயின் தேருக்கோ அது உயிர்நிலை; உருவு கண்டு எள்ளாமை வேண்டும் என்பதனை இவ்வுவமையால் விளக்குகிறார் வள்ளுவர் (667). ‘நெடுந்தேர்’ என்றும், ‘உருள் பெருந்தேர்’ என்றும் தேருக்கு அடைமொழி தருவர்.

மயிலின் பீலியை ஏற்றிச் செல்லும் ‘சகடம்’ பற்றியும் உவமை நமக்குத் தெரிவிக்கும் (475); அக்கால நிலையும் இதனால் நன்கு புலனாகும். எருதுகளினால் பாரம் நிறைந்த வண்டி இழுக்கப்பட்ட செய்தியும் பிறிதொரு உவமையினால் தெரியவரும் (624).

கடலினைக் கடந்து செல்வதற்குப் புணை பயன்பட்டதனையும், உவமையால் (306, 1164, 1134) அறிகிறோம். ‘ஏமப்புணை’ என்பதனால் இக்காலத்துப் பயன்படுத்தப் படும் ‘உயிர்க்காப்புப் படகு’ அல்லது ‘இடரில் உதவும் படகு’ (Life-Boat) என்பதற்கு இது இணையானது எனலாம். நாவாய் ஓடியமையையும் அதனுள் ‘ஏமப்புணைகள்’ இருந்தமையையும் இவ்வுவமைகள் நமக்குத் தெரிவிக்கின்றன.

**உவமை அறிவிக்கும் தொழில் நிலை**

உழவுத்தொழிலுக்கே திருக்குறள் முதலிடம் அளிக்கிறது. ‘சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்’ என்ற தொடரும், ‘உழுவார் உலகத்தார்க்கு ஆணி’ என்பதும் இதனை நன்கு விளக்கும். நிலத்திற்குரிய உழவன் நிலத்தைச் சென்று பார்க்காமல் இருந்தானால் அந்நிலம் அவனுடைய மனைவியைப்போல் வெறுத்து ஊடல் கொண்டுவிடும் (1039) என்கிறார். எருவும் நீரும் பயிருக்கு இன்றியமையாதன. தலைவியினுடைய காதல் நோய்,

ஊராரின் அலர் தூற்றலே எருவாகவும், அன்னையின் கடுஞ்சொல்லே நீராகவும் கொண்டு செழித்து வளர்கின்றது (1147) என்று ஒப்புமை காட்டுதலினால் பயிர்த் தொழிலின் இயல்பை விளக்குவர். ஆயினும், வள்ளுவருடைய உவமைகள் வேறு பல தொழிற்கருவிகளையும் கூறிச் செல்லுகின்றன.

பொன்னை உரைத்துப்பார்த்து அதன் மதிப்பை அறிய உதவுவது கட்டளைக்கல். அதுபோலவே ஒருவனுடைய பெருமையையும் சிறுமையையும் ஆராய்ந்து மதிப்பிட உதவுவது அவனுடைய செயல்களேயாம் (505). இவ்வுவமை அக்காலத்திய பொன் வாணிக நிலையைக் காட்டும் எனலாம். கொல்லன் விரும்பிய பொருளைச் செய்யப் பயன் படுத்தும் கல் பட்டடைக்கல். தேவை முடிந்ததும் அவன் அதனைத் தூக்கி எறிவதுபோல கூடாநட்பினரும் நம்மைப் பயன்படுத்தும் காலத்தில் பயன்படுத்திக்கொண்டு பின்னர் பிரிவர். கூடாநட்பினருக்கு இணையாகப் பட்டடைக் கல்லை உவமை கூறுகிறார் (821). அரத்தினுடைய கூர்மையை அறிவுக்கூர்மைக்கும் (997), அரசனுடைய கடுமொழியும், 'முறைகடந்த தண்டனையும்' அவனுடைய வெற்றிக்குக் காரணமான வலிமையைத் தேய்க்கும் அரம் எனவும் (567) ஒப்புக் கூறுவர் வள்ளுவர்.

நாணம் என்னும் தாழ்ப்பாள் பொருந்திய நிறை என்று சொல்லப்படும் கதவைக் காமம் ஆகிய கோடரி உடைத்துவிடும் என்றும் (1251), ஐம்பொறிகளையும் அடக்கப் பயன்படும் அறிவினை யானையை அடக்கும் அங்குசம் (24) என்றும் ஒப்புமை காட்டுவர். மீன் பிடிக்கத் தூண்டிலைப் பயன்படுத்தும் வழக்கம் இருந்தது என்பதனை, 'சூதில் பெறுகின்ற வெற்றி தூண்டில் இரும்பை இரை என்று மயங்கி மீன் விழுங்கியதைப் போன்றது' (931) என்ற உவமை விளக்கும். சான்றோரின் நடுவு நிலைமைக்குத் துலாக்கோல் நிகர் எனவும் (118), நுட்பத்தை அளக்குங்கோல் 'கண்' (710) எனவும், நிலம் அளக்கும் கோல் போல 'துன்பக்காலம்' நண்பர்களின் உண்மையான நட்பினை அளக்கும் கோல் (796) எனவும், சான்றோரின் அறிவுரைச் சொற்கள் சேற்று நிலத்தின் ஊன்று

கோல் (415) எனவும், உவமையின் வாயிலாக அளக்கும் கருவிகளை உணர்த்துவர். இவை அக்காலத்துப் பயன் படுத்தப்பட்ட பல்வகையான பயன்படு கருவிகளை உணர்த்தும். இன்னும் 'மகளிர் மை எழுதும் கோலை'ப் பற்றியும் கூறியுள்ளார் (1285).

வீரர்கள் பயன்படுத்தும் கணை, வாள் வேல்[31] முதலானவற்றைப் பல்வேறு உவமைகளால் விளக்குவர். வாள் நாளுக்கும், நூலுக்கும், பகைவருக்கும் உவமையாகக் கூறப்படுகிறது.

### உவமையால் அறியும் விலங்கு பற்றிய செய்திகள்

வள்ளுவர் காட்டிலும் நாட்டிலும் வாழுகின்ற பல்வேறு வகையான விலங்குகளின் இயல்பினையும் அறிந்திருந்தமையால் குறட்பாக்களில் இவை பற்றிய செய்திகள் உவமைகளாக மலர்ந்து பல அரிய செய்திகளை நமக்குத் தருகின்றன.

ஊக்கம் உடையவர்களை, 'அம்புகளால் புண்பட்டும் தன் பெருமையை நிலைநிறுத்தும் யானைக்கு' உவமிக்கிறார் (597). பருத்த உடம்பையும், கூர்மையான கொம்புகளையும் கொண்ட யானை ஊக்க மிகுதியுள்ள புலிக்கு அஞ்சும் என்று கூறி, ஊக்க மிகுதியுள்ளவர் தம்மைக் காட்டிலும் பெரியவர்களையும் வெற்றி கொள்வர் என்பதனை உவமையால் பெற வைக்கிறார் வள்ளுவர் (599). யானையால் யானையினைப் பிடிக்கும் வழக்கத்தினையும் அவர் காட்டும் உவமையால் தெரிந்து கொள்ளலாம் (678). 'நனைகவுள் யானை' என அடைமொழி கொடுத்துக் கூறுவது அவர்தம் தெளிந்த அறிவையும் அனுபவத்தையும் காட்டும். 'யானை பெரிய விலங்காயினும் சேற்றில் அகப்பட்டுக் கொள்ளுமாயின் எளிய நரியும் அதனைக் கொல்லும்' என்னும் கருத்தைக் கூறி, 'இடனறிதலை' அரசர்க்கும் பிறர்க்கும் உணர்த்துகிறார் (500). யானைகள் போர் செய்யும்

31. **கணை : குறள், 279, 597, 772.**
**வாள் : குறள், 334, 614, 726, 727, 882.**
**வேல் : குறள், 500, 552, 772, 1113.**

காட்சியையும், குன்றின்மீதேறி அதனைக் காண்பதையும் உவமையால் (758) விளக்குவர். யானைக்கு அணிவித்த முகபடாமை மாதரின் கொங்கைக்கு மறைப்பாக அணியும் மேலாடைக்கு உவமை (1087) கூறுவர்.

மானம் அழிந்தபின் வாழாது உயிர் விடுவோரை, மயிர் நீப்பின் உயிர்விடும் மானுக்கு உவமையாக்குவதால் (969) ஆசிரியர் கவரிமானின் இயல்பினை அறிந்த உளப் பாங்கு நன்கு புலனாகும். துன்பம் வந்தகாலை பிரிந்து செல்லும் நண்பரைப் போர்க்களத்தில் தள்ளிவிட்டு ஓடும் அறிவில்லாத குதிரைக்கு உவமையாக்குவது (814) இவருடைய போர்க்கள அறிவைக் காட்டும் எனலாம். கூடா ஒழுக்கம் பூண்டு மனத்தை அடக்கும் வலிமையில்லாது தவவேடம் பூண்டோரைப் 'புலித்தோல் போர்த்திய பசு' (273) என்கின்றார். ஊக்கமிகுந்தவன் ஒடுங்கியிருத்தல், போர்செய்யும் ஆட்டுக் கடா தன் பகையைத் தாக்குவதற்குப் பின்னே கால் வாங்குதலைப் போன்றது (486) என்று கூறும்போது ஆட்டின் இயல்பினையும், ஆட்டுக்கடாச் சண்டை அக்காலத்து இருந்தமையையும் இவ்வுவமை நமக்குக் காட்டும். தடைகள் பலவற்றையும் விடாமுயற்சியோடு கடந்து வண்டியை இழுக்கும் எருதினை முயற்சியிற் குன்றாதவனுக்கு ஒப்பிடுகிறார் (624).

ஆழமுள்ள நீரில் முதலை வெற்றி பெறுவதையும், நீரினின்றும் நீங்கிய முதலையைப் பிற உயிர்கள் வெல்லுதலையும் 'இடனறிதலுக்கு' ஒப்புமை (495) காட்டுவர். எலும்பில்லாத புழுவை வெயில் வருத்திக் கொல்வதைப் போல அன்பில்லாத உயிர்களை அறக்கடவுள் வருத்தும் (77) என்று கூறும் உவமையாலும் சிற்றுயிர்களின் இயல்புகளையும் வள்ளுவர் தெளிவாக அறிந்திருந்த தன்மை புலனாகும். கல்லாத மக்களை விலங்குகளுக்கு ஒப்பாக்கும் (410) இவர்தம் நுண்மாண் நுழைபுலமும் இவ்வுவமையால் நன்கு தெளிவாகும்.

**பறவை பற்றிய செய்திகள்**

வள்ளுவர் தாம் அறிந்த பறவைகளின் வாயிலாகவும் பல உண்மைகளை உவமையால் நமக்குக் கூறித் தெளிய வைக்கிறார்.

கோட்டானின் இயல்பையும் காகத்தின் தன்மையையும் அறிந்த அவர் காலமறிந்து செயலாற்றுவதற்கு அவற்றை ஒப்புக்காட்டி விளக்குவர். வலிய கோட்டான் இரவிலே பார்வை பெற்றிருக்கும் தன்மையினையும், அது இரவிலே வலிமையுடைத்தாயிருப்பதையும் கூறிப் பகற் காலத்திலே அதனை எளிய காக்கை வென்றுவிடும் என்னும் செய்தியைத் தந்து, அரசர்களும் பகையை வெல்லக் காலமறிந்து செயலாற்றல் வேண்டும் (481) என்கிறார். காகம் கரைந்துகரைந்து தன் இனத்தைக் கூவி அழைத்து உண்ணுவதைக் கண்ட அவர் சுற்றந்தழுவிப் பகுத்துண்டு வாழும் மக்களிடையேதான் ஆக்கம் பெருகும் என்பர் (527). கூட்டையும் பறவையையும் கொண்டு நிலையாமையினை உணர்த்துவர் வள்ளுவர். தான் இருந்த கூடு தனியே இருக்க அதனை விட்டுப் பறந்த பறவையினைப் போன்றது உயிர்க்கும் உடம்புக்கும் உள்ள உறவு என்பர் (338). ஆய் மயிலை மாதருக்கும், அன்னப்பறவையின் தூவியை மாதர் அடியின் மென்மைக்கும் உவமையாக்குவர் (1081, 1120). மயிலிறகு வண்டியில் ஏற்றப்பட்ட செய்தியும் இவர்தம் உவமையால் அறிகிறோம் (475).

கொக்கின் இயல்பை மிகமிக நுணுக்கமாக அறிந்துள்ளார் வள்ளுவர். தனக்கு விருப்பமான இரையைக் காணும் வரை பொறுத்திருக்கும் அதன் அமைதியான இயல்பையும், இரையைக் கண்டதும் (காலம் வாய்த்ததும்) தவறாமல் வெற்றி கொள்ளும் அதன் குத்தையும் உவமை வாயிலாக அரசர்க்குக் 'காலமறிந்து ஒழுக வேண்டிய ஆற்றலை'க் கூறி அறிவுறுத்துகிறார் (490). வேடன் மறைந்திருந்து பறவைகளை வலைவீசிப் பிடிப்பதைத் தவக்கோலத்தில் மறைந்து அவச் செயல்களைப் புரிதலுக்கு ஒப்புக் கூறுகிறார் (274).

### பயிரியல் பற்றிய செய்திகள்

தெய்வப் புலமைத் திருவள்ளுவனார் இயற்கையோடு இயைந்த வாழ்வு நடாத்தியவர். தம் புலமைக்கண் கொண்டு இயற்கைப் பொருள்களின் உண்மையையும், இயல்பையும் தெள்ளத் தெளிவாக அறிந்தவர். அவருடைய உவமைகள் இவற்றை நமக்குத் தெற்றெனக் காட்டும். இவற்றின்மூலம் நுட்பமான செய்திகள் பல நமக்குத்

தெரியவருகின்றன. பயிரினங்களின் பல்வேறுவகையான உறுப்புகள், தன்மைகள், வேறுபாடுகள் முதலியனவற்றை உணர்ந்தவர் வள்ளுவர் என்பதனைப் பல குறட்பாக்கள் நமக்குத் தெளிவாக உணர்த்துகின்றன.

மரத்தின் இயல்பினைத் தெளிவாக அறிந்திருந்த வள்ளுவர், வற்றல் மரம் (78), முள் மரம் (879), பயன் மரம் (216) நச்சுமரம் (1008), மருந்துமரம் (217) என்பவற்றை உவமைகளாகக் குறிப்பிட்டு அவற்றின் வாயிலாக அரிய செய்திகளைத் தருகின்றார். வற்றி வாடி உலர்ந்து பட்டுப்போன மரம் தளிர்த்துப் பசுமை பெறல் பாலை நிலத்தில் இயலுமோ? அகத்தில் அன்பில்லாமல் வாழும் வாழ்க்கையினைப் பாலை நிலத்தில் பட்டமரம் தளிர்த்தாற்போன்றது என்று கூறுவர். களையவேண்டிய முள்மரத்தை முளையிலேயே கிள்ளி எறிதல் வேண்டும்; இல்லையேல் வளர்ந்த பின்னர் அது பெரிதும் துன்பம் தரும். முள்மரத்தைப் பிறிதுமொழிதலணியாகக்கொண்டு பகைத்திறம் தெரிந்து வாழ்தலை மக்களுக்கு நயமாக அறிவிக்கிறார். ஒப்புரவாளரிடம் செல்வம் சேர்தல் பயன் மிகுந்த மரம் பழுத்தலைப் போன்றது எனவும், பிறர்க்கு உதவாது வாழும் இயல்பினை உடையவனிடத்துள்ள செல்வம் நச்சு மரம் பழுத்தலைப் போன்றது எனவும் மரத்தினை உவமையாகக்கொண்டு நன்றும் தீதும் காட்டுகிறார்.

அன்பில்லாதானிடத்துச் சேருகின்ற செல்வம் நன்மை தாராதாயினும் தீமைதரும் என்பது 'நச்சுமரம்' என்று கூறும் நுட்பத்தால் தெரியவரும். பெருந்தகையாளனிடத்துள்ள செல்வம் மருந்துமரம் போல்வது; எல்லாப் பகுதிகளும் நன்மையைச் செய்வதுபோல் அனைத்துச் செல்வமும் நன்மைக்கே பயன்படும் என்பது குறிப்பு. செல்வர்களை இங்ஙனம் உவமையால் பிரித்துக்காட்டும் வள்ளுவரின் நுட்பம் உலகியல்புகளைத் தெளிவாக அறிவுறுத்துகின்றதன்றோ? மரத்தினால் செய்யப் பெறும் பாவையினை இரண்டு குறட்பாக்களில் உவமையால் விளக்கிக்கூறுவர் (1020, 1058). கண்ணோட்டம் இல்லாதவர்களையும், ஊக்க மிகுதியில்லாதவர்களையும், மக்கட்பண்பில்லாதவர்களையும், மரம் என்று கூறுகிறார் (576, 600, 997); தளிரை

மகளிர் மேனிக்கு (1113) ஒப்பிடுகிருர்; காமநோயின் இயல்பான வளர்ச்சியினைப் படிப்படியாகக் காட்ட விரும்பி அதனை மலருக்கு ஒப்பாகக் கூறி,

> காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி
> மாலை மலரும்இந் நோய்[32]

எனச் சிறந்ததோர் உவமையினை அளிக்கின்ருர். அரும்பு, போது, மலர் என்னும் பூவின் மூன்று நிலைகளையும் வள்ளுவர் காட்டும் புலமை நுட்பமும் இதனுல் நன்கு விளங்கும். காதலனை எதிர்ப்பட்ட மகளிரின் புன்னகைக்கும் அதனுள் மறைந்து குறிப்பால் புலப்படும் அன்புணர்ச்சிக்கும் மலர் போதாகி மலர்வதன்முன் அதனுள் மணம் பொதிந்திருத்தலை ஒப்பிட்டுப் பேசுகின்ருர். நாற்றம் தாராத மண மற்ற பூவை மக்கள் விரும்பார் என்பதனையும் 'இணரூழ்த்தும் நாரு மலரனையர்' (650) என்ற உவமைத் தொடர் காட்டும். தாமரை, குவளை, அனிச்சம் ஆகிய இம்மூன்று மலர்களையும் வள்ளுவர் கூறுகிருர் (617, 1103, 1114). அனிச்சமலரின் மென்மையினையும் அறிந்த தன்மையினை இவர் காட்டும் உவமை உணர்த்தும் (1111, 1120).

நீரிலும் நிலத்திலும் தோன்றும் பயிர்வகைகளின் இயல்புகள் எல்லாம் முற்றும் உற்றுணர்ந்து கண்டவர் வள்ளுவர். மரத்தில் மலரும் பூவையும் நீர்ச்செடி கொடிகளில் காணும் பூவையும்கூட இவர் வாக்குகளில் காண்கிரும். நீர் நிலைகளில் வெள்ளத்தின் மிகுதிக்கு ஏற்ப, அங்கு வாழும் மலர்கள் மேலே நீண்டுவருகின்றன. இந்நிகழ்ச்சியை ஒருவன் தன் ஊக்கத்திற்குத் தக்கபடி உயர்வு பெறுவான் என்பதற்கு எடுத்துக்காட்டுகின்ருர் (595). பிணங்கிய பெண்டிரின் பிணக்கை மாற்றிச் சேராமல் ஒருவனிருப்பது ஏற்கெனவே வாடிய கொடியை அதன் அடியிலே அறுத்தது போலாகும் என்கிருர் (1304).

எல்லோராலும் விரும்பப்படும் கனியினை இன்சொல்லுக்கும், காயினை இன்னுச் சொல்லுக்கும் உவமை கூறுவர் (100). முதிர்ந்த பிணக்கும், சிறுபிணக்கும் இல்லா

32. குறள், 1227.

விட்டால் காமம் மிகப் பழுத்த பழமும் முற்றாத இளங் காயும் போலப் பயன்படாது என்கிறார் (1306). சில இடங் களிலே வித்தினையும், முளையினையும் உவமை கூறிவிளக்கு கிறார் (24, 138 361, 959). வெளிவந்த முளையை வைத்து அது கிடந்த நிலத்தின் தன்மையை அறிவது போல ஒருவன் பேசும் வாய்ச்சொல்கொண்டு அவன் நலத்தை யும் பிறந்த குலத்தின் தன்மையையும் அறியலாம் என்பர். குன்றி மணியைச் சிறுமைக்கு ஒப்பிடுவர் (277). தினையை மிகச் சிறிய அளவுக்கும் பனையைப் பேரளவுக்கும் ஒப்பிட்டுக்கூறுகின்றார் (104, 433, 1282).

புல்லினமாகிய கரும்பை வள்ளுவர் கயவர்க்கு ஒப்பிடுகின்றார் (1078). மெலியார் தாம் சென்று தம் குறையைச் சொன்ன அளவிலேயே இரங்குவர் மேலோர். ஆனால், கயவரோ வலிமையுடையவர் நையும்படி தம்மைத் துன்புறுத்திய பின்புதான் உதவுவர். களையைக் களைந்து பயிருக்கு நலிவு வாராமல் காப்பது உழவனின் கடமை. அதுபோலவே நாட்டிலுள்ள கொடியோரை ஒறுத்து நல்லோரைக் காத்தல் அரசனுடைய கடமையாம் (550). வள்ளுவர்தம் பயிரியல் அறிவு இதனாலும் நன்கு விளங்கும்.

வள்ளுவருடைய உவமைகளில் இங்ஙனம் உழவு பற்றிய செய்திகள் மிகுதியும் காணப்படுகின்றன. இதனால் அவர் இயற்கையோடு இயைந்து உலகத்தோடு ஒட்டி வாழ்ந்த தன்மையும், அவர் பெற்றிருந்த உழ வியல் அறிவும் நன்கு விளங்குகின்றன. மரமும் செடி யும், அரும்பும் போதும், காயும் கனியும், வேரும் வித்தும் விரவிய பகுதிகளை நுணுகி ஆய்ந்து உவமையாகக்கூறி அதன் மூலம் பல்வேறு அரிய செய்திகளையும் தெளிய வைக்கிறார் திருவள்ளுவர்.

**வானவியல்**

வள்ளுவர் வானவியலை நுணுகி அறிந்தவர் என்பது அவர் தரும் சில உவமைகளால் நன்கு விளங்கும். திங்களில் காணப்படும் இருண்ட நிழற்புள்ளிகளை ஆய்ந்த

பண்டைத்தமிழர் தம் இலக்கியத்தில் மறு என்றும், மாசு என்றும், களங்கம் என்றும் கூறினர். வள்ளுவர் மாதரின் முகத்தைக் கூறும்போது,

> அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல
> மறுவுண்டோ மாதர் முகத்து[33]

என உவமையின் வழியே மாதரின் களங்கமில்லா முகத்தையும், திங்களின் களங்கத்தையும் கூறுகிறார்.

> குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின்
> மதிக்கண் மறுப்போல் உயர்ந்து[34]

என்னும் குறளும் இதனைக் கூறுவதைக் காணலாம்.

வளர்பிறையினையும் தேய்மதியினையும் கூர்ந்து நோக்கி, அதனுடைய வளர்நிலையையும் தேய்நிலையையும், அறிஞர்கள் நட்பிற்கும் பேதையர்களின் நட்பிற்கும் உவமையாக்குகிறார் (782).

"காதலரைக் கண்டது ஒருநாள்தான்; அதனால் உண்டாகிய அலரோ திங்களைப் பாம்புகொண்ட செய்தி போல எங்கும் பரந்துவிட்டது" என்னும் உவமச் செய்தி (1146) அவருடைய வானவியல் அறிவுத்திறனுக்குத் தகுந்த சான்று எனலாம்.

**கலைகள்**

நெடுங்காலத்திற்கு முன்னரேயே இசையும் கூத்தும் பிற கலைகளும் வளர்ந்த நிலைமையைப் பழந்தமிழ் இலக்கியங்கள் பலவாறு பேசும். கலைவளர்ச்சியே மக்களுடைய எண்ண வளர்ச்சியை எடுத்துக்காட்டும். வள்ளுவருடைய உவமைகளில் இசைக்கலையும், கூத்துக்கலையும், சித்திரக் கலையும், சிற்பக்கலையும் இசைக் கருவிகளும் இடம் பெற்றுள்ளன.

பாடலும் பண்ணும் பருந்தும் நிழலும் போல்வன; நெருக்கமான இயைபும் உடையன; ஒன்றோடொன்று

33. குறள், 117.
34. குறள், 957.

இணைந்தும் இழைந்தும் இருப்பன. பண்ணியைபின்றேல் பாடல் வாய்த்தல் இல்லை என்பது மரபு. வள்ளுவர் ஓர் உவமையின் வாயிலாகக் கண்ணோட்டத்தை விளக்க முற்படுகிறார். "பாடலோடு பொருந்துதல் இல்லையானல் இசை பயனுடையதாதல் இல்லை. அதுபோலக் கண்ணோட்டம் இல்லாவிட்டால் கண்களால் யாது பயன்?" என்பது அவர் காட்டும் உவமை விளக்கம் (573). இவ்வுவமை 'பாடற்கு இயைபுடையது பண்' என்பதனை உணர்த்தும்.

இப்பண்ணினை அமைத்துப் பாடுதற்குப் பயன்படும் கருவிகள் பல. அவற்றுள் குழலும் யாழும் முக்கியமானவை. இக்குழலிசையும், யாழிசையும் மக்களுடைய மழலைச் சொல்லிற்கு ஈடாகா (66) என்று கூறுவர் வள்ளுவர். குழலுக்கு ஏற்றபடி யாழை இயக்குவது மரபு. இதனைச் சுட்டவே குழலும் யாழும் என வள்ளுவர் முறைப்படுத்திக் கூறினர் போலும். நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரமும்,

> குழல்வழி நின்றது யாழே யாழ்வழித்
> தண்ணுமை நின்றது தகவே[35]

எனக் கூறும்.

"யாழின் கோடு வளைந்திருப்பினும் இனிய இசையினைப் பயப்பது; கணையின் தோற்றம் நேராயினும் தீமையை விளைவிப்பது" என ஒப்புமை கூறிச் "செயலின் தன்மையால், நன்மையும் தீமையும் கண்டு கொள்க"(279) என்பர் வள்ளுவர். 'அறை பறை அன்னர் கயவர்,' 'அறை பறை கண்ணார்' எனப் பறையினைக் கயவருக்கும் கண்களுக்கும் உவமிக்கிறார் (1076, 1180).

கூத்தாடும் அரங்கிற்கு மக்கள் ஒவ்வொருவராக வந்து கூடிக் குவிவதையும், கூத்து முடிந்ததும் மக்கள் ஒருசேர நீங்குவதையும், செல்வம் சேர்தற்கும், நீங்குதற்கும் உவமை கூறுகிறார் ஆசிரியர் (332). இதனல் மக்கள் கூத்தினை விரும்பி ஆடுகளத்தில் ஒருங்குகூடுவர் என்பது

35. சிலப். அரங். 139-140.

உணர்த்தப் பெறுகிறது. 'பாவைக்கூத்து' (இக்காலத்திய பொம்மலாட்டம்) நடைபெற்றதையும் உவமையால் அறிகிறோம். நாணமில்லாதார் உலகில் இயங்குதல் மரத்தால் செய்த பாவையைக் கயிறுகொண்டு ஆட்டி உயிருள்ளதாக மயக்குதலைப் போன்றது (1020) என்கிறார். மரப்பாவை கயிற்றினால் ஆட்டப்படுவதைப் பிறிதோரிடத்தும் உவமையாகத் (1058) தந்துள்ளார்.

மண்ணால் செய்யப்படுகின்ற பாவையினைப் போன்றது நுழை புலம் இல்லான் எழில் நலம் (407). அக்காலத்திய சிற்பத்திறனும் இதனால் பெறப்படுகின்றது. மண்ணையும் மரத்தையும் பயன் படுத்திப் பண்டைக் காலத்தார் சிற்பம் செய்தனர் என்பதும் இதனால் விளங்கும்.

**பழக்க வழக்கங்கள்**

உவமையால் உணர்த்தப்படும் பழக்க வழக்கங்கள் அக்கால மக்கள் நிலையினையும், நாகரிக நிலையினையும் எடுத்தியம்புகின்றன. பிடிச்சோற்றைக்கண்ட காக்கை கரைந்து தன் இனத்தைக் கூவி அழைத்து உண்பதை வள்ளுவர் உவமையாக்கி, "மக்களும் காக்கையைப் போன்று சுற்றத்தை அழைத்து விருந்தோம்பி வாழவேண்டும்" என அருளிச்செய்கின்றார் (527). காக்கைக்குப் பலிச்சோறிடுதல் தொன்றுதொட்டு இருந்துவரும் ஒரு வழக்கமாகும். காக்கை விருந்தின்றி உண்ணாது என்ற கருத்தே இறுதியில் காக்கை என்றதும் விருந்து என்ற எண்ணத்தினையும் உடன் தோற்றியிருக்கலாம். 'காக்கை கரையின் விருந்து வரும்' என்னும் நம்பிக்கையாக அது நாளடைவில் மலர்ந்திருக்கலாம். காக்கை பாடினியார் நச்செள்ளையார் பாடிய குறுந்தொகைப்பாட்டும் இக்கருத்தினைக் கூறும்:

> விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே[36]

என்பது அப்பாடல் தொடர். இதனையே பிற்காலத்தில் வாழ்ந்த பெருஞானி தாயுமான சுவாமிகளும் போற்றி

36. குறுந்தொகை, 210.

உரைப்பர்[37]. அரங்கில் வட்டாடுதலையும் (401), அவையில் கூத்தாடுதலையும் (332), கழகத்தில் சூதாடுதலையும் (931, 940) உவமையால் விளக்குவதால் அக்காலத்தில் இவை இருந்தமையும் புலனும். குன்றின் மேல் யானைப் போர்காணுதலையும் (758), கள் உண்பாரின் நிலையினையும் (926, 1090, 1145) உவமை கூறும். ஆறலைகள்வர் இருந்ததையும் வேறோர் உவமை அறிவிக்கும் (552). தாழால் கதவை அடைத்துக் காத்துக் கொள்ளுதலும் (71), தீக்காய்தலும் (691), குளத்தில் கரைபோட்டு நீரைத் தேக்குதலும் (523), காலைக் கழுவிப் படுக்கையில் புகுதலும் (840), புறந் தூய்மைக்காக நீராடுதலும் (298), கண்ணுக்கு மை எழுதுதலும் (1127, 1285), புதலில் மறைந்து புள்ளைப் பிடித்தலும் (274) போன்ற செய்திகள் குறளில் காணப்பெறும் உவமைகளால் பெறப்படுகின்றன. இன்னும் பல்வேறு பழக்க வழக்கங்களையும் செய்திகளையும் தருவனவாக ஆங்காங்கே பல உவமைகள் மலிந்து கிடப்பதையும் காணலாம்.

**உவமைச் செய்திகள் பல**

இதுகாறும் எடுத்துக்காட்டியவை போன்றே இன்னும் பற்பல காட்சிகளும் கருத்துகளும், குறட் பாடல்களிலே அணியில் திகழும் மணிபோல ஒளிவீசி, நம் உள்ளத்தைக் கவர்வனவாயுள்ளன. ஒவ்வொரு பொருளுக்கும் வள்ளுவர் வழங்கிய உவமை விளக்கங்களில் இன்னும் எத்தனையோ கருத்துப் புதையல்களைக் கற்பார்தம் நிலைமைக்கு ஏற்ப அறிதல் கூடும். மிகப்பலவாகவுள்ள உவமைப் புதையல்களுள் தெளிவாக அமைந்த சிற்சில உவமைக் கருத்துகளே இப்பகுதியில் விளக்கப்பெற்றன. வள்ளுவர் தரும் உவமையும் பொருளும் ஒப்புக் கண்டு மகிழ்தற்கு இந்த அத்தியாயத்தின் இறுதியில் தரப்பட்டுள்ள உவமை அகராதி (பக். 137) துணைபுரிவதாகும்.

37. காக முறவு கலந்துண்ணக்
கண்டீர்; அகண்டா காரசிவ
போக மெனும்பே ரின்பவெள்ளம்
பொங்கித் ததும்பிப் பூரணமாய்
ஏக வுருவாய்க் கிடக்குதையோ!
இன்புற் றிடநாம் இனியெடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச்
சேரவாரும்! செகத்தீரே! —தாயுமானவர் பாடல்.

## உவமைத் தொகுதி

நமது இலக்கியச் செல்வங்களிலே புலவர் பெருமக்கள் வழிவழியாக எடுத்துக்காட்டிவரும் உவமை மணிகளை யெல்லாம் ஒருங்கு திரட்டிப் பார்த்தால், அவர்களின் நுண்மாண் நுழைபுலமும், நமது நாட்டுப் பழக்க வழக்கம் பண்பாடு முதலியவற்றின் பெருமையும் உணர்தல்கூடும். சங்கத்தொகை நூல்களிலும் பக்தி இலக்கியங் களிலும் இயற்கையோடு இயைந்த உலகியற் காட்சிகள், மக்களின் வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்புடைய பொருள்கள், நிகழ்ச்சிகள் முதலியவை உவமையாகத் தரப்பட்டிருப்பது காணலாம். பிற்காலக் காவியங்களிலும், பிரபந்தங்களிலும் வரவர இயற்கையுணர்வு குறைந்து செயற்கைப் புனைவுகளும், கற்பனைக் கருத்துகளும், புராண வரலாறுகளும் உவமைகளாக இடம்பெறும் இயல்பும் புலனாகிறது.

முக்கியமாக இன்பவாழ்வுக்குத் துணை நிற்கும் மகளிரின் உறுப்புகளை உவமைகளால் வருணித்தலையே எல்லா வகை நூல்களிலும் பரக்கக் காணலாம். மகளிர் உறுப்புகளின் தோற்றத்தையும் கவர்ச்சியையும் எவ்வெவ் வாறெல்லாம் புனைந்துரைக்கலாம் என்பதில் புலவர்களின் கவித்திறம் செல்லுகின்ற பான்மையைப் பல பாடல்களில் காண்கிறோம். இன்பவுணர்ச்சி கருதியோ என்னவோ பெண்பாலார் உறுப்புகளுக்கு இணையாக உவமைகளைத் தொகுத்துப் பார்ப்பதில் முன்னையோர் சிலர் முனைந் துள்ளனர். கி. பி. 14-ஆம் நூற்றாண்டில்[38] வாழ்ந்த வராகக் கருதப்படும் சிவில்லிபுத்தூர் திருவேங்கடையர் செய்த ‘உவமான சங்கிரகம்’ என்னும் நூல் இவற்றுள் சிறப்பாகக் கருதத்தக்கது. இந்நூல் காப்புச் செய்யுளைத் தவிர்த்துப் பதினைந்து நாலடி வெண்பாக்களைக் கொண் டுள்ளது. மகளிரின் கூந்தல் தொடக்கமாகக் காலடி வரை யில் ஒவ்வோர் உறுப்பிற்கும் ஒப்பாகச் சொல்லத் தகுந்த உவமைகளை இதனுள் தொகுத்துத் தருகின்றார் ஆசிரியர்.

38. கந்தையாபிள்ளை, ந. சி., தமிழ் இலக்கிய அகராதி, பக். 21.

இந்நோக்கில்தான் இந்த ஆசிரியர் நூல் செய்துள்ளார் என்பதனைப் பின்வரும் காப்புச் செய்யுளால் அறியலாம்:

வேதத் தமிழ்மாறன் வெற்பனையார் கேசாதி
பாதத் துவமான பண்பெல்லாம்—தாதின்
முருகூர் மலர்க்குழலாய் மூதுரையாற் சொல்வன்
குருகூரனைத் தொழுது கொண்டு.

இப்பாடலில் ஆசிரியர் 'மூதுரையாற் சொல்வன்' என்று குறிப்பிட்டிருப்பதால், இவர் தொகுத்தளிக்கும் உவமைப் பொருள்கள் எல்லாம் முன்னையோர் பாடல்களிற் காணும் மரபை ஒட்டி அமைந்தனவே என்பது தெளிவு.

### இரத்தினச் சுருக்கம்

மேலே சுட்டிய நூலைப்போன்றே புகழேந்திப் புலவரால் செய்யப்பெற்றதாகக் கருதப் பெறும் 'இரத்தினச் சுருக்கம்' என்ற நூலும் வெண்பாவால் அமைந்து உவமைப் பொருள்களைத் தொகுத்து உணர்த்துகின்றது. இதில் மகளிரின் கேசாதிபாத உறுப்புவமைகளோடு வேறு பல செய்திகளும் உள. 12 முதல் 28 வரையுள்ள வெண்பாக்களில் மகளிர் உறுப்பின் இயல்புகளும் அவற்றிற்குரிய உவமைகளும் காணலாம்.ஏனைய பகுதிகளில் சிறப்பாக அகப்பொருட் செய்திகள்சில விளக்கப்பட்டுள்ளன. இதில் ஒருபாட்டு 'ஆடவர்ச் சிறப்புவமை'யும் பேசுகிறது (53).

உணரும் படியே உரைத்தவற்றை எல்லாம்
இணர்மென் தொடையாம் இயல்பால்—துணையெழுத்தால்
சொல்லாயச் சொல்லின் தொகுதிதனைத் தொடுக்க
வல்லார்க் கணிபெறலா மால்[39]

எனவரும் இந்நூலின் இறுதிப்பாடலால் கவிபாடும் புலவர்க்குத் துணையாக உதவும் பொருள்களைத் தொகுத்துக் கூறும் நோக்கில் ஆசிரியர் இதனை இயற்றியுள்ளார் என்பது தெரியவரும். இது பிற்காலத்து எழுந்த பல வகைச் சிறு பிரபந்தங்களில் காணும் மரபுகளை ஒட்டி அமைந்தது எனலாம். இவையெல்லாம் உவமைகளைத் தொகுத்துப்பார்த்தல் பயனுடைத்தாம் என்பதற்கு முன்னோடிகளாக அமைந்தவை.

39. இரத்தினச் சுருக்கம், 71.

## உவமைச் சொல் அகராதி

சென்ற நூற்றாண்டில் வெளிவந்த நூல்களுள் இது ஒன்று (1872). இந்நூலைத் தொகுத்து வெளியிட்டவர் தரங்கம்பாடி என வழங்கும் தரங்கமா நகரம் ந. வ. சுப்ப ராயலு நாயகர் என்பவராவர். நூலின் பெயரை நோக்கிய அளவில், தமிழ்ப் புலவர் பெருமக்கள் பலரும் உரைத்த உவமைகளின் அகராதி என்று தோன்றும். ஆனால், ஆசிரியர் செய்திருப்பது உலக வசனங்களாகிய பழமொழி களின் தொகுப்பேயாகும். பழமொழித் தொகுப்பும் ஒரு வகையில் உவமை போன்றதுதான். உவமைகள் எப்படிப் பொருள்களை விளக்கமாக அறிந்து சுவைக்க உதவு கின்றனவோ அவ்வாறே உலகியல் நடவடிக்கைகளுக்கு விளக்காக அமைந்து, பலகுறிப்புப் பொருள்களையும் உணர்த்துவனவாகப் பழமொழிகள் உள்ளன. பொருள் விளக்கத்திற்காகக் குழந்தைகளுக்குச் சொல்லப்படுகின்ற கதைகளைக்கூட 'உவமானக் கதைகள்' என்பர். எனவே, உவமை என்பது பொருள்களை விளக்கும் கலங்கரை விளக்கம் என்பது தெளிவு. எனவே ஒவ்வொரு நூலகத்தும் காணும் உவமையையும் பொருளையும் தொகுத்து ஒப்பு நோக்குதல் நம் அறிவுக்கு விருந்தாகுமல்லவா?

### உவமை அகராதி

| உவமை | பொருள் | குறட்பா எண் |
|---|---|---|
| அகரம் | இறைவன் | 1 |
| அகழ்வாரைத் தாங்கும் நிலம் | இகழ்வாரைப் பொறுப் போர் | 151 |
| அஞ்சாத யானையையும் சேற்று நிலத்தில் நரி கள் கொன்று விடல் | இடனறியாது வினைதொடங் கும் வலியானை மெலியான் வெல்லுதல் | 500 |
| அஞ்சும் வீரர்க்கு வாளொடு உள்ள தொடர்பு | அவையஞ்சுவோர்க்கு நூலோடு உள்ள தொடர்பு | 726 |
| அடுத்த பொருளைக் காட்டு வது பளிங்கு | நெஞ்சம் கருதியதைக்காட்டு வது முகம் | 706 |

| உவமை | பொருள் | குறட்பா எண் |
| --- | --- | --- |
| அணங்கு | மாதர் | 1081 |
| அமரகத்து வன்கண்ணர் | குடிசிறக்கப் பிறரைத் தாங்க வல்லவர் | 1027 |
| அமிழ்து | மக்கள் சிறுகை அளாவிய கூழ் | 64 |
| அரங்கின்றி வட்டாடுதல் | நிரம்பிய நூலறிவின்றிப் பேசுதல் | 401 |
| அரத்தின் கூர்மை | அறிவுக் கூர்மை | 997 |
| அரம் பொருத பொன் தேய்தல் | உட்பகை உற்றகுடி தேய்தல் | 888 |
| அழல் | பிரிந்த மகளிர்க்கு மாலைப் பொழுது | 1228 |
| அழித்துப் பிழிந்தால் பயன்படும் கரும்பு | துன்புறுத்தலால் பயன்படுவர் கீழ்மக்கள் | 1078 |
| அறையப்படும் பறை | கயவர் | 1076 |
| அன்பு ஈன்ற குழந்தை அருள் | செல்வச்செவிலி பொருள் | 757 |
| அன்பு கொள்ளாது பெறுகின்றபொருளைக்கொள்ளும் விலை மகளிர், கள்வர் | பயனை அளந்து பார்க்கும் நண்பர் | 813 |
| அனிச்சப்பூவின் மென்மை | பெண்ணின் மென்மை | 1111 |
| அனிச்சம் மோப்பக் குழைதல் | விருந்து நோக்கக் குழைதல் | 90 |
| அனிச்ச மலர், அன்னப் பறவையின் இறகுகளின் மென்மை | மாதர் அடியின் மென்மை | 1120 |
| ஆட்டுக்கடா தன் பகையைத் தாக்கப் பின் வாங்குதல் | ஊக்கமுடையான் ஒடுங்கியிருத்தல் | 486 |
| ஆமை (யின் உறுப்புகள் அடக்கம்) | ஐம்பொறிகளையும் அடக்கியாளுதல் | 126 |

| உவமை | பொருள் | குறட்பா எண் |
|---|---|---|
| ஆய்மயில் | மாதர் | 1081 |
| ஆராய்ந்தறியும் அறிவு இல்லாதவர்க்கு அணங்கின் தாக்கு | வஞ்சம் நிறைந்த பொது மகளிரின் சேர்க்கை | 918 |
| இடும்பைக்குக் கொள் கலம் | குடிக்குக் குற்றம் வாராமல் காப்பவன் உடம்பு | 1029 |
| இயற்கை மணம் (வெறி நாற்றம்) | மகளிர் மணம் | 1113 |
| இருட்டறையில் ஏதில் பிணந்தழுவல் | பொருட்பெண்டிரின் பொய்ம்மை முயக்கம் | 913 |
| இருந்தும் இறந்தார்க்கு ஒப்பாவர் | அவையஞ்சிக் கற்றது உரையாதார் | 730 |
| இழிவறிந்து உண்பான்-கண் இன்பம் | கழிபேரிரையான்கண் நோய் | 946 |
| இழிவு வரத்தக்க துன்பங்களைச் செய்யினும் கள் உண்போர் மேலும் மேலும் விரும்பும் கள் | பிரிவுத்துன்பம் வரினும் மேலும் மேலும் விரும்பும் காதலனின் மார்பு | 1288 |
| இறந்தாரை எண்ணிக் கணக்கிடுதல் | துறந்தாரின் பெருமையை அளவிட்டுக் கூறுதல் | 22 |
| இறைப்பவர்க்கு ஊற்று நீர் மிகுதல் | மறைப்பவர்க்குக் காம நோய் மிகுதல் | 1161 |
| இனிய கனி | இன்சொல் | 100 |
| உடம்பிற்கும் உயிர்க்கும் உள்ள தொடர்பு | நங்கைக்கும் நம்பிக்கும் உள்ள தொடர்பு | 1122 |
| உடை நெகிழ்ந்தவன் கை உடனே விரைந்து ஆடையைச் சரிசெய்தல் | நண்பனுக்கு இடுக்கண் உற்றதும் விரைந்து களைதல் | 788 |
| உண்டாரை மகிழ்விக்கும் கள் | கண்டாரை மகிழ்விக்கும் காமம் | 1090 |
| உணவினும் உண்டது அறல் இனிது | புணர்தலின் ஊடல் இனிது | 1326 |
| உணவில் சிறிதளவு உப்பு மிகுதியாதல் | புலவியை நீட்டித்தல் | 1302 |

| உவமை | பொருள் | குறட்பா எண் |
|---|---|---|
| உணவுக்கு அளவோடு அமைந்த உப்பு | கலவி இன்பத்திற்கு அளவோடு அமைந்த புலவி | 1302 |
| உயர்வில்லாத கீழ் மக்கள் ஆழ்ந்துகிடக்கும் நரகம் | வரைவிலா மாணிழையார் மென் தோள் | 919 |
| உயிர்க்குச் சாவும் வாழ்வும் | கணவனுக்கு மனைவியைப் பிரிதலும் கூடுதலும் | 1124 |
| உயிர் வாழ்கின்றவர்க்கு மழை பெய்து மேகம் காப்பாற்றும் தன்மை | விரும்புகின்றவர்க்குக் காதலர் அளிக்கும் அன்பு | 1192 |
| உயிரை உடம்பினின்றும் பிரிக்கும் வாள் | நிலையாமைத் தன்மை உடைய நாள் | 334 |
| உருள் பெருந் தேர்க்கு அச்சாணி | வினைத்திட்பம் பொருந்திய தோற்றத்தால் சிறியவர் | 667 |
| உலகத்தார்க்கு ஆணி | உழுவார் | 1032 |
| உலகத்தைப் புரக்கும் மேகம் உற்ற மிகுந்த வறுமை | சீருடைச் செல்வர் பெற்ற சிறு வறுமை | 1010 |
| உலகு வான் நோக்கி வாழ்தல் | குடி மன்னவன் கோல் நோக்கி வாழ்தல் | 542 |
| உள்ளக் களிப்பையும் காண மகிழ்ச்சியையும் தராதது கள் | உள்ளக் களிப்பையும் காண மகிழ்ச்சியையும் தருவது காமம் | 1281 |
| உள்ளூர்ப் பயன்மரம் பழுத்தல் | ஒப்புரவாளனிடம் செல்வம் சேர்தல் | 216 |
| உறக்கம் | இறப்பு | 339 |
| ஊரார் நீருண்ணும் குளம் | பேரறிவாளன் செல்வம் | 215 |
| ஊன் உயிருக்கு இருப்பிடம் | சால்பு நாணத்திற்கு இருப்பிடம் | 1013 |
| எரி | இன்மை | 308 |
| எரிமுன்னர் வைக்கோற் போர் | வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை | 435 |

| உவமை | பொருள் | குறட்பா எண் |
|---|---|---|
| எரியால் சுடப்பட்டவர் தப்ப முடியாமை | பெரியாரைப் பிழைத்தவர் தப்ப முடியாமை | 896 |
| ஏரு (காதல் வளர்க்கும் ஏரு) | ஊராருடைய அலர் தூற்றல் | 1147 |
| எல்லா உறுப்புகளும் பயனாகும் மரம் | பெருந்தகையான் செல்வம் | 217 |
| எலி | எளியவர் | 763 |
| எலிக்கூட்டத்தின் பெரும் ஆரவார ஒலி | வலியற்ற பகைவரின் வெற்று ஆரவாரம் | 763 |
| எலும்பில்லாத புழுவை வெயில் காய்ந்து வருத்துதல் | அன்பில்லாத உயிரை அறம் வருத்துதல் | 77 |
| எழுத்திற்கு முதல் அகரம் | உலகிற்கு முதல்வன் இறைவன் | 1 |
| எள்ளின் பிளவு | உட்பகையின் சிறுமை | 889 |
| எறிவதற்கு உரிய பட்டடை | அகத்தே பொருந்தாது புறத்தேபொருந்திய நட்பு | 821 |
| ஏமாப்பில் தோணி | இரவு (இரத்தல்) | 1068 |
| ஏற்றின் நடை | ஆண்மகனின் பீடுநடை | 59 |
| ஒழுக்க நெறியிலிருந்து நிலைதளர்ந்து கெடுதல் | அறிந்து உணர்கின்றவரின் அவைக்களத்தின் முன்னே குற்றப்படுதல் | 716 |
| கடல் | காம இன்பம் | 1166 |
| கடும் புனல் | காமம் | 1134, 1167 |
| கண் | நுண்ணியம் என்பார் அளக்கும் கோல் | 710 |
| ,, | காதலர் | 1267 |
| கண்களுக்கு மைதீட்டும் போது தீட்டும் கோலைக் காணாதிருத்தல் | காதலனைக் கண்ட போது அவனிடம் குற்றங் காணாதிருத்தல் | 1285 |
| கணை, யாழ்களின் தோற்றமும் பயனும் | உருவுகண்டு தெளியாது செயல் கண்டு தெளிதல் | 279 |

| உவமை | பொருள் | குறட்பா எண் |
|---|---|---|
| குலத்தைக் கெடுப்பது ஒழுக்கக் கேடு | நலத்தைக் கெடுப்பது நாணின்மை | 1019 |
| குழல் யாழ்களின் இனிய இசை | மக்கள் மழலைச் சொல் | 66 |
| குழலோசை | பிரிந்த தலைவிக்குக் கொல்லும் படை | 1228 |
| குன்று விளக்கு | குடி | 601 |
| குன்றிமணி | அகத்தே கறுத்துப்புறத்தே செம்மையாய்த் தோற்றமளிப்போர் | 277 |
| குன்றின் உயர்ச்சி | பெரியாரின் உயர்ச்சி | 898, 965 |
| குன்றின்மேல் ஏறி யானைப் போர் காணுதல் | பொருள் தன் கையகத்து இருக்கச் செயல் செய்தல் | 758 |
| கூடு தனித்திருக்க அதை விட்டு நீங்கும் பறவை | உடம்பு தனித்திருக்க அதை விட்டு நீங்கும் உயிர் | 338 |
| கூத்தாட்டவைக்குக் கூட்டம் சிறுகச்சிறுகச் சேர்தல் | ஒருவரிடம் செல்வம் சேர்தல் | 332 |
| கூத்து முடிந்ததும் கூட்டம் ஒருங்கே கலைதல் | போகும் காலத்துச் செல்வம் ஒருங்கே நீங்கிப் போதல் | 332 |
| கூற்றத்தைக் கையால் விளித்தல் | ஆற்றுவார்க்கு ஆற்றாதார் இன்னா செய்தல் | 894 |
| கூற்றம், பிணை (பெண் மான்) | மடவரல் நோக்கம் | 1085 |
| கெடு நீராரின் காமக் கலன் | நெடுநீர், மறவி, மடி, துயில் | 605 |
| கொக்கினைப் போல் அமைதியுடன் இருத்தல் | காலம் வாய்க்காதபோது செயலற்றிருத்தல் | 490 |
| கொக்கு இரையைக் கண்டதும் குத்தியெடுத்தல் | காலம் வாய்த்தபோது தவறாமல் செய்து முடித்தல் | 490 |
| கொலைக் கருவியைக் கொண்டார் நெஞ்சம் | ஊன் உண்டவரின் மனம் | 253 |

| உவமை | பொருள் | குறட்பா எண் |
|---|---|---|
| கொலைக் களத்து வரும் ஏதிலர் | காதலர் இல்லாத இடத்து வரும் மாலையின் வருகை | 1224 |
| கொலைத் தொழில் புரிவோன் | அல்லவை செய்தொழுகும் வேந்தன் | 551 |
| கொலையின் துன்பம் | வறுமையின் துன்பம் | 1048 |
| கொழுப்பு தீயில் உருகுதல் | நெஞ்சு உருகுதல் | 1260 |
| கொன்றாற் போன்ற துன்ப நிலை | இன்னாவின் தன்மை | 109 |
| சுடச் சுடப் பொன் ஒளிதரும் | தவம் செய்வோரைத் துன்பம் வருத்தவருத்த மெய்யுணர்வு மிகும் | 267 |
| சுடப்படாத பசிய மட்கலத்துள் நீரை வைத்துக் காப்பாற்றுதல் | வஞ்சனைச் செயல்களால் பொருள் சேர்த்துக் காப்பாற்றுதல் | 660 |
| செத்தவர் | நம்பியவருடைய மனைவியிடத்துத் தீமை செய்வோர் | 143 |
| செப்பின் புணர்ச்சி | உட்பகை உண்டான குடி புறத்தே கூடியொழுகினும் அகத்தே கூடாமை | 887 |
| செய்தியை அறிவிக்கும் பறை | துன்பத்தை வெளிப்படுத்தும் கண்கள் | 1180 |
| செல்வச் செவிலி | பொருள் | 757 |
| செல்வத்தைத் தேய்க்கும் படை | குடிகள் அல்லலுற்று ஆற்றாது அழுத கண்ணீர் | 555 |
| செல்வம் நீங்காதிருக்கக் கட்டும் கயிறு | பருவத்தோடு ஒட்ட ஒழுகல் | 482 |
| சேர்ந்தாரைக் கொல்லி (நெருப்பு) | சினம் | 306 |
| சேற்று நிலத்தில் ஊன்று கோல் | ஒழுக்கமுடையார் வாய்ச் சொல் | 415 |
| சொல்லேருழவர் பகை | வில்லேருழவர் பகை | 872 |

| உவமை | பொருள் | குறட்பா எண் |
|---|---|---|
| தலையினின்றும் விழுந்து தாழ்வுற்ற மயிர் | தன்னுடைய உயர்ந்த நிலையினின்றும் தாழ்ந்த மாந்தர் | 964 |
| தலைவனின் பிரிவால் ஊடல் கொண்ட மனைவி | நிலத்திற்கு உரியவனால் சரியான முறையில் கவனிக்கப் படாத நிலம் | 1039 |
| தளிர் | மகளிர் மேனி | 1113 |
| தன் நிழல் விடாது தன்னுடன் தங்கி யிருத்தல் | தீயவை செய்தார் தவறாது கெடுதல் | 208 |
| தாமரைக் கண்ணான் உலகின் பேரின்பம் | தாம்விரும்பும் காதலியரின் தோள் மேல் துயிலும் இன்பம் | 1103 |
| தானே வருத்தும் அணங்கு ஒருவகைப் படையையும் கொண்டு தாக்குதல் | வனப்பால் தலைவனை வருத்தும் தலைவி அவன் பார்வைக்கு எதிராகநோக்கி வருத்துதல் | 1082 |
| தானே வளரும் பயிருள்ள பாத்தியில் நீரைச் சொரிதல் | உணரும் தன்மை உடையார் முன் பேசுதல் | 718 |
| திங்கள் | மாதர் முகம் | 1116-1119 |
| திங்களைப் பாம்பு கொண்ட செய்திபோல் பரவுதல் | அலராகிய செய்தி பரவுதல் | 1146 |
| தீக்காய்வார் போல் அகலாது அணுகாது இருத்தல் | அரசரைச் சார்ந்தொழுகல் | 691 |
| தீயினால் சுட்ட புண் | நாவினால் சுட்ட வடு | 129 |
| துஞ்சினார் செத்தார்க்கு நிகர் | கள் உண்பவர் நஞ்சு உண்பவருக்கு நிகர் | 926 |
| தும்மல் இயல்பாக வெளிப்படல் | காதல் இயல்பாக வெளிப்படல் | 1253 |
| துலாக்கோல் | நடுவுநிலைமை | 118 |

| உவமை | பொருள் | குறட்பா எண் |
|---|---|---|
| துன்பத்தால் வருந்திய வரை மேலும் துன்ப நோய் வருத்துதல் | பிணங்கியவரை ஊடலுறுத்தித் தழுவாதிருத்தல் | 1303 |
| துன்பம் படப்பட மேலும் வாழ விரும்பும்—உயிர் | இழத்தொறூஉம் சூதாடலைக் காதலிக்கும்—சூதன் | 940 |
| துனி (வெறுப்பு) அரும்பித் துன்பம் வளரும் நிலை | பனி அரும்பி நடுக்கம் தரும் மாலை | 1223 |
| தூய்மை யல்லாதவற்றை மிதித்த கழுவாத காலைப் படுக்கையில் வைத்தல் | சான்றோர் குழாத்துப் பேதை புகல் | 840 |
| தூய்மையில்லாத முற்றத்தில் அமிழ்தத்தைச் சிந்துதல் | அவையறியாது தம் இனத்தவர்அல்லார் முன் பேசுதல் | 720 |
| தெய்வம் | ஐயப்படாது அகத்தது உணர்வான் | 702 |
| தெருளாதான் மெய்ப்பொருள் காணுதல் | அருளாதான் அறஞ் செய்தல் | 249 |
| தேவர் | கயவர் | 1073 |
| தேவருலகம் தரும் இன்பம் | ஊடல்தரும் இன்பம் | 1323 |
| தேன் கலந்த பால் | பணிமொழி வாலெயிறு ஊறிய நீர் | 1121 |
| தொட்டால் சுடும் நெருப்பு | நீங்கினல் சுடும் காமநோய் | 1159 |
| தொழுத கையினில் படை | பகைவர் அழுத கண்ணீரில் தீமை | 828 |
| தோண்டத் தோண்ட நீர் பெருகும் மணற் கேணி | கற்கக் கற்க வளரும் அறிவு | 396 |
| நடுவூரில் உள்ள நச்சு மரம் | உலகோரால் நச்சப்படாதவன் செல்வம் | 1008 |
| நந்தா விளக்கு | பொருள் | 753 |
| நல்லவரிடத்துப் பொருந்திய வறுமை | கல்லாதவரிடத்து உளதாய செல்வம் | 408 |
| நிலத்தின் இயல்பால் நீர் திரிதல் | இனத்தின் இயல்பால் அறிவு திரிதல் | 452 |

| உவமை | பொருள் | குறட்பா எண் |
| --- | --- | --- |
| நிலத்தை அறைந்தவனுடைய கை தவறாமல் அதனை உறுதல் | சினத்தைப் பொருளெனக் கொண்டவன் அழிதல் | 307 |
| நிலத்தின் தன்மையைக் காட்டும் முளை | குடிப் பிறப்பைக் காட்டும் வாய்ச்சொல் | 959 |
| நிலத்தோடு நீர் பொருந்திய தன்மை | உள்ளம் பொருந்திய காதல் | 1323 |
| நிழலும் நீரும் இன்னல் தருவன நோய் தரும் தன்மை | சுற்றத்தாருள்ளும் துன்பம் தரும் தன்மை | 881 |
| நீர் | அன்னையின் கடுஞ்சொல் | 1147 |
| நீர், நிழலை அடுத்திருப்பது இனிமையானது | புலவி, அன்பு செலுத்துவோரிடத்து இனிமையானது | 1309 |
| நீரில் பிறவற்றை வெல்லும் முதலையை நிலத்தில் பிற உயிர்கள் வெல்லுதல் | இடனறிந்து வினைகளைத் தொடங்குதல் | 495 |
| நீரில் மூழ்கிய ஒருவனைக் கை விளக்குக் கொண்டு தேடுதல் | கள்ளுண்டு களித்தான் ஒருவனைக் காரணங்காட்டித் தெளிவித்தல் | 929 |
| நுனிக் கொம்பர் ஏறியவரின் உயிர்க்கு இறுதி | எல்லைமீறி வினையாற்றலால் அடையும் துன்பம் | 764 |
| நூற்பொருள்களை அறிய அறிய உணரப்படும் அறியாமை | மகளிரிடம் பொருந்தப் பொருந்தத் தெரியவரும் காதல் நிறைவு பெருமை | 1110 |
| நெடுந்தேர் கடலில் ஓடாமையும் நாவாய் நிலத்தில் ஓடாமையும் | இடனறிந்து வினைமேற் செல்லுதல் | 496 |
| நெய்யால் நெருப்பை அவிக்க முயலுதல் | அலர் கூறிக் காமத்தை அடக்க முயலுதல் | 1148 |
| பக்கத்தில் எழுபது கோடிப் பகைவர் | பழுதெண்ணும் மந்திரி | 639 |
| பகையகத்துப் பேடிகை ஒள்வாள் | அவையஞ்சுபவன் கற்ற நூல் | 727 |

| உவமை | பொருள் | குறட்பா எண் |
|---|---|---|
| பகைவரின் சொல் வணக்கம் தீமை தரும் | வில் வணக்கம் தீமை தரும் | 827 |
| பசு புலியின் தோலைப் போர்த்துக் கொண்டு மேய்தல் | மன அடக்கம் இல்லாதவன் தவக்கோலம் கொண்டிருத்தல் | 273 |
| படை கொண்டார் நெஞ்சம் | ஊன் உண்டார் மனம் | 253 |
| பண்பால் கயவர் | தோற்றத்தால் மக்கள் | 1071 |
| பயன் மரம் பழுத்தல் | நற்பண்பு உடையானிடம் செல்வம் சேர்தல் | 216 |
| பயிர் | காமநோய் | 1147 |
| பயிரைக் காப்பாற்ற உழவன் களையினைக் களைதல் | மக்களைக் காப்பாற்றக் கொலைத் தண்டனையினால் அரசன் கொடியாரை ஒறுத்தல் | 550 |
| பயிலப் பயில நூல்தரும் இன்பம் | பண்புடையாளர் தொடர்பு தரும் இன்பம் | 783 |
| பலருடைய பகையைத் தேடிக் கொள்ளுதல் | நல்லாருடைய தொடர்பைக் கைவிடுதல் | 450 |
| பறவையும் கூடும் | உயிரும் உடம்பும் | 338 |
| பன் மாயக்கள்வன் பணிமொழி | பெண்மை உடைக்கும் படை | 1258 |
| பாடலோடு இயைபில்லாத இசை | கண்ணோட்டம் இல்லாத கண் | 573 |
| பாம்பு | வலியவர் | 763 |
| பாலை நிலத்தில் பட்ட மரம் தளிர்த்தல் | அகத்தில் அன்பு இல்லாமல் வாழும் வாழ்க்கை | 78 |
| பிணி | நாண் இல்லாதவரின் பீடு நடை | 1014 |
| பித்துப் பிடித்த ஒருவன் கள்குடித்து மயங்குதல் | பேதை பொருள் பெற்று மயங்குதல் | 838 |
| பிறவி வழியை அடைக்கும் கல் | விடாமல் செய்கின்ற அறம் | 38 |

| உவமை | பொருள் | குறட்பா எண் |
|---|---|---|
| புல்லாங்குழல் | அழல் போன்ற மாலைப் பொழுதின் தூதும், கொல்லும் படையும் | 1228 |
| புலி ஊக்க மிகுதியால் பருத்த யானையைத் தாக்கி அச்சுறுத்தல் | ஊக்கம் உடையோர்பெருஞ் செயலையும் செய்தல் | 599 |
| பெண் மான் பார்வை | மடநோக்கு (இளமைப் பார்வை) | 1089 |
| பெருஞ் செல்வத்தின் நோய் | தானும் நுகராது தக்கார்க்குக் கொடுத்தும் வாழாதவன் | 1006 |
| பேடியின் கையில் கொண்ட வாளாண்மை | தாளாண்மை இல்லாதவன் வேளாண்மை | 614 |
| பேய் கண்டு காத்திருக்கும் செல்வம் | செவ்வி அரியனும் இன்னா முகத்தினையுமுடையானது செல்வம் | 565 |
| பொது மகளிரின் மனம் | கூடா நட்பினரின் கேண்மை | 822 |
| பொருளில்லார்க்கு இவ்வுலக மில்லாதிருத்தல் | அருளில்லார்க்கு அவ்வுலக மில்லா திருத்தல் | 247 |
| பொறாமை உடையவனிடத்தில் ஆக்கம் இல்லாமை | ஒழுக்கமில்லாதவனுடைய வாழ்வில் உயர்வு இல்லாமை | 135 |
| பொன்னைப் பொதிந்து போற்றுதல் | பொறுத்தாரைப் பேணிப் போற்றுதல் | 155 |
| போர்க்களத்து வீரனைத் தள்ளி விட்டோடும் குதிரை | துன்பக்காலத்து ஒருவனை நீங்கும் நட்பினர் | 814 |
| மக்கட் பதடி | பயனில் சொல் பாராட்டுவான் | 196 |
| மகளிர் தன்னைத்தான் காத்தொழுகக் கற்பு உளதாதல் | ஒருவன் தன்னைத்தான் காத்தொழுகப் பெருமை உளதாதல் | 974 |
| மகளிரின் உயிரை உண்ணும் இறுதிக் காலம் அல்லது உயிரை யுண்ணும் வேல் | மாலை(க்காலம்) | 1221 |

| உவமை | பொருள் | குறட்பா எண் |
|---|---|---|
| மட்கலம் அறுக்கும் கருவி | உட்பகை | 883 |
| மண்ணோடியைந்த மரம் | கண்ணோடியைந்து கண்ணோடாதவர் | 576 |
| மண்மாண்புனை பாவை | நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில் நலம் | 407 |
| மணியில் விளங்கும் நூல் | காதலியின் அழகினுள் விளங்கும் குறிப்பு | 1273 |
| மதம் பிடித்த யானையின் முகபடாம் | மாதர் முலைமேல் துகில் | 1087 |
| மயிர் நீங்கினல் உயிர் வாழாத கவரி மான் | மானம் அழிய நேர்ந்தால் உயிர் வாழ விரும்பாதார் | 969 |
| மயிலிறகு ஏற்றிய வண்டியானலும் மிகுதி காரணமாக முறிதல் | வலியறியாது அளவின்றி வினையாற்றி அழிதல் | 475 |
| மரப்பாவை கயிற்ருல் இயங்கும் இயக்கும் | இரப்பார் இல்லாத உலகின் இயக்கம் | 1058 |
| மரப்பாவையைக் கயிறு கொண்டு ஆட்டி உயிர் உள்ளதாக மயக்குதல் | நாண் அகத்தில்லார் இயக்கம் | 1020 |
| மரம் கோடரியால் வெட்ட வீழும் | பற்றுக்கொடுத்துத் தாங்க வல்ல நல்லாள் இல்லாத குடி துன்பம் வருத்த வீழும் | 1030 |
| மரம் | மக்கட் பண்பில்லாதவர் | 997 |
| மரங்கள் | ஊக்கம் இல்லாதவர் | 600 |
| மலர்கள் | கண்கள் | 1112, 1119, 1231, 1142 |
| மலர்ந்தும் மணம் வீசா மலர் | கற்றும் பிறர் உணர விரித்துரையாதார் | 650 |
| மழை | கைம்மாறு கருதாத ஒப்புரவாளர் | 211 |

| உவமை | பொருள் | குறட்பா எண் |
| --- | --- | --- |
| மழைத்துளி இல்லாத உலகம் | அருள் இல்லாத அரசு | 575 |
| மாசு | மடி | 601 |
| மிக அழகு பெற்ற மங்கை தனியாகவே வாழ்ந்து முதுமையுறல் | அற்றார்க்கொன்று ஆற்றாதான் செல்வம் | 1007 |
| மீன் இரையான் மறைந்த தூண்டிலை விழுங்குதல் | ஒருவன் சூதினால் வரும் பொருளை விரும்பி ஆடுதல் | 931 |
| முகடி (மூதேவி) | சூது | 936 |
| முகர்ந்தவுடன் அனிச்சப்பூ வாடுதல் | வேறுபட்டு நோக்க விருந்தினர் வாடுதல் | 90 |
| முகை மொக்குள் உள்ள நாற்றம் | காதலியின் புன்முறுவலில் அடங்கிய குறிப்பு | 1274 |
| முத்து | மகளிர் பல் | 1113 |
| முதல் இல்லார்க்கு ஊதியம் இல்லை | துணைவர் இல்லாதவர்க்கு நிலைபேறு இல்லை | 449 |
| முலையிரண்டும் இல்லாதாள் பெண் தன்மையினை விரும்புதல் | கல்லாதான் கற்றவர் அவையின் முன் பேச விரும்புதல் | 402 |
| முழுமதி தேய்தல் | பேதையர் நட்பு குறைதல் | 782 |
| முள் மரத்தினை இளையதாக இருக்கும் போதே களைதல் | பகைவரைத் தொடக்க நிலையிலேயே அழித்தல் | 879 |
| யானை தன் உடம்பு முழுதும் அம்புகளால் புண்பட்டும் தனது பெருமையை நிலை நிறுத்தல் | உரவோர் அழிவுவந்தவிடத்தும் தளராமை | 597 |
| யானை பிழைத்த வேல் ஏந்தல் | அரிய முயற்சியில் தோற்றல் | 772 |
| யானையால் யானையைப் பிடித்தல் | வினையால் வினையை ஆக்குதல் | 678 |
| வண்டியை இழுக்கும் பகடு | விடா முயற்சி உடையான் | 624 |

| உவமை | பொருள் | குறட்பா எண் |
|---|---|---|
| வளர்க்கும் அன்புப் பாத்தியுள் வார்க்கின்ற நீர் | தலைவனை நோக்கித் தலைவி தலை குனிதல் | 1093 |
| வளரும் பிறைமதி | அறிவுடையோர் நட்பின் பெருக்கம் | 782 |
| வறுமை அறிவை அழிக்கும் | மறதி புகழைப் போக்கும் | 532 |
| வாடிய கொடியின் அடிப் பகுதியை அறுத்தல் | ஊடியவரை ஊடலுணர்த்தி அன்பு செய்யாதிருத்தல் | 1304 |
| விசும்பின் மதிக்கண் பலரறியும் வண்ணம் தோன்றும் களங்கம் | குடிப்பிறந்தார்கண் விளங்கும் குற்றம் | 957 |
| விருப்ப மிகுதியால் பருகுவார் போலக் காணும் காட்சி | பண்பிலாரின் தோற்றப் பொலிவு | 811 |
| விரும்பிய பொருள்கள் விரும்பியவாறு தருகின்ற இன்பம் | மலரணிந்த கூந்தலை உடைய மகளிரின் தோள்கள் தரும் இன்பம் | 1105 |
| விலங்கு | கல்லாதவர் | 410 |
| விழிப்பு | பிறப்பு | 339 |
| விளக்கற்றம் பார்க்கும் இருள் | கொண்கன் முயக்கற்றம் பார்க்கும் பசப்பு | 1186 |
| வீட்டிலிருந்து கொண்டு தாம் ஈட்டிய பொருளைப் பகுத்துக் கொடுத்து உண்ணலால் வரும் இன்பம் | பெண்ணினுடைய தழுவலினால் வரும் இன்பம் | 1107 |
| வெள்ளத்தின் அளவாகும் மலரின் நீட்சி | ஊக்கத்தின் அளவாகும் உயர்ச்சி | 595 |
| வெள்ளப் பெருக்கு | இடும்பை மிகுதி | 622 |
| வெள்ளம் இழுத்துச் செல்வதை அறிந்தும் புனலில் பாய்தல் | பயன்படாமை அறிந்தும் ஊடல் கொள்ளுதல் | 1287 |

| | | |
|---|---|---|
| வேடன் புதரில் மறைந்து கொண்டு பறவைகளை வலைவீசிப் பிடித்தல் | தவக்கோலம் பூண்டு தீய செயல்களைச் செய்தல் | 274 |
| வேய் (மூங்கில்) | தோள் | 1113 |
| வேல் | மகளிர் கண் | 1113 |
| வேல் ஏந்தி நின்ற கள்வன் தனிவழிச் செல்வானைப் 'பொருள் கொடு' எனக் கேட்டல் | ஆட்சிச் சின்னமான கோலைத் தாங்கிய மன்னன் குடிகளிடம் பொருள் கேட்டல் | 552 |
| வைத்த கலத்தின் கெடுதியால் நல்ல பால் தன் சுவை கெடல் | பண்பிலான் பெற்ற பெருஞ் செல்வத்தினால் கேடு விளைதல் | 1000 |
| வையத்து அலகை (பேய்) | உலகத்தார் 'உண்டு' என்பது 'இல்' என்பான் | 850 |

# 5. பொருளணி

## மூவகை அலங்காரம்

அணிகளாவன செய்யுள்களில் எடுத்துக்கூறப்படும் பொருள்களை அழகு பெற வெளிப்படுத்தி, அப்பொருள்களின் நயங்களையும், அவற்றால் பெறப்படும் இன்பங்களையும், அவற்றுள் பொதிந்துள்ள உண்மைகளையும் அவரவர் உணர்திறனுக்கு ஏற்பத் தரும் கருவிகளாம். இவ்வகையில் பொருளணிகள் சிறப்பிடம் பெறுகின்றன.

ஆனால், பொதுவாக வடமொழி அலங்கார நூல்களில் மூவகை அலங்கார நெறிகளை வகுத்துரைக்கின்றார்கள். அவையாவன குணவலங்காரம், பொருளலங்காரம், சொல்லலங்காரம் என்பனவாம். இந்த மூன்றனுள்ளும் நடுநாயகமாக வைத்துச் சிறப்பிக்கப் பெறும் பொருளலங்காரங்களே பல்வேறுவகைப் பண்புகளைப் பெற்று, பாடல்களில் பொருட் பொருத்தமுற அமைந்து பல்வேறு வகையில் அழகு செய்கின்றன.

## குணவணி

குணவலங்காரம் என்பது சொற்பொருள் நடை பற்றி உரைப்பதாம். இதனை 'நெறி' என்றும் உரைப்பர்; 'பாகம்' என்றும் கூறுவதுண்டு. அதாவது உண்பதற்குப் பக்குவப் படுத்தப் பெற்ற உணவு வகை போலப் பாடல்களின் அமைப்பைப் பால், முந்திரி, பலா முதலிய பழவகைகளுடன் ஒப்பிட்டுப் பேசும் நிலையே 'பாகம்' ஆகும்.

தண்டியலங்காரம் 'வைதருப்பம்', 'கௌடம்' என இரு வகை நெறிகளை எடுத்துக்காட்டுகிறது. மாறனலங்காரம் உணர்த்தும் நெறி மூன்று.

மன்னியபேர் யாப்பிற்கு வைதருப்பம் வான்கௌடம்
பன்னியபாஞ் சால மெனப்பகுத்து—மின்னிடையாய்
நன்னூல் முழுதுணர்ந்தோர் நாட்டகத்து நாட்டலுறீஇ
முன்னூலுள் கண்டநெறி மூன்று[1]

என்பது மாறனலங்கார விதிப்பாட்டு. இதற்கும் மேலாக வடமொழி நூல்கள் சிலவற்றில் 'லாடீயம்' என்பதனைக் கூட்டி நான்கு என்று கொண்டனர் சிலர். போஜன் இயற்றிய 'ஸரஸ்வதீ கண்டாபரணம்' என்னும் நூல் முற்கூறிய நான்குடனே 'மாகதி', 'அவந்திகா' என்னும் இரண்டையும் சேர்த்து அறுவகை நெறிகளைத் தருகின்றது. 'வைதருப்பம்', 'அவந்திகா' முதலிய பெயர்களை நோக்கிய அளவிலேயே இப்பெயர்கள் அவ்வந் நாட்டின் பெயரடிப் படையில் பிறந்தவை என்பது தெளிவாகும். எனவே, நெறி என்பது ஒவ்வொரு நாட்டிலும் வழங்கும் முறை பற்றித் தோன்றும் பெயர் என்பது விளக்கமாகும். குணவலங்காரங்கள் செய்யுளின் பொதுப் போக்கான நடையமைப்புப்பற்றிக் கூறுவதாதலின், இவை யாப்பு வண்ணம் போன்றவை என்று கொள்ளத்தக்கன[2].

## பொருளணி

திருக்குறளின் உரையாசிரியரான பரிமேலழகர் தம் உரையில் பிற இலக்கணங்கள் பற்றிக் கூறும்போது பெரும்பாலும் சங்கநூல்களையும்[3], அவற்றிற்கு இலக்கண

1. மாறனலங்காரம், 77.
2. 'யாப்புவண்ணம்' பற்றிய செய்திகளை, சென்னைப் பல்கலைக் கழகத் திருக்குறள் ஆராய்ச்சித்துறையின் முதல் வெளியீடாக வந்துள்ள 'திருக்குறள் யாப்பு அமைதியும் பாட வேறுபாடும்' என்னும் நூலுள் பார்க்க, பக். 64-79.
3. குறள், 210, 1120, 1161-அகநானூறு.
குறள், 217, 384, 785-புறநானூறு.
குறள், 1152, 1221-கலித்தொகை.
குறள், 3–சிலப்பதிகாரம்.
குறள், 432-பதிற்றுப்பத்து.

மாகிய தொல்காப்பியத்தையுமே[4] பல இடங்களில் சான்ருகக் கொண்டுள்ளார். ஆனல், அணிகளைக் கூறும் போது பெரும்பாலும் பிற்காலத்தார் நூல்களைப் பின் பற்றிக் கூறியுள்ளார். பிற்காலத்துப் பயின்றுவரும் அணிகளைக் குறட்பாக்கள் பலவற்றில் விளக்கமுறக் காட்டியுள்ளார். பரிமேலழகர் காட்டும் அணிகளுள் உவமை, தொழிலுவமம், பயனுவமம், நிரல் நிறை, பிறிது மொழிதல் என்னும் ஒட்டணி முதலியன தொல்காப்பிய ரால் சுட்டப்பட்டவையே. பிற அணிகள் அனைத்தும் காலவளர்ச்சிக்கேற்ப வேறு பெயர் கொண்டு அமைந்தன வேனும் இவைகளில் பெரும்பாலனவற்றைத் தொல் காப்பியர் கூறும் வேறுபடவந்த உவமத் தோற்றத்திலும், ஏனையுவமத்திலும் அடக்கலாம்.

முந்திய இரண்டு அத்தியாயங்களில் பொருளணி களுக்கு எல்லாம் அடிப்படையான உவமையணி பற்றிய செய்திகளைப் பார்த்தோம். சாலப் பழமையான தொல் காப்பியம் வகுத்துக்கூறிய வினை, பயன், மெய், உரு அமைந்த அணிகளும், உவமையினேடு இயைபுகொண்ட எடுத்துக்காட்டு உவமையும், பின்னர் உவமையும் பொருளும் பற்றிய செய்திகளும், அதனைத் தொடர்ந்து உவம அகராதிப் பட்டியலும் பார்க்கப்பெற்றன. பிற் காலத்து விரித்துரைக்கப்பட்ட அணிகள் பலவற்றுள்ளும் குறள் நூலுள் பயின்றுவரும் பிற அணிகளையும், அவ்வணி நலம் அமையப் பெற்ற குறட்பாக்களையும் இனிக் காண் போம்.

**உருவகம்**

சிறப்புடைய உவமையணியோடு மிகமிக நெருங்கிய தொடர்புடையது உருவகம். இஃது உவமையிலிருந்து தோன்றுவதாம். எனினும் இரண்டிற்கும் வேறுபாடு உண்டு. தொல்காப்பியர் உருவகம் பற்றி வெளிப்படையாகக் குறித் திலர்.

4. 3, 402, 899, 960, 1043 எண்ணுள்ள குறட்பாக்களின் உரை களில் தொல்காப்பிய நூற்பாக்களை எடுத்துக் காட்டி யுள்ளார்.

தண்டியாசிரியர்,

உவமையும் பொருளும் வேற்றுமை யொழிவித்து
ஒன்றென மாட்டின் அஃதுருவகம் ஆகும்[5]

என்று உருவகத்திற்கு விளக்கம் தருகின்றார். உவமைக்கும் பொருளுக்கும் வேற்றுமை தோன்றக் கூறுதல் உவமையணியாகும்; இருபொருளையும் வேறு வேருகக் காணுமல் ஒன்றிலேயே மற்றொன்றைக் காண்பது உருவக அணியாகும் என்பது இவருடைய கருத்து.

தொல்காப்பியர் இவ்வேறுபாட்டைப் பெரிதாகக் கருதவில்லை.

பொருளே உவமம் செய்தனர் மொழியினும்
மருளறு சிறப்பினஃது உவம மாகும்[6]

என்பது தொல்காப்பியர் கூறும் நூற்பாவாகும். பேராசிரியர் காலத்திலேயே உருவகம் வழக்கில் பயிலப் பெற்றது என்பதனை அவர் இந்நூற்பாவிற்கு எழுதும் விளக்கத்தினின்றும் அறியலாம்.[7]

கருத்துக்கு நயமும் செவிக்கு இனிமையும் தந்து சொல்லாலும் பொருளாலும் அழகு படுத்துவது இந்த உருவகம். கவிதை சிறக்கக் காரணமாவதும் இதுவே. இவ்வுருவகம்

5. தண்டி, 35.
6. தொல், உவம. 9.
7. இனிப் பொருளினை உவமமாக்கி உவமையை உவமிக்கப் படும் பொருளாக்கி மயங்கக் கூறுங்காலும் அஃது உவமம் போல உயர்ந்ததாக்கி வைக்கப்படும் என்றவாறு.

“வருமுலை யன்ன வண்முகை யுடைந்து
திருமுக மவிழ்ந்த தெய்வத் தாமரை”
—சிறுபாண். 72-3.

என்றவழி, வருமுலையுந் திருமுகமும் ஈண்டு உவமையாகி முகையும் பூவும் பொருளாயின; ஆண்டு முலையும் முகமும் உயர்ந்தவாகச் செய்தமையின் அவையே உவமமாயின.

இவை உவமத் தொகையாங்கால் ‘முலைக் கோங்கம்’, ‘முகத்தாமரை’ எனப்படும். இவற்றை ‘வேறு உருவகம்’ என்றும் பிறர் மயங்குப.

உவமைக்குப் பின்னரே தோன்றியிருத்தல் வேண்டும். உவமை நன்கு வழக்கில் பயிலப்பயிலச் சொல்லுவதிலும் சுருக்கம் தோன்றியிருக்கலாம். உவம உருபுகளையும் பிறவற்றையும் விரித்துச் சொல்லுவதைக் காட்டிலும் தொகுத்தும் சுருக்கியும் சொல்லுவதில் ஆற்றலும் அழகும் இனிமையும் இருப்பதாக உணர்ந்தனராதல் வேண்டும். இங்ஙனம் கூறிவந்த உவமத்தொகைகளும் சுருங்கி இறுதியில் உருவகம் ஆயிற்று என்பர். மேனாட்டறிஞர் ரிட்லே என்பாரும், "உருவகம் என்பது அடக்கிச் செறித்த உவமையே" என்று கூறுவர்.[8] உருபின்றிக் கூறும் சொற்கள் மிகுந்த வன்மையும் பொருள் ஆழமும் உடையனவாக இருப்பதை அறிந்தனர். கரும்புச்சாறு திரண்டு பாகாகிக் கற்கண்டு நிலையைப் பெறும் பொழுது கற்கண்டு சுவை மிகுந்து காணப் பெறுவது போலவே உவமையும் சுருங்கி, அடங்கி உருவகமாக வெளிப்படுங்கால் அந்த அடக்கத்தில் புதிய ஆற்றலும் சுவையும் பிறப்பது ஒரு விந்தையே ஆகும்.[9]

ஒரு பொருளோடு நேரடியாகப் பொருந்தாத அல்லது நேர்ப்பொருள் சாராத பொருளையோ, பண்பையோ அதற்குப் பொருந்துவதைப் போன்று ஒப்புமையாக்கத்தாலும், உருவ அமைப்பு முறையாலும் சுட்டிக் கூறுவது உருவகமாகும். இவ்வாறு அஃது ஓர் அழுத்தமான ஒப்புமை ஆக்கமாக அமைகிறது. அஃது உவமை என்ற வடிவத்தினை உள்ளுறையாகக் கொண்டு வெளிப்படுகிறது என்பர்.[10]

கருத்து விளக்கமும், கவிதைக்கு அழகும் தருகின்ற இத்தகைய உருவகங்கள் பிற்காலத்தே கவிஞர்களால் நன்கு போற்றப்படவில்லை.

8. Ridley, M. R. : Poetry and the Ordinary Reader, p. 64, G. Bell and Sons Ltd. London, 1930.

9. சுப்பு ரெட்டியார், ந. : கவிதை அனுபவம், பக். 216, கழகப் பதிப்பு, 1961.

10. Encyclopaedia Britannica, Vol. 15 p. 328, 1960.

பன்னிரண்டாம் நூற்றுண்டுவரை தோன்றிய இலக்கியங்கள் உருவகம், உவமை என்ற இரண்டையும் மிகுதியாகப் பயன்படுத்தி வந்துள்ளன. அதன் பின்னர்த் தோன்றிய இலக்கியங்கள் புதிய உவமை உருவகங்களைத் தோற்றுவிக்காமல் பழையன வற்றையே கடன் கொண்டன.[11] சூழ்நிலை மாறுவதற்கேற்ப உவமை உருவகங்களைப் படைத்தால்தான் கவிதைகள் சிறந்து விளங்கும் என்பதனைக் கூறவும் வேண்டுமோ?

"பிற அணிகளில் காணமுடியாத நடைச் சிறப்பு, தெளிவு, அழகு ஆகியவற்றைக்கொண்டு உருவகம் கவிதையைக் கவினுறச் செய்கிறது. உருவகத்தைப் பயன்படுத்தும் முறையை ஒருவர் மற்றொருவருக்கு எடுத்துரைப்பதின் மூலம் கற்பிக்க இயலாது. சிறப்பு அடைகளைப் போன்று உருவகங்களும் மிகப் பொருத்தம் உடையனவாக இருக்க வேண்டும்!" என்று உருவகத்தின் சிறப்புகளை அரிஸ்டாட்டில் கூறியுள்ளார்.[12]

இத்தகைய பண்புகளை எல்லாம் வள்ளுவருடைய குறட்பாக்களிலே நாம் பரக்கக் காணலாம்.

## குடிவிளக்கும் மடிமாசும்

வாழ்வு வளமாக அமைய வேண்டுமெனில் ஊக்கமும் முயற்சியும் ஒருவனுக்கு மிக மிகத் தேவை. ஊக்கமே ஆக்கத்திற்கு அடிப்படை; உயர்வான வாழ்க்கைக்கு வழி கோலுவதும் ஊக்கமே; விளக்கினின்றும் பெறுகின்ற ஒளி தெளிவாக விழவேண்டுமெனில், அதன் மீது தூசுபடிதல் கூடாது; தூசு அதன் ஒளியைக் குறைக்கும்; அது தருகின்ற ஒளியினையும் மங்கச் செய்யும். மங்காத விளக்கினையும் ஒளி மங்கச் செய்வது தூசு.

11. ஞானசம்பந்தன், அ. ச.: இலக்கியக்கலை, பக். 193, கழகப் பதிப்பு, 1956.

12. The works of Aristotle: Vol. II, p. 655, Great Books of the Western World Series. Ed. by Hutchins Robert Maynard, Chicogo, 1952.

ஒருவனுக்குத் தன் குடும்பமும் ஒரு மங்காத விளக்காகும். இவ்விளக்குத் தெளிவாகவும், ஒளிதருவதாகவும் இருந்தால்தான் ஊரும் உலகமும் தெளிவாகக் காட்சி தரும். இம் மங்காத விளக்கினின்றும் எத்தனையோ ஒளி விளக்குகள் தோன்றி நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் வழிகாட்டியாய் அமையலாம்; கலங்கரை விளக்கங்களாகலாம்; விளக்கு இருளை அகற்றுவது போல இவர்களாலும் நாட்டினுடைய இருளாகிய அறியாமையும் இன்னல்களும் துயரங்களும் நீக்கப்படலாம். எனவே, ஒளிதருகின்ற விளக்குத் தூய்மையாக இருத்தல் வேண்டும். விளக்கினை மங்கவைப்பது அதன் மேலே படிகின்ற தூசு; குடும்ப விளக்கினை ஒளி குன்றச் செய்வது சோம்பல். வள்ளுவர் குடும்பத்தினை, 'குடியென்னும் குன்ரு விளக்கு' என உருவகப்படுத்துகின்ருர்.

> குடியென்னும் குன்ரு விளக்கம் மடியென்னும்
> மாசூர மாய்ந்து கெடும்[13]

என்பது குறள்.

இக்குறளில் குடியினிடத்து விளக்கின் தன்மையையும் மடியினிடத்து இருளின் தன்மையையும் ஏற்றிக் கூறிய தனுல், இதனை 'உருவக அணி' என்பர். உலகம் உள்ளளவும் இடையருது தன்னுட் பிறந்தவரை விளக்குதலால் குடியைக் 'குன்ரு விளக்கம்' என்ருர். 'குன்ரு விளக்கம்' என்று கூறுவதினின்றும் ஒளிமங்கக்கூடிய விளக்குகளினின்று இது மாறுபட்டது என்னும் செய்தியினைச் சுட்டிச் செல்லுகின்ற நயத்தினையும் காணலாம்.

உலக வாழ்வில் குடும்பத்திற்குத் தருகின்ற முதன்மையையும், பிறபேறுகளையும் அழிக்கும் திறன் பெற்றது சோம்பல் என்பதனையும் இவ்வுருவகங்களால் உலகுக்கு உணர்த்துகிருர் வள்ளுவர்! மடியால் நாடும் வீடும் பெறுகின்ற இன்னல்களை அளவிட்டுக் கூறமுடியுமா?

13. குறள், 601.

### ஏகதேச உருவகம்

கவிஞர் தாம் கூறுகின்ற பொருள் முழுவதையும் உருவகம் செய்யாது, அதன் ஒரு பகுதியை மட்டும் உருவகப் படுத்திப் பிறிதொரு பகுதியை உருவகப் படுத்தாது விடுவதை 'ஏகதேச உருவகம்' என்பர். தண்டியலங்கார ஆசிரியர் கூறுகின்ற வியநிலைவுருவகம், ஏகாங்கவுருவகம், அவயவ உருவகம், அவயவி உருவகம் முதலியன ஏகதேச உருவகத்தில் அடங்கும்.[14] எனவே, இவற்றையெல்லாம் ஏகதேச உருவகத்தின் வேறுபெயர்களாகக் கொள்ளலாம்.

### அழுத கண்ணீரே அழிக்கும் படை

ஆற்றலும் வலிவும் பெற்றவன் மன்னன்; பெருந் திருவுடையவன்; எண்ணியதை எண்ணிய வண்ணம் செயலாற்ற எத்தனையோ அலுவலர்கள் உண்டு; தனக்கும் பிறர்க்கும் நல்ல பாதுகாப்புத்தரப் பல்வகைப் படைகளும் உண்டு. எல்லாவிதமான உயர்ந்த வசதிகளும் கொண்டவன் ஆயினும் இவன் நேர்மையற்றவனுயிருப்பின், குடிமக்கள் வடிக்கும் 'கண்ணீர்' இவனை அழித்துவிடும் என்கிருர் வள்ளுவர். கண்ணீருக்கு இத்தனை ஆற்றல் உண்டா? வள்ளுவர் கண்ணீரைப் 'படை' யென்றே உருவகப்படுத்துகிருர். அல்லற்பட்டு ஆற்ருது எளியோர் அழுகின்ற கண்ணீர் செல்வத்தையே அழித்துவிடும். பெருஞ் செல்வனுயினும், மன்னனுயினும் ஏழை அழுகின்ற கண்ணீருக்கு இரையாவான்!

கொடியவனுடைய வல்லமையும், போர்க்கருவிகளும் திக்கற்றுத் துயருற்றுப் புலம்பும் ஏழைகளுடைய கண்ணீருக்கு முன் தோல்வியே காணும்! கண்ணீர் இறுதியிலே அவனுடைய அதிகாரக் கொடுமையையே அழித்துவிடும்; எத்தனையோ மாறுதல்களை உண்டாக்கும்; வலியவனின் ஆற்றலை மெலியவனின் கண்ணீர் வெல்லும். வள்ளுவர் இதனை,

14. தண்டியலங்காரம், கோபாலகிருஷ்ணமாசாரியார் விளக்கக் குறிப்புரை, பக். 38, 1956.

அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை[15]

என்ற குறட்பாவில் 'கண்ணீரைப்' படையாக உருவகித்துச் செல்வத்தையே அழிக்கும் கருவியாக அதனைக் கூறுகிறார். 'ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளினை யொக்கும்' என்னும் கூற்றும் இக்குறளின் அடியாகப் பிறந்தது போலும் !

இக்குறட்பாவினைப் பரிமேலழகர் ஏகதேச உருவகத்திற்குச் சான்றாக எடுத்துக்காட்டியுள்ளார். இப்பாடலில் கண்ணீரைப் படையாக உருவகஞ் செய்தவர் அதற்கேற்ப செல்வத்தை மரமென்று உருவகம் செய்யாமையினால் இது ஏகதேச உருவக அணியாயிற்று. இதேபோன்று பல குறட்பாக்கள் வந்துள்ளன.[16] பரிமேலழகர் தம் உரையில் பல குறட்பாக்களை இவ்வணிக்குச் சான்று காட்டி விளக்கியுள்ளார்[17] என்பதும் குறிப்பிடத்தக்கதாம்.

### அவயவ உருவகம்

அவயவ உருவகமாவது அவயவியை நீக்கி அவயவங்களை மட்டும் உருவகம் செய்வதாம். அவயவமாவது உறுப்பு ; அவயவியாவது அவயவங்களைக் கொண்டுள்ள முதற்பொருள். ஆகவே, இதனை முதல் சினை உருவகம் என்று கூடச் சொல்லலாம். முதற்பொருள் உருவகம் பெறாது அதன் அங்கங்கள் மட்டும் உருவக அமைப்புப் பெற்று வரும் என்பதாம்.

### இரத்தலும் ஒளித்தலும்

வளமோடு வாழ்கின்றவரும், வறுமையோடு வாழ்கின்றவரும் இன்றும் உண்டு; அன்றும் உண்டு. வறுமைத் துன்பத்தால் வாடுபவர் தம் வறுமையினைப் போக்க

15. குறள், 555.

16. குறள், 10, 168, 361, 710, 773, 986, 1167, 1258.

17. குறள், 8, 24, 306, 505, 555, 567, 615, 627, 753, 796, 983, 989, 1032, 1093, 1147, 1227.

இரந்து கையேந்திய நிலையும் அன்று உண்டு; இரந்து நின்றவர்களை இனிய சொல்லாலும் பொருளாலும் அன்பு செய்தவர் உண்டு. அன்புப்பார்வை யின்றி அவர்களை எள்ளியும் இகழ்ந்தும் ஒன்றும் கொடாது துன்புறுத்தியோரும் உண்டு. பிறரிடத்துச் சென்று இரத்தலால் ஏற்படும் துன்பத்தினையும் இழிவையும் நினைந்து நினைந்து உருகிய வள்ளுவர், 'இரவச்சம்' அதிகாரத்தில் தன் உணர்ச்சி முழுவதையும் காட்டுகின்றார். இரத்தல் கொடுமையானது; 'இரவுக்கு' அஞ்சுதல் வேண்டும் என்பதே அவருடைய கருத்தாகும்.

"வாழ்க்கை ஒரு பெருங்கடல்; அக்கடலைக் கடக்க 'இரவு' என்ற காவலற்ற தோணியினைப் பயன் படுத்துகின்றான் ஒருவன். பெருங்கடலைக் கடக்கக் காவலற்ற தோணி பயன்படுமா? அக்காவலற்ற தோணியோ, இருக்கும் பொருளை ஒளித்து வைத்துவிட்டு இல்லையென்று சொல்லுகின்ற 'கரவு' என்னும் பாறையில் மோதிச் சிதறுகிறது. வாழ்க்கைப் பெருங் கடலாகிய வறுமைப் பெருங்கடலைக் கடக்க இத்தோணி பயன்படுமா?" என்னும் இக்கருத்தினை உள்ளடக்கி உருவகம் அமைந்த அழகிய குறட்பாவினை உணர்ச்சி வடிவாகத் தருகின்றார் வள்ளுவர்:

இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்.[18]

இரந்து வாழ்கின்ற எளியோர், பிறர் இல்லையென்றதும் மனமுடைந்து போவர் என்பதனை நன்கு சித்திரித்துக் காட்டுகின்றார் வள்ளுவர். அவர்கள் மனமுடைந்து போதலை, பாறையில் மோதி அழியும் தோணிக்குப் பொருத்திக் காட்டுகின்றார். வாழ்க்கைக் கடலை 'முயற்சியால்' கடக்காது காவலற்ற தோணி என்னும் 'இரவால்' கடப்பதையும் சுட்டிக்காட்டி, 'இரத்தல் கொடிது' என்ற அறிவுரையினையும் அமைத்துள்ளார். வறுமைக் கடலை முயற்சியாலன்றோ கடத்தல் வேண்டும்? கடப்பதற்குத் தகுதியில்லாத காவலற்ற தோணியில் ஏறிச் சென்றால் துன்ப முடிவன்றோ ஏற்படும்?

18. குறள், 1068.

இக்குறட்பாவினைப் பரிமேலழகர் அவயவ உருவகத்திற்குச் சான்ருக எடுத்தாண்டுள்ளார். இங்கு வறுமையென்பது அவயவி (உறுப்புடையது). இதனை நீக்கிவிட்டு 'இரவு', 'கரவு' என்னும் அவயவங்களை மட்டும் 'தோணி' யென்றும், 'பார்' என்றும் உருவகம் செய்தமையால் அவயவ உருவக அணியாயிற்று. 'இரவென்னும் ஏமாப்பில் தோணி' என்பதும், 'கரவென்னும் பார்' என்பதும் உருவகமாகும்.

## இயைபு உருவகம்

பொருளை உருவகஞ் செய்யும்பொழுது தம்முள் இயைபுடையவாக வைத்து உருவகம் செய்தால் கருத்து இனிமையும் நயமும் பெற்று விளங்கும். சிறப்பிக்கப்படும் பொருளோடு உருவகங்கள் ஓரளவு பொருந்தி வரக்கூடியதாக இருக்கவேண்டும். இவ்வாறு அமையவில்லையானல் அவற்றின் பொருத்தமற்ற போக்கு வெளிப்படையாகத் தோன்றும். உருவகத்தையும் அது உணர்த்தும் பொருளையும் அருகருகே இயைந்து நிற்குமாறு அமைப்பதன்மூலம் அவற்றினிடையே இயைபு தேவைப்படுகிறது என்பதும் வலியுறுத்தப் படுகிறது என்பர், அரிஸ்டாட்டில்.[19]

## காமமும் புணையும்

> காமக் கடும்புனல் உய்க்குமே நாணொடு
> நல்லாண்மை என்னும் புணை[20]

என்னும் இக்குறட்பா இயைபு உருவக அணியாகும். நாணமும் நல்ல ஆண்மையுமாகிய தோணிகளைக் காமம் என்னும் கடுமையான வெள்ளம் அடித்துக் கொண்டுபோய் விடுகிறது என்பது இக்குறளின் கருத்தாகும். 'காமக் கடும் புனல்' என்று காமத்தை வெள்ளமாகக் கூறியதற்கு ஏற்ப, அவ்வெள்ளத்தால் அடித்துச் செல்லப்படும் பொருள்களாக நாணத்தையும் ஆண்மையையும் தோணிகளாக உருவகப் படுத்தினர் வள்ளுவர். வெள்ளமும்

19. The works of Aristotle : Vol. II. p. 655.

20. குறள், 1134.

அதற்கு இயையத் தோணிகளுமாக உருவகப்படுத்தி, அவை தம்முள் இணைந்தும் இழைந்தும் நிற்பதால் சொல்லுகின்ற கருத்து வலிவும் வளமும் பெற்றுத் திகழ்கிறது.

> அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும்
> செல்வச் செவிலியால் உண்டு[21]

என்னும் இக்குறட்பாவிலும் இவ்வணி அமைந்துள்ளதைக் காணலாம். அருளைக் குழந்தையாக உருவகப் படுத்திய வள்ளுவர் 'அன்பினை'த் தாயாக 'அன்பீன் குழவி' என்ற சொல்லால் உய்த்துணர வைத்த நயமும் எண்ணுதற்குரியது.

வள்ளுவர் குறட்பாக்களில் உருவக அணியை மிகுதியும் பயன்படுத்தித் தாம் கூறவந்த கருத்துகளை உலகிற்குத் தெளிவாகக் காட்டியுள்ளார். "இருவேறு பொருள்களையும் ஒன்றுபடுத்தி இயைத்துக் காட்டுவதால் இரண்டனைச் சார்ந்த தனித்தனி உணர்ச்சிகளும் சேர்ந்து ஆற்றல் மிக்க உணர்ச்சியாய் வளர்கிறது. இவ்வளர்ச்சியால் பாட்டுப் பெறும் பயன் பெரிது" என்பர் டாக்டர் மு. வரதராசனர் அவர்கள்.[22]

நல்லதொரு கவிதையில் உருவகம் எப்பொழுதும் ஏற்றதோர் இயைபு உடையதாக இருக்கிறது. அதை 'இயைபு படுத்தல்' என்று தம்முடைய பாவியலில் அரிஸ்டாட்டில் குறிப்பிடுவர். ஒரு பேரினத்திலிருந்து கிளையினத்திற்கோ கிளையினத்திலிருந்து மற்றோர் கிளையினத்திற்கோ அந்நியப் பெயரை மாற்றுவதாகவும், அல்லது அளவான முறையில் ஒப்புமையாக்கமாகவும் அது அமையலாம். இதனைத் தற்காலத்திய அகராதியின் மொழி நடையில் கூறுவதென்றால் உருவகம் என்பது ஒரு செய்யுள் அணியாகும். ஒரு பொருளுக்குத் தக்க முறையில் பொருந்

21. குறள், 757.
22. வரதராசனர், மு. டாக்டர்: இலக்கியத்திறன், பக். 229-230, பாரிநிலையம், 1959.

தாத பெயரையோ, பண்பு அடையையோ அதற்குரியதாக மாற்றிக் கூறுவதே உருவகமாகும் என்பர்.[23]

இவ்வகையில் வள்ளுவர் அமைத்த பல்வேறு உருவகங்களும்[24] கவர்ச்சியுடையனவாகவும், புதிய கருத்துகளை விளக்குவனவாகவும் அமைகின்றன. கற்பாருடைய உள்ளங்களில் அவை தெளிவாகவும், அழகாகவும் பதிகின்றன.

**காட்சியணி**

உவம உருபுகளின்றி உவமான உவமேயங்களை இணைத்து அழகுபடச் சொல்லுதலைக் காட்சியணி என்பர். வீரசோழியம் இதனைச் 'சுட்டென்னும் அலங்காரம்' என்று கூறுகிறது.

> .........சுட்டா நிகழ்பயன் கொள்பொருளில்
> வேறுபட நன்மை தீமை வெளிப்படல் மெல்லணங்கே[25]

என்பது வீரசோழியம். "சுட்டென்னும் அலங்காரம் ஒரு வகையால் நிகழ் பொருளிடத்தே வரும் பயனைப் பிறிதொன்றற்கு நன்மையாவது தீமையாவது தோன்றச் சொல்லுதலாம்" என்பது இதன் கருத்தாகும்.

இவ்வணியைத் தண்டியாசிரியர் 'நிதரிசன அணி' என்பர்.

> ஒருவகை நிகழ்வதற்கு ஒத்தபயன் பிறிதிற்குப்
> புகழ்மை தீமை என்றிவை புலப்பட
> நிகழ்வ தாயின் நிதரிசன மதுவே.[26]

23. Archi Bald Macleish: Poetry and Experience, p. 81, The Bodley Head Ltd. London, 1961.

24. குறள், 29, 38, 60, 71, 95, 196, 299, 392, 393, 421, 482, 575, 581, 600, 701, 759, 821, 848, 851, 853, 860, 872, 918, 919, 936, 985, 1014, 1016, 1029, 1030, 1040, 1087, 1102, 1113, 1163, 1164, 1166, 1228, 1251, 1324.

25. வீரசோழியம், அலங். 32.

26. தண்டி, 84.

காணுகின்ற காட்சியினைக் கொண்டு விளைகின்ற பயனை யும் தீமையையும் பிறருக்கு அறிவுறுத்த முயல்வது இவ் வகை அணியின் அமைப்பாம்; மாறனலங்காரமும் இக் கருத்தினையே கூறுகின்றது. உவம உருபின்றிக் கூறப் படும் இவ்வணிக்கும், திட்டாந்த அலங்காரத்திற்கும்[27] என்ன வேறுபாடு உள்ளது என்பதைக்கூறும் மாறனலங் கார ஆசிரியர் விளக்கமும் ஈண்டு நினைவு கூர்தற்குரிய தாகும்:

"அஃதேல் திட்டாந்தத்தோடு இதனிடை வேற்றுமை யாதோ வெனின், திட்டாந்தம் புலவன் தன்னுற் குறித்த ஒரு பொருட் கூறுபாட்டிற்குப் பிறிதொரு பொருளின் கூறுபாட்டை அதற்கு உவமை குறிக்கொள்ளும்படிக்கு உவமை வாய்பாடு தோன்ருது தொகத் தன் வினையாக அப்புலவன் கூறுதல்; இஃதன்ன தன்று. ஒரு பொருளின் பண்பு, தொழில், பயன் முதலிய கூறுபாட்டைப் பிறிதொரு பொருள் காட்டுவதாகப் படுத்திப் பிறவினையாற் கூறுதல் இவை தம்முள் வேற்றுமையா மென்றுணர்க."[28]

இதனால் திட்டாந்த அலங்காரத்திற்கும், நிதரிசன அணிக்கும் உள்ள வேறுபாடு நன்கு தெரிய வரும்.

இனித் திருக்குறளில் இவ்வணி அமைந்துள்ள குறட் பாக்களைக் காண்போம்:

**கைவாளும் கற்ற நூலும்**

வேலெடுத்து வெற்றி பெறும் வீரப் பெருமக்கள் போரிடும் போர்க்களம்; போர் செய்யத் துடிக்கும் இளங் காளையர் ஒருபுறம்; தினவெடுத்த தோளுடன் சினந்து நிற்கும் மறவர் ஒருபுறம்; வில்லேந்திய கையராய் வீறு டன் நிற்கின்ற வீரர் ஒருபுறம்; இவ்வெற்றி வீரர்கள் வீர விளையாட்டு நடத்தும் போர்க்களத்தில் பேடியொருத்தி

27. மாறன் அலங்காரம் கூறும் திட்டாந் தாலங்காரம் எடுத்துக் காட்டுவமையணியினை ஒக்கும் எனலாம். பார்க்க: மாறன் அலங்காரம், நூற்பா, 133. உரை.

28. மாறனலங்காரம், 139. உரை.

கையில் வாளோடு நிற்கின்றாள்.[29] அவ்வாளால் அவள் என்ன செய்ய முடியும்? அவளோ இயற்கையிலேயே பேடி; ஆண்மையற்றவள்; உள்ளத் தெளிவும் உறுதியும் இல்லாதவள்; இவளிடத்து உள்ள வாளால் ஏதும் பயனில்லை; வாள் உயர்ந்ததுதான்; பயன்படக் கூடியதே. வெற்றிக்குத் துணை நிற்கும் வீர வாள்தான். ஆயின், அவ் வீரவாளினை ஆண்மையற்ற பேடி ஏந்திச் சென்றதால் யாதொரு பெருமையும் பயனும் இல்லாது போயிற்று.

கற்றறிந்த அவையிலே பேச அஞ்சுபவன் கற்ற நூலும், பேடியேந்திய கைவாளினைப் போன்றதே. ஆன்ற விந்தடங்கிய சான்றோர் பேரவை; அறிஞரும் கலைஞரும் கலந்துரையாடும் அறிவு மன்றம்; பல்வேறு துறையிலும் பயிற்சிபெற்ற சிந்தனையாளர்கள் நிரம்பிய சிந்தனைக் கூடம். அம்மன்றத்தே நூல்கள் பல கற்ற அறிஞரொருவர் எழுந்து பேச முற்படுகின்றார். ஆயினும் அவரால் பேச முடிவதில்லை. அவையச்சம் அவரை ஆட்கொள்கின்றது. அறிவு நூல்கள் பலவற்றையும் ஐயந்தீரக் கற்ற அவரால் அதனைப் பிறருக்கு எடுத்துக்கூற இயலவில்லை. அவர் பெற்ற அறிவு, கற்ற கல்வி, உழைத்த உழைப்பு ஆகிய இவற்றால் பிறருக்குப் பயனுண்டோ? எனவே,

29. "பேடி - பெண்ணியல்பு மிக்கு ஆணியல்பும் உடையவள். களமும் வாய்த்துத் தானும் நன்றாயிருந்ததேயாயினும் பிடித்தவள் குற்றத்தால் வாள் சிறப்பின்றாயினாற் போல, அவையும் வாய்த்துத் தானும் நன்றாயிருந்ததே யாயினும் கற்றவன் குற்றத்தால் நூல் சிறப்பின்றாயிற்று" என்பது பரிமேலழகர் தரும் விளக்கவுரை (குறள், 727). 'பிடித்தவள் குற்றத்தால்' எனப் பெண்பாலாய் இவர் உரைத்ததற்கு நுண்பொருள் மாலையுடையார் தரும் அமைதியும் ஈண்டுக் கருதுதற்குரியதாம். அது வருமாறு: "பேடியைப் பிடித்தவள் குற்றத்தால் எனப் பெண்பாலாய் உரைத்தது,

'ஆண்மை திரிந்த பெயர் நிலைக்கிளவி
ஆண்மை அறிசொற் காகிடனின்றே'

—தொல். சொல். 92.

என்ற விதிபற்றி என்க, 'பெண்ணவாய் ஆணிழந்த பேடியணியாளோ' என்பதும் அது."

அவர் கற்ற நூலும் பகையகத்துப் பேடியேந்திய வாளும் ஒன்றே என்கிருர் வள்ளுவப் பெருந்தகை.

> பகையகத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்து
> அஞ்சுமவன் கற்ற நூல்.[30]

அவையைக் கண்டு அஞ்சுகின்றவன் கற்றநூல், பகைவரொடு பொரும் போர்க்களத்தைக் கண்டு அஞ்சுகின்ற பேடியின் கையில் ஏந்திய வாளைப் போன்றது என்று கூறும் உவமை, தான்பெற்ற கல்வியறிவு இப்பரந்த உலகிற்குப் பயன்படுமாறு அமைதல் வேண்டும் என்ற கருத்தையும் உள்ளடக்கி விளங்குதல் காணலாம். அவையஞ்சாமையின் சிறப்பினையும் இவ்வுவமை உணர்த்துகின்றது. நூலும் வாளும்சென்று சேர்பவரைப் பொறுத்தே பெருமையும் உயர்வும் பெறுகின்றன என்னும் நயத்தினையும் இப்பாடலில் காணலாம்.

இப்பாடலில் உவம உருபு தாராமல் உவமான உவமேயங்களை இணைத்து அழகுபடக் கூறியமையால், இப்பாடல் காட்சியணியின் பாற்பட்டதாகிறது.

> சீரிடங் காணின் எறிதற்குப் பட்டடை
> நேரா நிரந்தவர் நட்பு[31]

என்னும் குறட்பாவிலும் இவ்வணி அமைந்திருப்பதைக் காணலாம். கூடாநட்பின் இலக்கணம் கூறவந்த வள்ளுவர் அழகிய உவமையினை இப்பாடலில் குறிக்கிருர். கொல்லனுடைய உலைக்களத்தில் காணப்படுவது பட்டடை என்னுங் கருவி; பழுக்கக் காய்ச்சிய இரும்பினைத் தாங்குவதும் இக்கருவியே; அவ்விரும்பு நன்கு அடிபடும்போதும் வெட்டுப்படும் போதும் உறுதுணையாக இருப்பதும் இக்கருவியேயாகும். தாங்குவதுபோலத் தாங்கியிருந்து சமயம் வாய்த்தபொழுது தம்முடைய காரியத்தைச் சாதித்துக் கொள்ளப் பயன்படுத்துகின்ற நண்பர்களுக்கும், பட்டடை என்னும் இக் கருவிக்கும் வேறுபாடுளதோ ?

30. குறள், 727.
31. குறள், 821.

பட்டடையும் தீய நட்பினரையும் இவ்வுவமை வாயிலாக அழகாக ஒப்பிட்டுக் காட்டுவதோடன்றி நல்ல அறிவுரையையும் தருகின்றார் வள்ளுவர்.

கவிஞன் தன்மயமாக நின்று ஒரு பொருளைப் பாடும்போது, அப்பொருளை அழகுபடுத்திக்கூற அவன் மேற்கொள்ளும் உத்திகளில் இதுவும் ஒன்றாம். பட்டடை போலும் என்று கூறாது 'பட்டடை' என உவமான உவமேயங்களை இணைத்துக் கூறியிருக்கும் அழகும் சிந்திப்பதற்குரியதாம். தொழில் ஒப்புமையால் இதனைத் 'தொழில் உவமம்' என்றும் கூறலாம்.

இவ்விதம் உவம உருபுகளின்றி உவமான உவமேயங்களை இணைத்து அழகுபடக்கூறும் இவ்வணியமைந்த குறட்பாக்கள் வேறு சிலவற்றையும்[32] நன்கு பயின்று அதன் இனிமையையும், எழிலையும் உணர்தல் வேண்டும்.

## ஐயவணி

உவமானத்தையும் உவமேயத்தையும் ஐயமுற்று உரைப்பதனை 'ஐயநிலையுவமம்' என்பர். தண்டியலங்கார ஆசிரியர் இதனை உவமையணியின் வகைகளுள் ஒன்றாகக் குறிப்பிடுகின்றார். இதனை மாறனலங்காரநூல் 'சந்தய வலங்காரம்' என்று கூறும்.

'உற்றதோர் பொருளினை யையுற் றுணர்தல்
கற்றவர் சந்தய மெனக்கழ றினரே'[33]

என்பது நூற்பா. புலனுகர் பொறிகளினாலோ, கருத்தினாலோ ஒரு பொருளினை ஐயமுறுதலும் தெளிதலும் இவ்வணியாம்.

காமத்துப்பாலின் முதற் பாடலிலேயே அழகும் சுவையும் பொருந்த இவ்வணி அமைந்திருப்பதைக் காணலாம்.

32. குறள், 482, 605, 1006, 1087.

33. மாறனலங்காரம், 136.

***அணங்கோ ஆய்மயிலோ ?***

வண்ணமலர்கள் பூத்துக் குலுங்கும் அழகிய பூஞ் சோலை ; அங்கே, பெண்ணொருத்தி உலாவிக் கொண்டிருக் கும் இனிய மாலைக் காலம் ; பருத்துயர்ந்த தோளும் பரந்து விரிந்த மார்பும் அமைந்த காளை ஒருவன் அச்சோலை யருகே வந்தான். நலனும் குணனும், அன்பும் அறிவும் நிரம்பப் பெற்ற அந்த ஆண்மகன் அழகும் வடிவும் பண் பும் பணிவும் கொண்ட பெண்ணின் நல்லாளைக் கண்டான்; கண்டதும் அவன் கண்கள் வியப்பால் விரிந்தன.

எழில் மங்கையினைக் கண்டதும் அச்சுறுத்தும் அணங்கோ என முதலில் ஐயுற்றான். கண்கள் தரும் துன்பம் அச்சுறுத்தும் அணங்கினை நினைவூட்டியது போலும்! அடுத்து அவள் அழகிய மயிலோ என மருண் டான். மங்கையின் நடை மயிலினை நினைவூட்டியது போலும்! அணங்கோ ? ஆய்மயிலோ? என மருண்ட அவனுடைய உள்ளத்தின் தெளிவில்லாத நிலையை வள்ளு வர் அப்படியே சொற்களால் படம் பிடித்துக் காட்டுகிறார். 'கொல்' என்னும் ஐயப்பொருள் தரும் சொல்லும் இங்கே ஆட்சி பெற்றுள்ளது இப்பொருளுக்கு அழகு செய்வதா யுள்ளது.

> அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
> மாதர்கொல் மாலுமென் நெஞ்சு.[34]

தலைமகன் தலைவியை அணங்கோ, ஆய்மயிலோ என ஐயுற்றதனால் இதனை 'ஐயவணி' என்பர்.

இப்பாடலினை வீரசோழிய உரைகாரரும் ஐயவுவ மைக்குச் சான்றாக எடுத்துக் காட்டியுள்ளார்.[35]

> கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
> நோக்கமிம் மூன்று முடைத்து[36]

என்னும் குறளிலும் இவ்வணி சிறந்து விளங்குகிறது. 'தொழில் பற்றிவந்த ஐயநிலை யுவமம்' எனப் பரிமேலழகர் இக் குறட்பாவினைக் கொள்ளுகின்றார்.

34. குறள், 1081.
35. வீரசோழியம், அலங். 14.
36. குறள், 1085.

### ஏதுவணி

கவிஞர் தாம் கூறுகின்ற பொருள்களை வலியுறுத்தித் தெளிவிப்பதற்குரிய காரணத்தைத் தாம் யாத்த செய்யுளிலேயே குறிப்பாகவும் அழகாகவும் புலப்படுத்துவர். ஒரு பொருள் இன்னின்ன காரணத்தால் இவ்வாருயிற்று எனச் சிறப்பாய் உரைக்கும் முறையினை ஏதுவணியின் பாற்படுத்துவர். இது 'காரகவேது', 'ஞாபகவேது' என இருவகைப்படும். வீரசோழியம் இதனை,

> ஏது உரைப்பின் இதுஇதுவின் விளைவுஎன் றுரைத்தல்'[37]

என்று கூறும். தண்டியாசிரியரும்,

> யாதன் திறத்தினும் இதனின் இது விளைந்ததென்று
> ஏது விதந்து உரைப்பது ஏது அதுதான்
> காரகம் ஞாபகம் எனவிரு திறப்படும்[38]

என்று கூறி ஏதுவின் இருவகை முறையினையும் விளக்குகிருர். பாட்டினுடைய பொருளினை அறிந்து இவ்வேது இத்தன்மையது என்று எளிதாக உணரலாம்.

### சொல் வணக்கமும் வில் வணக்கமும்

வாழ்க்கையில் பெறவேண்டிய பெறற்கரிய பெரும்பேறுகளுள் நட்பும் ஒன்ருகும்; நல்ல நட்புடையார் நானிலம் புகழ வாழ்வர்; அல்லாதோர் நல்வழியில் செல்லாது துன்பத்தில் உழல்வர்; மனத்தொடு பொருந்தாதவரின் இன்சொல் இன்சொல்லாகாது. அது எப்போதும் துன்பத்தையே தரும். வள்ளுவர் இத்தகையோரின் இன்சொல்லையும், அவர்களுடைய வணக்கத்தையும் நல்லதொரு உவமையின்மூலம் காட்டிக் கூடா நட்பினை விளக்குகிருர்.

வில் வீரனெருவன் பகைவனை வீழ்த்த வில்லில் அம்பினை வைத்துக் குறிபார்க்கின்ருன். வில் வணங்குகின்றது; வில்லின் நாணை இழுக்க இழுக்க வில்லும் வளையும்; வில்

37. வீரசோழியம், அலங். 26.

38. தண்டி, 57.

வணங்க வணங்க, எய்யப்படும் அம்பும் வேகம் பெறும்; பகைவன் மேல் விரைவாகச் சென்று அவனை வீழ்த்தும். வில்லின் வணக்கம் பகைவரை வீழ்த்தும். இவ்வாறே பகைவனுடைய சொல் வணக்கமும் நம்மைத் துன்புறுத்தும். அவர்கள் வணங்கும்போது நாம் விழிப்புடன் இருத்தல் வேண்டும். அவர்களுடைய வணக்கம் உண்மையான வணக்கமன்று; வஞ்சகத் தன்மையினைக் கொண்டது. வில்லினுடைய வணக்கம் துன்பத்தைத் தருதல் போலவே பகைவருடைய பணிந்த சொல்லும் துன்பத்தைத் தரும். ஆதலின் அவர்தம் பொய்யான வணக்கத்தை ஏற்றுக் கொள்ளுதல்கூடாது. இக்கருத்தினை வள்ளுவர்,

> சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க வில்வணக்கம்
> தீங்கு குறித்தமை யான்[39]

என்ற குறளின் மூலம் கூறுகிறார்.

வில்லின் வணக்கம் துன்பந் தருவதைப் போலப் பகைவருடைய சொல் வணக்கமும் துன்பம் தரும்; ஆதலால், அதனைக் கொள்ளற்க என்று காரணங்காட்டிக் கூறுவதால் இக்குறள் ஏதுவணிக்குச் சான்றாகும். இன்ன காரணத்தால் இது இவ்வாறாகும் என்று கூறுகின்றாரல்லவா?

## அறிஞரும் மன்னனும்

மன்னன் மக்களுடைய குறைகளைத் தானே நேரிற் சென்று போக்குவதென்பது எளிதன்று. தன்னைச் சூழ்ந்துள்ளவர்களின் வழியேதான் குறைகளையும் நிறைகளையும் அறிந்து, ஆவன செய்ய முடியும். எனவே, மன்னனைச் சூழ்ந்துள்ளோர் அறிவு சான்ற அறிஞர்களாக இருக்கவேண்டும். அறிஞர்கள் எப்பொழுதும் மன்னனைச் சூழ்ந்திருத்தல் வேண்டும். அறிஞர்கள் வழி ஆட்சி நடந்தால், மன்னனுக்கும் அவனுடைய ஆட்சிக்கும் நல்ல மதிப் பேற்படும். எனவே, மன்னன் அத்தகையோரையே ஆராய்ந்து நட்புக்கொள்ள வேண்டும்.

39. குறள், 827.

சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்.[40]

தக்க வழிகளை ஆராய்ந்து கூறும் அறிஞரையே உலகம் கண்ணாகக் கொண்டு நடத்தலால், மன்னவனும் அத்தகையோரையே ஆராய்ந்து நட்புக் கொள்ள வேண்டும் என்று ஏது காட்டிக் கூறினமையால், இக்குறட்பாவினை ஏது வணிக்கு எடுத்துக் காட்டுவர்.

இங்ஙனம் வள்ளுவர் காரணம் காட்டிக் கூறுகின்ற நயத்தினை இன்னும் பல குறட்பாக்களில் காணலாம்.[41]

## பிறிது மொழிதலணி

கருத்துகளைக் கலைநயத்தோடு எடுத்துரைத்தால் அது கேட்பார் உள்ளத்திலும், படிப்பார் மனத்திலும் ஆழப் பதியும். ஒரு கருத்தை நேரடியாகச் சொன்னால் அது வெறும் கருத்து அறிவித்தலாக அமையும். அதில் சுவையுணர்ச்சிக்கு இடம் கிடையாது; உள்ளத்து உணர்ச்சியும் எதிரொலிக்காது. ஆனால், அதே கருத்தைச் சுற்றிவளைத்து அல்லது தொடர்புற்ற ஒரு பொருளோடு இணைத்துச் சொல்லுவோமானால், அது எழிலும் ஏற்றமும் பெற்று விடும். இவ்வாறு எடுத்துரைக்கும் இயல்பு சிறந்த கவிஞர்களிடத்தில் அமைந்திருப்பதை நாம் காணுகின்றோம்.

கவிஞர்கள் பயன்படுத்துகின்ற நயமான உத்திகளில் இவ்வணியமைப்புப் பெறப் பாடுதலும் ஒன்றாகும். எடுத்துக் கொண்ட பொருளுக்கும், அப்பொருளை விளக்குவதற்குப் பயன்படுத்தும் சொற்களுக்கும் தொடர்பே இல்லாததைப் போலத் தோன்றும். தாம் கருதிய பொருளைக் கூறாது அதற்கு உவமையான பொருள்களை மட்டும் கூறுகின்ற இம்முறையினையே சான்றோர்கள் ‘பிறிது மொழிதலணி’ என்கின்றனர். ஆய்ந்து உணரும்போது இவ்வகையான அணிகள் வியப்பையும் சுவையினையும் உண்

40. குறள், 445.

41. குறள், 202, 256, 972.

டாக்குவதைக் காணலாம். பொருளையும் உவமையையும் வேறு வேருகத் தொடர்பு இல்லாதது போல் உவமவுருபு இல்லாது கூறும் எடுத்துக் காட்டுவமையோடு, உவமையை மட்டும் கூறிப் பொருளை உய்த்துணர வைக்கும் இவ்வணி ஒருபுடை ஒப்புமையுடையதாம்.

இவ்வணி கருத்துகளைக் குறிப்பாகப் புலப்படுத்துகின்றது. "இப்பிறிது மொழிதல் அணியினை 'நுவலா நுவற்சி' என்றும் 'ஒட்டு' என்றும் கூறுவாருமுளர்" என்பது பரிமேலழகர் கருத்தாகும்.[42] பரிமேலழகர் தம் உரையுள் எட்டுக் குறட்பாக்களில் இவ்வணி பயின்றுள்ளதாகக் காட்டுகின்றூர்.[43]

தண்டியாசிரியர் இவ்வணியினை 'ஒட்டணி' என்றே குறிப்பிடுகின்றூர்.

'கருதிய பொருள் தொகுத்து அதுபுலப் படுத்தற்கு
ஒத்ததொன் றுரைப்பின் அஃது ஒட்டென மொழிப'[44]

என்பது நூற்பா. கவிஞன் தன்னுல் கருதப்பட்ட பொருளை மறைத்து, அதனை வெளிப்படுத்தற்குத் தக்க பிறிதொன்றனைச் சொல்லின், அதனை 'ஒட்டணி' என்று கூறுவர் என்பது இச் சூத்திரக் கருத்து. 'சுருங்கச் சொல்லல்', 'தொகை மொழி' என்று வேறு சில பெயர்களும் இதற்கு உண்டு.[45]

'.........வீவில் கவிதான் கருதுபொருளை வெளிப்படுத்தற்கு
ஓவிய மேசுருக் காமறை சொல்லி னுரைத்திடினே[46]

என்று வீரசோழியம் இவ்வணியினைச் 'சுருக்கணி' என்று கூறும்.

42. பரிமேலழகர் உரை: குறள், 475.
43. குறள், 475, 476, 495, 496, 500, 599, 763, 879.
44. தண்டி. 51.
45. 'நெஞ்சினிற் பொருளை நிரப்ப வேறொரு
செஞ்சொலிற் காட்டுந் திறமே தொகைமொழி'
—வீரசோழியம், அலங். 11, உரை, பக். 211. பவானந்தர் கழகப்பதிப்பு, 1942.
46. வீரசோழியம், அலங். 24.

இடனறிதல் அதிகாரத்தில் மட்டும் மூன்று குறட்பாக்களில் பிறிது மொழிதலணி உள்ளது. அரசியல் பகுதியில் கூறப்பட்ட இப்பாடல்களின் கருத்துகள் உலகில் அனைத்து மக்களுக்கும் பயன்படுமாறு அழகாகவும், தெளிவாகவும், குறிப்பாகவும், நயமாகவும் உணர்த்தப் பட்டுள்ளன. சிறந்த இலக்கியச் சுவை நிறைந்த பகுதியாகவும், எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும் புதிய கருத்துகளையும் செய்திகளையும் வழங்கும் கருத்துக் கருவூலமாகவும் திகழ்கின்றது.

**வலிமையும் அளவும்**

திண்ணிய மரத்தினலாகிய பெரிய வண்டி; உயர்ந்த சக்கரங்கள் பொருத்தப் பெற்ற அவ்வண்டியின் அச்சும் மிக வலிமை உடையது. வண்டியில் ஏற்றப்படுகின்ற பொருளோ மிக மென்மையான பொருள்; மயிலிறகு. மென்மையினும் மென்மையானது; மயிலிறகினைவிட மென்மையான பொருள் உண்டோ? அம்மெல்லிய மயிலிறகினைக் கட்டுக் கட்டாக வண்டியில் ஏற்றினர். வலிய வண்டியின்மேல் ஏற்றப்படுவது மெல்லிய மயிலிறகுகள் தாம்! ஆயினும் அவ்வண்டி தாங்கக்கூடிய அளவிற்குமேல் ஏற்றினர். விளைவு? இறுதியில் அவ்வண்டியின் வலிய அச்சும் முறிந்தது! மெல்லிய மயிலிறகு வலிய அச்சினை முறித்ததன்றோ? இதனை விளக்கும் குறள்,

> பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
> சால மிகுத்துப் பெயின்[47]

என்பது ஆகும். 'பீலிபெய் சாகாடும் அச்சிறும்' என்ற தொடர் தருகின்ற கருத்தின் வலிமை சிந்தித்தற்குரியது. மெல்லிய மயிலிறகால் நிரப்பப்பட்ட வண்டியினுடைய அச்சும் முறிவுறும்; அளவிற்கு மேலாயின் மெல்லிய மயிலிறகும் வலிய அச்சினை முறிவுறச் செய்யும் என்பது இக்குறளின் கருத்து. குறட்பா இக்கருத்தை மட்டுமா நமக்கு அறிவுறுத்துகிறது? இவ்வுவமானத்தை மட்டும் கூறி நல்ல கருத்தமைந்த அழகிய உவமேயத்தையும் பெற வைக்கிறார் வள்ளுவர்.

47. குறள், 475.

வலிமை வாய்க்கப்பெற்றான் ஒருவன் வலிமையற்ற எளியோர் பலரைப் பகைத்துக்கொண்டான். தான் வலியவன் என்பது மட்டுமே அவனுடைய கருத்து. எளியவர் பலர் ஒன்று சேர்ந்தால் விரைவாகவும் எளிதாகவும் தன்னை வென்றுவிடுவர் என்பதனை மறந்தான். தன்னைத் தருக்கித் தானே வியந்தான். இறுதியில் தன் வலியின் நிலையறியாது அவரோடு போரிட்டான்; தோல்வியுற்றான். மெல்லிய மயிலிறகு வலிய அச்சினை முறித்தது என்று இந்த உவமானத்தை மட்டும் கூறி, இக்கருத்தைப் பெற வைத்தார் வள்ளுவர். இவ்வாறு கூறுதலையே 'பிறிது மொழிதலணி' என்கிறோம். திருவள்ளுவரும் குறளில் வேறு எந்தப்பகுதியிலும் இல்லாத அளவிற்கு இந்தப் பகுதியில் பிறிதுமொழிதலாகக் கருத்துகளை அமைத்துள்ளார். தன்னால் எவ்வளவு முடியும் என்பதனையும் அதற்கு எவ்வளவு ஆற்றல் வேண்டும் என்பதையும் அறிந்து வாழ்தல் நன்மையினைப் பயக்கும் என்னும் கருத்தையும் வள்ளுவர் இவ்வுவமையின் வாயிலாக இனிது எடுத்துரைக்கின்றார்.

தாம் கூறப் புகுந்த கருத்தினை வெளிப்படையாகக் கூறாது உவமானத்தின் வாயிலாகக் கவிஞர் கூறுவதால் பொருள் காண்பதில் ஒரு புதுமை ஏற்படுகின்றது. அந்தப் பொருளும் தெளிவாக நெஞ்சில் பதிகின்றது.

**நரியும் கரியும்**

வேலெறிந்தாலும் விழி இமையா வீரப் பெருமக்கள்; கைவேலினைக் களிற்றொடு போக்கித் தம் மெய்வேலினைப் பறித்தாடும் வீரர்கள்; விழுப்புண் படா நாள் வீணாள் எனக் கருதும் வெற்றி மறவர்கள்; கூற்றுடன்று வரினும் கூடி எதிர்நிற்கும் ஆற்றல் படைத்த ஆடவர்கள் நிறைந்ததொரு போர்க்களம். போர்வெறி கொண்ட களிறு ஒன்று அங்கே புகுந்தது; அவர்களைத் தாக்கியது; வேல் வீரரைத் தாக்கிக் கொம்பில் கோத்துத் திரியும் போர்க்களிறு அது! அத்தகைய பெருமையும் வீரமும் கொண்ட வீரப் பெருமக்களையும் கொல்லும் வலிமையுடைய வீரமிக்க களிறு. அத்தகைய களிறும் ஒருநாள் தோல்வியைத் தழுவியது! தோல்வியும் தன்னைக் காட்டிலும் வலிமை குறைந்த எளிய சிறிய நரியிடம் பெற்றதே!

அஞ்சாத யானையும், சகதியும் சேறும் நிறைந்த சேற்று நிலத்திலே அகப்பட்டது; வேல்வீரர்களை வெற்றி கொண்ட யானையாலும் அச்சேற்றினின்றும் மீள இயல வில்லை. வீரரைக் கொன்று கொம்பில் கோத்துத் திரியும் அவ்வீரயானையும் இறுதியிலே எளிய நரியால் வெல்லப் பட்டது.

காலாழ் களரின் நரியடுங் கண்ணஞ்சா
வேலாள் முகத்த களிறு[48]

என்னும் குறட்பா நமக்கு இக்கருத்தைத் தருகிறது.

வலிமையும், ஆண்மையும், ஆற்றலும் பொருந்தியவர் களாக இருப்பினும், தம் வலிமை பயன்படாத இடத் திற்குச் சென்று விடுவார்களானால், மிக எளியராலும் வெல்லப்பட்டு அழிவர் என்ற கருத்தினை உவமானம் தருவதால், இக்குறளும் பிறிது மொழிதல் அணியே. வீரரையும் வெற்றி கொள்ளும் யானையின் ஆற்றல் சேற்று நிலத்தில் பயன்படுவதில்லை; எனவே, தன் வலிமை செல்லாத இடத்தில் சென்று தீங்கைத் தேடிக் கொள்ளுதல் கூடாது என்ற கருத்தினை நயமாகச் சொல்கிறார் வள்ளுவர்.

இவ்வுவமைகள் வள்ளுவர் போர்ச் செய்திகளை முறையே அறிந்தவர் என்பதனைக் காட்டுவதோடு வெற்றி பெறுவதற்குரிய வழி முறைகளையும் செவ்வனே கூறுகின் றன. வாழ்வில் எல்லாவகைப் பிரிவினர்க்கும் பொருந்து வதாக இவ்வுவமை சிறந்த தத்துவப் பொருளையும் அடக்கிக் கொண்டுளது. வலிய யானையே ஆயினும் எளிய நரியால் வெல்லப்படுவதனைக் குறளின்மூலம் உணர்த்திச் செருக்கும் அடக்கமின்மையும் அழிவிற்கு வழிகோலும் என்பதனைக் கூறாமல் கூறிச் செல்லுகின்றார் வள்ளுவர்.

### முள்ளும் பகையும்

இன்னல் தருகின்றவற்றைத் தொடக்க நிலையிலேயே கிள்ளி எறிதல் நல்லது; பகை தோன்றாமலே தடுப்பது

48. குறள், 500.

மிகவும் நல்லது. தோன்றிவிடுமேயானால் அப்பகையினை அது வளரும் முன்னரேயே அழிப்பது நல்லது. பகை வளர்ந்து முதிர்ந்த பின்னர் அப்பகையினை வென்றழிப்பது அரிய செயலாகும். அன்றியும் அப்பகையினை அழிக்கும்போது துன்பங்கள் நம்மை வந்தடைந்து வருத்தும். வள்ளுவர் இக்கருத்தினைப் பிறிது மொழிதலணி அமைய, 'பகைத்திறம் தெரிதல்' என்னும் அதிகாரத்தில் அழகாகக் கூறுகின்றார் :

> இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
> கைகொல்லும் காழ்த்த விடத்து.[49]

முள் மரத்தை இளையதாக இருக்கும்பொழுதே வெட்டி விட வேண்டும்; தொல்லையும் துன்பமும் தரக்கூடியது முள் என்று தெரிந்த பின்னரும் அதனை வளரவிடுதல் நல்லதன்று. முள் வளர்ந்து முதிர்ந்து மரமான பின்னர் அதனை வெட்டுவது என்பது எளிதான செயலன்று. முள்மரம் இளையதாக இருக்கும்போதே வெட்டினால் வெட்டுவோர்க்கும் அம்முள்ளினால் எத்தகைய துன்பமும் விளையாது. வளர்ந்த பின்னர் வெட்டும்போது காழ்ப்பு ஏறிய அம்முள் வெட்டுபவரையும் வருத்தும். பகையும் இத்தகையதேயாம். இதனைத் தொடக்க நிலையிலே அழித்தல் நன்று. நாடும் குழப்பமின்றி நற்பயனை அடையும். இல்லையெனில் பகை வளர்ந்து முதிர்ந்து நாட்டினையே கெடுக்கும். தாம் கூற விரும்பியதைக் குறிப்பாகக் கூறிக் கருத்திற்கு வலிவும் நயமும் அமையக் குறளை யாத்தார் வள்ளுவர்.

தாம் விரும்பிய கருத்துகளை வலியுறுத்திக் கூறுவதற்கு வள்ளுவர் பிறிதுமொழிதலணியினையே மேற்கொண்டுள்ளார் என்பது இதுகாறும் கூறிய சான்றுகளால் அறியக்கிடக்கின்றது. கவிஞர் தாம் கருதியதனை வெளிப்படையாகக் கூறாது குறிப்பால் பெற வைக்கும் இம்முறை படிப்பவர்க்கு நல்ல பயனையும் ஆர்வத்தையும் ஊட்டுகின்றது. சிந்தனைத் திறனையும் வளர்க்கின்றது.

49. குறள், 879.

**வேற்றுமையணி**

வேற்றுமையணி எனப்படுவது வெளிப்படையாகவோ குறிப்பாகவோ ஒப்பான இருபொருள்களை ஒருபொருளாக வைத்து அவை தம்முள் வேற்றுமைபடச் சொல்லுதலாம். இதனைத் தண்டியலங்காரம்,

> கூற்றினும் குறிப்பினும் ஒப்புடை யிருபொருள்
> வேற்றுமைப் படவரின் வேற்றுமை யதுவே[50]

என்று கூறும். இதையே,

> ஒப்புடை யிரு பொருளுரையினுங் குறிப்பினும்
> மெய்ப்பட வேற்றுமைப் படுத்துதல் வேற்றுமை[51]

என்று மாறனலங்காரம் தெளிவுறுத்தும். இதனைக் குண வேற்றுமை, பொருள் வேற்றுமை, சாதி வேற்றுமை, தொழில் வேற்றுமை என நான்கு வகையாகப் பகுப்பர்.

> அதுவே
> குணம்பொருள் சாதி தொழிலொடும் புணரும்[52]

என்பது இலக்கண நூலார் கருத்தாகும்.

ஒருபொருளுக்கு ஒன்றை ஒப்பாக வைத்துப் பின்பு அவற்றினுள் வேறுபாடு இருப்பதை நயமாகவும் அழகாக வும் குறளில் வள்ளுவர் பல பாக்களில் கூறுகின்றார். முன்னர் ஒப்பாக வைத்துப் பின்னர் அவற்றை வேறு படுத்திக் கூறுவதும் ஒரு தனியழகேயாம்.

**மோப்பக் குழைவதும் நோக்கக் குழைவதும்**

அனிச்ச மலர் மிகவும் மென்மையானது; இலக்கியங் களில் மென்மைத் தன்மைக்குச் சான்றாக இம்மலரைக் கொள்வர். மலர்களில் மிக மென்மையானதும் இதுவே! வீட்டிற்கு வந்த விருந்தினரும், மென்மையான உள்ளம் கொண்டவர். அனிச்ச மலரையும் விருந்தினரையும்

50. தண்டி, 48.
51. மாறன். 130.
52. தண்டி. 49.

ஒப்பிட்டுக் காட்டுகின்ருர் வள்ளுவர்; அனிச்சமலரைப் போல்வர் விருந்தினர் என்கிருர். ஆயினும் நுட்பமான குறிப்பாலும் திறனலும் அனிச்சமலரை விட வந்த விருந்தினர் மென்மையானவர் என்பதைக் கூறுகின்ருர் வள்ளுவர். அனிச்சப் பூவை விட மென்மை உடையது விருந்துப் பூவாம்! எவ்வாறு?

அனிச்சம், தன்னை மோந்தபோது குழையும்; விருந்தினரோ வீட்டார் முகந்திரிந்து நோக்கக் குழைந்து விடுவாராம். வள்ளுவரின் நுட்பமும், திறனும் இவ்விடத்து அழகாகப் புலனகின்றன. அனிச்சமலர் நோக்கும்போதும் குழைவதில்லை; தொடும்போதும் குழைவதில்லை; எடுக்கும் போதும் குழைவதில்லை; முகரும் போதே குழையும். ஆனல், விருந்தினரோ வீட்டாரின் முகமாற்றத்தை நோக்கியதும் குழைந்து விடுவராம். மென்மையான மனமுடைய விருந்தினர் உள்ளத்தைப் புலப்படுத்தும் வள்ளுவரின் உவமை இன்பம்தான் என்னே! மென்மைத் தன்மையினை மேலும் மேலும் விளக்குதற்கே 'குழையும்', 'குழையும்' என்ற மெல்லோசைச் சொற்களைப் பெய்தனர் போலும். வள்ளுவரின் சொல்லாட்சித் திறனை இக்குறளில் நன்கு காணலாம்.

மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து[53]

எனவரும் குறட்பாவின் மூலம் உவமை வாயிலாக விருந்தோம்புகின்ற பண்பாட்டினையும் இலக்கிய நயத்தோடு தருவதைக் காணலாம். உவமானமாகிய அனிச்ச மலரைக் காட்டிலும் உவமேயமாகிய விருந்தினரை வேறுபடுத்தி உயர்த்திக் காட்டுகின்றமையால், இதனை 'வேற்றுமை அணி' என்பர். அனிச்ச மலரும் விருந்தும் குழைகின்ற மென்மைத் தன்மை உடையவை; ஆயினும், அனிச்சமலர் மோப்பக்குழையும், விருந்து நோக்கக் குழையும் என்னும் நுட்பமான வேற்றுமையை வள்ளுவர் இக் குறட்பாவில் அமைத்துள்ள திறனும் எண்ணி மகிழ்தற்குரியதாம்.

53. குறள், 90.

விருந்தோம்புவோர் முகம் திரியாது முகமலர்ச்சியோடு விருந்தினரைப் போற்றுதல் வேண்டும் என்னும் அறிவுரையையும் வள்ளுவர் இவ்வுவமை வாயிலாக நமக்கு உணர்த்துகின்ருர்.

இப்பாட்டிற்குக் காளிங்கர் உரை கூறும்போது, "உலகத்து மலர்கள் பலவற்றிலும் மென்மையாற் சிறந்த அனிச்சமலர் ஒருவர் பறித்து மோப்ப வாடும். அதுபோல் விருந்தை ஒருவர் முகம் மாறிப் பார்க்க மிகவும் வாடும்" என்று குறிப்பிடுகின்ருர். இங்ஙனமே இக்குறளுக்குப் பழைய உரையும் பொருள் கொள்ளுகின்றது. அது வருமாறு:

'அனிச்சமலர் நாசியில் முகந்த மாத்திரத்திலே குழையும். அதுபோல விருந்தினரைக் கிருபையினுலே பாராத போது முகம் வாடும்.[54]

இவ்விரு உரையாசிரியர்களும் இப்பாடலினை எடுத்துக் காட்டு உவமைக்குச் சான்ருகக் கொண்டனர் என்பது இதனுல் நன்கு தெளிவுறும்.

இளம்பூரணர் இப்பாட்டினைச் சுட்டிக் கூரு உவமத்திற்கு எடுத்துக்காட்டுவர். "இதன்கண் அதுபோல எனச் சுட்டிக்கூரு உவமமாயினவாறு கண்டுகொள்க"[55] என்பர்.

பரிமேலழகர் இப்பாட்டிற்கு உரையெழுதும்பொழுது, "தீண்டிய வழியல்லது வாடாத அனிச்சப்பூவினும் விருந்தினர் மெல்லியர்" என்று கூறுவர். பாட்டின் பொருளைக் கருதுமிடத்துப் பொருளுக்கும் உவமைக்குமுள்ள வேறுபாட்டை இது நுட்பமாக விளக்குகிறது.

ஒப்புடைய இரண்டு பொருள்களைக் கூறிக் கவிஞன் தன்னுடைய திறனுலும் நயத்தாலும் அவற்றுள் காணப்படும் நுட்பமான வேற்றுமைகளை அழகுபடக் கூறுவதால்,

54. திருக்குறள் உரைவளம் - குறள், 90.: தருமபுர ஆதீன வெளியீடு, 1950.

55. தொல். உவம. 7. இளம்பூரணர் உரை.

அவன் கூற விரும்பிய கருத்து வலிவும் பொலிவும் பெற்றுத் திகழ்கிறது. உணர்ந்தோருடைய நெஞ்சிலும் அக் கருத்து ஆழமாகப் பதிகின்றது.

**புண்ணும் வடுவும்**

மனித வாழ்க்கையில் எத்தனையோ துன்பங்கள் வருகின்றன; மறைகின்றன. சில துன்பங்கள் அன்றே அப்பொழுதே மறந்துவிடும் தன்மையன. சிலவோ வாழ் நாள் முழுதும் துன்ப நினைவினையே தந்துகொண்டிருப்பன. வெளிப்படையாக உடலுக்கு ஏற்படுகின்ற துன்பங்கள் விரைவில் அழிந்துபோவன; உள்ளத்தில் ஏற்படுகின்ற துன்பங்களோ என்றும் அழியாத வடுக்கள். வள்ளுவர் இத்தகைய இருவேறு துன்பங்களையும் முதலில் கூறிப் பின்னர் அழியாத துன்பத்தை வேறுபடுத்திக் காட்டு கின்றார்.

ஆற்றல் மிக்கானொருவன் அடக்கிக் காக்க வேண்டியது நாவையே; சிறந்ததும் இந் நாவடக்கமே. நாவடக்க மின்மை எப்பொழுதும் துன்பத்தையே தரும். தீ உடலுக்குப் புண்ணை உண்டாக்கும்; தீய சொற்கள் உள்ளத்தில் ஆழ்ந்த புண்ணை உண்டாக்கும். தீய சொல்லைவிடத் தீயே மேலானது என்கிறார் வள்ளுவர். தீயால் சுட்டபுண் புறத்தில் வடு ஏற்படுத்தினாலும் உள்ளத்தில் ஆறிவிடும்; ஆனால், நாவினால் சுட்டபுண் உள்ளத்தில் வடு ஏற்படுத்தும். இந்த வடு எப்பொழுதும் ஆறுவதில்லை. தீப்புண் ஆறும்; நாப்புண் ஆறவே ஆறாது.

> தீயினால் சுட்டபுண் உள்ளாறும்; ஆறாதே
> நாவினால் சுட்ட வடு.[56]

ஆறிப்போதலால் தீயினாற் சுட்டதனைப் 'புண்' என்றும், என்றும் ஆறாத தன்மையுடையதால் நாவினால் சுட்டதனை 'வடு' என்றும், வள்ளுவர் கூறும் நயத்தினையும் எண்ணிப் பார்த்தல் வேண்டும். இக்குறளினைப் பரி மேலழகர், 'குறிப்பான் வந்த வேற்றுமை யலங்காரம்'

56. குறள், 129.

என்று கூறுகிருர். உவமானமான 'தீயும்' உவமேயமான 'தீய சொற்களும்' (கடுஞ்சொற்கள்) பிறரைத் துன்புறுத்து கின்ற (சுடுகின்ற) தொழிலினுல் ஒப்பான தன்மையைக் கொண்டன. தீயிஞற் சுட்டபுண் ஆறும்; நாவினுல் சுட்ட சுடு சொற்களால் உண்டாகும் மனப்புண் என்றுமே ஆருது. எனவே, தீயினைக் காட்டிலும் கடுஞ்சொல் கொடியது என்னும் வேற்றுமை 'ஆருதே நாவிஞற் சுட்ட வடு' என்னும் வள்ளுவர் கூற்ருல் குறிப்பாகவும் பெறப்படு கின்றது.

தண்டியலங்கார ஆசிரியர் இக் குறட்பாவினைத் 'தொழில் வேற்றுமை'யாகக் கொள்கிருர். தீயும் கடுஞ் சொல்லும் சுடுதல் தொழிலில் ஒப்பானவையாயினும், தீயினுடைய புண் ஆறும்; தீய சொல்லால் ஏற்படும் மனப்புண் ஆருது எனத் தொழில் வேற்றுமை கூறப் பட்டிருத்தலால், இதனைத் 'தொழில் வேற்றுமை' என்று கொண்டார்.

### தீயும் காமமும்

அணுகிஞல் சுடும் தன்மையது தீ; அணுகாமையிஞல் மக்களுக்கு வெப்பம் தருவது காமத்தீ. இவ்விரு தீயும் வெப்பம் தரும் தன்மையன. ஆயினும், இவற்றிற்கிடையே அடிப்படையில் வேற்றுமை உண்டு. இந்நுட்பமான வேறு பாட்டை வள்ளுவர் அழகாகத் தம் பாவில் அமைத்துக் கூறுகிருர். அன்புள்ள தலைவனும் தலைவியும் ஒருநாள் உளங்கலங்கிப் பிரிந்தனர். தலைவனுடைய பிரிவைப் பொருது தவித்தாள் தலைவி. சுட்டெரிக்கும் தீப் போல அவள் நெஞ்சத்தைச் சுடுகிறது காமத் தீ! பிரிவினுடைய வேதனை தாங்காது தலைவி புலம்புகின்ற சொற்கள் அழகான செய்யுள் வடிவில் உருவாயின! உணர்ச்சியால் காமத் தீக்கும் நெருப்பிற்கும் வேற்றுமை தோன்றக் கூறு கின்ருள் தலைவி.

> தொடிற்சுடின் அல்லது காமநோய் போல
> விடிற்சுடல் ஆற்றுமோ தீ.[57]

57. குறள், 1159.

தீயைப் போன்றது காமம்; கூர்ந்து நோக்கின், தீயை விடக் கொடியது! தீயோ நெருங்கினுல்தான் சுடும். ஆனுல், காமமோ நெருங்க நெருங்கக் குளிர்ச்சியையும் பிரிந்து செல்லச் செல்ல வெப்பத்தையும் தரக் கூடிய புதுமையான தீயாகும். “நெருப்புத் தன்னைத் தொட்டால் சுடுமே அல்லாது காமநோய் போலத் தன்னை நீங்கிய பொழுது சுட வல்லதாகுமோ?” என்று தன் ஆற்ருமையை அழகாகக் காட்டுகின்ருள் தலைவி.

தீயும் காம நோயும் வெப்பந்தருவதில் ஒப்பானவை யென்ருலும், தீயினைக் காட்டிலும் காம நோய் கொடுமை யும் ஆற்றலும் பொருந்தியது என்பதை வேறுபடுத்திக் காட்டியதால் இக் குறட்பாவினை வேற்றுமையணிக்குச் சான்ருகக் கொள்வர்.

இருபொருள்களை இவ்வாறு ஒப்புமை படக் கூறிக் குறிப்பாகவோ வெளிப்படையாகவோ அவற்றை வேறு படுத்திக் கூறுகின்ற அழகு வேறு சில குறட்பாக்களிலும் அமைந்திருத்தல் கண்டு மகிழ்வதற்குரியதாகும்.[58]

## தற்குறிப்பேற்ற அணி

கவிஞர்கள் ஒரு பொருளுக்குரிய இயல்பான கார ணத்தை ஒழித்துத் தாங்கள் கருதிய வேருெரு காரணத் தினை அப்பொருளின்மேல் ஏற்றி, அழகும் பொருளும் விளங்க இனிதுரைப்பர். இதனை இலக்கண நூலார் ‘தற்குறிப்பேற்ற அணி’ என்பர். தன்னுடைய குறிப் பினையும் கருத்தையும் ஒருபொருளின்மேல் ஏற்றிக் கூறு வதே இவ்வணியாகும். வீரசோழியம் இதனை ‘நோக்கு’ என்னும் அலங்காரம் என்று கூறுகிறது.[59]

இதனைத் தண்டியாசிரியர்,

58. குறள், 248, 600, 723, 896, 1090, 1102, 1104, 1201, 1281.

59. பெருகிய நோக்கது தற்குறிப் பேற்றம் பெயர்பொருளாய்
வருவதும் பேராப் பொருளது மாக வகுத்தனரே.
—வீரசோழியம், அலங். 25.

பெயர்பொருள் அல்பொருள் எனவிரு பொருளினும்
இயல்பின் விளைதிற னன்றி அயலொன்று
தான்குறித்து ஏற்றுதல் தற்குறிப் பேற்றம்[60]

என்றும், இது உவம உருபுகளோடு இயைந்து வரும் என்றும் கூறுகிறார்.

இயங்கு பொருளும், இயங்காப் பொருளும் என்னும் இருபொருட்கண்ணும், இயல்பாக நிகழும் தன்மை ஒழிய, கவிஞன் தான் கருதிய வேறொன்றினை அதன்கண் ஏற்றிச் சொல்வது 'தற்குறிப்பேற்றம்' என்னும் அணியாம் என்பது இந்நூற்பாவின் பொருள்.[61]

மாறனலங்காரமும்,

உலகினுள் ஒருபொருட் குற்ற தன்மைத் திறம்
விலக்குபு பிறிதின் விளைந்ததென் றுட்கொண்டு
ஏற்றுத லாகும் தற்குறிப் பேற்றம்[62]

என்று மேலே சுட்டிய கருத்தையே கூறித் தெளிவுறுத்து கிறது.

பொருளின் இயல்பான தன்மையினை ஒழித்து இனிமையும் பொருள் நயமும் விளங்க, வேறொரு காரணத்தினை அப்பொருள்மேல் ஏற்றிக் கூறும் இனிய அமைப்பு முறையை வள்ளுவரும் தம் குறட்பாக்களில் எடுத்தாண்டுள்ளார்.[63]

60. தண்டி. 55.

61. 'தொன்னூல் விளக்கத்தில்' வீரமாமுனிவர் இதனை 'ஊகாஞ்சித வலங்காரம்' என்பர்.

ஊகாஞ் சிதமென்ப வுரிமை யொழித்துமற்
றுகோர் குறிப்பொரு ளறைந்து பொருத்தலே.
—தொன்னூல் விளக்கம், 346.

இதன் விளக்கவுரையில், "இதனைத் தற்குறிப்பேற்றம் என்பாருமுளர். என்னை, ஊகாஞ்சிதம் எனினும் தற்குறிப் பெனினும் ஒக்கும். அஞ்சிதம் எனினும் பொருத்தம் எனினும் ஒக்கும்" என்று கூறுவர்.

62. மாறனலங்காரம், 140.

63. குறள், 1114, 1116, 1232, 1233.

**குவளை மலரும் கண்களும்**

அன்பிற்குரிய தலைவியின் அழகினை எண்ணி எண்ணி மகிழ்ந்த தலைவன் தன்னை மறந்தான். காணுகின்ற பொருள்களனைத்தையும் காதலியோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றான். தலைவியின் அழகே எல்லாப் பொருளை விடவும் உயர்ந்ததாக அவனுக்குத் தோன்றுகிறது.

அழகிய மணங்கமழும் மலர்கள் நிறைந்த ஒரு குளம். குளத்திலே குவளைமலர் மலர்ந்து நிற்பதைக் கண்டான் தலைவன். குவளை மலரினைக் கண்டதும் அவனுக்குத் தலைவியின் கண்கள் உடனே நினைவிற்கு வந்தன. தலைவியினுடைய கண்கள் குவளைமலரினும் அழகானவை என்று மகிழ்ந்தான்.

> காணின் குவளை கவிழ்ந்து நிலன்நோக்கும்
> மாண்இழை கண்ஒவ்வேம் என்று[64]

என்பது குறள்.

காதலிக்கப்பட்டவளாகிய தலைவியின் அழகினை உள்ளதினும் அதிகமாகப் புனைந்துரைப்பதின் மூலம் மாந்தர் உளவியலையும் வள்ளுவர் காட்டுகின்றார். எழிலுடைய தலைவியின் அழகு முகத்தை நோக்கினால் குவளை மலரும், அவளுடைய அழகிய கண்களுக்கு ஒப்பாகோம் எனக் கருதிக் கவிழ்ந்து நிலத்தை நோக்குமாம். இயல்பாக அது தலை நிமிர்ந்து நிற்கக் காரணம் அதற்குப் பார்வையின்மையே என்கிறார். தலைகுனிதலும் தரை நோக்கலும், நாணமும் தாழ்வுணர்ச்சியும் வந்தபொழுதுதான் ஏற்படும். குவளை மலரும் அழகு நங்கையின் கண்களும் ஒப்பாயினும் மலருக்குப் பார்வையின்மையினால்தான் அது நிமிர்ந்து நிற்கிறது என்கிறார் வள்ளுவர். குவளை மலர்கள் இயற்கையாக வான்நோக்கி உள்ளன. இதற்குக் கவிஞர் தாம் கருதிய காரணத்தை மலரின்மீது ஏற்றிக் கூறுகின்றமையால் இதனைத் தற்குறிப்பேற்ற அணி என்கிறோம்.

64. குறள், 1114.

***திங்களறியா விண்மீன்கள்***

நாள் மீன்கள் (Fixed Stars) நிலை திரியாமல் நின்றாலும், கோள் மீன்கள் (Planets) இயங்குவன;[65] தத்தம் இடங்களினின்றும் மாறி மாறி விண்ணில் சுழல்வன. கோள் மீனையும், தண்ணிலவையும் கண்ட தலைவனுக்குத் தன் அன்பிற்கினிய தலைவியின் நினைவு வருகின்றது; தண்ணிலவும் தலைவியின் முகமும் ஒன்று அல்லவோ என எண்ணுகின்றான்.

கோள் மீன்கள் நிலைபெயர்ந்து செல்வதைக் கண்ட தலைவனுக்கு வேறோர் எண்ணமும் எழுகின்றது. விண்ணில் ஒரு மதியும், மண்ணில் ஒருமதியும் கண்ட மீன்கள் நிலைகலங்கி விண்ணில் சுழல்கின்றனவாம். திங்களுக்கும் பெண்ணின் முகத்திற்கும் வேறுபாடு அறிய முடியாமல், மீன்கள் தம் நிலையில் நிற்காமல் கலங்கித் திரிகின்றன என்பதனை வள்ளுவர் பின்வரும் குறட்பாவின் மூலம் எடுத்துக் காட்டுகின்றார்:

மதியும் மடந்தை முகனும் அறியா
பதியிற் கலங்கிய மீன்.[66]

மீன்கள் நிலைபெயர்ந்து நடப்பது இயற்கையின் செயல்; கவிஞர் தம் கற்பனைத் திறனால் இச்செய்தியினுக்கு அழகூட்டி இலக்கியமாகப் படைக்கின்றனர். தலைவியின் அழகிய முகத்திற்கும் விண்ணில் விளங்கும் மதிக்கும் வேறுபாடு தெரியாது விண்மீன்கள் கலங்குகின்றன என்கிறார் வள்ளுவர். பொருளின் இயல்பான தன்மையாகிய இயங்குதலை ஒழித்து வேறொரு காரணத்தை அப்பொருளின்மீது ஏற்றிக் கூறி, அழகும் இனிமையும் தோன்றப் படைத்தமையான், இப்பாடல் தற்குறிப்பேற்ற அணி ஆயிற்று.

65. மகாதேவன், கே. எஸ்.: 'திங்கள் ஒளியில் திருவள்ளுவர்'— கலைக்கதிர் - நவம்பர், 1969.

66. குறள், 1116.

**உயர்வு நவிற்சி அணி**

பொதுவாக ஒருபொருளினுடைய சிறப்பை எடுத்துக் காட்டச் சற்றே மிகைப்படுத்திக் கூறுவது இன்றைய உலக வழக்கில் இயல்பாகக் காணப்படுகிறது. 'விண்ணை அளாவிய கோபுரம்' எனில், மிகமிக உயர்ந்த கோபுரம் என்றுதான் பொருள் கொள்கின்றோம். விண்ணைத்தொட்டுக் கொண்டிருக்கும் கோபுரம் என நேராகப் பொருள் கொள்வதில்லை. இது பொருளினுடைய பெருமையை மிகைப்படுத்திக் கூறப் பயன்படுத்தும் ஒருசிறந்த முறையாகும்.

ஒன்றை அதன் இயல்பான தன்மையினின்றும் அதிகமாகப் பாராட்டி உயர்வாகச் சொல்லுவது உயர்வு நவிற்சியணியாம்.

தண்டியலங்காரம் போன்ற இலக்கண நூல்களில் இவ்வணிபற்றி விளக்கப்படவில்லை. ஆயினும் இதனைத் தற்குறிப்பேற்ற அணியின் விரிவாகக் கொள்ளலாம். பிற்காலத்தார் பெருக்கிய அணிகளுள் இதுவும் ஒன்றாகும். மாறனலங்காரம் கூறும் அதிசய அலங்காரத்தோடு இதனை ஒப்பிடலாம்.

> விதந்தொரு பொருளை விழுமிதின் உரைப்புழி
> உயர்ந்தோர் மதிக்குற வுரைப்பது அதிசயம்[67]

என்பது மாறனலங்கார நூற்பாவாகும்.

வீரசோழிய ஆசிரியரும்,

> அருளும் அதிசயம் ஆன்றோர் வியப்ப துலகிறவாப்
> பொருள்குணம் ஐயம் துணிவு திரிவெனப் போற்றுவரால்[68]

என்றார். அதிசயமாவது ஆன்றோர்க்கு வியப்புடைத்தாக வருவது. அது உலகநடை இறவாது என்று கூறினர். தண்டியலங்காரத்திலும் அதிசய அணிக்கு இங்ஙனமே இலக்கணம் கூறப்பட்டுள்ளது.

67. மாறனலங்காரம், 143.

68. வீரசோழியம், அலங். 25.

மனப்படு மொருபொருள் வனப்புவந் துரைப்புழி
உலகுவரம் பிறவா நிலைமைத் தாகி
ஆன்றோர் வியப்பத் தோன்றுவ ததிசயம்[69]

என்பது தண்டியலங்கார நூற்பாவாகும்.

இதற்குத் தண்டியலங்கார உரையாசிரியர், "கவி தான் கருதிய பொருளினது வனப்பை உவந்து சொல்லுங்கால் உலக நடை இறவாத தன்மைத்தாகி[70] உயர்ந்தோர் வியப்புறத் தோன்றுவது அதிசயம் என்னும் அலங்காரம்" என்று உரை கூறினர். இவ்வதிசய அணியைப் 'பெருக்கு' எனவும், 'மிகைமொழி' எனவும் கூறுவர்.

விருந்தோம்பலினுடைய பெருமையைக் கூறப்புகுந்த வள்ளுவர், "விருந்தினரைப் போற்றியுண்டு வாழ்வோருடைய நிலத்தில் விதையும் விதைக்க வேண்டுமோ? தானே வளரும்" என்று உயர்த்திப் பேசுகின்றார். இயல்பாகத் தானே வளருமா? வளராதெனினும் தாம் கூறவந்த கருத்தினை உயர்வுபடச் சொல்லிச் செய்யுளில் இனிமையையும் எழிலையும் குழைத்துத் தருகின்றார்.

வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்.[71]

விருந்தோம்பலின் பெருமையையும் சிறப்பையும் இவ்வாறு உயர்த்திக் கூறுகிறார்.

கூற்றுடன்று மேல்வரினும் கூடியெதிர் நிற்கும்
ஆற்ற லதுவே படை[72]

69. தண்டி. 53.

70. தண்டி. 27, திரு. அ. குமாரசாமிப் புலவர் அவர்களும், திரு. வை. மு. சடகோப ராமாநுஜா சாரியர் அவர்களும் 'உலகநடை இறவாத' என்பது 'உலகநடை இறந்த' என்றிருத்தல் வேண்டும் எனவும், அதுவே முதனூல் கருத்துக்கு ஏற்றது எனவும் கூறியுள்ளனர். அவர்கள் பதிப்பித்த தண்டியலங்காரப் பதிப்புகளில் இக்குறிப்புரையைக் காணலாம். மேலும், 'இறவா' என்பது 'செய்யா' என்னும் வாய்பாட்டு வினையெச்சமாகக் கொள்ளத்தக்கதாதலால் 'இறந்த' என்று பொருள் தருதலே பொருத்தமாகும். ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சமாகக் கொண்டு கூறியது பொருத்தமின்மையும் விளங்கும்.

71. குறள், 85.

72. குறள், 765.

என்னும் இக்குறட்பாவினையும் படைமாட்சியின் சிறப்பை உயர்த்திக் கூறுவதாகக் கொண்டால், இப்பாடலும் உயர்வு நவிற்சியின் பாற்பட்டதாகும்.

> அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
> சிறுகை அளாவிய கூழ்.[73]

> தாம்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல்
> தாமரைக் கண்ணான் உலகு[74]

என்பன போன்ற பாடல்களிலும் இவ்வணி சிறந்து வருவதைக் காணலாம்.

## வஞ்சப்புகழ்ச்சி அணி

கவிஞர் வெளிப்படையாக ஒன்றை இகழாமல், குறிப்பாக இகழ்வது ஒரு நயமாகும். கூறுகின்ற சொற்களை மட்டும் வைத்து நோக்கினால் புகழ்வது போலத் தோன்றும்; கருத்தை நோக்கும் போது இகழ்வதாக முடியும். இவ்வாறு சொல்லும் முறையினால் கற்பார்க்குச் சுவையும் மகிழ்வும் ஏற்படுகின்றன. தண்டியலங்காரம் கூறும் 'இலேசவணி' இதனோடு ஒப்புமை உடையது எனலாம்.

> குறிப்பு வெளிப்படுஞ் சத்துவம் பிறிதின்
> மறைத்துரை யாடல் இலேச மாகும்[75]

என்பது நூற்பா.

> "இலேச மென்னும் அலங்காரம் கண்ணில் நீர்வார்தல், மெய் சிலிர்த்தல் முதலான சத்துவங்கட்கு வேறுகாரணம் சொல்வது. இகழ்வது போலப் புகழ்தலும் புகழ்வது போல் இகழ்வதும் இதன்பாற்படு மென்று கூறுவாறு முளர்"[76]

என்று வீரசோழிய உரை கூறுவதும் ஈண்டு ஒப்புநோக்கிக் காணத்தகும்.

73. குறள், 64.
74. குறள், 1103.
75. தண்டி. 64.
76. வீரசோழியம், அலங். 27, உரை. பக். 254, பவானந்தர் கழகப்பதிப்பு.

புகழ்வது போலப் பழித்திறம் புனைதலும்
பழிப்பது போலப் புகழ்புலப் படுத்தலும்
அவையும் அன்னதென்று அறைகுநர் உளரே[77]

என்று புகழ்வது போலப் பழித்தலையும், பழிப்பது போலப் புகழ்தலையும் இவ்வணியில் அடக்கியுள்ளார்[78] தண்டியாசிரியர். இந்நூற்பாவில் 'அறைகுநர் உளரே' என்று கூறியது இதற்கு முன்னர்த்தோன்றிய வீரசோழிய ஆசிரியரைச் சுட்டியதாகக் கொள்ளலாம். மாறனலங்கார ஆசிரியர் இதனை 'துதி நிந்தை' என்று குறிப்பிடுகின்றார்.

மதித்தொரு பொருளினை வழாதுள் ளுறுத்துத்
துதிப்பது போன்றிகழ் வதுதுதி நிந்தை[79]

என்பது நூற்பா. புகழ்வது போலப் பழிக்கும் இந் நெறியைப் பல குறட்பாக்களில் வள்ளுவரும் புகுத்தியுள்ளார்.

## பெரிதினிது பேதையார் நட்பு

அறிவில்லாத இருவர் அன்பு பூண்டனர். நாளுக்கு நாள் நட்பும் வளர்ந்தது. ஒருநாள் அவர்களிடையே பிரிவும் நேர்ந்தது; பிரிவு நேர்ந்தபோது அவர்களுக்குச் சிறு கலக்கமும் ஏற்படவில்லை. எள்ளளவேனும் துன்பமின்றிப் பிரிந்தனராம். எனவே, இவர்களுடைய நட்புப் பெருமையுடையது என்கிறார் வள்ளுவர்!

பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கண்
பீழை தருவதொன்று இல்.[80]

77. தண்டி. 65.

78. புகழ்வது போலப் பழித்தலை இந்நூலாசிரியர் 'மாறுபடு புகழ்நிலையணி' எனத் தனிப்பட்டதொரு அணியாகவும் கொண்டுள்ளார்.

கருதிய பொருடொகுத் தாங்கது பழித்தற்கு
வேறொன்று புகழ்வது மாறுபடு புகழ்நிலை.

—தண்டி. 82.

79. மாறனலங்காரம். 229.

80. குறள், 839.

பேதையார் கேண்மை பெரிதினிதாம்! புகழ்வது போல் கூறுகிறார் வள்ளுவர். ஆயின், அதில் அமைந்த பொருளோ நட்பின் சிறுமையைக் காட்டும். 'பேதையார் கேண்மை பெரிதினிது' என்ற முதல் தொடரைப் பார்த்ததும் வள்ளுவர் பெருமையைப் பற்றிப் பேசுகிறார் என்றெண்ணுகிறோம். பேதையார் கேண்மை எவ்வாறு இனிமையுடையதாகும் என்று சிந்தித்துப் பார்த்தால் அதனுடைய உண்மைப் பொருள் விளங்குகிறது. அவர்களிடையே ஏற்படும் பிரிவு அவர்களுக்குத் துன்பம் தருவதில்லை. பிரியும் போது வருத்தத்தினை ஏற்படுத்தாத நட்பு உள்ளம் ஒன்றியதாயும், உண்மையானதாயும் இருக்குமோ? அன்பு இல்லாதவரே அங்ஙனம் இருப்பர். எனவே, அவர்கள் கொண்ட அன்பு போலி அன்பு; நட்பும் போலி நட்பே! அவர்களுடைய நட்பு பெருமைக் குரியதாகுமா? புகழ்வதைப் போல் இகழ்கின்றார் வள்ளுவர்.

### தேவரும் கயவரும்

கயவர்கள் தேவரைப போன்றவர்கள் என்கிறார் வள்ளுவர். கயவர்களை வள்ளுவர் தேவர்களோடு ஒப்பிட்டுப் பேசுகின்றாரே என்று நமக்கு ஐயமும் வியப்பும் எழுகின்றன. வள்ளுவர் கயவரைப் புகழ்கின்றாரோ என்ற எண்ணமும் உடன் எழும். 'அவரும் தாம் மேவன செய்தொழுகலான்' என்ற தொடரை அடுத்துப் படித்ததும் சிந்தனையும் தொடரும். தேவர்கள் தாங்கள் விரும்புவதைச் செய்வர்; எதை விரும்பினும் அதனை அப்பொழுதே செய்து முடிக்கும் ஆற்றல் பெற்றவர்களாம் கயவர்களும் அவ்வாறே கட்டுப்பாடில்லாத வாழ்க்கையையுடையவர்கள்; இன்பம் ஒன்றினையே குறிக்கோளாகக் கொண்டவர்கள்; தங்களுடைய விருப்பத்தின் விளைவைச் சிந்தியாதவர்கள். தேவர்களும் கயவர்களும் விரும்பியதைச் செய்கின்ற அளவில் ஒப்பானவர்கள் என்று கூறிய வள்ளுவர் அவர் தம் கயமைத் தன்மையினைக் குறிப்பாகவும் நயமாகவும் கூறுகின்றார்.

'தேவரனையர் கயவர்' என்று கூறியமையால், அடுத்துத் தொடர்ந்து படிப்பதற்கான விருப்ப உணர்வையும் இத்தொடரின் மூலம் வள்ளுவர் தந்து, குறளோடு நம்மையும் ஒன்றச் செய்து விடுகிறார்.

தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான்[81]

என்னும் குறட்பாவை முழுதும் படித்த பின்னர்க் கயவர்களின் உண்மையுரு நமக்குத் தெளிவாகும். தேவர் மிக உயர்ந்தோராதலால், அவர் விருப்பத்திற்குத் தடையேதுமில்லை; கயவர் இழிந்தோராதலால் தடையேற்படினும் தம் விருப்பத்தைச் செய்துமுடித்தே தீர்வர் என இருவருக்கும் ஒப்புமை கூறி அவர்களுடைய இழிந்த தன்மையினை உலகிற்கு உணர்த்துவர். 'தேவருக்கு ஒப்பானவர் கயவர்' என்ற சொற்பொருளை மட்டும் வைத்துக்கொண்டு பார்த்தால் கயவரைப் புகழ்வதுபோலத் தோன்றும். ஆயினும், அவர்களை இகழ்கின்ற நயம் இப்பாடலில் சிறந்து விளங்குவதைக் காணலாம். இங்ஙனம் புகழ்வது போன்று பழித்தலையே 'வஞ்சப்புகழ்ச்சி அணி' என்பர்.

இவ்வாறே 'உலகத்தின் நிலையாமையே பெருமை' என்று கூறும் குறட்பாவும்,[82] எதைப் பற்றியும் கவலை இல்லாத கயவர்கள் நன்மை தீமையறிந்தவரை விடச் சிறப்பு உடையவர்கள் என்று கூறும் குறட்பாவும்[83] வஞ்சப் புகழ்ச்சியணிகளாகச் சிறந்து விளங்குவதைக் காணலாம்.

பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் 'சங்க காலத்து அங்கதம்' என்னும் கட்டுரையில், மேலே எடுத்துக் காட்டப் பெற்ற, 'தேவரனையர்' எனத் தொடங்கும் குறட்பாவையும்,

81. குறள், 1073.
82. குறள், 336.
83. குறள், 1072.

செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்[84]

என்னும் குறட்பாவையும் அங்கதத்திற்கு எடுத்துக் காட்டாகத் தந்துள்ளார்.[85] அங்கதம் 'செம்பொருள்', 'பழிகரப்பு' என இருவகைப்படும் என்பர் தொல்காப்பியர்.[86] மேற்போக்காகக் காணின் ஒரு பொருளும் ஆழ்ந்து நோக்கின் அதற்கு மாறுன வேறுபொருளும் தோன்றக் கூறுவது பழிகரப்பாகும். இதனைப் பெரும்பாலும் இடித்துக் கூறுவதற்கு எடுத்துக்காட்டாக அறிஞர்கள் மேற்கொள்வர்.

### பழிப்புவமை

பொருளை உயர்த்தி உவமையைப் பழிப்பது பழிப்புவமையாகும்.

இழுக்கில் பொருளை உயர்த்தி யுவமையைப்
பழிக்கப் படுவது பழிப்பெனப் படுமே[87]

என்னும் நூற்பாவை வீரசோழிய உரையில் அதன் உரைகாரர் பெருந்தேவனுர் மேற்கோளாகத் தந்துள்ளார்.

அறுவாய் நிறைந்த அவிர் மதிக்குப் போல
மறுவுண்டோ மாதர் முகத்து[88]

என்னும் குறட்பா இதற்குச் சான்றுக இவ்வுரைகாரரால் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

84. குறள், 420.
85. கதிரேசச் செட்டியார், மு., பண்டிதமணி உரைநடைக் கோவை-இரண்டாம் பகுதி, பக். 36, பழனியப்பா பிரதர்ஸ், 1954.
86. அங்கதந் தானே அரில்தபத் தெரியின்
செம்பொருள் கரந்த தெனவிரு வகைத்தே.
—தொல். செய்யு. 124.
87. வீரசோழியம் மூலமும் பெருந்தேவனுர் இயற்றிய உரையும், அலங். 15, உரை, பக். 221—பவானந்தர் கழகப் பதிப்பு, 1942.
88. குறள், 1117.

திங்களையும் மங்கையின் முகத்தையும் ஒப்பிடுவர் புலவோர்; தலைவனோ தன் தலைவியின் முகமே அழகு பெற்று உயர்ந்தது என்கிறான். "திங்களுக்குக் களங்கம் உண்டு; ஆயின் இம் மங்கையின் முகத்திலோ எவ்விதக் களங்கமும் இல்லை" என உயர்த்திக் கூறுகிறான். பொருளை உயர்த்தி உவமையைப் பழிக்கின்றான். தேய்ந்தும் வளர்ந்தும் ஒளியைத் தரக்கூடிய திங்களுக்கோ மறுவுண்டு; என்றும் குறையாது ஒளிவீசும் மாசு மறுவற்ற முகம் என் தலைவியினுடையது என்று புகழ்கின்றான் தலைவன். பொருளினை உயர்த்தி உவமையைப் பழித்தலால் இக்குறட்பாவினைப் பழிப்புவமையாகக் கொள்ளுகின்றோம்.

அறைபறை அன்னர் கயவர்தாம் கேட்ட
மறைபிறர்க்கு உய்த்துரைக்க லான்[89]

என்னும் குறட்பாவையும் இவ்வணி நயம் வாய்ந்ததாகக் கொள்ளலாம்.

### வேற்றுப் பொருள் வைப்பணி

தாம் சொல்லக் கருதிய பொருளைத் தெளிவாக விளக்குவதற்கு, உலகறிந்த வேறொரு பொருளைக் கூறி முடிப்பது கவிஞர்கள் போற்றுகின்ற ஒரு முறையாகும். அங்ஙனம் கூறுகின்ற பொருள் முன்னர்க் கூறியதை விடச் சிறப்பாக அமைதல் வேண்டும். கவிஞன் சொல்லக் கருதிய பொருளைச் சிறப்புப் பொருள் என்றும், முடித்தற்குக் கூறப்படும் பொருளைப் பொதுப் பொருள் என்றும் கூறுவர். தண்டியலங்காரம் இதனை,

முன்னொன் றுதொடங்கி மற்றது முடித்தற்குப்
பின்னொரு பொருளை யுலகறி பெற்றி
ஏற்றிவைத் துரைப்பது வேற்றுப் பொருள்வைப்பே[90]

என்று கூறும். மாறனலங்காரமும் இக்கருத்தையே கொண்டுள்ளது.[91]

89. குறள், 1076.
90. தண்டி. 46.
91. மாறனலங்காரம், 207.

கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என் ஆற்றுங் கொல்லோ உலகு[92]

என்ற குறட்பாவில் இவ்வணி அமைந்துள்ளதைக் காண லாம்.

"உலகத்தார் தமக்கு உதவும் மழைக்கு என்ன கைம்மாறு செய்கின்றனர்? மழை போன்றவர் செய்யும் உதவிகளும் கைம்மாறு வேண்டாதவையே ஆகும்" என்பது இக்குறளின் கருத்தாகும். 'கைம்மாறு வேண்டா கடப்பாடு' என்பது சிறப்புப்பொருள். 'மாரிமாட்டு என்ஞற்றுங் கொல்லோ உலகு?' என்பது பொதுப் பொருள். கைம்மாறு வேண்டாது கடமையைச் செய்யும் நல்லோர் அறனுக்கு உலகத்தார் திருப்பி உதவிசெய்ய முடியாது என்னும் கருத்து, பின்பு தொடர்ந்து கூறிய உலகறிந்த பொதுப் பொருளால் நன்கு விளக்கம் பெறு கின்றதன்றோ? மழைக்கு உலக மக்கள் ஏதேனும் நன்றிக்கடன் ஆற்ற முடியுமோ என்ற பொதுக்கருத்து கவிஞர் சொல்லக்கருதிய பொருளை நன்கு தெளிவுறுத்து கிறது.

இவ்வாறே,

சொல்வணக்கம் ஒன்ஞர்கண் கொள்ளற்க வில்வணக்கம்
தீங்கு குறித்தமை யான்[93]

என்ற குறட்பாவிலும் இவ்வணி சிறந்து விளங்குவதைக் காணலாம்.[94] இக்குறட்பாவின் பிற்பகுதி கூறும் கருத்து முன்னர்க் கூறிய பொருளின் கருத்தை நன்கு விளக்கு கின்றது.

92. குறள், 211.

93. குறள், 827.

94. இக்குறளில் ஏதுவணியும் அமைந்துள்ளது; பார்க்க. பக். 173.

இதுவரை உரைத்தவை எல்லாம் கவிஞன் கருதிய பொருளை நயம்பட விளக்கிப் பாடல்களுக்கு அழகு தந்து நிற்பனவாதலால் இவ்வணிகளே அணி என்னும் சிறப்புக்கு ஏற்றனவாம். பாடற்பொருளைச் சிறப்பிப்பதோடு கற்பார்க்கு அறிவுப் பொருளாகவும் அமைந்து விளங்கும் இப்பொருளணிகள் நமக்குப் பெருவிருந்தாம்.

# 6. சொல்லணி

## சொல்லணிகளின் தன்மை

சொல்லணிகள் பாடலின் பொருள் வளத்தைப் பொருளணிகளைப் போலச் சிறப்பிக்காவிட்டாலும் பொருளுணர்ச்சிக்குச் சொல்லமைப்பு மாற்றம் துணை செய்கின்றது. இவை எல்லாம் பெரும்பாலும் சொற்களை எழுத்தெழுத்தாகப் பிரித்தும் கூட்டியும் படித்துப் பொருள் கொள்ளும் நிலையில் முன்பின் மாறி நிற்கும் சொல்லமைப்புகளே யாகும்; ஒருவகையில் இவ்வணிகளைச் சொற்பிரித்துக்கூட்டும் விளையாட்டுகள் என்று கூடச் சொல்லலாம்.

இச் சொல்லணிகளுள் முக்கியமாகக் கூறப்பெறுவது மடக்கு; ஒரு சொல்லே மீண்டும் மீண்டும் வந்து வேறு சொற்பொருள் தந்து நிற்பதாம். இஃது ஒரு வகையில் பல பொருள்படப் பாடும் பிரிமொழிச் சிலேடையை ஒப்ப தாகும். மடக்கு தவிர சக்கர வடிவிலும், முரசு வடிவிலும், தேர் வடிவிலும், பாம்பு வடிவிலும் பிறவாறும் சித்திரங்கள் அமைத்து, அச் சித்திர வடிவுகளுள் எழுத்துகள் அடங்கு மாறு பாடல்கள் பாடப்படும். இவற்றை முறையே சக்கரம், முரசபந்தம், இரதபந்தம், நாகபந்தம் என்று அழைப்பர். இச் சித்திரக்கவிகளை 'மிறைக் கவிகள்' என்றும் சொல்வதுண்டு.

## அணி நூல்களுள் சொல்லணி

வீரசோழியம், யாப்பருங்கலம், தண்டியலங்காரம், மாறனலங்காரம் முதலிய தமிழ்நூல்களிலே சித்திரக் கவிகளின் இயல்புகள் விரித்துரைக்கப்பட்டுள்ளன. வீர

சோழியத்தில் பத்தாக இருந்த சித்திரக்கவி மாறனலங்காரத்தில் இருபத்தாருக வளர்ச்சி பெற்றுள்ளது. இந் நூல்களுள் உரைகாரர்கள் காட்டும் வேறு சில சித்திரக் கவிகளும் காணப்படுகின்றன. தமிழ் விடுதூதுடையார் எழுத்து வருத்தனம், சக்கரம், இரதபந்தம், சுழிகுளம், கூட சதுக்கம், மாலை மாற்று, சதுரங்கபந்தம், முரசபந்தம் என்பவற்றைக் குறிப்பிடுகிருர்.[1] திருஞானசம்பந்தர் தேவாரம்[2] முதற்கொண்டு புலவர் பெருமக்கள் சிலருடைய

1. அக்கர வர்த்தியென லாமென்பார் பூலோக
சக்கர வர்த்தியுநீ தானன்றோ—சக்கரமுன்

பேந்தி நெடுந்தேர்மே லேறிச் சுழிகுளம்
நீந்தியோர் கூட நிறைசதுக்கம்—போந்து

மதுரங் கமழ்மாலை மாற்றணிந்து சூழும்
சதுரங்க சேனை தயங்கச்—சதுராய்

முரசங் கறங்க முடிவேந்தர் சூழ
வரசங்க மீதிருந்து வாழ்ந்தே........

—தமிழ்விடு தூது, 46–49.

2. திருஞானசம்பந்தரின் தேவாரப் பாடல்களில் அமைந்த சித்திரக்கவி மாலைகள் குறித்துச் சேக்கிழார் பெருமானும் தமது திருத்தொண்டர் புராணத்துள் எடுத்துக்காட்டியுள்ளார் :

செந்தமிழ் மாலை விகற்பச்
செய்யுட் களான்மொழி மாற்றும்
வந்தசொற் சீர்மாலை மாற்றும்
வழிமொழி எல்லா மடக்கும்
சந்த வியமகம் ஏகபாதம்
தமிழ்இ ருக்குக்குறள் சாத்தி
எந்தைக் கெழுகூற் றிருக்கை
ஈரடி ஈரடி வைப்பு.

நாலடி மேல்வைப்பும் மேன்மை
நடையின் முடுகும் இராகம்
சால்பினில் சக்கரம் ஆதி
விகற்பங்கள் சாற்றும் பதிகம்

வாக்கில் இச்சித்திரக் கவிகளுள் சில இடம் பெற்றுள்ளன. சென்ற நூற்றுண்டிலே நா. க. உ. கல்விக் களஞ்சியப் புலவர், 'சித்திரக் கவிகள்' என்னும் நூலையும் (கி. பி. 1888), காமுசெட்டியார் என்பவர் 'சோடசபங்கியும் இரட்டை நாக பந்தமும்' என்னும் நூலையும் (கி. பி. 1888) பாடி வெளியிட்டுள்ளனர்.[3] இந்த இருபதாம் நூற்றுண்டில் மதுர கவிப்புலவர் கபால மூர்த்திப்பிள்ளை என்பார் 'சித்திர கவிப் புஞ்சம்' என்னும் நூலையும் (1902), சோழவந்தான் அ. சண்முகம் பிள்ளை 'மாலை மாற்று மாலை' என்னும் நூலையும் (1903) இயற்றி வெளியிட்டுள்ளனர்.[4] என்றாலும் இச்சித்திரக் கவிகள் தமிழகத்தில் பெருவழக்காக வழிவழி மிகுந்து வரவில்லை; புலவர் பெருமக்களின் நூல்களில் அருகியே காணப்படுகின்றன. இவை 'குறுக்கெழுத்துப் போட்டி' போல அமைக்கப்பட்ட ஒரு சொல் விளையாட்டே யாதலால், அத்துணைச் சிறப்புடையனவல்ல.

## பொருளணிகளுள் சொல்லணி

மேலன போன்றே சொற்சிலம்பங்களாக வரும் 'நிரல் நிறை', 'தீவகம்', 'பின்வருநிலை' முதலியவற்றைப் பொருளணிகளாக அலங்காரநூலார் கருதுகின்றனர்.

---

மூல இலக்கிய மாக
  எல்லாப் பொருள்களும் முற்ற
ஞாலத் துயர்காழி யாரைப்
  பாடினர் ஞானசம் பந்தர்.

—பெரியபுராணம், திருஞான. 276, 277.

மொழிமாற்று, மாலைமாற்று முதலிய சித்திரக் கவிகளை மூல இலக்கியமாகத் திருஞானசம்பந்தர் பாடினர் என்று சேக்கிழார்பெருமான் மேற்கண்ட பாடலில் குறிப்பிடுவது கொண்டு, திருஞானசம்பந்தரே சித்திரக் கவிதைகளைத் தமிழில் முதன்முதல் படைத்தளித்தார் என்னும் வரலாற்று உண்மையும் தெரியவரும்.

3. தமிழ்நூல் விவர அட்டவணை: முதல் தொகுதி, முதற் பகுதி, பக். 323.

4. தமிழ்நூல் விவர அட்டவணை: இரண்டாம் தொகுதி, முதற் பகுதி, பக். 218.

இவை சொல்லிலக்கணப் பகுதிகளிலே விவரிக்கப்படும் பொருள் கோள்களும் அடுக்குத் தொடர்களுமேயாகும். பேராசிரியர்கூடத் தமது தொல்காப்பிய உரைநூலில் இவ்வகைக் குறைபாட்டை எடுத்துக்காட்டிப் பிற்காலத் தார் பெருக்கிக்கூறும் அணிகளுள் சில சொல்பற்றிய செய்திகளே என மறுதலிக்கிறார்.[5] இவ்வாறு சொற் களுக்கு முதன்மை தரப்படும் இவ்வகை அணிகளைப் பொருளணி என்பதைவிடச் சொல்லணி என்றே கூறுதல் தகும். பொருட்கூறு ஓரளவு இருப்பினும், சொற்களின் அமைதிக்கே முதலிடம் காணப் பெறுவதனால், நாம் இவற்றைச் 'சொல்லணி' என்றே வழங்கலாம்.

### வீரமா முனிவர் கொள்கை

சொல்லிலக்கணப் பகுதியுள் போற்றப் பெறும், ஆகு பெயர், பொருள்கோள், பத்துவகை எச்சம் முதலியவற்றை எல்லாம் வீரமாமுனிவர், 'மறிநிலையணி', 'சொன்மிக்கணி', 'சொல்லெஞ்சணி', 'சொல்லொப்பணி' எனப் பெயர் புனைந்து சொல்லணிப் பகுதியை நான்கு வகையாகப் பாகுபடுத்தி உரைத்துள்ளார். முந்திய இலக்கண நூல் களில் பொருளணியை முற்கூறிச் சொல்லணியைப் பிற் கூறியிருக்கும் மரபை விடுத்து, இவர் தாம் வகுத்துரைத்த 'தொன்னூல் விளக்க நூலின்' அணியதிகாரத்துள் சொல் லணியியலை முதலில் வைத்துப் பொருளணியியலை இரண்டாவதாக அமைத்துள்ளார். இவர் விவரித்துள்ள சொல்லணிகள் முப்பது.

சொல்லணி மறிநிலை ஐந்தும்கோள் எட்டும்,
சொல்மிக் கணிமூன் றும், சொல்லெஞ் சணிபத்தும்,
சொல்லொப் பணிநான்கும் தொகையா றைந்தே[6]

என்பது இவருடைய தொன்னூல் விளக்க நூற்பா. "இவற்றுட் பலவை பொருளைப்பற்றி வரினும் ஒருசொல் எல்லையின் முடியும் என்றமையான் சொல்லணியாக

5. தொல். உவம. 37. பேராசிரியர் உரை.

6. தொன்னூல் விளக்கம், 325.

வைக்கப்பட்டன" என மறிநிலையணிகளைத் தாம் சொல்லணியாக வகுத்ததற்குரிய காரணத்தையும் 304 ஆம் சூத்திரவுரையுள் வீரமாமுனிவர் குறிப்பிட்டுள்ளார்.

### சொல்லணிகள் வழக்கறு நிலை

தண்டியலங்காரம், மாறனலங்காரம் முதலிய அணி நூல்கள் தரும் 'கோமூத்திரி', 'கூடசதுக்கம்' முதலிய சித்திரக்கவிகளை இக்காலத்தில் புலவர் பெருமக்கள் பெரிதும் மதித்துப் போற்றுவதில்லை. இப்பொழுது நாற்கவியுள்[7] ஒன்ருக வைத்துப் போற்றப் பெறும் சித்திரக் கவி பாடுவாரைக் காண்பது மிகமிக அரிது. வீரமா முனிவரும் இவற்றை யெல்லாம் வழக்காற்றில் வழங்காச் சொல்லணிகள் என்று தம்முடைய நூலுள் இவற்றிற்கு விளக்கம் தாராது ஒதுக்கியுள்ளார்.

சமமென்ப மாத்திரை தவுதல் வேற்றெழுத்து
ஒன் றுற லன் றி ஒன் றிய சொல்லே
மற்றவற் றினமா மாத்திரைச் சுருக்கம்
திரிப தாதி சேர்ந்தன பிறவே[8]

7. **நாற்கவிகளாவன :**

ஆசு மதுரம் சித்திரம் வித்தாரம் எனப்
பாவகை பாடுவோன் கவியெனப் படுமே.
—பிங்கல. 362.

ஆசு கவியால் அகிலஉல கெங்கும்
வீசு புகழ்க்காள மேகமே.
—தனிப்பாடற். இரட்டையர் தனிப்பாடல்-பக். 202.

உத்தண்ட அமிர்தரச சித்ரவித் தாரகவி
உபயகவி ராச ராசன்—
—பெருந்தொகை, 1713.

பரிவுபெற் றப்புதுச் சேரியிற் சென் றினிய
பண்பரிற் சினைய வாத்தி
பண்புள குமார பாரதி மதுர கவி வீர
பத்ரகவி கொண்டாடவே—
—பெருந்தொகை, 1790.

8. தொன்னூல் விளக்கம், 324.

என்னும் தொன்னூல் விளக்கச் சூத்திரவுரையில் அவ ருடைய கருத்துத் தெளிவாகத் தெரிய வருகிறது. அவ் வுரைப் பகுதி வருமாறு :

> "சூத்திரத்துட் பிறவென்ற மிகையான், மிறைக் கவியென்றும் சித்திரக்கவியென்றும் ஒரு வகைச் சமம் பற்றிய இருபது வகைக்கவி தண்டியலங்காரத்துட் காணப்படும். அவையாவன : மேற் கூறிய மாத்திரைச் சுருக்கமும் திரிபதாதியு மன்றிக் கோமூத்திரியும் கூடசதுக்கமும் மாலைமாற்றும் எழுத்து வருத்தனமும் நாகபந்தனமும் வினாவுத்தரமும் காதைக் கரப் பும் கரந்துறைச் செய்யுளும் சக்கரமும் சுழிகுளமும் சருப் பதோ பத்திரமும் அக்கரச் சுதகமும் நிரோட்டமும் ஒற்றுப் பெயர்த்தலும் மாத்திரை வருத்தனமும் முரசபந்தனமும் திரிபங்கியும் பிறிதுபடுபாட்டும் என்றிவை இருபதும் மிறைக் கவி என்பாராயினும் இவை சிறுபான்மையாகையில் இங்கண் விரிவுக்கு அஞ்சி ஒழித்தனம்."

இங்ஙனமாக வீரமாமுனிவர் முந்திய அணிநூல்கள் பெருக்கிய சித்திரக்கவிகளைப் போற்றியுரையாது, நிரல் நிறை, அடுக்கு, அந்தாதி முதலியவற்றையே சொல்லணி கள் என்று எடுத்துக்காட்டுகின்றார். ஆகவே, நிரல் நிறை, தீவகம், பின்வருநிலை போன்றவற்றைச் சொல்லணி யெனக் கொள்ளலாம் என்பதில் இவர்க்கும் உடம்பாடு உண்டு என்பது தெளிவாகத் தெரியவரும். இவருடைய கருத்துப் பெரிதும் ஏற்புடைத்தாக உள்ளமையை இப் பகுதியில் காட்டப்பெறும் சொல்லணிகள் அமைந்த பாடல்களைக் கூர்ந்து நோக்கின் நமக்குத் தெற்றென விளங்கும்.

### பின்வருநிலை

சொற்பொருள் தொடர்பு எளிதில் நினைவுகூரும் வண்ணம் சொற்களை மீண்டும் மீண்டும் தொடர்ந்து எடுத் தாண்டு பொருளைச் சிறப்புறச் செய்வது ஒருவகை. சொல்லும், பொருளும் ஒருங்கிணைய அடுக்கி உரைத்து, ஓசையும் பொருளும் உளம் கவரும் முறையில் அமைப்பது சிறந்த கவிஞர்களிடம் காணும் ஒரு தனிப் பண்பாகும். சொல்லிய பொருளைச் சிறப்புறச் செய்வதன்பொருட்டு இவ்வகைச் சந்த அமைப்பில் சொற்களை அடுக்கிக் கூறிப்

பொருள்களை உணர்த்துவது பண்டு தொட்டுத் தொடர்ந்து வரும் ஒருவகைக் கவிமரபேயாம்.[9]

அணி இலக்கண நூலார் இதனைப் 'பின்வரு நிலையணி' என்பர்.

முன்வருஞ் சொல்லும் பொருளும் பலவயிற்
பின்வரு மென்னிற் பின்வரு நிலையே[10]

என்று தண்டியலங்காரம் கூறும். சொற்கள் பொருள் வேறுபடத் தொடர்வதும், பொருள் வேறுபாடின்றி ஒரே பொருள் தரும் வேறு சொற்கள் தொடர்வதும், சொற் பொருள் இரண்டும் இணைந்து தொடர்வதும் உண்டு. எனவே, சொற்பின்வருநிலை, பொருட்பின்வருநிலை, சொற் பொருட் பின்வருநிலை என மூன்று வகையாக இதனைப் பாகுபடுத்திக் கூறுவர்.

## சொற்பின் வருநிலை

ஒரு சொல் பல பொருளில் வருதல் சொற்பின் வரு நிலையணியாகும்.

மால்கரி காத்தளித்த மாலுடைய மாலைசூழ்
மால்வரைத்தோள் ஆதரித்த மாலையார்—மாலிருள்சூழ்
மாலையின் மால்கடல் ஆர்ப்ப மதன்தொடுக்கும்
மாலையின் வாளி மலர்

என்னும் பாடலைத் தண்டியலங்கார ஆசிரியர் சொற்பின் வருநிலையணிக்குச் சான்றாகக் காட்டி, "இதனுள் முன் வந்த மால் என்னும் சொல்லே பின்னும் பல விடத்து வந்தமையின் சொற்பின்வருநிலை ஆயிற்று" என்று விளக்கவுரையும் தருகின்றார்.[11]

9. தொல்காப்பியர் இதனை ஏந்தல் வண்ணத்தின்பாற் படுத்து துவர்.

'ஏந்தல் வண்ணம்
சொல்லிய சொல்லின் சொல்லியது சிறக்கும்.
—தொல். பொருள். செய்யு. 231.

10. தண்டி. 41.

11. தண்டி. 41, உரை.

வள்ளுவர் கூறும்,

குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ
குன்றி அனைய செயின்[12]

என்னும் குறட்பா சொற்பின்வரு நிலையணிக்குச் சான்றும். உரையாசிரியர் பரிமேலழகரும் இக்குறட்பாவினை இவ்வணிக்குச் சான்றாகக் கொள்கின்றார். 'குன்று' என்னும் ஒரு சொல் வெவ்வேறு பொருளில் வந்தமையான் இக்குறட்பா சொற்பின்வருநிலை அணியாயிற்று. 'குன்றின் அனையாருங் குன்றுவர்' என்ற தொடர் சொல்லின்பம் தருவதோடு அமையாது உயர்ந்த பொருளையும் தன்னுள் கொண்டு விளங்குகிறது.

மேலும், இவ்வாறே,

இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை[13]

என்று வரும் குறட்பாவிலும் இவ்வணி அமைந்துள்ளதைக் காணலாம். 'இறந்தார்', 'துறந்தார்' என்னும் சொற்கள் இக்குறட்பாவினுள் வேறு வேறு பொருளில் மீண்டும் மீண்டும் வந்தமையால், சொற்பின்வருநிலை யாயிற்று. 'இறந்தார்' என வரும் ஒரே சொல் முன்னர் சினத்தைக் கடந்தவரையும், பின்னர் இறந்தவரையும் சுட்டிற்று. 'துறந்தார்' என்னும் சொல் சினத்தைத் துறந்தவரையும், துறவியையும் சுட்டிற்று.

இக்குறட்பாவினையே 'மடக்கு அணிக்கும்' சான்றாகக் கொள்ளலாம். "எழுத்தானும் சொல்லானும் இடையிடாதும் இடையிட்டும் வந்து, பெயர்த்தும் வேறு பொருளை விளைப்பது மடக்கணியாகும்"[14] என்பர். இவ்வகையில்

12. குறள், 965.

13. குறள், 310.

14. எழுத்தின் கூட்டம் இடைபிறி தின்றியும்
பெயர்த்தும்வேறு பொருள்தரின் மடக்கெனும்பெயர்த்தே.
— தண்டி. 91.

'இறந்தார் இறந்தார் அனையர்', 'துறந்தார் துறந்தார்,' என்ற தொடர்கள் மடக்கு அணியாய் வருவதை உணரலாம்.

சொற்பின்வருநிலை யணியாய் அமைந்து வரும் வேறு சில குறட்பாக்களும் இங்ஙனமே அழகூட்டுவனவாய் அமைந்துள்ளன.[15]

## பொருட்பின்வருநிலை

பொருட் பின்வருநிலை என்பது ஒருபொருள் தரும் வேறு வேறு சொற்கள் வருதலாம். திருக்குறளில் இவ் வகை அமைப்பு முறை பெரும்பாலும் காணப்படவில்லை எனலாம். சுருங்கிய ஏழுசீர்களில் பல்வேறு சொற்கள் ஒரு பொருளில் வருதல் என்பது இயலாததாம். மேலும், வள்ளுவர் கூறும் கருத்திற்கே இக்குறுகிய பா அமைப்பு முறை முதலிடம் தரும். பரிமேலழகர் எடுத்துக்காட்டும் அணிகளுள்ளும் சொற்பின்வரு நிலையும், சொற் பொருட் பின்வரு நிலையுமே இடம் பெறுவதும் ஈண்டுக் கருதத்தகும்.

## சொற்பொருட் பின்வரு நிலை

ஒரு சொல்லை ஒரே பொருளில் பன்முறை பாடலில் அமையப்பாடுவதே சொற் பொருட் பின்வருநிலையாகும். தண்டியலங்காரத்துள்,

வைகலும் வைகல் வரக்கண்டும் அஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்
வைகலும் வைகல்தம் வாழ்நாள்மேல் வைகுதல்
வைகலை வைத்துணரா தார்[16]

என்னும் நாலடியார்ச் செய்யுள் இவ்வணிக்குச் சான்றாகக் காட்டப் பெற்றுள்ளது. இதன்கண் 'வைகலும்' என்னும் ஒருசொல் பின்னர்ப் பல விடத்தும் வந்து ஒரு பொருளையே தந்து நிற்கின்றது.

15. குறள், 225, 739, 973, 985.

16. நாலடியார், 39.

வள்ளுவர் அருளிய திருக்குறளிலும் இவ்வணி நலம் நன்கு பயின்று வந்துள்ளது.

சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயன்இலாச் சொல்[17]

என்னும் குறள் உரையில் பரிமேலழகர், "சொல்லின் என்பது இருவழியும் மிகையாயினும், சொற்பொருட்பின் வருநிலை என்னும் அணிநோக்கிவந்தது, 'வைகலும் வைகல் வரக்கண்டும்' என்பது போல" என்று விளக்கம் தருகிறார். இக்குறளில் 'சொல்லின்' என்பதில் உள்ள 'சொல்' என்பது சொல்லாலும் பொருளாலும் வேறுபாடின்றி ஒரே வகையில் தொடர்ந்துவந்து சொற்பின்வரு நிலையணியாயிற்று.

நோய்எல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்
நோய்இன்மை வேண்டு பவர்.[18]

இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்
கிடும்பை படாஅ தவர்.[19]

சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லும்சொல் இன்மை அறிந்து.[20]

இம்மூன்று குறட்பாக்களையும் பரிமேலழகர் இவ்வணிநயம் அமைந்த பாடல்களாகத் தம்முரையுள் குறிப்பிட்டுச் செல்கின்றார். இங்ஙனமே இன்னும் பல்வேறு குறட்பாக்களில் இவ்வணி அமைந்து நமக்குச் சொல்லின்பமும் பொருளின்பமும் ஒருங்கே தந்து விளங்குகின்றன.[21]

இப்பாடல்களில் எல்லாம் பெரும்பாலும் ஒரே சொல் அதே பொருளில் மீண்டும் மீண்டும் வருதலும் வேறு வேறு

17. குறள், 200.
18. குறள், 320.
19. குறள், 623.
20. குறள், 645.
21. குறள், 12, 202, 297, 350, 359, 365, 411, 428, 466, 504, 553, 602, 603, 641, 666, 672, 841, 849, 881, 948, 962, 973, 1041, 1194, 1279, 1286.

பொருளில் தொடர்ந்து வருதலும் சொல்லோசை அடுக்கி வந்து ஒருவகை இன்பம் விளைத்தலும் கவனிக்கத் தகும். இவ்வகை அமைப்பில் ஒத்த ஓசையுடைய சொற்கள் அடுத்தடுத்து வந்து வேறு வேறு பொருளை உணர்த்துவது ஓசையின்பத்தோடு பொருட் பொலிவுடையனவாகவும் காணப்படுகின்றன. இவற்றைச் சொல்லடுக்கினிமையில் உயர்தரமானவை என அறிஞர்கள் கருதுகின்றனர். வள்ளுவரின் கவிப்பண்பு பற்றிய கட்டுரையில் பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனுர் அவர்கள்,

> "இவற்றில் சொல் விளையாட்டு மட்டும் அல்லாமல் சொற்களின் பொருள் வேறுபாட்டை உணர்த்தும் வகையிலும் அமைந்திருத்தலால் இவை தரத்தால் மேம்பட்டவை எனலாம்"[22]

என்று கூறியுள்ளார்கள். ஆசிரியர் தாம் சொல்லக் கருதிய கருத்தைக் கேட்பவர் உளம் கொள்ளும் வகையில் அறிவுறுத்துவதற்கு இந்தச் சொல்லடுக்கு முறையும் சொற்பொருட் பின்வரு முறையும் ஓரளவு துணைபுரி கின்றன எனலாம்.

### நிரல் நிறை

நிரல் நிறையாவது வரிசையாகச் சொல்லப்பட்ட பொருள்களுக்குத் தொடர்பானவற்றைத் தொடர்ந்து அம் முறையிலேயே அழகுபடக் கூறுவதாம். இவற்றை நேர் நேராகவும், நேரெதிராகவும் கூறலாம். முன்னதை 'நேர் நிரல் நிறையணி' என்றும், பின்னதை 'எதிர் நிரல் நிறை யணி' என்றும் கூறுவர். தொல்காப்பியர் இதனை,

> நிரனிறுத் தமைத்தல் நிரனிறை[23]

என்று உவமவியலுள் இறுதிநூற்பாவாகக் கூறுகின்றார். தண்டியாசிரியர்,

22. வரதராசனுர், மு.: திருக்குறள் கனிகள், பக். 16. தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்க வெளியீடு, 1968.
23. தொல். உவம. 37.

*நிரல்நிறுத் தியற்றுதல் நிரல்நிறை யணியே*[24]

என்றும், வீரசோழிய ஆசிரியர்,

*நிரனிறை யாவது சொல்லும் பொருளும் நிரனிறுத்தல்*[25]

என்றும் விளக்குகின்றனர்.

உவமை பலவும் சேர நிறுத்தி அவற்றால் உவமிக்கப் படும் பொருள் பலவும் வேறே முறைப்படி சேர நிறுத்துதல் நிரல் நிறையாம். இதனைத் தொல்காப்பியர் பொருள் கோள் வகையினுள் ஒன்றாகவும் எடுத்துக்காட்டு கின்றனர்.[26]

இங்ஙனம் சொல்லையும் பொருளையும் நிரலே நிறுத்தி நேரே பொருள் கொள்வதும், சொல்லினை மாற்றிப் பொருள் கொள்வதும் ஆகிய இருமுறைகளையும் வள்ளுவர் தம் குறட்பாக்களில் நயமாகப் போற்றியுள்ளார்.

### நேர் நிரல் நிறை

நல்லறமாகிய இல்லற வாழ்விற்கு உறுதுணையாவது அன்பும் அறனுமேயாம்; மனைத்தக்க மாண்புடையாளை மனையாளாகக்கொண்டு அறம் போற்றி வாழ்வதே அறிவுடைமை; மனையாளுக்கும் கணவனுக்கும் மன ஒற்றுமை வேண்டும்; மனவொருமை இல்லையேல் இல்லறத்தில் இன்பம் ஏது? மன ஒற்றுமைக்கு உயிர் அன்பன்றோ? ஆகவே, இல்வாழ்க்கைக்கு அன்புடைமை பண்பாயிற்று; அறனுடைமை பயனாயிற்று.

24. தண்டி. 66.

25. வீரசோழியம், அலங். 28.

26. அவற்றுள்
நிரனிறை தானே
வினையினும் பெயரினும் நினையத் தோன்றிச்
சொல்வேறு நிலைஇப் பொருள்வேறு நிலையல்.
—தொல். சொல். எச்ச. 9.

*அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது*[27]

என்பது வள்ளுவர் வாக்கு. அன்பும் அறனும் எனக் கூறி, அதற்குப் பின் இவற்ருல் விளையும் பண்பையும் பயனையும் முறைமையாகக் கூறினமையின், இதனை நிரனிறையணி என்பர். அன்பும், அறனும் என்ற சொற்களை வரிசையாக நிறுத்தி, பண்பும் பயனும் என அதற்கு இயைபுள்ள சொற்களையும் முறைப்படக் கூறினமை செய்யுளுக்கு அழகும் இனிமையும் தருவனவாக அமைந்துள்ளது. இங்ஙனம் வள்ளுவர் சொற்களையும் பொருளையும் நிரலாக அடுக்கிப் பல்வேறு குறட்பாக்களை அளித்துள்ளார்.[28]

### எதிர் நிரல் நிறை

முன்வைத்த சொற்களின் முறைக்கு நேர் எதிராக அதனேடு சம்பந்தப்பட்ட சொற்களைப் பின்னர்க் கூறும் முறையினையும் வள்ளுவர் வகுத்துரைக்கின்ருர். இங்ஙனம் கூறுவதை 'எதிர் நிரல் நிறை' அல்லது 'மயக்க நிரல் நிறை' என்றும் கூறுவர்.

கல்வியின் சிறப்பை வள்ளுவர் முன்னர்க் கூறியும் அதன் சிறப்பு பத்துக் குறட்பாக்களுள் அடங்காமையால் அதன் தனிச் சிறப்புக் கருதி மீண்டும் எதிர்மறை வழியில் கல்லாமை அதிகாரத்தில் அதன் சிறப்பைக் கூறுகிருர் போலும்!

மக்களையும் மாக்களையும் பிரிப்பது கல்வியே; அறிவு விளங்குவதற்குக் காரணமானவை நூல்கள். அந்நூல்களைக் கற்றவர்களுக்கும், கல்லாதவர்களுக்கும் உள்ள வேறுபாடு மக்களுக்கும் விலங்குகளுக்கும் உள்ள வேறுபாட்டினைப் போன்றதாகும்.

27. குறள், 45.

28. குறள், 182, 254, 856, 876, 926.

விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்[29]

என்னும் குறளில் வள்ளுவர் உவமானத்தில் விலங்கு மக்கள் என்ற முறைக்கு ஏற்பக் கல்லாதவர், கற்றோர் என்று முறைப்பட நிறுத்தாது, மாறுபடக் கூறியது கவனிக்கத்தக்கது. விலங்கு–கல்லாதவர், மக்கள்-கற்றார் என முறையே கூருமல், விலங்கு-கற்றார், மக்கள்-ஏனை யவர் என முறை மாறி வருவது மயக்க நிரல் நிறையாம்.

தன்னுடைய தலைவனைப் பிரிந்த நிலையில் ஒரு தலைவி காம நோயினைத் தந்த தன் தலைவனை எண்ணி எண்ணி ஏங்குகிருள். காதலன் பிரிவாலும் ஏக்கத்தாலும் மேனி நிறம் மாறுகிறது. மேனியில் பசலை பூக்கிறது; பசலை படர்ந்த உடலினைக் கண்ட அணங்கிற்குத் தன்னைப் பிரிந்த தலைவனை நினைத்ததும் கோபம் மிகுகிறது. தன்னுடைய நாணத்தினையும் துறந்த தன் நிலையை எண்ணுகிருள். "எனக்குக் காமநோயினைக் கொடுத்துவிட்டு அதற்குப் பதிலாக என்னுடைய நாணத்தைக் கொண்டு சென்ருன்; சாயலைக்கொண்டு அதற்குப் பதிலாகப் பசலையைத் தந்தான்" என்று தன்னுள் கூறி மகிழ்கிருள் தலைவி. துன்பம் ஒரு புறம்; மகிழ்ச்சி ஒரு புறம். இந்நிலையில் அதனைக் கூறும் போதே அவள் சொற்களை மாற்றிக் கூறுகிருள் போலும்! இதனை வள்ளுவர் அழகாக எடுத்துக் காட்டு கிருர்.

சாயலும் நாணும் அவர்கொண்டார் கைம்மாரு
நோயும் பசலையும் தந்து.[30]

பிரிந்த தலைவியின் பேச்சிலே கலக்கத்தால் சொற்களை மாற்றிக் கூறுவது போல் அமைந்திருக்கும் திறன் போற்றுதற் குரியதாம். சாயலும் நாணும் என்றதற் கேற்ப அடுத்து வருகின்ற அடியிலும் பசலையும் நோயும் என்று இல்லாது, நோயும் பசலையும் என்று பாடலில் மாறி அமைந்துள்ளமையால், இக்குறளினை எதிர் நிரல் நிறைக்

29. குறள், 410.
30. குறள், 1183.

குச் சான்ருகக் கொள்வர். பரிமேலழகரும் இக்குறட்பாவினை 'எதிர் நிரனிறையணி' எனக் குறிப்பிடுகின்ருர். நோயைத் தந்து நாணினையும், பசலையைத் தந்து சாயலையும் கொண்டாரென்று கொள்ளுதல் வேண்டும்.

முரண் அணி

ஒன்றற்கொன்று முரணுகத் தோன்றுவனவற்றைக் கூறிப் பின்னர் அவற்றின் தொடர்பை இணைத்து நயம்படக் கூறுவது கவிஞர்கள் போற்றுகின்ற ஒரு முறையாகும். முரண்பாட்டினைச் சுட்டிப் பின்னர் அவற்றின் பொருத்தத்தை நயம்பட உரைப்பது ஒரு தனிக்கலை. இதனை இலக்கண நூலார் 'முரண் அணி' அல்லது 'விரோதவணி' என்பர். தண்டியலங்காரம்,

மாறுபடு சொற்பொருள் மாறுபாட்டு இயற்கை
விளைவுதர உரைப்பது விரோத மாகும்[31]

என்று கூறுகிறது. பொருளாலும் சொல்லாலும் மாறுபடும் தன்மை தோன்ற உரைப்பது இவ்வணியாம். இதனையே வீரசோழியமும்,

.........சொலும் பொருளும்
புல்லும் விரோதம் புணரின் முரணென்ப[32]

என்று வகுத்துரைக்கிறது.

நல்லுலகத்தை அமைக்க விரும்பிய வள்ளுவர் ஈகை அதிகாரத்தில் சில உயரிய கருத்துகளைக் கூறுகிருர். பிறரிடமிருந்து பொருள் பெற்றுக் கொள்ளுதல் நல்ல நெறி என்று கூறினும் அது தீமையானதே; பிறர்க்குக் கொடுக்கும் ஈகையால் மேலுலகம் கிட்டாது என்று யாராவது கூறித்தடுத்தாலும் ஈவதே நல்லது. இக் கருத்தினை வள்ளுவர்,

நல்லாறு எனினும் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று[33]

என்னும் குறட்பாவில் வடித்துத் தருகின்ருர்.

31. தண்டி. 81.
32. வீரசோழியம், அலங். 31.
33. குறள், 222.

'கொளல் தீது, ஈதல் நன்று' என முரண்படச் சொற்களை அமைத்துள்ளமையால், இதனை முரண் அணி என்பர்.

"இதனுள் (இச் செய்யுளுள்) தீதென்றும், நன்றென்றும் வந்தமையால் முரண் என்னும் அலங்காரமாயிற்று" என்று வீரசோழிய உரைகாரர் தம் உரையில் கூறும் அமைதியும் இங்கு நோக்கத்தகும்.[34]

வள்ளுவர், 'தோற்றவர்' 'வென்றார்' என்னும் இரு மாறுபாடுகளையும் ஒன்றன் பின் ஒன்றாக அமைத்து நயம் பட ஒரு பாடலில் கூறுகின்றார். தோற்றவர் வெற்றியைத் தழுவினராம்? தோல்வியும் வெற்றியும் ஒன்றற்கொன்று மாறுபட்டனவன்றோ? எவ்வாறு தோற்றவர் வெற்றியைத் தழுவமுடியும்? வெற்றிபெற்றவரன்றோ அதனை அடைய இயலும்! என்றெல்லாம் சிந்திக்கத் தொடங்குகின்றோம்.

ஊடலில் தோற்றவர் வென்றார் அதுமன்னும்
கூடலில் காணப் படும்.[35]

ஊடலிலே தோல்வி பெற்றமையால்தான் தலைவன் தான் விரும்பிய இன்பத்தினைப் பெற முடிந்தது; விரும்பியதைப் பெற்றதால் அது அவனுக்கு வெற்றி தானே! 'தோற்றவர் வென்றார்' என்ற இரு சொற்களும் குறளில் முரண்பட அமைக்கப்பட்டிருந்தாலும் அச் சொற்கள் தருகின்ற பொருளினையும் நயத்தினையும் எண்ணி மகிழ்கிறோம்.

தோற்றவரை வென்றவராகச் சொல்லி அதற்கான காரணத்தையும் பொருந்துமாறு அமைத்துள்ள முறையும் நன்கு எண்ணி யெண்ணி மகிழ்தற்குரிய ஒன்றாகும். இவ்வாறே பிற குறட்பாக்களிலும் காணப்படும் முரண் நயங்களும் இனிமையும் அழகும் வாய்ந்து இன்பம் தருவனவாம்.[36]

34. வீரசோழியம், அலங். 12, உரை.

35. குறள், 1327.

36. குறள், 235, 395, 403, 420, 839, 973, 978, 1097 1327.

### தீவக அணி

ஒரு சொல் பாட்டின் ஓரிடத்தில் வைக்கப்பட்டதாயிருந்தாலும் அச்சொல் அப்பாட்டிலுள்ள ஒவ்வொரு வாக்கியத்தோடும் பொருந்திப் பொருள் தருமாறு கவிஞர்கள் நயமுடனும் திறமுடனும் அமைப்பர். வீட்டினுள் ஓரிடத்தில் விளக்கு வைக்கப்பட்டிருந்தாலும் அது வீட்டின் பல இடங்களிலும் பரவி ஒளி தந்து விளக்குவது போல் இதுவும் அமைந்துள்ளதால், இதனைத் 'தீவக அணி' எனப் பெயரிட்டு அழைத்தனர். தண்டியாசிரியர்,

> குணந்தொழில் சாதி பொருள்குறித் தொருசொல்
> ஒருவயின் நின்றும் பலவயின் பொருள்தரின்
> தீவகம்; செய்யுள் மூவிடத் தியலும்[37]

என்று விளக்கம் தருகிறார். செய்யுளில் இது முதல், இடை, கடை என மூன்றிடத்தும் புலப்படும். இவற்றை முறையே முதனிலைத் தீவகம், இடை நிலைத் தீவகம், கடைநிலைத் தீவகம் என வழங்குவர். மாறனலங்காரமும் இக் கருத்தையே கூறுகிறது.[38]

### முதனிலைத் தீவகம்

> ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
> இழிந்த பிறப்பாய் விடும்.[39]

இப்பாடலில் ஒழுக்கம் எனவரும் முதற்சொல், அடுத்து ஒழுக்கம் இழுக்கம் — அதாவது ஒழுக்கத்திலிருந்து தவறுதல் இழிந்த பிறப்பாய் விடும் எனப் பின்வரும் தொடரோடும் சென்று இயைந்து பொருள் தருகின்ற இம் முறையை முதனிலைத் தீவகம் என்று கொள்ளவேண்டும். இங்ஙனமே,

> யான்நோக்குங் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்
> தான்நோக்கி மெல்ல நகும்[40]

37. தண்டி. 39.
38. மாறன். 160.
39. குறள், 133.
40. குறள், 1094.

என்னும் குறட்பாவும் முதனிலைத் தீவகமாக அமைந்து விளங்குகின்றது. 'யான்' எனப் பாடலின் முதலில் நிற்கும் சொல் பின்வரும் அடுத்த தொடராகிய 'நோக்காக்கால்' என்பதனோடும் சென்று இயைந்து பொருள் தருகின்றது. 'யான் நோக்காக்கால் தான் நோக்கி மெல்ல நகும்' என்று அடுத்துவரும் தொடரைப் படித்தல் வேண்டும். இவ்வாறு பொருட் பொருத்தமுற அமைவதற்கு இக்குறட்பாவில் உள்ள முதற்சொல் விளக்கமாய் இலங்குகின்றமை காணலாம்.

### இடைநிலைத் தீவகம்

உண்ணாமை உள்ளது உயிர்நிலை ஊனுண்ண
அண்ணாத்தல் செய்யாது அளறு.[41]

இக்குறளிலுள்ள 'ஊன்' என்னும் இடையே நின்ற சொல், 'ஊன் உண்ணாமை' என முன்னும் 'ஊனுண்ண' எனப் பின்னும் சேர்ந்து இயைந்து பொருள்தந்து நிற்கின்றது.[42] இதனை இடைநிலைத் தீவகம் என்பர். இங்ஙனமே,

ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்
போகூழால் தோன்றும் மடி.[43]

ஒருதலையான் இன்னாது காமம்காப் போல
இருதலை யானும் இனிது.[44]

மடியுளாள் மாமுகடி என்ப மடியிலான்
தாளுளாள் தாமரையி னாள்.[45]

41. குறள், 255.

42. இக்குறள் நன்னூலில் தாப்பிசைப் பொருள்கோளிற்கும் உதாரணமாகக் காட்டப்பட்டுள்ளது. தாப்பிசைப் பொருள் கோளாவது இடைநின்ற மொழி முன்னும் பின்னும் உள்ள சொற்களோடு இயைந்து பொருள் தந்து நிற்றல்.

    பார்க்க: நன்னூல், பொது. 65, ஆறுமுகநாவலர் பதிப்பு 1963.

43. குறள், 371.

44. குறள், 1196.

45. குறள், 617.

பேராண்மை என்ப தறுகண்ஒன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு[46]

எனவரும் குறள்களிலும் முறையே 'கைப் பொருள்', 'காமம்', 'என்ப' என்னும் சொற்கள் இடைநின்று ஏனை ஈரிடத்தும் இயைந்து பொருள் தருகின்றன.

## கடைநிலைத் தீவகம்

தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்
தீவினை என்னும் செருக்கு[47]

என்னும் இக்குறட்பா கடைநிலைத் தீவகமாகும். 'அஞ்சார், அஞ்சுவர்' என்னும் இரண்டு முற்றுகளுக்கும் 'செருக்கு' என்னும் செயப்படு பொருளைத் தனித்தனிச் சேர்த்துக் கொள்ளல் வேண்டும். எனவே, இது கடைநிலைத் தீவகம் ஆகிறது.

உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
கள்ளுக்கில் காமத்திற் குண்டு[48]

என்னும் இக்குறட்பாவிலும் கடைநிலைத் தீவக அமைப்பு உள்ளது. "காமத்திற்கு உள்ளக் களித்தலும் உண்டு; காண மகிழ்தலும் உண்டு" என இறுதியில் நிற்கும் 'உண்டு' என்னும் சொல் முன்னே சென்று பொருந்திப் பொருள் தருவதால், இது கடைநிலைத் தீவகம் ஆயிற்று.

வள்ளுவர் இவ்வாறு ஒரு சொல், பாடலில் உள்ள பிற சொற்களோடு சென்று இயைந்து பொருள் தரும் வண்ணம் இக் குறட்பாக்களை அமைத்து, அவற்றிற்கு எழிலையும் கருத்துச் செறிவையும் அளித்துள்ளார். இவ்வமைப்புகளின் வழியாகவும் ஆசிரியர் கற்பார் கவனத்தை ஈர்த்துச் சொற்பொருளின்பம் கண்டு மகிழச் செய்விக்கிறார்.

46. குறள், 773.
47. குறள், 201.
48. குறள், 1281.

**அந்தாதி**

அந்தாதி என்பது ஒன்றன் இறுதியாக வருவதனைத் தொடர்ந்து அடுத்து வருவதற்கு முதலாகக் கொண்டு அமைக்கின்ற ஒரு முறையாம். இம்முறையால் தொடர்ச்சி இடையருமல் நினைவுக்கு வருவதோடு, பல இடங்களில் கருத்துத் தொடர்பையும் இம்முறை காட்டவல்லதாக உள்ளது.

இவ்வந்தாதி முறையினையும் இலக்கண நூலாசிரியர் அணியினுள் ஒன்ருகக் கூறுவர். வீரமாமுனிவர் இயற்றிய தொன்னூல் விளக்கநூலில் அணியதிகாரத்தினுள் 'சொன் மிக்கணி'யின் வகையாக இது கூறப்பட்டிருக்கிறது. இதனை அவர் 'இசை யந்தாதி' என்பர்.

*இசையந் தாதியே ஈற்றுச் சொல்மீண்டு*
*இசைபெற உருபுவே றெனினும் இயைதலே*[49]

என்பது அவர்தரும் நூற்பா. "ஒரு வசனத்து ஈருக நின்ற மொழி மற்றொரு வசனத்து ஆதியாக வருவது இசை அந்தாதி எனப்படும். அவற்றிற்கு உருபு வேறெனினும் என்றமையால் வேறுருபுபெற்றும் பெருமையுமாமெனக் கொள்க. இதுவே ஓரடியீற்றினின்றது மற்ருேரடி முதலாக வரின் அந்தாதித் தொடையெனச் செய்யுள் இலக்கணத்துட் சொன்னர் புலவர்"[50] என்று மேலும் விளக்கம் தருவர் வீரமாமுனிவர்.

49. தொன்னூல் விளக்கம், 316.
50. செய்யுளின் தொடையமைப்பில் அந்தாதித் தொடை என்பது ஒன்று. 'அந்தம் முதலாத் தொடுப்பது அந்தாதி' என்கிருர் யாப்பருங்கலக் காரிகையில் (17) அமிதசாகரர்.

ஈறு முதலாத் தொடுப்பதந் தாதியென்று
ஓதினர் மாதோ உணர்ந்திசி னேரே

என்று யாப்பருங்கல விருத்தியும் (யாப். வி. 52) கூறுகிறது. "அடிதோறும் இறுதிக்கண் நின்ற எழுத்தானும் அசையானும் சீரானும் அடியானும் மற்றை அடிக்கு ஆதியாகத் தொடுப்பது அந்தாதித் தொடை எனப்படும்" என்பது இதன் பொருள்.

இங்ஙனமே ஒரு பாடலில் வரும் அடிகளிடையே தொடை நயம் வாய்க்கும் வகையிலன்றி, ஒரு பாடலும் அடுத்துவரும் பாடலும் அந்தாதி முறை பெறுதலும் உண்டு. இவ்வாறு வருவதனை 'அந்தாதிச் செய்யுள்' என்பர். இவ்வமைப்பு முறை பழங்காலந் தொட்டு வருவதாகும். சங்கப்பாடல்களிலும் இவ்வமைப்புகளைச் சிற்சில இடங்களில் காணலாம்.

குன்றகத் ததுவே கொழுமிளைச் **சீறூர்**
**சீறூ** ரோளே நாறுமயிர்க் **கொடிச்சி**
**கொடிச்சி** கையகத் ததுவேபிறர்
விடுத்தற் காகாது பிணித்தவென் நெஞ்சே.[51]

மண்திணிந்த **நிலனும்**
**நிலனேந்திய விசும்பும்**
**விசும்புதைவரு வளியும்**
**வளித்தலைஇய தீயும்**
**தீ**முரணிய நீருமென் றாங்கு
ஐம்பெரும் பூதத் தியற்கை போல.[52]

மேலே காட்டிய இப்பாடற்பகுதிகளில் இவ்வந்தாதி அணியினைக் காணலாம். இங்ஙனமே சிறுபாணாற்றுப் படை, குறுந்தொகை, பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு, சிலப்பதிகாரம் முதலிய நூல்களிலும் இம்முறையில் அமைந்து விளங்கும் பாடற்பகுதிகள் உள.[53]

---

இக்கருத்து,

அடியும் சீரும் அசையும் எழுத்தும்
முடிவு முதலாச் செய்யுள் மொழியின:து
அந்தாதித் தொடையென் றறைதல் வேண்டும்

என்னும் நத்தத்தனார் நூற்பாவாலும் (யாப். காரிகை, 17, உரை) தெளிவுற விளங்கும்.

51. நற். 95 : 8 - 11.
52. புறம். 2 : 1 - 6.
53. சிறுபாணாற்றுப்படை : 14 - 28.
குறுந்தொகை : 113 : 1 - 2.
பதிற்றுப்பத்து : 4ஆம் பத்து.
ஐங்குறுநூறு : 18ஆம் பத்து.
சிலப். கானல்வரி : 2–4 ; 9-13 ; 20-23 ; 25–27 ; 34-36 ; 43-46.

இந்நூல்கள் முழுதும் அந்தாதி அமைப்பைக் கொண்டன வல்லவாயினும் ஏகதேசமாகச் சிற்சில இடங்களில் இம் முறையினைக் காணலாம். வள்ளுவருடைய குறள் நூலுள்ளும் பொருளுணர்த்தும் முறையில் ஒரோவிடங்களில் கருத்துத் தொடர்பு காரணமாக அந்தாதி அணி யமைப்பு முறை காணப்படுகின்றது.

ஒரு சில இடங்கள் ஓர் அதிகாரத்தோடு அடுத்துவரும் அதிகாரத்திற்குள்ள தொடர்பு கூறும் வகையில் அந்தாதியணியாக அமைந்துள்ளன.

நீரின்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வானின்று அமையாது ஒழுக்கு.[54]

ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு.[55]

இவை முறையே 'வான் சிறப்பின்' ஈற்றுச் செய்யுளாகவும் 'நீத்தார் பெருமை'யின் முதற் செய்யுளாகவும் உள்ளன. 'ஒழுக்கு' என்னும் இறுதிச் சொல் அதே சொற்பொருள் தொடர்புடையதாய் 'ஒழுக்கத்து' என அடுத்த பாடலின் ஆதியாக வருதல் கவனிக்கத்தக்கது. இவ்வாறு ஈற்றுச் சொல் அந்தாதியணி அமைப்பில் வரும் குறட்பாக்கள் இன்னும் பல உள.[56]

ஈற்றுச்சீர் அந்தாதியானது தவிர ஈற்றயல் சீர் அந்தாதிபெற்று வரும் அணியமைந்த குறட்பாக்களும் காணலாகும்.

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.[57]

54. குறள், 20.
55. குறள், 21.
56. குறள் : 60-61 ; 357-358 ; 706-707 ; 1170-1171.
57. குறள், 151.

பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று.[58]

இவ்வமைப்புப் பெற்ற வேறு குறட்பாக்கள் இன்னும் சில உள.[59]

ஒரு செய்யுளில் கூறிய கருத்துத் தொடர்பாக வாக்கிய அமைப்பின் தொடக்கத்தையே அடுத்தபாடலுக்கு முதலாகக் கொண்ட அணியமைந்த குறட்பாடல்களும் உள்ளன.

சிறப்புஈனும் செல்வமும் ஈனும் **அறத்தினூஉங்கு**
**ஆக்கம்** எவனோ உயிர்க்கு.[60]

**அறத்தினூஉங்கு ஆக்கமும்** இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு.[61]

மேலே காட்டிய குறட்பாவில் நான்காம் சீரில் தொடங்கும் வாக்கிய முதலைக்கொண்டு அடுத்தபாடல் தொடங்கியிருக்கும் அழகினையும் அமைப்பினையும் காணலாம். இவ்வாறு வரும் குறட்பாக்களும் குறள் நூலகத்தே பல உள.[62]

நிலைஅஞ்சி நீத்தாருள் எல்லாம் கொலைஅஞ்சிக்
**கொல்லாமை** சூழ்வான் தலை.[63]

**கொல்லாமை** மேற்கொண் டொழுகுவான் வாழ்நாள்மேல்
செல்லாது உயிருண்ணுங் கூற்று.[64]

இக்குறட்பாக்களில் ஐந்தாம் சீரில் தொடங்குவது அடுத்த பாடலின் முதலாக அமைந்து 'அந்தாதி அணிநயம்' பொருந்த விளங்குவதைக் காண்கிறோம்.[65]

58. குறள், 152.
59. குறள், 696-697; 1117-1118; 1317-1318.
60. குறள், 31.
61. குறள், 32.
62. குறள், 192-193; 484-485; 851-852; 852-853; 974-975; 1096-1097; 1192-1193.
63. குறள், 325.
64. குறள், 326.
65. குறள், 230-231; 362-363; 603-604; 1132-1133; 1133-1134; 1225-1226; 1226-1227.

பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து[66]

எனவரும் குறளின் மூன்றும் சீர் அடுத்துவரும் பாடலின் முதற் சீராக அமைய,

பெருமை பெருமிதம் இன்மை சிறுமை
பெருமிதம் ஊர்ந்து விடல்.[67]

என அந்தாதியணி பெற்று விளங்குகிறது.

இங்ஙனம் வள்ளுவர் தாம் உணர்த்தக் கருதிய பொருளை வற்புறுத்தும் வகையிலும், கருத்துகளைத் தெளிவுற விளக்கும் வகையிலும் இவ்வந்தாதியணி முறையை மேற்கொண்டிருத்தல் பண்டு தொட்டுவரும் வழக்கியல் முறைக்கு ஒத்ததேயாகும். இ∴து இயல்பாக நினைவில் வைத்துப் போற்றுதற்குரிய ஓர் எளிய முறையும் ஆகும்.

**விற்பூட்டணி**

முதற்சொல்லோடு இறுதிச்சொல் வந்து, பொருந்திப் பொருள் முடிக்கும் அமைப்பை 'விற்பூட்டு' என்பர். வில்லின் இரு தலையையும் நாண்கொண்டு பூட்டினாற் போல முதற் சொல்லுடன் ஈற்றுச்சொல் பிணைந்து நின்று பொருள் பயக்கும் மாண்பினை இவ்வகை அணியில் காணலாம்.

பூட்டுவில் லென்ப பூட்டிய விற்போற்
பாட்டிரு தலையொரு பாற்பொருள் கொளலே[68]

என்று வீரமாமுனிவர் தாம் வகுத்த சொல்லணியியலுள் 'மறிநிலையணி'யின் வகையாக இதனைக் கூறுவர். இதனைப் பவணந்தி முனிவர் நன்னூலில் 'பூட்டுவிற்பொருள் கோள்' என்றே குறிப்பிடுகிறார்.[69]

66. குறள், 978.
67. குறள், 979.
68. தொன்னூல் விளக்கம், 309.
69. எழுவா யிறுதி நிலைமொழி தம்முள்
பொருள்நோக்கு உடையது பூட்டுவில் லாகும்.
—நன். பொது. 64.

*திறந்திடுமின் மீன்முடியுஞ் செங்கதிரோன் றன்சூட்*
*டிறந்திடு வில்லாடை யெழிலுஞ்—சிறந்திடுமின்*
*றண்ணார மாய்மதியந் தாங்கடியும் பூண்டாளைக்*
*கண்ணாரக் காணக் கதவு*

என்று இவ்வணிக்கு உதாரணமும் காட்டுவர் வீரமா முனிவர். இங்கு 'திறந்திடுமின் கதவு' என முதற்சொல்லும் இறுதிச் சொல்லும் கூடிநின்று பொருள் தந்தமையால் இப்பாட்டு விற்பூட்டு அணியாயிற்று.

முதற்சொல்லுடன் இறுதிச் சொல் இணைந்துவரும் விற்பூட்டுப் போன்றே இறுதிச் சொல் முதற் சொல்லோடு பிணைப்புண்ட சொற்றொடரை முடிவாகக் கொண்டு வரும் அமைப்பும் விற்பூட்டின் இயல்பை ஒத்துவரும் நிலையே எனலாம்.

*கோளில் பொறியின் குணமிலவே எண்குணத்தான்*
*தாளை வணங்காத் தலை*[70]

என்னும் குறட்பாவில் இவ்வணி அமைந்திருப்பது காணத் தகும். இதனுள் 'தலை' என்னும் இறுதிச் சொல்லாக வரும் எழுவாய் 'கோளில் பொறியின் குணமிலவே' என்று முதல் தொடரோடு பொருந்திநின்று பொருள் தந்து இயைதலைக் காணலாம்.

*ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்*
*சான்றோன் எனக்கேட்ட தாய்*[71]

என்னும் குறட்பாவினுள்ளும், 'தாய் ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும்' என ஈறும் முதலும் இணைந்துநின்று பொருள் தருகின்றது.

### நிரோட்டகம்

சொல்லணியில் ஒருவகை 'நிரோட்டகம்' என்பதாம். இதனை மாறனலங்காரம் 'நிரோட்டியம்' என்று கூறும். இதழும் இதழும் கூடாது பிறக்கும் எழுத்துகளைக் கொண்ட இத்தகைய பாக்கள் சொல்லின்பம் தந்து

70. குறள், 9.
71. குறள், 69

நிற்பனவாம். இவற்றை 'இதழகல் பாட்டு' அல்லது 'உதடுபடாப்பாட்டு' என்றும் அழைக்கலாம்.

இதழ்குவிந் தியையா தியல்வது நிரோட்டியம்[72]

என்று மாறனலங்காரம் இதற்கு விதி கூறும்.

நாதன ரங்கநகர் நாராயண னறைசேர்
சீதநளி னத்தினிற் சிறந்த—காதற்
கனிநா னிலக்கிழத்தி கட்கினிய காந்தித்
தனிநாய கன்ருள் சரண்

என்று இவ்வணிக்கு இந்நூல் தரும் சான்றும் இதழ் கூடாது பிறப்பதாம்.

உயிர் வருக்கத்தும் மெய் வருக்கத்தும் உதடு ஒன்று சேரப் பிறக்கும் எழுத்துகளுள் எதுவும் வாராமல் பாடினுல் தான் இவ்வோசை நயம் பாடலுள் அமையும்.

உ ஊ ஒ ஓ ஔ ப மவவி வற்றியைபு
சேராநி ரோட்டத் திறத்து[73]

என்பது இதழகல் பாடல்களில் சேரத்தகாத எழுத்துகள் எவைஎவை என்பதனை எடுத்துக்காட்டும் ஒருபழைய பாவாகும். பெருங்கவிஞர்களுக்குச் சொற்கள் அவர்தம் கருத்துக்குத்தக வந்து முந்துமாதலால் இஃது இயல்பாகப் பாடப்படும் பாட்டுப்போல அமைந்து விடுகிறது.[74]

வள்ளுவர் அருளிய பாடலுள்ளும் இவ்வணி நயம் அமைந்து விளங்குவது எண்ணி இன்புறுதற்குரியதாம்.

எய்தற் கரிய தியைந்தக்கால் அந்நிலையே
செய்தற் கரிய செயல்.[75]

இக்குறட்பா இதழும் இதழும் கூடாது ஒலிப்பதனைக் காணலாம்.

72. மாறன். 274.
73. தண்டி. சொல். 7, சுப்பிரமணிய தேசிகர் உரை மேற்கோள்.
74. 'நிரோட்டக வந்தாதி', 'நிரோட்டக யமகவந்தாதி', 'இதழக லந்தாதி' என்று தனிவகையான அந்தாதி நூல்கள் சில பிற்காலத்துப் புலவர்கள் யாத்துள்ளார்கள்.
75. குறள், 489.

# 7. சுவையணி

## கவிதையும் சுவையும்

கவிதைக்கு வேண்டிய அழகுகளில் ஒன்று சுவை. நாடகந்தழுவிய கூத்துக் கவிதைகளுக்கு மட்டும்தான் இஃது உரியதன்று; ஏனைய இலக்கியங்களுக்கும் தேவையானதே யாம். இதனைத் தொல்காப்பியர் 'மெய்ப்பாடு' என்பர். செய்யுளிலக்கணம் உணர்த்தவந்த தொல்காப்பியரும் செய்யுளியலின் முதல் நூற்பாவிலேயே,

> பயனே மெய்ப்பா டெச்சவகை யெனாஅ[1]

என்றுகூறிச் செய்யுள்களின் உறுப்புகளுள் இதுவும் ஒன்று என்று கூறுவர். இதற்குப் பொருள் கூறும்போது உரைகாரர் பேராசிரியர், "மெய்ப்பாடென்பது சொற் கேட்டோர்க்குப் பொருள் கண்கூடாதல்" என்று விளக்கம் தருவர்.

தண்டியலங்காரம் போன்ற அணி இலக்கண நூல்கள் இதனை அணிவகைகளுள் ஒன்றாகவே கருதிச் 'சுவையணி' என்று கூறுவதும் கருதத்தக்கது.[2]

1. தொல். செய்யு. 1.
2. மாறனலங்கார ஆசிரியரும்,

> பொறியுணர் வொடுமொரு பொருளினை எதிர்ந்த
> நெறியுடை மனத்துள் நிகழ்தரும் பான்மை
> அயலவ ருறப்புறத் தாய்ப்பொரு ளெட்டின்
> இயல்வது சுவைஎன் றியம்பினர் புலவர்

உண்ணிகழ் தன்மை புறத்துத் தோன்ற
எண்வகை மெய்ப்பாட்டின் இயல்வது சுவையே[3]

என்று தண்டியலங்காரம் கூறும். உள்ளத்து உணர்ச்சிகள் புறத்தே வெளிப்படும் நிலையினை ஆய்ந்து எழுதினர் பண்டைத் தமிழ்ச் சான்றோர். இவ்வுணர்ச்சி வெளிப் பாட்டிற்கும் கவிதைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. "உணர்ச்சியின் வெளிப்பாடே கவிதை"[4] என்கிறார் வோர்ட்ஸ்வொர்த் (Wordsworth). கவிச்சுவையும் இலக் கியச் சுவையும் நம் உள்ளத்தில் உணர்ச்சியைத் தோற்று விக்கின்றன. உணர்ச்சிக்கேற்ப உடலில் தோன்றும் வேறுபாடுதான் மெய்ப்பாடு. எனவே மெய்ப்பாட்டா ராய்ச்சி இயற்றமிழோடு நெருங்கிய தொடர்புடைய தாம்.

### சுவையுணர்வு

சுவையுணர்வு பாடல்களுக்கு உயிர்நாடி போன்றது. சிறப்பாகக்கூத்தநூலிலும் நாடக நூலிலும் வல்லார் இதனை நன்கு விவரித்து உரைக்கின்றனர். மாந்தர்களின் உணர்ச்சி களுக்கு ஏற்பப் பேசியும் சைகை காட்டியும் பல்வேறு அபிநயங்களுடன் நடிப்பது நடிகர்க்கு அவசியம்வேண்டும். இது கருதியே தொல்காப்பியர் பொருளுக்கு ஓர் அங்கமாக இப்பொருள் பற்றி 'மெய்ப்பாட்டியல்' என ஒரு தனி இயற்பாகுபாடே செய்து, இச்சுவையின் கூறுபாடுகளை

---

என்று கூறுவர். இதற்கு உரையெழுதிய காரிரத்ந கவிரா யரும், "இந்திரியங்களினறிவிலேடும் யாதானுமொரு பொருளைக் காணப்பட்ட மனத்துள் அப்பொருள் ஏதுவாக நிகழ்ந்த தன்மை நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப் புலப் படுவதோராற்றான் வெளிப்பட மெய்ப்பாடெட்டாற் றேன்றுவது சுவையென்னும் அலங்காரமா மென்றவாறு' என்று கூறியிருப்பதும் எண்ணுதற்குரியது.
—மாறன். 197, உரை.

3. தண்டி. 68.

4. Wordsworth's Literary Criticism, p. 156, Ed. by. Nowell Smith, London, 1935.

நன்கு விளக்கியிருக்கின்றனர். இதன் சிறப்பும் பொருத்தமும் கருதியே தொல்காப்பியர் இவ்வியலை உவமவியலுக்கு முன்னர் வைத்தனர் போலும்.

### கவிச்சுவை

நாடகத்தினுள் காணும் சுவைக்கும், கவிதையினுள் காணும் சுவைக்கும் நிறைய வேறுபாடு உண்டு. நாடகத்துள் மெய்ப்பாடுகளை நடிப்போர் காட்ட, உணர்வோர் எளிதில் அதன் வயப்படுவர். ஆயின், கவிதையில் சுவைப்போன் காட்சி உணர்வின்றிக் கருத்துணர்வாலேயே அத்தகைய சுவைகளை அனுபவிக்க இயலும். இத்தகைய சுவைகளையும் கவிஞர் தாம் படைத்த இலக்கியங்களில் எழிலுற அமைத்து அவ்விலக்கியங்களின் வாயிலாக அச்சுவைகளைப் பயில்வோர் உள்ளத்திலும் எழுப்புகின்றனர்.

### சுவை என்னும் பெயர்க் காரணம்

உள்ளுணர்வு, கற்பனை, உள்ளக்கிளர்ச்சி, சுவை, மெய்ப்பாடு என்ற உள்ள நிலைகள்தாம் அணியாக மாறி வெளிப்படுகின்றன என்பர்.[5] இதனை வடநூலார் மிகவும் போற்றியுரைத்து 'ரஸம்' என்று வழங்கினர்.

> "முதற் கரு உரிப் பொருள்களை நாம் தனித்தனியாக உணர்வதில்லை. இவை எல்லாம் ஒன்ருக இயைந்து ஒருருப் பெற்று ஒரு சுவையாகி ஒளிர்கின்றன. மிளகும் கற்கண்டும் பச்சைக் கர்ப்பூரமும் இன்னும் பலவும் கொண்டு காய்ச்சிய குடிநீரானது, கலவைப் பொருள்களின் சுவை ஒவ்வொன்றையும் தனித்தனியே தாராது அவற்றிற்கு வேருயதோர் ஒற்றுமைச் சுவையைத் தந்து நிற்பது போல, முதற் கரு உரிப்பொருள்களும் ஒன்றென்ருகத் தனித்தனியே விளங்காது, ஒன்றுபட்டு ஒற்றுமையே உருவாய்ச் சுவைதந்து நிற்கின்றன. இது பற்றியே வடநூலார் அக்குடிநீரின் பெயராகிய ரஸம் என்பதனை இச்சுவைக்கும் பெயராக வைத்து வழங்கி வந்தனர்"

என்று இதற்கான காரணத்தையும் கூறுவர்.[6]

5. மீனுட்சி சுந்தரனர், தெ. பொ.: சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும், பக். 29, தருமபுர ஆதீன வெளியீடு, 1955.
6. ஷை பக். 42.

வேப்பம் பழத்தைத் தின்ருல் கைப்புச் சுவையும் மாம்பழத்தைத் தின்ருல் இனிப்புச் சுவையும் தோன்றுதல் போல ஒரு நூலினை ஓதும்போதும் ஓதக் கேட்கும்போதும் உவகை முதலான உள்ளக்கிளர்ச்சிகள் தோன்றுகின்றன. அவற்றையும் உவமைப்பெயர் கொண்டு 'சுவை' என்றே தமிழர் வழங்கினர்.[7]

## மெய்ப்பாடு அல்லது சுவை நலம்

உள்ளுணர்ச்சியின் வெளிப்பாட்டை மெய்ப்பாடு என்பர். "மெய்ப்பாடு என்பது பொருட்பாடு. அஃதாவது உலகத்தார் உள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப் புலப்படுவதோர் ஆற்ருன் வெளிப்படுதல்" என்பர் பேராசிரியர்.[8] உள்ளுணர்ச்சிகள் யாரிடமிருந்து எத்தகைய சூழ்நிலையில், எவ்வெவ்வகையில் வெளிப்படுகின்றன என்று அறிகின்றபோது ஒருவர்பால் உறும் உணர்ச்சி வெளிப்பாட்டையே மெய்ப்பாடு என்று கூறுகிருேம். உணர்ச்சி காரணமாகச் சுவைப்போர் மெய்க்கண் வெளிப்பட்டுத் தோன்றும் இதனைச் 'சுவை' என்றும் குறிப்பிடுவர். கவிகளில் அவற்றைக் கூறுவார் உள்ளுணர்ச்சி வெளிப்பட, அவை அவ்வவ்வுணர்ச்சிகளுக்கு ஏற்ப வெவ்வேறு சுவைகளை நல்கும்.

## எண்வகை மெய்ப்பாடு

எட்டு வகையான மெய்ப்பாடுகளை அல்லது சுவைகளைத் தொல்காப்பியர் சிறப்பாக எடுத்துரைத்துள்ளார்.

> நகையே அழுகை இளிவரல் மருட்கை
> அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று
> அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப[9]

என்பதனுல் மெய்ப்பாடு எட்டு என்பது ஆசிரியர் தம் முந்தையோர் கொள்கையினின்றும் வரையறுத்துக்

7. மீனுட்சி சுந்தரனுர், தெ. பொ.: சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும், பக். 6.
8. தொல். மெய்ப். 1, பேரா. உரை.
9. தொல். மெய்ப். 3.

கொண்ட முடிபாகும். இவற்றுள் நகை என்பது சிரிப்பு. இதனை முறுவலித்து நகுதலும் அளவேசிரித்தலும் பெருகச் சிரித்தலும் என மூன்று கூறுபட மொழிவர். அழுகை என்பது அவலம். தானே அவலித்தலும் பிறர் அவலம் கண்டு அவலித்தலும் என அவலச்சுவையினை இருவகையாகக் கொள்ளலாம். இவற்றுள் ஒன்று கருணை எனவும் மற்றொன்று அவலம் எனவும்பட்டுச் சுவையை ஒன்பதாகக் கொள்ளுவதும் உண்டு. இளிவரல் என்பது இழிபு. மருட்கை என்பது வியப்பு; அற்புதம் என்றும் இதனைக் கூறலாம். அச்சம் என்பது பயம். பெருமிதம் என்பது வீரம். வெகுளி என்பது உருத்திரம் எனப்படும் சினம். உவகை என்பது காமம் முதலிய மகிழ்ச்சி.

இவற்றுள் உவகை, வெகுளி, பெருமிதம், இளிவரல் என்ற நான்கு சுவைகளையும் முதற்சுவைகள் என்பர் பரதர். இந்நான்கினின்றும் முறையே நகை, அழுகை, மருட்கை, அச்சம் என்பன தோன்றுகின்றன என்றும் உரைக்கின்றனர். இன்னும் இந்தச் சுவை எட்டுக்கு மேற்பட்டும் இருக்கின்றன என்று கூறுவாரும் உளர். ஆரோன் ஹில் (Aoron Hill) என்பவர் (1) உவகை, (2) அவலம், (3) அச்சம், (4) வெகுளி, (5) இரக்கம் (6) எள்ளல் (7) வெறுப்பு, (8) பொறுமை, (9) வியப்பு, (10) காதல் என்று சுவையைப் பத்து வகையாக்கிக் கொண்டு ஆராய்ச்சி செய்கின்றார்.[10]

### சுவை வெளிப்பாடு

ஒவ்வொரு சுவையும் பிறப்பதற்கு நிலைக்களமாக நான்கு நிலைகள் சொல்லப்படும். அவையாவன: சுவைப் பொருள், சுவையுணர்வு, குறிப்பு, விறல் என்பனவாம். சுவைப்பொருள் என்பது சுவைக்குமாறு ஒருவருக்கு வாய்த்த பொருள்; சுவையுணர்வு என்பது அப்பொருளை நுகரும் பொறியுணர்வு; ஐம்பொறிகளுக்கும் இலக்காகும் உணர்ச்சி. குறிப்பு என்பது அப்பொருள் மனத்துள்பட்ட

10. மீனாட்சி சுந்தரனார், தெ. பொ.: சேக்கிழாரும் திருக் கண்ணப்பரும், பக், 24.

பொழுது உள்ளத்தே நிகழும் குறிப்புகள். இக்குறிப்புகளால் வெளிப்பட்டு மெய்க்கண் தோன்றும் கண்ணீர் அரும்பல், மெய்ம்மயிர் சிலிர்த்தல் போன்று உடம்பின்கண் தோன்றும் வேறுபாடுகளை விறல் அல்லது சத்துவம் என்பர்.

**நகை முதலாக வரும் சுவைகளின் அடைவு**

நகை முதலாகச் சுவைகளைத் தொல்காப்பியர் அடைவு செய்ததன் நோக்கம் குறித்துப் பேராசிரியர் காட்டும் ஏதுக்களாலும் இச்சுவைக் கூறுகளின் இயல்புகள் சில நமக்குப் புலனாகின்றன. பேராசிரியர் தரும் அடைவு விளக்கம் பின்வருமாறு :

> "மற்று நகையை முன்வைத்தது என்னையெனின் 'பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருட்கும்' இவையென்னும் இயைபில்லன வல்ல என்றதற்கு விளையாட்டுப் பொருட்டாகிய நகையை முன்வைத்தான் என்பது. அதற்கு மறுதலையாகிய அழுகையை அதன் பின் வைத்தான்; இளிவரல் அதன் பின் வைத்தான், அழுகையும் இளிவரலோடு இயைபுடைமையின். தான் இளிவந்து பிறிதோர் பொருளை வியக்குமாதலின், இளிவரலின் பின் வியப்பு வைத்தான். வியப்புப் பற்றியும் அச்சம் பிறத்தலின் அச்சத்தை அதன்பின் வைத்தான். அச்சத்திற்கு மறுதலையாகிய வீரத்தை அதன் பின் வைத்தான். அவ்வீரத்தின் பயனாகிப் பிறர்க்கு வரும் வெகுளியை அதன் பின்னே வைத்தான். வெகுளிக்கு மறுதலையாகலானும், எல்லாவற்றிற்கும் ஈண்டு ஓதுதற்குச் சிறந்ததாகலானும், முதற்கண் ஓதிய நகைக்கு இயைபுடைத்து ஆகலானும் உவகையை அவ்வீற்றுக்கண் வைத்தான் என்பது.[11]

நகை, அழுகை, இளிவரல் மருட்கை என்னும் நான்கு மெய்ப்பாடுகளும் தன்கண் தோன்றுவனவும் பிறன்கண் தோன்றுவனவுமாக ஒவ்வொன்றும் ஈரிடத்தில் பிறக்கும். ஆனால், அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்பனவோ பிறன்கண் தோன்றுவனவற்றால் மட்டும் உளவாம். ஆதலின் மேலே நான்கினைப்போல இவை இரண்டிரண்டு ஆகா. இவ் வேற்றுமையும் மெய்ப்பாடுகளின் முறைவைப்பிற்கு ஒரு முக்கிய காரணமாகும்.

11. தொல். மெய்ப். 3, பேரா. உரை.

### ஒவ்வொரு சுவைக்கும் நான்கு பொருள்

ஒவ்வொரு சுவையும் தோன்றுவதற்குச் சிறந்த அடிப் படைகளாக நான்கு பொருள்களைத் தொல்காப்பியர் காட்டியுள்ளார். இப்பொருள்கள் சத்துவமும் குறிப்பும் சுவையுணர்வும் என்னும் மூன்றற்கும் முதற்காரணமாவன. இவற்றைப்பற்றி விரிவாக ஆராய்வது இங்குப் பொருந்தா தாயினும் திருக்குறளில் அமைந்த சுவைப் பொருள்களைக் காண்பதற்கு இப்பொருள்களின் உணர்ச்சி அவசிய மாகும். எனவே, எண்சுவைக்கும் நிலைக்களமாக அமைந்த பொருள்களைக் கூறும் நூற்பாக்களை அடைவே காண் போம் :

எள்ளல் இளமை பேதைமை மடன்என்று
உள்ளப் பட்ட நகைநான்கு என்ப.[12]

எள்ளல் என்பது எள்ளி நகுதல்; பேதைமை என்பது அறியாமை; மடமை என்பது கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை என்பர்.

இளிவே இழவே அசைவே வறுமையென
விளிவில் கொள்கை அழுகை நான்கே.[13]

இளிவு என்பது பிறரால் இகழப்பட்டு எளியன் ஆதல். இழவு என்பது இழத்தல்; அதாவது தந்தையும் தாயும் முதலாகிய சுற்றத்தாரையும் இன்பம் பயக்கும் நுகர்ச்சி முதலியவற்றையும் இழத்தல். அசைவு என்பது பண்டை நிலைமை கெட்டு வேறொருவாறாகி வருந்துதல். வறுமை என்பது போகம் துய்க்கப் பெறாத பற்றுள்ளம்.

மூப்பே பிணியே வருத்தம் மென்மையோடு
யாப்புற வந்த இளிவரல் நான்கே.[14]

அவலச் சுவையாகிய இரக்கம், முதுமை, நோய், முயற்சி களால் வரும் வருத்தம், ஆற்றல் குறைவு ஆகியவற்றால் உளதாம் என்பதாம்.

12. தொல். மெய்ப். 4.
13. தொல். மெய்ப். 5.
14. தொல். மெய்ப். 6.

புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு
மதிமை சாலா மருட்கை நான்கே.[15]

புதுமை முன்பு காணுத புதிய பொருள்; பெருமை மிகப் பெரியவாயின; சிறுமை என்பது மிகச்சிறியவாயின; ஆக்கமாவது ஒன்று ஒன்ருய்த் திரிந்தன. இவை அறிவினை உலக வழக்கினுள் நின்றவாறு நில்லாமல் திரித்து வேறு படுத்துவதால் 'மதிமை சாலா மருட்கை' என்கிருர். மருட்கையாவது இங்கு வியப்பு அற்புதம் என்னும் பொருளை உடையதாம்.

அணங்கே விலங்கே கள்வர்தம் இறையெனப்
பிணங்கல் சாலா அச்சம் நான்கே.[16]

அணங்கு என்பது வருத்தும் தெய்வம். "பேயும், பூதமும் பாம்பும் ஈருகிய பதினெண் கணனும் நிரய பாலரும் பிறரும் அணங்குதல் தொழிலராகிய சவந்தின் பெண்டிர் முதலாயினரும் உருமிசைத் தொடக்கத்தனவும்" என்ப. விலங்கு என்பது சிங்கம் புலி முதலிய அஞ்சத்தக்க விலங்குகள். கள்வர் என்பார் தீத்தொழில் புரிவார். இறை எனப்படுவார் தலைவராம் பெரியோர், தந்தையரும் ஆசிரியரும் அரசரும் முதலாயினேர்.

கல்வி தறுகண் இசைமை கொடையெனச்
சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே.[17]

பெருமிதமாவது வீரம். எல்லாரொடும் ஒப்ப நில்லாது கல்வி முதலியவற்றின் பேரெல்லையில் நிற்றலால் உளதா தலின் வீரத்தினைப் பெருமிதம் என்பர். கல்வி என்பது தவம் முதலாகிய வித்தை. தறுகண் என்பது அஞ்சத்தக்கன கண்ட இடத்து அஞ்சாமை. இசைமை என்பது இன்பமும் பொருளும் மிகவரினும் பழியோடு வருவன செய்யாமை. கொடை என்பது உயிரும் உடம்பும் முதலாகிய எல்லாப் பொருளும் கொடுத்தல்.

15. தொல். மெய்ப். 7.
16. தொல். மெய்ப். 8,
17. தொல். மெய்ப். 9.

உறுப்பறை குடிகோள் அலைகொலை என்ற
வெறுப்பின் வந்த வெகுளி நான்கே.[18]

உறுப்பறை என்பது உடலுறுப்புகளை அறுத்தல்; அஃதாவது கை குறைத்தலும் கண்குறைத்தலும் முதலாயின. குடிகோள் என்பது தம் குடியினுக்குக் கேடு சூழ்தல். அலை என்பது கோல் கொண்டு அடித்தல் முதலாயின. கொலை என்பது உள்ள பண்பினைச் சிதைத்துக் கூறல்; அறிவும் புகழும் முதலாயினவற்றைக் கொன்று உரைத்தல் என்பர்.

செல்வம் புலனே புணர்வு விளையாட்டு என்று
அல்லல் நீத்த உவகை நான்கே.[19]

செல்வம் என்பது நுகர்ச்சி; புலன் என்பது கல்விப் பயனாகிய அறிவுடைமை; புணர்வு என்பது காமப் புணர்ச்சி முதலாயின. விளையாட்டு என்பது "யாறும் குளனும் காவும் ஆடிப் பதியிகந்து வருதல்" முதலியன. இவை ஏதுவாக உவகை என்னும் மகிழ்ச்சி பிறக்கும் எனப் பேராசிரியர் விளக்கம் தருகிறார்.

மேலே காணும் ஒவ்வொரு நூற்பாவிலும் நான்கு எனக் குறிப்பிடுவன அவ்வச்சுவை தோன்றுவதற்கு முதற் காரணமான பொருள்கள். இப்பொருள்கள் காரணமாக எண்சுவையும் முப்பத்திரண்டு பொருள்களால் தோற்றம் பெறுதலின் முப்பத்திரண்டு வகையாயின. இவற்றின் மேலாகவும் ஒருசில பொருள்களை உரைகாரர் தம் உரை விளக்கத்தில் தக்க ஏதுக்களுடன் எடுத்துக்காட்டியுள்ளனர். இவையெல்லாம் சுவைக் கூறுகளைத் தெளிவுற உணர்த்துகின்றன.

### திருக்குறளில் சுவைநலன்

நகை முதலாக உவகை ஈறாகக் கூறப்பெற்ற சுவைக் கூறுகளில் சில திருக்குறளின் காமத்துப் பாலகத்தே அமைந்து வருதல் இயல்பே. மற்றும் படைமாட்சி, படைச் செருக்கு, நல்குரவு அதிகாரங்களிலும், வேறுசில இடங்

18. தொல். மெய்ப். 10.
19. தொல். மெய்ப். 11.

களிலும் இவ்வகைச் சுவை விரவிய பகுதிகள் முதல் இரு பாலகத்தும் உள. மேலும், ஆசிரியர் தாம் கூற எடுத்துக் கொண்ட பொருளுக்கும் மாந்தர் இயல்புகளுக்கும் ஏற்ற வண்ணம் உள்ளுணர்ச்சி பொங்கச் சுவை ததும்ப எடுத்துக் கூறிய பகுதிகளையும் ஆங்காங்கே காணலாம். எண் சுவைகளுக்கும் ஏற்ற இலக்கியப்பகுதிகள் இந்நூலகத்தே பேரளவில் காண இயலாவிடினும் நகை, உவகை, இளிவரல், வெகுளி என்னும் சுவைகள் சிற்சில பகுதிகளில் மிகுதியாகக் காணக் கிடக்கின்றன.

காமத்துப்பாலில் சிறப்பாக அமைந்துள்ளது இன்பச் சுவை.

> "ஈண்டு இன்பம் என்றது ஒருகாலத்து ஒரு பொருளான் ஐம் புலனும் நுகர்தற் சிறப்புடைத்தாய காம இன்பத்தினை. இச் சிறப்புப்பற்றி வடநூலுட் போசராசனும், 'சுவை பல என்று கூறுவார் கூறுக, யாம் கூறுவது இன்பச் சுவை ஒன்றினையுமே' என இதனையே மிகுத்துக் கூறினன்"

எனப் பரிமேலழகர் காமத்துப்பாலில் இன்பச் சுவை மிகுந்து காணப்படுதலைத் தோற்றுவாய்க்கண் விவரித்துள்ளார். மேலும், அவர் காமப் பகுதியைப் 'புணர்ச்சி' 'பிரிவு' என இருவகைப்படும் என்று கூறியதோடு ஏனைய இருத்தல், இரங்கல், ஊடல் என்பனவற்றையும் பிரிவினுள் அடக்கிக் காணவேண்டும் என்பர். இன்ப துன்பம், இரவு பகல் என்றாற்போலக் காதல் வாழ்க்கை புணர்ச்சி பிரிவு என்னும் இரண்டு கூறுகளாக அமைகின்றன என்பது இதனால் உணரத்தகும்.

'தகையணங்குறுத்தல்', 'குறிப்பறிதல்' இரண்டும் தலைவியைக் கண்டு காதல் கொண்ட தலைமகன்பால் நிகழும் கைக்கிளைக் குறிப்புகளைத் தருவன. 'நாணுத் துறவுரைத்தல்', 'அலரறிவுறுத்தல்' என்னும் இரண்டு அதிகாரங்களும் முறையே தலைவன் தலைவியர் தம் விருப்பம் நிறைவேறா நிலையில் உள்ள சூழ்நிலைகளைக் குறித்துப் பேசும் பகுதிகளாம். 'புணர்ச்சி மகிழ்தல்', 'நலம் புனைந்துரைத்தல்', 'காதற் சிறப்புரைத்தல்' என்னும் அதிகாரங்கள் தலைவன் தலைவியர் தாம் கூடிய காலத்துப் பிறந்த இன்பச் சுவை

குறித்துப் பேசும் பகுதிகளாம். எனவே, இவற்றுள் நகை யும் உவகையும் நல்கும் சுவைப் பகுதிகள் மிகுந்துள.

பிரிவாற்றுமை தொடக்கமான அதிகாரங்கள் பிரிவு பற்றிய பகுதிகள். 'படர்மெலிந்திரங்கல்', 'பசப்புறு பருவ ரல்', 'நினைந்தவர் புலம்பல்', 'பொழுதுகண்டு இரங்கல்', 'தனிப்படர் மிகுதி', 'உறுப்பு நலன் அழிதல்', 'நிறை அழிதல்' என்னும் அதிகாரப் பெயர்களில் பருவரல், புலம்பல், இரங்கல், படர், அழிதல் எனவரும் துன்ப நிலை குறிக்கும் சொற்களே இவை அழுகை, இளிவரல் என்னும் அவலச்சுவை வாய்ந்த பகுதிகள் என்பதைப் புலப்படுத்தும்.

**நகைச் சுவை**

இச்சுவை பிறத்தற்கு ஏதுவாகிய எள்ளல், இளமை, பேதைமை, மடன் ஆகியவற்றை யொட்டி நகைச் சுவை வாய்ந்த குறட்பாக்கள் சிலவற்றை நோக்குவோம்.

> இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
> நிலமென்னும் நல்லாள் நகும்.[20]

> வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
> ஐந்தும் அகத்தே நகும்.[21]

இவை எள்ளல்பற்றித் தோன்றிய நகையாம்.

> கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
> மெய்வேல் பறியா நகும்.[22]

இஃது வீரன் ஒருவனின் வெகுளியால் பிறந்த நகை. எனினும், இஃது பகைவரை இகழ்ந்து எழுந்த எழுச்சி யாதலின் இதனையும் எள்ளல் பற்றிவந்த நகையாகக் கொள்ளலாம்.

20. குறள், 1040.
21. குறள், 271.
22. குறள், 774.

யான்நோக்குங் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்
தான்நோக்கி மெல்ல நகும்.[23]

அசையியற்கு உண்டாண்டோர் ஏஎர்யான் நோக்கப்
பசையினள் பைய நகும்[24]

என்பன தலைவியின் பேதைமை காரணமாகப் பிறந்த நகையாம்.

குறிக்கொண்டு நோக்காமைஅல்லால் ஒருகண்
சிறக்கணித்தாள் போல நகும்[25]

என்னும் இப்பாடலைத் தன் மடத்தால் தோன்றிய நகைக்கு எடுத்துக்காட்டாகப் பேராசிரியர் தந்துள்ளார்.[26]

இழிவறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபேர் இரையான்கண் நோய்.[27]

இக்குறட்பாவிலும் நகைச் சுவை மிகுந்துள்ளதைக் காணலாம். மக்கள் உண்ணும் உணவினை 'இரை' எனக் குறிப்பிடமாட்டார்கள். ஆயினும், வள்ளுவர் வெறும் இரை என்று கூறாது 'கழிபேரிரை' எனக்கூறிப் பெருந்தீனி தின்போரை இகழ்கின்ற நயம் பெரிதும் நகையைத்தரும். பெருந்தீனி கொள்வோரை அஃறிணைப்பாற்படுத்தும் நயமான குறிப்பும் இதனால் புலனாகும்.

மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாம்கண்ட தில்.[28]

தேவ ரனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான்.[29]

23. குறள், 1094.
24. குறள், 1098.
25. குறள், 1095.
26. தொல். மெய்ப். 4, பேரா. உரை.
27. குறள், 946.
28. குறள், 1071.
29. குறள், 1073.

*பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கண்*
*பீழை தருவதொன் றில்.*[30]

*அவ்வித்து அழுக்கா று உடையானைச் செய்யவள்*
*தவ்வையைக் காட்டி விடும்*[31]

என்பன போன்ற குறட்பாக்களிலும் இச்சுவைநலம் மிகுந்து நிற்பதனைக் காணலாம்.

**அழுகை**

*வழுத்தினாள் தும்மினே னாக அழித்தழுதாள்*
*யாருள்ளித் தும்மினீர் என்று.*[32]

*தும்முச் செறுப்ப அழுதாள் நுமர்உள்ளல்*
*எம்மை மறைத்திரோ என்று.*[33]

இவை தலைவன் தன்னை இகழ்ந்தான் எனத் தலைவி கருதியமையால் பிறந்த அழுகையாதலின் இதனை இளிவுபற்றி வந்த அழுகை என்னலாம்.

*காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி*
*மாலை மலரும்இந் நோய்.*[34]

*அழல்போலும் மாலைக்குத் தூதாகி ஆயன்*
*குழல்போலும் கொல்லும் படை.*[35]

பொழுதுகண்டு இரங்கும் தலைவியின் துன்ப உணர்ச்சிகளின் வெளிப்பாடாக உள்ள இப் பாடல்களில் தலைவி தன் முன்னை நிலைமை மாறியமை குறித்துப் பேசுதலின் இவை அசைவு காரணமாக வந்த அவலச்சுவைக்கு எடுத்துக் காட்டுகளாம்.

நல்குரவின் காரணமாக இரப்பான் ஒருவன் தன் நிலைமைக்கு நொந்து கூறியதாகச் சொல்லப் பெற்ற பின்வரும் குறள் வறுமை காரணமாக அவலச்சுவை பிறந்தமையை உணர்த்தும்:

30. குறள், 839.
31. குறள், 167.
32. குறள், 1317.
33. குறள், 1318.
34. குறள், 1227.
35. குறள், 1228.

நல்குரவு என்னும் இடும்பையுள் பல்குரைத்
துன்பங்கள் சென்று படும்.[36]

நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்
யாதொன்றும் கண்பாடு அரிது.[37]

வறுமையால் வாடி நலிவான் ஒருவனின் உணர்விலிருந்து பிறக்கும் இம்மொழிகள் அவ்வறுமைத் துன்பத்தின் மிகுதியால் நேர்ந்த அவலத்தினை உருக்கமாக உணர்த்து கின்றன.

குடி உயர்வதற்காக ஒருவன் உழைத்து உழைத்துத் துன்பப்படுவதைக் காணுகின்றார் வள்ளுவர். கண்களில் நீர் துளிக்கப் பரிவோடு பாடுகின்றார் :

இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ குடும்பத்தைக்
குற்றம் மறைப்பான் உடம்பு[38]

என்னும் இப்பாடலையும் இச்சுவைக்கு எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம்.

### இளிவரல்

ஒருநாள் எழுநாள்போல் செல்லும்சேட் சென்றார்
வருநாள்வைத்து ஏங்கு பவர்க்கு.[39]

வாளற்றுப் புற்கென்ற கண்ணும் அவர்சென்ற
நாளொற்றித் தேய்ந்த விரல்.[40]

வருகமன் கொண்கன் ஒருநாள் பருகுவன்
பைதல்நோய் எல்லாம் கெட[41]

என்பன தலைவன் பிரிவு காரணமாகத் தலைவிமாட்டுத் தோன்றும் வருத்தத்தைப் புலப்படுத்துதலின் இவை எல்லாம் வருத்தம் ஏதுவாக வந்த இளிவரல் சுவைக்கு எடுத்துக்காட்டுகளாம்.

36. குறள், 1045.
37. குறள், 1049.
38. குறள், 1029.
39. குறள், 1269.
40. குறள், 1261.
41. குறள், 1266.

*ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்*
*சான்றோர் முகத்துக் களி.*[42]

*கையறி யாமை யுடைத்தே பொருள்கொடுத்து*
*மெய்யறி யாமை கொளல்.*[43]

இவை கள்ளுண்டார் தம் முன்னைநிலையில் தாழ்ந்தமை கண்டு கூறியதாதலின் இவற்றை மென்மை காரணமாகப் பிறந்த இளிவரலின் பாற்படுத்துதல் தகும்.

*அறஞ்சாரா நல்குரவு ஈன்றதா யானும்*
*பிறன்போல நோக்கப் படும்.*[44]

*இற்பிறந்தார் கண்ணேயு மின்மை இளிவந்த*
*சொற்பிறக்குஞ் சோர்வு தரும்.*[45]

இவ்விரு குறட்பாக்களையும் இளம்பூரணர் இளிவரலுக்குச் சான்றாகக் காட்டுவர்.[46]

*பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில்*
*ஏதில் பிணந்தழீஇ யற்று*[47]

என்று வரும் பாடலையும் இளிவரல் சுவைக்கு எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம். பொருட்பெண்டிர் கூட்டுறவின் இழிவினை வள்ளுவர் காட்டும் உவமைநயம் வாய்ந்த இப் பாடலுள் நன்கு காணலாம்.

*உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்*
*புண்ண துணர்வார்ப் பெறின்*[48]

என்னும் குறட்பாவும் இளிவரல் சுவை நிறைந்ததேயாம்.

42. குறள், 923.
43. குறள், 925.
44. குறள், 1047.
45. குறள், 1044.
46. தொல். மெய்ப். 6, இளம். உரை.
47. குறள், 913.
48. குறள், 257.

**மருட்கை**

அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலுமென் நெஞ்சு.[49]

மதியும் மடந்தை முகனும் அறியா
பதியிற் கலங்கிய மீன்.[50]

இவை புதுமை காரணமாகத் தோன்றிய வியப்பினுல் எழுந்த பேச்சுகளாதலின் இவற்றில் மருட்கைச்சுவை உள்ளமை பெறப்படும்.

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு.[51]

ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப
கோடியும் அல்ல பல[52]

என்பன உண்மை உணராது மயங்கும் மக்களின் சிறுமைப் போக்குக் குறித்து வியந்தவாரும்.

எட்பக வன்ன சிறுமைத்தே ஆயினும்
உட்பகை உள்ளதாம் கேடு[53]

என்றுவரும் குறட்பாவும் இச்சுவையின்பாற் பட்டதே யாம்.

ஒண்ணுதற் கோஒ உடைந்ததே ஞாட்பினுள்
நண்ணாரும் உட்குமென் பீடு.[54]

கழிந்ததற்கு இரங்குதலோடு முன்னை நிலையினின்றும் வேறுபட்டமைபற்றி வியப்புற்றுரைத்தலின் இஃது ஆக்கம் காரணமாக வந்த மருட்கையாம்.

தொடின்சுடின் அல்லது காமநோய் போல
விடின்சுடல் ஆற்றுமோ தீ.[55]

49. குறள், 1081.
50. குறள், 1116.
51. குறள், 336.
52. குறள், 337.
53. குறள், 889.
54. குறள், 1088.
55. குறள், 1159.

*நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்*
*தீயாண்டுப் பெற்ருள் இவள்.*[56]

காமநோய் பிரிந்தாரை அணுகி வருத்துதல் நோக்கிக் கூறிய இவ்வுரைகள் காமத்தீயின் தனித்தன்மை குறித்து வியந்தவாரும். இயற்கை நிகழ்ச்சிக்கு மாருகவரும் இந்த ஆக்கநிலை வியப்பை விளைவிக்கின்றது.

## அச்சம்

நாள்தோறும் வறுமையால் துன்புற்ற ஒருவனின் உள்ளநிலையினையும் அவனுடைய அச்ச உணர்ச்சியினையும் தெள்ளத் தெளிவாகக் காட்டுவது பின்வரும் குறள்.

*இன்றும் வருவது கொல்லோ நெருநலும்*
*கொன்றது போலும் நிரப்பு.*[57]

வாடி, வருந்தித் துன்புறுத்தும் பசியைப் போக்காத நிலையில் மறுநாளும் பொழுதுபுலர்கிறது. "நேற்றுத் துன்புறுத்தி வாட்டிய அவ்வறுமை இன்றும் என்னிடம் வருமோ?" என்று அவன் அச்சங் கொள்கின்ருன். இதன் விளைவாகப் பிறக்கும் பாட்டே மேலே காட்டிய குறட்பாவாம்.

## பெருமிதம்

*ஒலித்தக்கால் என்ஞம் உவரி எலிப்பகை*
*நாகம் உயிர்ப்பக் கெடும்.*[58]

*என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலர்என்னை*
*முன்னின்று கல்நின் றவர்.*[59]

இவை வீரன் ஒருவன் தறுகண்மையால் எதிரியை நோக்கி உரைத்த வீர உரைகள். இவை பெருமிதத்திஞல் எழுந் தவையாதலின், பெருமிதச் சுவைப்பாற்படும். 'படைச் செருக்கு' அதிகாரத்தில் வரும் பாடல்கள் முழுவதுமே பெருமிதச் சுவையோடு திகழ்கின்றன எனலாம்.

56. குறள், 1104.
57. குறள், 1048.
58. குறள், 763.
59. குறள், 771.

**வெகுளி**

எனைத்துணைய ராயினும் என்னாம் தினைத்துணையும்
தேரான் பிறனில் புகல்.[60]

செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்.[61]

எற்றிற் குரியர் கயவரொன் றுற்றக்கால்
விற்றற் குரியர் விரைந்து.[62]

ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்
போஒம் அளவுமோர் நோய்.[63]

இவை பிறனில் விழைவானை நோக்கியும் புல்லறிவாளனை நோக்கியும் சினக் குறிப்புத்தோன்ற ஆசிரியர் மொழிந்தவையாம். இக்கூற்றுகளில் வெகுளிச்சுவை மிளிர்தல் காணலாம்.

இவ்வாறே கொல்லாமை அதிகாரத்தில் வரும்,

கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவா ரகத்து[64]

என்ற குறட்பாவினையும் இச்சுவைக்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். 'கொலை வினையராகிய மாக்கள்' என்றும் 'புலைவினையர்' என்றும் கூறும்போது அவற்றின்கண் பொதிந்துள்ள வெகுளியினைக் காணலாம்.

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்.[65]

இப்பாடலில் படைத்தவனையே சினந்துகொள்ளும் வெகுளியினைக் காண்கின்றோம்.

60. குறள், 144.
61. குறள், 420.
62. குறள், 1080.
63. குறள், 848.
64. குறள், 329.
65. குறள், 1062.

துப்புரவு இல்லார் துவரத் துறவாமை
உப்பிற்கும் காடிக்கும் கூற்று[66]

என்னும் குறட்பாவும், இச்சுவைபற்றி எழுந்ததே. தலைவனின் பிரிவினைப்பொருது சினந்து கூறுவதாக அமைந்த

செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க்கு உரை[67]

என்னும் குறட்பாவும் வெகுளியின் வெளிப்பாடே எனலாம்.

**உவகை**

பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயிறு ஊறிய நீர்.[68]

முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு.[69]

தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு.[70]

தம்மில் இருந்து தமதுபாத்து உண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு.[71]

கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள.[72]

இவை எல்லாம் தலைமகளோடு கூடி இன்பம் நுகர்ந்த தலைவன் வாயிலாக அவனுடைய உள மகிழ்ச்சியைத் தெரிவிக்கும் நோக்கத்தோடு கூறப் பெற்றதாதலின் இவற்றை உவகைச் சுவை பொருந்திய பாடல்களாகக் கொள்ளலாம்.

66. குறள், 1050.
67. குறள், 1151.
68. குறள், 1121.
69. குறள், 1113.
70. குறள், 1103.
71. குறள், 1107.
72. குறள், 1101.

காமத்துப்பால் உவகைச் சுவையினையே அடிப்படையாகக் கொண்டது எனலாம். உவகைச் சுவையினைத் தண்டியலங்காரம் 'காமச்சுவை' என்றே கூறுகிறது. சுவையணியின் வகையினை விரித்துரைக்கும் நூற்பாவில்,

அவைதாம்
வீரம் அச்சம் இழிப்பொடு வியப்பே
காமம் அவலம் உருத்திரம் நகையே[73]

என்று உவகையினைக் 'காமம்' என்று ஆசிரியர் குறிப்பர். 'ஊடலுவகை', 'புணர்ச்சி மகிழ்தல்' முதலிய அதிகாரங்களில் இச்சுவை மிகுதியாய் உள்ளது.

உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்[74]

என்னும் குறட்பாவினைக் கல்விப்பயனாகிய அறிவுடைமை காரணமாகப் பிறக்கும் உவகைச் சுவைக்குச் சான்றாகக் கொள்ளலாம்.

**சமநிலை**

சமநிலை என்பது சாந்தம்.[75] வடநூலார் இதனையும் சேர்த்து 'நவரஸங்கள்' என்று கூறுவர். வீரசோழிய ஆசிரியர்,

73. தண்டி. 69.

74. குறள், 394.

75. "சிலர் சாந்தம் என்பது எல்லா ரஸங்களும் உருவெடுக்கும் சமநிலை; அதிலிருந்தே எல்லா உணர்ச்சிகளும் உண்டாகின்றன; அதிலேயே மறைந்து விடுகின்றன, சமுத்திரத்தின் அலைகளைப்போல்; மற்ற ரஸங்கள் சமநிலையிலேயே உருவாகி மறைந்து கொண்டிருப்பினும், சமுத்திரத்தின் அடியில் உள்ள நீர் நிலைபோல் பூர்ணநிலையுற்றிருப்பது சாந்தம்; ஆகவே அதைத் தனி ரஸம் என்று கூறுவது சரியல்ல என்று வாதாடுகிறார்கள்."
—சுப்பிரமணியசாஸ்திரியார், வி. எச். நவரஸங்கள், பக். 64, தினமணிவெளியீடு, 1944.

தன்னுயிர்க் கின்னாமை தானறிவா னென்கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல்[76]

என்னும் குறட்பாவினை இச்சுவைக்குச் சான்றாகக் கொள்வர்.[77]

சமநிலைபற்றிக் கூறவந்த பேராசிரியர்,

"மற்றிவ்வெட்டனோடுஞ் சமநிலை கூட்டி ஒன்பதென்னாமோ நாடக நூலுட்போல வெனின், அதற்கு ஓர் விகாரமின்மையின் ஈண்டுக் கூறியதிலன் என்பது; அதற்கு விகார முண்டெனின் முன்னையெட்டனுள்ளுஞ் சார்த்திக்கொள்ளப்படும்; அல்ல தூஉம் அஃதுலகியல் நீங்கினார் பெற்றியாகலின், ஈண்டு உலக வழக்கினுட் சொல்லியதிலன் என்பது. ஒழிந்த எட்டும் உலகிய லாகலிற் கூறினான், 'வழக்குஞ் செய்யுளு மாயிரு முதலின்' என்று புகுந்தமையினென்பது"[78]

என்று கூறுவர். சமநிலை என்பது உலகியல் நீங்கியோர் தன்மை என்பதனால் அதற்கெனத் தனியான மெய்ப்பாடு இல்லை; எனவே, தொல்காப்பியர் இதுகுறித்துச் சிறப் பாகக் கூறவில்லை என்பது பேராசிரியர் கருத்தாகும்.

இங்ஙனமாக இங்கு எடுத்துக் காட்டியவை போன்று வேறு பகுதிகளிலும் வரும் சுவை நலன்கள் எல்லாம் இந் நூலுக்கு அணிதரும் சிறப்புப் பண்புகளாம். சுவைப்பார் தகுதிக் கேற்பக் கவிதைகள் நகை, உவகை முதலிய சுவை களைப் பயந்து இன்பம் விளைத்து நிற்கும் என்பதும் நாம் உளங்கொளத்தகும்.

உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே[79]

என்னும் தொல்காப்பியர் கூற்று இங்குச் சிந்தித்தற் குரியதாம்.

### செய்யுட்கு இயன்ற அணி

இதுகாறும் கூறிய சிறப்பான அணிகளைத் தவிரப் பிற்காலத்தில் சான்றோர் விரித்த பல்வேறு அணிகளும்

76. குறள், 318.
77. வீரசோழியம், அலங். 28.
78. தொல். மெய்ப். 3, பேரா. உரை,
79. தொல். உரி. 97.

திருக்குறளுக்குச் சான்ருகக் காட்டப்படுகின்றன. உரையாசிரியர் வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியார் தம் முடைய திருக்குறள் பரிமேலழகருரைப் பதிப்பில் பொய்த்தற் குறிப்பணி (குறள், 1200), பலபடப்புனேவணி (421), அபநுதியணி (936), கருத்துடை அடைகொளியணி (1035), இயைபு இன்மையணி (1041), காரிய விலக்கணி (1151), என்பன போன்ற பல்வேறு அணிகளே எடுத்துக் காட்டியுள்ளார். இவைகளில் பெரும்பாலன முன்னர்க் கூறிய அணிகளிலேயே அடங்குவன. பொருள் கொள்வார் தம் கருத்திற்கும் நோக்கிற்கும் தக்கபடி பொருள் கொள்வதற்கு ஏற்ப, அணிகளேக் கொள்வர்.

ஓரணியின் வகையாக ஓர் ஆசிரியர் கூறுவதைப் பிறிதோர் ஆசிரியர் தனி அணிவகையாக இலக்கணம் கூறுவது அணிகளுடைய வரம்பின்மையைக் காட்டுவதாகும். தொல்காப்பியர் காலத்துத் தோன்றிய உவமை அணி காலப்போக்கில் எவ்வாறு வளர்ச்சி பெற்று விரிந்து பல்கிப் பெருகியது என்னும் வரலாற்றுண்மையை நாம் முன்னர்க் கண்டோம். பிற்காலத்தார் கூறிய அணி களனேத்தையும் தொல்காப்பியர் கூறும் வேறு படவந்த உவமத் தோற்றத்துள் அடக்குதலும் கூடும் என்பதும் எடுத்துக் காட்டப்பெற்றது. உலகத்து நிலேபேறுடைய இச்செய்யுள்கள் அனேத்திற்கும் பொருந்திய அணிவேறுபாடெல்லாம் ஒழிவின்றி உணர்த்தும் பெற்றி அரிது ஆதலால் பலவற்றையும் இவற்ரேடு கூட்டி உணர்தல் கற்ரேரது கடனுகும்.

> ஏற்ற செய்யுட்கு இயன்ற அணியெலாம்
> முற்ற உணர்த்தும் பெற்றிய தருமையிற்
> காட்டிய நடைநெறி கடைப்பிடித்து இவற்ெருடு
> கூட்டி யுணர்தல் ஆன்ருர் கடனே.[80]

## தொகுப்புரை

உவமையின் சிறப்பை உளங்கனிந்து பாராட்டிய பண்டைத் தமிழ் மக்கள், புலவர்கள் மேற்கொண்ட உவமைகளேயே அவர்களுக்குப் பெயர்களாய்ச் சூட்டிப்

80. தண்டி. 26.

பாராட்டிப் போற்றி மகிழ்ந்தனர்.[81] உவமையின் சிறப்பும் முதன்மையும் இதனுல் நன்கு விளங்கும். இவ்வாறு சிறப்பும் முதன்மையும் பொருந்தியதும், செய்யுளுக்கு அழகும் நயமும் தருவதுமான இவ்வுவமை இலக்கணம் திருக்குறளில் எவ்வாறு அமைந்து சிறப்புடன் விளங்கு கிறது என்பதனை இதுகாறும் கண்டோம்.

சங்ககாலத்துத் தோன்றிய தொல்காப்பியர் கூறும் உவம இலக்கணத்திற்கும் பிற்காலத்துத் தோன்றிய பல் வேறு அணிகளுக்கும் சான்றாய்த் திகழ்வன வள்ளுவர் யாத்த குறட்பாக்கள். இந்நூலில் அமைந்து அழகுடன் திகழும் அணிகளே திருக்குறள் இலக்கிய இயல்பினையும் சிறப்பினையும் நன்கு விளக்குவனவாம்.

